மாசி 2023

# அபத்தம்

2



## சமூக(அ)ப்பிராணிகள்

## ஏடு இட்டோர் இயல்

# சமூக(அ)ப்பிராணிகள்

பெரும் அழிவுக்கான ஆயுதங்களை ஈராக் வைத்திருக்கிறது என்று குற்றம் சாட்டி, அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுக்க முனைந்த போது, நூற்றுக்கும் மேற்பட்ட ஈராக்கிய புத்திஜீவிகள் சதாமிற்கு ஒரு பகிரங்க கடிதம் எழுதியிருந்தார்கள். ஒரு யுத்தம் ஏற்படுத்தக் கூடிய அழிவு பற்றியும் அதைத் தவிர்க்க வேண்டிய கட்டாயம் பற்றியும்... அதனால் சர்வாதிகாரியான சதாம் மூலமாக தங்கள் உயிர்களுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் பற்றித் தெரிந்து கொண்டும்... அவர்கள் அந்த அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள்.

அதன் பின்னால் ஏற்பட்ட அழிவு, மற்றும் இறுதியில் சதாம் தூக்கில் இடப்படும் தருணம் வரைக்கும் முழு உலகமுமே நேரடியாக தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தது.

Chemical Ali மாதிரி, தோல்வியை மறைத்து 'எமது படைகள் தடுத்து நின்று போராடிக் கொண்டிருக்கின்றன' தகவல், பிரசார அமைச்சர் Comical Ali யின் கோமாளித்தனங்கள் உட்பட!

யுத்தம் ஆரம்பித்து இராணுவம் முன்னேறத் தொடங்கிய காலங்களிலும், பிரபாகரனும் தனது மாவீரர் தின உரைகளில் 'ஏலுமெண்டா வாடா, பாப்பம்' என்று வாய் வீரம் பேசிக் கொண்டிருந்தார்.

அதைக் கேட்டுப் பூரித்துப் போய், எங்களுடைய கொமிக்கல் அலிகள் அடித்து விட்ட கதையில் 'உள்ளுக்க வர விட்டு அடிக்கப் போறாங்கள்!' என்று உலகமே மயங்கிக் கிடந்தது.

யாழ்ப்பாணிச் சமூகத்தில் புத்திஜீவிகள் என்று உத்தியோகபூர்வமாக எவரும் இல்லாவிட்டாலும், படித்தவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்வதில் பெருமை கொள்ளும் சமூகத்தில், சமூகத் தலைவர்கள் எனப்படுவோர் எவரும், யுத்தத்திற்கான எதிர்ப்பையோ, அந்த யுத்தம் கொண்டு வரப் போகும் அழிவையோ பகிரங்கமாகத் தெரிவித்ததில்லை.

கடைசியில் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி, அமெரிக்கக் கப்பல் வந்து தலைவரைக் காப்பாற்றும் என்ற கடற்கரைக்குப் போகும் வரைக்கும் அந்த மக்களை வெளியேற விடும்படி கேட்காத இந்த புத்திஜீவிகள் தான் இன்றைக்கு 'கொத்துக் கொத்தாக அழிக்கப்பட்ட' மக்களைப் பற்றிக் கண்ணீர் விடுகிறார்கள்.

புலிகள் மக்களை மிரட்டி குடாநாட்டில் இருந்து வெளியேற்றியதை 'இடப் பெயர்வு' என்று உருட்டுகின்ற இந்த படித்தவர்கள் எல்லாம், வன்னியில் 'உந்தக் காட்டுக்க மனிசன் இருப்பானோ?' என்று, இராணுவத்திற்கு உள்ளேயிருந்தும், புலிகளுக்கு வெளியே இருந்தும் ஆதரவு கொடுப்பதற்காக, புலிகளுக்குக் டிமிக்கி கொடுத்து விட்டு, திரும்பவும் குடாநாட்டுக்கு வந்து சேர்ந்தவர்கள் தான்.

அங்கே யுத்தப் பீதிக்குள் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை சில நேரம் மன்னிக்க முடிந்தாலும், வெளிநாடுகளில் வாழ்ந்தவர்கள் யுத்தவெறியர்களாகவும் 'சனம் செத்தால் தானே தீர்வு வரும்' என்ற நம்பிக்கையிலும் இருந்தவர்கள் தான்.

ஆனால், தாயகத்தில் இந்த யுத்த கால மாவீரர் தின உரைகளில் ஒன்று பற்றி நான் எழுதிய ஏடு இட்டோர் இயலில் இந்த யுத்தம் ஏற்படுத்தப் போகும் அழிவு பற்றிய எழுதி, 'கெடு குடி சொற் கேளாது!' என்று முடித்திருந்தேன்.

அந்த அழிவையும், பிரபாகரனின் மரணத்தையும் தொலைக்காட்சியில் நேரில் கண்ட பின்னாலும், இந்த மெத்தப்படித்த யாழ்ப்பாணி சமூகம், கடவுளைப் போல, 'அவர் அங்க இருக்கிறார், இங்க இருக்கிறார்' என்று

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

தாங்கள் சொல்லும் பொய்களை தாங்களே நம்பிக் கொண்டிருக்கிறது.

ஒரு சமூகமாக வாழும் எந்தக் குழுமத்திலும் வாழுகின்ற மனிதர்கள் தனித்து வாழ முடியாது. காடுகளில் தனித்து வாழ்ந்தால் ஒழிய, தனிமனிதர்கள் ஒரு சமூகத்தின் அங்கமாக, அதன் நன்மை, தீமைகளால் பாதிக்கப்படுகிறவர்களாகத் தான் வாழ முடியும்.

தங்களுக்கான உரிமைகளையும் சலுகைகளையும் சமூகத்திடம் இருந்தும், அதை ஆட்சி செய்பவர்களிடம் இருந்தும் எதிர்பார்க்கின்றவர்களுக்கு, அந்தச் சமுகத்திற்கான கடமை இருக்கிறது. வரி செலுத்துகின்ற கடமை இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் தங்களை யார் ஆள்வது என்பதைத் தாங்களே தெரிவு செய்து கொள்வதற்கு, ஜனநாயக நாடுகளில் வாக்குரிமைக்கான கடமை இருக்கிறது. வாக்குரிமை இல்லாத அடக்குமுறை நாடுகளில், கருத்துச் சுதந்திரம் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் அந்த அதிகாரத்தை சுயநலன்களுக்காக பகிரங்கமாக ஆதரிக்கக் கூடாது என்ற கடமையாவது இருக்கிறது.

பொதுநலனில் சுயமும் நலன் பெறும் என்ற உண்மையை உணர்ந்து கொள்ளாமல், தன் சமூகக் கடமையைத் தவிர்ப்பதாலும், துஷ்பிரயோகம் செய்வதாலும் அதற்கான விலையைச் செலுத்தி, அதன் விளைவுகளை எல்லோருமாகச் சேர்ந்து அனுபவித்தே ஆக வேண்டி வருகிறது.

தகுதியில்லாதவர்களைத் தெரிவு செய்ததால் முழு நாட்டு மக்களும் படும் அவலங்களுக்கு உதாரணங்கள் ஊருக்குள்ளேயே உண்டு.

1791ல் Rights of man என்ற, அதிகாரங்களுக்கு எதிரான மக்கள் புரட்சிகளுக்கு ஆதரவான புத்தகத்தில், அதை எழுதிய Thomas Paine சொல்வது...

'மக்களின் நியாயமான உரிமைகள் மறுக்கப்படும்போது, புரட்சி நியாயமானது.'

மக்களின் உரிமைகளுக்கான புரட்சியை விட, அந்த சமூகத்தில் மக்கள் ஒவ்வொருவருடைய கடமையும் உண்டு. அவர் சொல்வது...

It is the duty of every man, as far as his ability extends, to detect and expose delusion and error.

தன்னால் முடிந்தவரைக்கும்,

> **தன்னால் முடிந்தவரைக்கும், ஆதாரபூர்வமான உண்மைகளையும் மீறி நம்பப்படும் பொய்களையும் தவறுகளையும் அறிந்து அம்பலப்படுத்த வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் (மனுஷியுடையதும் தான்!) கடமை.**

ஆதாரபூர்வமான உண்மைகளையும் மீறி நம்பப்படும் பொய்களையும் தவறுகளையும் அறிந்து அம்பலப்படுத்த வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் (மனுஷியுடையதும் தான்!) கடமை.

இது ஒவ்வொரு சாதாரண மனிதர்களுக்கும் பொருத்தமானது.

இந்த சாதாரண மனிதர்களை விட தங்களை மேலானவர்களாகவும், சிந்திப்பவர்களாகவும், புத்திஜீவிகளாகவும் பாவனை பண்ணிக் கொண்டிருக்கும் இலக்கியவாதிகளுக்கு இது கட்டாயமான கடமை ஆகிறது.

இந்த இலக்கியவாதிகள் தான் சாதாரண மனிதர்களை விட, தங்கள் சிந்தனைகளை படைப்புகள் மூலமாக பரவச் செய்யக் கூடியவர்கள்.

புரட்சிகள் நடந்த இடங்களில் எல்லாம் அந்தப் புரட்சிகளோடு பல இலக்கியவாதிகள் அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தான் அந்தப் புரட்சியின் தேவைகளையும் நியாயங்களையும் கலை, இலக்கிய வடிவங்களூடாக மக்கள் மத்தியில் கொண்டு செல்லக் கூடியவர்களாக இருந்தார்கள்.

இதனால் இந்தப் போராட்டங்களின் பின்னான விடுதலையின் போது, அவர்கள் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தந்த நாடுகளில் இன்றைக்கும் கொண்டாடப்படுகிறார்கள்.

இந்த இலக்கியக்காரர்களை வாசிப்பதையும், அவர்களின் கூற்றுக்களைத்



facebook: George RC

தங்களுக்குத் தெரிந்ததாக மேற்கோள் காட்டுவதிலும் எங்கள் இலக்கியவாதிகள் பெருமிதம் கொள்கிறார்கள்.

அதிக தூரங்களுக்குப் போகத் தேவை இல்லாமல், பாரதி கூட, விடுதலை வேட்கையைத் தனது பாடல்களில் கொண்டு வந்ததால் தானே இன்றைக்கும் புகழப்படுகிறார்.

திரைப்பட உலகில் புகழ் பெற்ற ஈரானின் அப்பாஸ் கியோரஸ்ரமியும் சீனாவின் யாங் ஸிமூவும் எத்தனையோ கருத்துச் சுதந்திர மறுப்புகளுக்குள்ளும் அற்புதமான படைப்புகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்களைப் போல பல அடக்குமுறை நாடுகளில், இலக்கியவாதிகள் வெளிப்படையாகவே தங்கள் விமர்சனங்களைக் காட்டிக் கொள்ளாமல் கத்தி மேல் நடப்பது போல, தங்கள் அரசுகள் மீதான விமர்சனங்களை நாசூக்காக அவர்கள் முன்வைப்பதை ஆழ்ந்து கவனித்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். அவர்களுக்கான எல்லைகள் அவை. கரணம் தப்பினால் மரணம் நிச்சயம். அவர்கள் தங்கள் மனச்சாட்சியை மீறி சுயலாபத்திற்காக அதிகாரங்களை ஆதரித்ததில்லை.

அதிகாரங்களுக்கு பாதபூஜை செய்யாததால், எத்தனையோ படைப்புகள் அதிகாரங்களால் தணிக்கை செய்யப்பட்டிருக்கின்றன. அதையும் மீறி, தங்கள் எதிர்ப்பை தங்கள்

> தன்னுடைய சிந்தனையை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் இல்லாமல் வெறும் பௌதீக விடயங்களோடு மட்டும் மனிதன் திருப்தியுறுவதில்லை. ஆனால் அடக்குமுறை அரசுகள் அவ்வாறான மனிதர்களைத் தான் பிரஜைகளாக வேண்டி நிற்கின்றன.
> இந்த மாயையை உடைத்து அந்த மனிதர்களுக்கு, தங்களுக்கான உரிமைகளுக்கான தேவைகளையும் அவற்றை நிலைநாட்டுவதற்கான வழிகளையும் காட்டுவதற்கான கடமை சிந்திக்கத் தெரிந்த எல்லா மனிதர்களுக்கும் உண்டு.
> படித்தவர்கள் என்று சொல்லப்படும் கற்றறிந்தோர், ஏதோ வகையில் குழுக்களாக உள்ளோர்களுக்கான சமூகத் தலைவர்கள் எனப்படுவோர் மட்டுமன்றி, கலை, இலக்கியவாதிகளுக்கு இதில் முக்கிய பங்குண்டு.

படைப்புகள் மூலமாக வெளிக்கொணர்ந்த பல படைப்பாளிகள், சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். தங்கள் உயிரைக் கூடத் தியாகம் செய்திருக்கிறார்கள்.

எங்கள் பக்கத்திலும் விடுதலைக் கவிஞர்கள் இருந்தார்கள். கடைசியில் யாழ்ப்பாணித்தமிழ்த் தேசியக் குட்டையில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்று, வெறும் ஆஸ்தான கவிஞர்களாக இல்லை, வெளிநாட்டு அமைச்சர்களாகும் கனவுடன்!

மனித வாழ்வில் கலையும், இலக்கியமும் ஆடம்பரப் பொருட்கள்.

அத்தியாவசியப் பொருட்கள் அல்ல.

உணவு, உடை, உறையுளோடு உரிமைகளும் மனித வாழ்வுக்கு அத்தியாவசியமானவை. சாதாரண மனிதர்களுக்கு வாழ்வு என்பதே இவற்றுக்கான போராட்டம் தான். இதில் உணவு, உடை, உறையுளோடு மனித வாழ்வு முடிந்து விடுவதில்லை. அது கிடைப்பதால் வாழ்வு பூரணமடைந்து விட்டது என்று நினைத்தால் மனிதன் வெறும் விலங்கு மட்டும் தான்.

தன்னுடைய சிந்தனையை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் இல்லாமல் வெறும் பௌதீக விடயங்களோடு மட்டும் மனிதன் திருப்தியுறுவதில்லை. ஆனால் அடக்குமுறை அரசுகள் அவ்வாறான மனிதர்களைத் தான் பிரஜைகளாக வேண்டி நிற்கின்றன. இந்த மாயையை உடைத்து அந்த மனிதர்களுக்கு, தங்களுக்கான உரிமைகளுக்கான தேவைகளையும் அவற்றை நிலைநாட்டுவதற்கான வழிகளையும் காட்டுவதற்கான கடமை சிந்திக்கத் தெரிந்த எல்லா மனிதர்களுக்கும் உண்டு.

படித்தவர்கள் என்று சொல்லப்படும் கற்றறிந்தோர், ஏதோ வகையில் குழுக்களாக உள்ளோர்களுக்கான சமூகத் தலைவர்கள் எனப்படுவோர் மட்டுமன்றி, கலை, இலக்கியவாதிகளுக்கு இதில் முக்கிய பங்குண்டு.

அதை புரட்சிகளின் போது செய்கிறவர்கள் அதே மக்களால் போற்றிப் புகழப்படுகிறார்கள்.

அதிகாரத்திற்கு எதிரான குரல் எழுப்புதல் என்பது ஒரு போதும் இலகுவானதாக இருந்து விடுவதில்லை. எந்த அதிகாரமும் தன்னைக் கேள்வி கேட்பதை விரும்புவதில்லை.

இதனால், அரச அதிகாரத்தை விமர்சிக்கும், கேள்வி கேட்கும் புத்திஜீவிகளில் பலர் பல்வேறு பாதிப்புகளை, புறக்கணிப்பு முதல் சிறைவாசம் வரை, மரண தண்டனை முதல் சட்டத்திற்கு புறம்பான கொலைகள் வரைக்கும் எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அதிகாரத்திற்கு துணை போய், அதற்கு முட்டுக் கொடுத்து, அதை நியாயப்படுத்தி சுகவாழ்வு வாழ்கிறவர்கள் போல இல்லாமல், இத்தனை ஆபத்துக்களையும் தெரிந்து கொண்டு, துணிந்து குரல் எழுப்புகிறார்கள்.

காரணம், அவர்களுக்கு இருக்கும் சமூக உணர்வு.

தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக பயன் எதுவும் பெறாமல், தாங்கள் வாழும் சமூகத்தில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற உணர்வு கொண்டவர்களால் அதைச் செய்ய முடிகிறது.

Slate சஞ்சிகையில் தனது நாவல் ஒன்றை வெளியிடும் எழுத்தாளர் எழுதிய கட்டுரை ஒன்று வெளிவந்திருக்கிறது.

Rupert Murdoch க்கு சொந்தமான News corp இன் கிளை நிறுவனமான Harper Collins புத்தக வெளியீட்டு நிறுவனத்தில் பணிபுரியும் உதவியாளர்கள் சம்பள உயர்வு வேண்டியும் தொழிற்சங்கத்தில் சேர்வதற்கான உரிமை வேண்டியும் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

Rupert Murdoch தீவிர வலதுசாரிகளை ஆட்சியில் அமர்த்துவதற்காக தனது ஊடகங்களைப் பயன்படுத்துகிறவர். அமெரிக்காவில் Fox News, Wall Street Journal, New York Post, இங்கிலாந்தில் The Sun, The Times போன்ற ஊடகங்களின் உரிமையாளர். டொனால்ட் ட்ரம்பைப் பதவியில் அமர்த்துவதில் பெரும் பங்கு வகித்த அவர், தற்போது அவரைக் கை கழுவி விட்டு, பொது ஆதரவு கிடைக்கும் எனக் கருதும் Ron DeSantis ஐ ஆதரிப்பவர். தொழிலாளர் உரிமைகளை வெறுத்து முதலாளிகளுக்கான வரிக் குறைப்பை ஆதரிப்பவர்.

தனது முதலாவது நாவலை வெளியிடும் எழுத்தாளர் ஒருவர், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்யும் சூழ்நிலையில் தன்னுடைய நூலை இந்த பதிப்பகத்தினூடாக வெளியிடுவதில் உள்ள மன உழைச்சலையும் குற்ற உணர்வையும் பற்றி கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்.

தன்னைப் போன்ற மற்ற எழுத்தாளர்களிடமும் கருத்துக் கேட்டு, அந்த ஊழியர்களுக்கு தாங்கள் வழங்கக் கூடிய ஆதரவு பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

எழுத்தாளராக உள்ள ஒருவர், தனக்கு கிடைக்கக் கூடிய அங்கீகாரங்கள் பற்றியோ, (தொலைக்காட்சிப் பேட்டிகள் உட்பட்ட!) தனக்கு அதனால் கிடைக்கக் கூடிய லாபம் பற்றியோ மட்டுமான

சுயநலத்தைக் கருத்தில் கொள்ளாமல், தனக்கு அந்தப் பயன்கள் கிடைப்பதற்கு ஏதோ வழியில் உழைப்பவர்களுக்கு உரிய வேதனம் கிடைக்க வேண்டும் என்ற அக்கறை கொண்டவராக இருக்கிறார்.

எங்களுடைய தமிழ்ச் சமூகத்தில், தமிழ்நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி, இலங்கைத் தமிழர்கள் புலன் பெயர்ந்த இடங்களிலும் சரி, சமூக உணர்வோடு, அதிகாரத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கும் எத்தனை இலக்கியவாதிகள், புத்திஜீவிகளை அடையாளம் காண முடிகிறது?

இலங்கையில் தான் ஆயுதம் தாங்கிகள் 'மண்டையில் போடும்' கலாசாரத்தை அறிமுகமாக்கி, பீதிக்குள் எல்லோரையும் வைத்திருந்தாலும், அந்த உயிர் ஆபத்துக்கள் பெரிதும் இல்லாத தமிழ்நாட்டிலும், புலன் பெயர் நாடுகளிலும் தங்கள் இனச் சமூகங்களின் நலன்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களை அடையாளம் கண்டு குரல் கொடுத்தார்கள் என்று எத்தனை பேரை எங்களால் பொதுவெளியில் அடையாளம் காட்ட முடிகிறது?

இவர்களில் பலர் அதிகாரங்களோடு தங்களை அடையாளம் காட்டுகிறவர்களாகவோ, அதன் அடக்குமுறைகளுக்கு நியாயம் சொல்கிறவர்களாகவோ தான் இருக்கிறார்கள். தமிழ்த் தேசியம் என்றதொரு நாறிப் போன குட்டைக்குள் ஊறிய மட்டைகளாகவும், சுயசாதிச் சிந்தனைக்கு மீறிய வளர்ச்சி எதுவும் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் திராவிடப் பாரம்பரியங்களில் வந்தவர்களும் திராவிடக் கட்சிகளுக்கு முண்டுகொடுப்பவர்களாகவும், எங்கள் பக்கத்தில் புலன் பெயர்ந்தாலும் புலிக்கு வால் பிடிக்கும் யாழ்ப்பாணிகளாகவும் இருக்கிறார்கள்.

அல்லது, ஹொலிவூட் படங்களில் பெரும் களேபரங்கள் முடிந்த பின்னால், வெறி முறிந்து எழுந்து மிரளுகின்றவர்கள் மாதிரி, கலை கலைக்காகவே என்றபடி, நாட்டில் நடக்கும் அநீதிகளைக் கண்டுகொள்ளாமல் இலக்கியம் படைப்பவர்களாக இருக்கிறார்கள்.

Thomas Paine எழுதி இருநூறு வருடங்களுக்கு மேலாகி விட்டது. எங்கள் சமகாலத்தினரான Noam Chomsky சமூக அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கிற ஒருவர். தொண்ணூறுகளில் வெளிவந்த, ஊடகங்களின் கருத்துத் திணிப்புப் பற்றிய அவரது Manufacturing consent விவரணப் படம் பற்றி தாயகத்தில் அப்போது எழுதியிருந்தேன்.

இன்றைக்கும் அவர் சமூக நீதிக்காக குரல் கொடுத்த வண்ணமே இருக்கிறார்.

Thomas Paine ஒவ்வொரு மனிதருக்குமான கடமை என்று சொல்கின்ற அதே கருத்தை Noam Chomsky தற்போது It is the responsibility of intellectuals to speak the truth and expose lies என்கிறார். அதாவது புத்திஜீவிகளின் கடமை என்கிறார்.

தங்களை Common Man க்கும் மேலானவர்களாக புத்திஜீவிகள் என்று தங்களை நினைத்துக் கொண்டு, கலை, இலக்கியம் படைப்போருக்கு இந்த அக்கறை எப்போதும் அதிகமாக இருக்க வேண்டும்.

ஆனால், தங்களுக்கு கிடைக்க வேண்டிய றோயல்டி கொடுப்பனவுகளை உறுஞ்சுகின்ற பதிப்பகங்கள் குறித்து வாயே திறக்காமல், அங்கீகாரம் எனப்படும் ஒரு 'ஒரு சதத்துக்குப் பிரயோசனமற்ற' abstract விடயத்தைப் பற்றியே சதா கவலைப்படுகிறவர்கள், மற்றவர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பார்கள் என்று நான் எதிர்பார்ப்பது எனக்கே ஒரு அபத்தமாகத் தான் இருக்கிறது.

நாங்கள் கலை கலைக்காக என்றே வாழ்கிறவர்கள், சமூகம் பற்றிக் கவலைப்படவோ, குரல் எழுப்பவோ வேண்டிய தேவை எங்களுக்கு இல்லை, உலகைத் திருத்துவது எங்கள் வேலை இல்லை, நாங்கள் எப்படித் தான் காட்டுக்கத்தல் கத்தினாலும் சமூகம் திருந்தப் போவதில்லை என்று இவர்கள் உருட்ட வரக் கூடும்.

தான் வாழும் சமூகத்தில் தானும் ஒரு அங்கம் என்பதையும், அதில் வரும் பாதிப்புகள் தனக்கும் நிகழக் கூடியன என்பதையும் உணர்ந்து கொள்ளாது, கள்ள மௌனம் காப்பதின் விளைவுகளுக்கு சாதாரண மனிதர்கள் போலவே, இந்த self-proclaimed புத்திஜீவிகளும் அதற்கான விலையைச் செலுத்தியே வேண்டும்.

ஜேர்மானியரான மாட்டின் நீமுல்லர் எழுதிய இந்தக் கவிதையைப் பற்றி முப்பது வருடங்களுக்கு முன், புலிகள் கோலோச்சிய காலத்தில், தாயகம் இதழில் ஏடு இட்டோர் இயலில் எழுதியிருந்தேன்.

அடக்குமுறைகளின் போது மௌனமாக இருக்கும் போது, கடைசியில் அந்த அடக்குமுறைக்கு நாங்கள் பலியாகும் போது எங்களுக்காக குரல் கொடுக்க யாரும் மிஞ்சியிருக்க மாட்டார்கள் என்று அன்றைக்கே சொல்லியிருந்தேன்.

அந்த தீர்க்கதரிசனம் என் கண்முன்னாலேயே நிறைவேறியது. இன்றைக்கும் அதே யாழ்ப்பாணிகள் 'எமது மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட போது, உலகமே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது' என்று ஒப்பாரி வைத்துப் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சமூகத்தில் நீதிக்காகக் குரல் கொடுக்காத, தனது சுயநல அங்கீகாரம் ஒன்றுக்காகவே அலைகின்ற இலக்கியக் கும்பலை அந்தச் சமூகம் புகழ்ந்தேத்த வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. அவர்களுடைய படைப்புகளை விலை கொடுத்து வாங்கி, அவர்களைக் கௌரவிக்க வேண்டும் என்ற தேவையும் இல்லை.


அவர்கள் என்றென்றைக்கும் pdf please கேட்கும் பின்னூட்ட இலக்கிய ஆர்வலர்களால் நிறைந்திருக்குமாறு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவே இருக்கக் கடவார்களாக!

First they came for the communists,
and I did not speak out-
because I was not a communist.
and they came for the socialists,
and I did not speak out
because I was not a socialist.
Then
they came for the trade unionists,
and I did not speak out
because I was not a trade unionist.
Then they came for the Jews
and I did not speak out
because I was not a Jew.
Then they came for me
and
there was no one left to speak for me

**-Martin Niemöller-**

# அபத்தம்

மாசி 2023




எழுதிய, எழுதப்பட்ட ஆளுமைகள் குறித்து மேலும் அறிந்து கொள்ளவும், அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அவர்களின் பேஸ்புக் அடையாளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எழுத விரும்புவோர் வாசிக்க..

**அபத்தம்**

99 Read the fine print

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
**Editor/Design**
**George R. Ckrhushchev**

## கட்டுரைகள்

8 செய்யதும்மா
சஞ்சயன் செல்வமாணிக்கம்

11 அம்மா தந்த குழம்பு
வடகோவை வரதராஜன்

11 தொட்டால் தீட்டு
நமக்கு வாய்த்த கவிஞர்கள்
கற்சுறா

25 புரிதல்
எஸ்.ஃபாயிசா அலி

36 சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில்
புலம்பெயர் இலக்கியம்
கற்சுறா

55 புத்தனின் பல்(லா)
வில்லா ஆனந்தராம்

57 துயரம் தந்ததொரு இழப்பு
சிதம்பரப்பிள்ளை சிவகுமார்
ஜோர்ஜ்

65 மீ ளு
தங்கம்

69 நாடற்றவர் பட்டாளத்தின் தோற்றமும்
இலங்கைப் பொருளாதாரத்தின் சரிவும்
சதீஸ் செல்வராஜ்

74 யுத்தக் குற்றங்களுக்கான
பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்
நடராஜா சுசீந்திரன்

78 தோழர் குமாரசாமி பரராஜசிங்கம்
சுகன், நடராஜா சுசீந்திரன்

80 மாயா 'யதார்த்த' தொலைக்காட்சிகள்
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

86 புரிந்தவன் பிக் பொஸ்... ஓ! பிஸ்தா!
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

88 கலை, இலக்கியத் திறனாய்வாளர்
வெங்கட் சாமிநாதனும் இருப்பு பற்றிய அவரது பார்வையும்!
வ.ந.கிரிதரன்

92 மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்
வரலாற்று தேடல்கள்
எம்.ஆர்.ஸ்டாலின்

## ஒளி ஓவியம்

28 நிக்ஷரோன்
லெனின் றொபின்சன்

95 கார் வலர்கள்
ஜோர்ஜ் இ.

## நூல் நுகர்வு

13 ஒப்பாரிக் கோச்சி
நோயல் நடேசன்

## நாடகம்

67 ஒன்று இரண்டு மூன்று
சறினோ சிறி சிறிசு

## கவிதை

20 போர்
சுகன்

73 மிக்ஸி கிரைண்டரும் அவளும்
பூர்ணிமா கருணாகரன்

76 பாவம்
மொனிக்கா

## சிறுகதை

21 என்னவென்று சொல்லுவேன்?
பூங்கோதை

45 கொண்டல்
தமயந்தி

53 இருமல்
மனோ (பிரான்ஸ்)

61 ரோசாப்பூப் போட்ட சாப்பாட்டுக் கோப்பைகள்
உமா ஷாணிகா

## தொடர் பத்திகள்

### ஏடு இட்டோர் இயல்

2 சமூக( அ)ப்பிராணிகள்

தன்னால் முடிந்தவரைக்கும்,
ஆதாரபூர்வமான உண்மைகளையும்
மீறி நம்பப்படும் பொய்களையும்
தவறுகளையும் அறிந்து
அம்பலப்படுத்த வேண்டியது
ஒவ்வொரு மனிதனதும்
(மனுஷியுடையதும் தான்!) கடமை.

### ஜெயந்தீஸனின் குட்டிக்கதைகள்

72 'தாலி(பான்

### உருட்டும் புரட்டும்

49 பொங்கு தமிழ்
மரபுரிமை மாதம்

மற்ற நேரங்களில் எல்லாம் 'நான்றி, வானக்கம்' கனடிய அரசியல்வாதிகள் எல்லாம் வேட்டி கட்டி வந்து வாழ்த்துச் சொல்லும் போதெல்லாம், ரமில் பிரமுகர்ஸ் எல்லாம் கோட் சூட் சகிதம் காட்சியளிப்பார்கள்.

இந்த மரபுரிமை மாதத்தில் மட்டும் ஒரு சேஞ்சுக்காக ரமில்ஸ் எல்லாம் பட்டுவேட்டிகளுடனும், கனடிய அரசியல்வாதிகள் எல்லாம் கோட் சூட்டுடனும் காட்சியளிக்கிறார்கள்.

### கோளாறு பதிகம்

100 இந்த அநியாயத்தைக் கேட்பார் யாருமே இல்லையா?

பனி பொழிந்திடும்
கனடா நாட்டினிலே
பகல் இரவு பாராமல்
படுக்கை அறை வரைக்கும்
வானலையில் வந்து என்னை
வாட்டி எடுத்தீரே ஐயா!

### எங்கே போய் முட்ட...!?

31 தன்னைப் புகழாத ஏஜன்சிக்காரன் இல்லை!

அந்த பரபரப்பைப் பார்த்தால், ஏதோ அனிருத் வீடியோ மாதிரி பலான படமாக இருக்குமோ என்று... எனக்கோ இருப்புக் கொள்ளவில்லை.

உட்பெட்டிக்குள் வந்து விழ, நானும் பெரிதாக வட்சப் குழுக்களில் இல்லை. பேஸ்புக் மெஸஞ்சரில் யாராவது மனம் இரங்கி, உட்பெட்டிக்குள் அனுப்புவார்களோ என்று பார்த்தால், காரண காரியம் இல்லாமல் தங்கள் உரையாடல்களுக்குள் என்னை தொடுத்து விடுகின்ற எந்தக் குழுவும் கருணை காட்டுவதாகவும் இல்லை.

## அட்டைப்பட ஓவியம்

முப்பது வருடங்களுக்கு முன்பு, தாயகம் வார இதழாக வெளிவந்த காலத்தில், முகம் தெரியாத பல உறவுகள் எங்களுக்கு கிடைத்திருந்தன. இவர்களில் பலர் ஐரோப்பாவிலிருந்து தாயகத்தின் வாசகர்களாகவும் படைப்பாளிகளாகவும் இருந்தவர்கள்.

இன்றைய இணைய உலகம் போலில்லாமல், கடிதத் தொடர்புகளும் தொலைதூர தொலைபேசி அழைப்புகளும் தான் இந்த உறவுகளை இணைத்திருந்தன. இவர்கள் அனைவரும் எங்களுக்கு குடும்ப உறவாகவே இருந்தனர்.

அவ்வாறான உறவுகளில் ஓவியர் கணேஷ் ஒருவர். லண்டன், இங்கிலாந்தில் இருந்து தாயகத்தில் பயன்படுத்துவதற்கென நிறைய கோட்டோவியங்களைக் வரைந்து அவர் அனுப்பியிருந்தார்.

அவற்றைக் கவனமாக வைத்திருந்த மொனிக்கா, தற்போதைய அபத்தம் இதழிற்காக அவற்றைத் தேடி எடுத்திருந்தார்.

அவற்றில் ஒன்று அட்டைப்படத்திற்காகவும், மற்றது மொனிக்காவின் கவிதைக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த நீண்ட நாட்களில் கணேஷ் உடனான தொடர்புகள் அற்றுப் போய் விட்டன. ஆனாலும், அவருடைய கடிதங்கள் இன்றும் எங்களிடம் இருக்கின்றன.

அவருடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறோம்.

அவர் இதைக் காண நேரிட்டால் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அவரைத் தெரிந்தவர்கள் இருந்தால் எங்களுக்கு அவரைப் பற்றித் தெரியப்படுத்தினால் மிகவும் மகிழ்ச்சியுறுவோம்.,



# செய்யதும்மா

காலம் 1980களின் ஆரம்பம்.

ஏறாவூர் வைத்தியசாலையில் செரீப் அண்ணன், வெள்ளைத் தம்பி அண்ணன் என்று இருவர் கடமையாற்றினார்கள். வெள்ளைத் தம்பி அண்ணனும் இஸ்லாமியர்தான். பெயரில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. அவர் காலத்தில் அப்படித்தான்.

அந்நாட்களில் எனது அம்மாவும் அங்கு வைத்தியராக இருந்தார். அவர் ஏறாவூரில் ஏறத்தாழ 17 வருடங்கள் தொழில்புரிந்தவர். எங்கள் வீடு வைத்தியசாலைக்குள் அமைந்திருந்ததால், தினமும் அவர்களைச் சந்திப்பேன். செரீப் அண்ணின் வீடு வைத்தியசாலைக்கு அருகிலேயே இருந்தது.

அந்நாட்களில் இன்றைய காலம் போன்று தமிழர்கள் இஸ்லாமியர் என்ற பிளவும் பிரிவும் இருக்கவில்லை.

சஞ்சயன் செல்வமாணிக்கம்

அவ்வப்போது முறுகல் நிலை வந்தாலும், அவை மறுநாள் கடந்து போயிருக்கும். மிகுந்த அன்னியோன்யமான வாழ்க்கை. வீடுகளுக்குச் சென்று பழகுவோம். பெருநாட்களின்போது பரஸ்பரம் உணவுவகைகளும் பலகாரங்களும் பரிமாறிக்கொள்ளப்படும். எங்கள் ஏறாவூர் யுனைட்டட் கழகத்தில் மூவினத்தவர்களும் விளையாடினோம். காளிகோயிலில் உரு வந்து ஆடும் இஸ்லாமியர் ஒருவரையும் அறிவேன்.

செரீப் அண்ணனும், வெள்ளைத்தம்பி அண்ணனும் அக்காலத்தில் இளைஞர்கள். எனது தங்கைக்கு ஆறேழு வயதிருக்கும். அவர்களின் குழந்தைகள் எனது தங்கையின் விளையாட்டுத் தோழர்கள். நான் பதின்மவயதின் இறுதிக்காலங்களில் இருந்தேன். குழப்படிகளுக்கு அளவில்லை.

ஊரில் செல்வி, சாந்தி, சாரதா என்று மூன்று திரையரங்குகள் இருந்தன. ஆங்கிலப் படங்கள் பார்க்கும் ஆர்வம் வந்திருந்தது. அதிலும் "கட்டாயம் வயதுவந்தவர்களுக்கு மட்டும்" என்று குறிப்பிடப்படும் திரைப்படங்களில் அவசியமாகக் கற்கவேண்டிய பலவிடயங்கள் இருந்ததனால், தவறாமல் "செக்கன்ட் சோ" சென்று கற்றுக்கொண்டோம்.

அம்மா ஊருக்குள் மிகவும் பிரபலமானவர். அம்மாவின் மகன் என்று ஊரே அறிந்திருந்தது. இதனால் திரைப்படம் தொடங்கிய பின்பே நண்பர்களுடன் உள்நுழைவேன். எவருக்கும் யார் வருகிறார்கள் போகிறார்கள் என்று தெரியாது. திரைப்படம் முடிவதற்கு முன் வெளியேறிவிடுவோம். இடைவேளையில் தலையைக் குனிந்திருப்போம்.

Lady Chatterley's Lover திரைப்படம் ஊருக்குள் திரையிடப்பட்டபோது, ஊரில் இருந்த ஆண்கள் அனைவரும் வயது வேறுபாடின்றிக் கற்றுக்கொள்ள வந்திருந்தார்கள். வாரக்கணக்கில் ஓடியது அந்தத் திரைப்படம்.

"செகன்ட் சோ"வுக்கு விளையாட்டுக் கழக நண்பர்களுடன் போயிருந்தேன். படம் எதிர்பார்த்ததை விட, அதிகமாகவே கற்றுத் தந்தது. படம் முடிந்து நண்பர்களுடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது "தம்பி படம் பார்த்தீங்க போல" என்று கேட்டுவிட்டு, செரீப் அண்ணன் எங்களைக் கடந்து போய்விட்டார்.

அம்மாவிடம் சொல்லப்போகிறார்... என்று பயந்தேன். அன்றிரவு கனவில் வரவேண்டிய Lady Chatterley வரவே இல்லை. மாறாக, அம்மா கேட்டால் என்ன சொல்வது? என்று யோசித்துக்கொண்டிருந்தபோது... விடிந்தது.




அன்று மாலை வீட்டுக்கு முன்னால் இருந்த மதகில் குந்தியிருந்தபோது, வந்தார் செரீப் அண்ணன். "தம்பி, படம் பார்க்கலாம். ஆனா, படிக்கணும். வாப்பா இல்லாத ஊடு. நீங்கதான் படிச்சு வீட்ட பாக்கணும்" என்று விட்டு, எதுவும் நடவாதது போன்று கடந்துபோனார்.


அதன்பின் Blue Lagoon திரைப்படம் ஊரைக் கலக்கியபோது, எமது கண்கள் சந்தித்துக்கொண்டன. இருப்பினும், அவரை நானும் என்னை அவரும் காணவில்லைப்போன்று கடந்துபோனோம்.

நான் ஊரை விட்டுப் புறப்பட்டபின், 1990 வரை செரீப் அண்ணனும் வெள்ளைத் தம்பி அண்ணனும் அவர்கள் குடும்பத்தவர்களும் எங்கள் குடும்பத்துடன் பழகினார்கள். 1990 இல் அம்மா கொழும்புக்கு இடம்பெயர்ந்தார். தங்கையின் திருமணத்தில் செரீப் அண்ணனையும் வெள்ளைத் தம்பி அண்ணனையும் இறுதியாகக் கண்டேன்.

ஏறத்தாழ 20 ஆண்டுகள் கரைந்துவிட்டன. இம்முறை அம்மாவிடம் சென்றிருந்தபோது, இரண்டு நாள் பயணமாக மட்டக்களப்புக்குச் சென்றிருந்தேன். ஏறாவூரில் வசிக்கும் முகப்புத்தக நண்பர் Abdul Majeed அவர்களிடம் செரீப் அண்ணனையும் வெள்ளைத்தம்பி அண்ணனையும் சந்திக்க உதவமுடியுமா? என்றபோது, வெள்ளைத்தம்பி அண்ணன் சில ஆண்டுகளுக்கு முன் காலமாகிவிட்டதாகவும், செரீப் அண்ணன் நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும், என்னை அழைத்துச் செல்வதாகவும் சொன்னார்.

பின்மதிய நேரம் ஏறாவூர் வைத்தியசாலைக்கு முன்னால் நின்றபோது, எமது வீட்டுக்கு முன்பிருந்த வெட்டைக் காணியில் சந்தையொன்று உருவாகியிருக்க, நாம் வாழ்ந்திருந்த வீடு இடிக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் உருவாகியிருந்ததைக் கண்டேன். வெயிலிலும் காற்றிலும் பல ஆண்டுகளுக்கு முன்னான அதே மண்வாசனை.

வைத்தியசாலைக்கு முன்னால் Abdul Majeed நின்றிருந்தார். முதலில் வெள்ளைத் தம்பி அண்ணனின் வீட்டுக்குச் சென்று வந்தோம். வெள்ளைத் தம்பி அண்ணனின் பாரியார், எனது தங்கை தங்கள் வீட்டில் வந்து விளையாடிக்கொண்டிருப்பார் என்றும், அம்மாவின் பழைய பழைய நினைவுகளையும் மீட்டெடுத்தார். அன்பான உபசரிப்பின் பின் புறப்பட்டோம்.




செரீப் அண்ணனின் வீட்டுக்குச் சென்றபோது அவர் வீட்டில் யாரும் இருக்கவில்லை. அருகிருந்த வீட்டில் விசாரித்தோம்.. அவர் புணானைக்கு அருகில் இருக்கும் ஒரு கிராமத்திற்கு இடம்பெயர்ந்திருப்பதாகக் கூறி, நான் யார் என்றார் அந்த வீட்டிலிருந்த நடுத்தவயதுடைய பெண்ணொருவர்.

அம்மாவை “அம்மா” என்றே ஊரில் அனைவருக்கும் தெரியும். எனவே “அம்மா”வின் மகன் என்றேன். யோசித்துப் பார்த்தார். “கொஞ்சம் பொறுங்க” என்றுவிட்டு உள்ளே சென்றார். அவர் வந்தபோது வயதான ஒரு தாயும் அவருடன் மேலும் இரு பெண்களும் வந்தார்கள். அவர்களின் “யார் நீங்க?” என்ற கேள்விக்கு “இங்கு வைத்தியராக இருந்த செல்வமாணிக்கம் அம்மாவின் மகன்” என்றேன்.

“வாங்க மகன், அம்மா எப்படி இருக்காங்க?, எங்க இரிக்காங்க இப்ப?” என்று ஆரம்பித்த உரையாடலின்போது, இளவயதில் இருந்த பெண் “உங்கட தங்கச்சிட பெயர் காயத்திரியா?” என்றார். “ஆம்” என்றபோது பால்யத்தில் ஒன்றாக விளையாடியதை நினைவுகூர்ந்தார்.

எங்களுடன் உரையாடிக் கொண்டிருந்த மற்றைய தாய்மார்கள் இருவருக்கும் அம்மாவை நன்றாக நினைவிருந்தது. “மகன், ஒன்னு சொல்லணும், உங்கட அம்மாதான் எங்களக் காப்பாத்தினா. கலவரநேரம் எங்கள ஆஸ்பத்திரில வைச்சு அம்மா இரவு அங்கதான் நிண்ட. மத்த ஆக்கள் ஒருத்தரும் இல்ல”.

மற்றைய தாயாருக்கும் அன்றைய நாள் நினைவிருந்தது.

“ஊருக்குள்ள கடும் கலவரம். இங்கால எங்கட ஆக்கள். புவுன்டரி ரோட்ட உங்கட ஆக்கள். அப்ப ஆமியும் ஊருக்குள்ள வரல. யார யார் வெட்டுவாங்க சுடுவாங்க என்டு தெரியா. அம்மா இங்க நிக்காக. அம்மாவை புவுன்டரி ரோட்டுக்கு போங்க என்று சொன்னாலும் அவங்க போகல. அம்மாவ கடந்து உங்கட ஆக்கள் வரமாட்டங்க நம்பிக்கையில ராவு முழுக்க பெண்டுகளும் புள்ளைகளும் இருந்தம். எங்கள கடந்து எங்கட ஆக்கள் வரமாட்டங்க என்று அம்மா இரிக்காக. காலையில ஆமி வந்து நிலம கொஞ்சம் சரியாயின பிறவுதான் அம்மா அங்கால போனாங்க” என்றபோது அவரது குரல் நெகிழ்ந்திருந்தது.

உட்கார்த்தி வைத்து அம்மாவைப் பற்றிக் கேட்டார்கள். அம்மாவின் ஒளிப்பதிவு ஒன்றைக் காண்பித்தேன். அவரின் நினைவழிவு நோய்பற்றிச் சொன்னபோது, “ஒங்களையும் நினைவுல இல்லயா அம்மாவுக்கு?” என்றவர்களுக்கு “இல்லை” என்றேன். “யா அல்லா” என்று கையேந்தினார்கள். என்னையும் தம்பியையும் விட, அவர்களுக்கு தங்கையை அதிகம் நினைவிருந்தது. புறப்பட்டபோது வேலி வாசல்வரை வந்து வழியனுப்பினார்கள்.

ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்குமுன் இலங்கை சென்றிருந்த நாட்களில் “அம்மா! மட்டக்களப்பிற்குச் செல்கிறேன்” என்றபோது, “மறக்காமல் செய்யதும்மாவைப் பார்த்து அன்பைத் தெரிவி, இதை அவரிடம் கொடு” என்று சிறு பரிசுப்பொருளும் தந்தார். அவர்கள் இருவருக்கும் இடையில் ஆத்மார்த்தமான நட்பிருந்தது. செய்யதும்மாவிற்கு அம்மாவின் வயது அல்லது அவரைவிட ஓரிரு வயது அதிகமிருக்கலாம். அம்மாவிடம் மருந்து எடுக்கவும், கஜு (முந்திரியம் பருப்பு) விற்கவும், வாசல் மணலில் குந்தியிருந்து கதைத்துக்கொண்டிருக்கவும் வருவார் அவர்.

அவரது வெற்றிலை படிந்து சிவந்த பற்களும் வாயும், மெலிந்து ஒடுங்கிய தேகமும், முக்காடிட்ட உருவமும், சுருக்கம் நிறைந்த முகமும் என்னுள் இன்னும் படிந்திருக்கின்றன. இறுதியாக, அவரது வீடுசென்று அம்மாவின் பரிசைக் கொடுத்தபோது, “என்ட அம்மாட மகன்” என்று எனது கன்னத்தை வருடிவிட்டார். குழி விழுந்திருந்த அவர் கண்கள் ஒளிரக் கண்டேன்.

இம்முறை அவதி அவதியாக ஒன்றைநாள் பயணத்தின் அசதியில், புகையிரத நிலைய வீதியில் வாழ்ந்திருந்த செய்யதும்மா என்பவரைப்பற்றி விசாரிக்க மறந்துவிட்டேன்.

வீடுவந்து அம்மாவிடம் ஏறாவூர்க் கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தேன். செய்யதும்மாவை மறந்ததையும் சொன்னேன். அவர் சுவரைப் பார்த்தபடி... தனது நினைவழிந்த உலகில் நின்றிருந்தார். மீண்டும் மீண்டும் ஏறாவூர்க் கதைகள், நண்பர்களின் பெயர்களைச் சொன்னேன். எதுவித உணர்வும் அவரின் முகத்தில் தெரியவில்லை.

சில நிமிடங்களின் பின்... அவரருகில் தேநீர் அருந்தியபடி வாசித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று “ஏறாவூர்” என்றார் அம்மா.



facebook: Sanjayan Selvamanickam




# அம்மா தந்த குழம்பு

வடகோவை வரதராஜன்

அது 1995ம் ஆண்டு.

அப்போதுதான் எனக்கு திருமணம் முடிந்திருந்தது.

அப்போது நான் மருதங்கேணி பிரதேசசெயலகத்தில் வேலையில் இணைக்கப்பட்டிருந்தேன்.

நான் புது மாப்பிள்ளையாக மனைவியின் வீட்டில் ஏழாலையில் இருந்த காலமது. ஏழாலையில் இருந்து மருதங்கேணி ஏறத்தாள 60 மு ஆ.தூரம்.

அன்றைய காலப்பகுதியில் போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலமது. முகாம்களில் இருந்த படையினர் ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் இடத்தில், புலிகளின் முன்னரங்கநிலைகளை உடைத்துக்கொண்டிருந்தனர்.

கடும் மோதல்கள் வெடிக்கும். துப்பாக்கிகள் அனல் தெறிக்க குண்டுகளைக் கக்கும். எறிகணைகள் வந்து விழும். உலங்னுவானூர்திகள் சடசட என செட்டையடித்தபடி வந்து 50 கலிபரால் சுட்டுத்தள்ளும். பரா வெளிச்சக் குண்டுகள் இரவைப் பகலாக்கும். வடக்குக் கடல் பரப்பில் அதிவேக டோராப் படகுகள் கடற்கண்ணிகளில் இருந்து தப்ப தொடர்ச்சியாகக் குண்டுகளை உமிழ்ந்தபடி கடலைக் கதிகலங்கச் செய்யும். ஆளில்லாத வேவு விமானனம்கள் எந்த நேரமும் "ங்கி" என்ற சத்தத்துடன் வான்பரப்பை வலம் வந்து படங்களை எடுத்து அனுப்பிக் கொண்டிருக்கும். பச்சைக் குழைகளால் உரு மறைத்தபடி போராளிகள் இங்கும் அங்கும்மாக அலைந்தபடி இருப்பார்கள்.

புக்காரா, அவரோ என அலுமீனிய பறவைகள் வந்து குத்திப் பதிந்து கந்தக முட்டைகளை இட்டுத்தள்ளும். மக்கள் பதுங்கு குழிகளுக்குள் ஓடி ஒளிவர்.

அப்போது யாழ்ப்பாணத்தில் கடுமையான பொருளாதாரத்தடை அமுலில் இருந்தது. பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் பனடோல், பற்றரிகள், யூரியா, இன்ஜின் ஒயில் என்பன அறவே தடை செய்யப்பட்டிருந்தன. கள்ளமாகக் கடத்தி வரப்பட அவை ஆனை விலை குதிரை விலையில் விற்கப்பட்டன. ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 200 ரூபாவரை விலை போனது. (அப்போதைய 200 ரூபா இன்றைய 1000 ரூபாவிற்கு சமம்) வாகனங்கள் மண்ணெண்ணையில் ஓடுவதற்கு வாகாக வடிவமைக்கப்பட்டன.

மோட்டார் சைக்கிளின் எயர்ஹோஸ் குழாயில் ஓர் ஓட்டை போட்டு அதில் ஆஸ்பத்திரியில் கிடைக்கும் குளுக்கோஸ் ஏற்றும் குழாயை செருகி, அதை எரிபொருள் தாங்கியை சுற்றிக் கொண்டுவந்து மோட்டார் சைக்கிளின் கைபிடியின் மத்தியில் பொருத்தி இருப்போம். மோட்டார் சைக்கிளின் செசியில் ஓர் பிறாக்கற் செய்து அதில் சிங்கர் ஒயில் கானில் ஓடிக்கொலோன் விட்டு வைத்திருப்போம்.

மோட்டார் சைக்கிளை இயக்கும்போது இந்த ஓடிக்கொலோனில் சில துளிகளை, குளுக்கோஸ் பைப்பில் விட்டு வாயால் ஊதவேண்டும். ஊதும் நேரத்திற்கும் கிக் பண்ணும் நேரத்திற்கும் ரைமிங் சரியாக இருக்கவேண்டும். ரைமிங் பிழைத்தால் சைக்கிள் இயங்காது. ரைமிங் சரியாகி சைக்கிள் இயங்கத் தொடங்கினால் அக்சிலேற்றரை சிறிது கூட்டி இன்ஜின் சூடு ஏறும்வரை இயங்கு நிலையில் ஓர் ஐந்து நிமிடம் வைத்திருக்கவேண்டும்.

சைக்கிள் ஓடத்தொடங்கினால் இன்ஜின் ஒயிலுக்கு பதிலாக விட்ட மரக்கறி எண்ணெய் கொதித்து, பலகாரம் சுட்ட வாசனையைக் கிளப்ப மோட்டார் சைக்கிள் ஜெட் விமானம்போல் புகையை கக்கியபடி பயணிக்கத் தொடங்கும். இப்படி ஓர் மோ.சைக்கிள் என்னிடம் இருந்தது. HONDA CD 70 Benly ரக மோட்டார் சைக்கிள் அது.

சிக்கனமாக ஏரி பொருள் பாவிக்கும் வகையது.

வேலைக்குப் போவதற்காக விடிய ஐந்து மணிக்கு, மனைவி கட்டித்தரும் காலை மதிய சாப்பாடுகளுடன் ஏழாலையில் இருந்து மண்ணெண்ணை மோ.சைக்கிளில் கோப்பாய்க்குப் புறப்படுவேன்.

அங்கு அம்மாவிடம் இன்னுமோர் தேனீர் அருந்திவிட்டு, அங்கிருக்கும் மிதிவண்டியை எடுத்துக் கொண்டு கைதடி சென்று, அங்கிருந்து A9 வீதியூடாக சாவகச்சேரி, கொடிகாம், பளை, புதுகாடு சென்று, அங்கிருந்து மாசார், சேரன்பற்று ஊடாக மருதங்கேணியை அடைவேன். புத்தூர் அச்சுவேலி ஆகிய இடங்களில் இருந்து வரும் உத்தியோகத்தர்கள் கொடிகாமத்தில் என்னுடன் இணைந்து கொள்வார்கள்.

60 KM தூரத்திற்கான மூன்று

மணி நேர பயணத்தில் சைக்கிள் உழக்கி நாக்கு வெளியே தள்ளும். அதுவும் எதிர் காற்றில் ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் சைக்கிள் உழக்குவதைப் போன்ற துன்பம் எதுவும் இல்லை.

9 மணிக்கு மருதம்கேணி பிரதேச செயலகத்தை அடைந்து வேலைகளை செய்து விட்டு இரவு செம்பியன்பற்றில் நாம் எடுத்து வைத்திருந்த வீட்டில் தங்குவோம். அடுத்தநாள் விடிய அலுவலகம் போய் கடமைகளை செய்து விட்டு மதியம் இரண்டு மணிக்கு மீண்டும் கோப்பாயை நோக்கிய மிதிவண்டிப் பயணம்.

5 மணிக்கு கோப்பாய் வந்து அம்மாவிடம் மதியச் சாப்பாட்டை உண்டு விட்டு சிறிது தூக்கம். பின் 7.30 திற்கு மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஏழாலைக்கு புறப்படுவேன்.

புறப்படும்போது அம்மா ஒரு ஜாம் போத்திலைக் கொண்டுவந்து தந்தார்.

"என்னம்மா இது".

"அது கொஞ்சக் குழம்பு. நீ இடியப்பம், புட்டுக்கு நிறைய குழம்பு விட்டு குழைத்து சாப்பிடுவதுதானே வழக்கம். புது இடம். அங்கை என்னமாதிரியோ தெரியாது. இந்தா இதைக் கொண்டுபோய் விட்டுக் குழைச்சுச் சாப்பிடு".

"என்னம்மா கதைக்கிறியள் இதைக் கொண்டுபோக அவையள் என்னைப்பற்றி என்ன நினைப்பினம்?".

"ஒண்டும் நினைக்காயினம் நீ கொண்டு போ".

"நீங்கள் என்னைப் பிரச்னையிலை மாட்டிவிடப் போறியள்.".

"ஒரு பிரச்சனையும் இல்லை. நான் அம்பிகாட்டை உன்ரை சாப்பாடு முறையெல்லாம் சொல்லி வைச்சிருக்கிறான்" என்றவாறு குழம்பு போத்தலை எனது மோ.சைக்கிளில் கொழுவியிருக்கும் bag க்கினுள் வைத்தார்.

அப்பாவித் தாயின் வாஞ்சயைத் தட்ட முடியவில்லை. குழம்புடன் புறப்பட்டேன்.

போக போக எனக்கு ஒரே யோசனை இந்த குழம்பை மனைவி வீட்டில் எப்படி எடுத்துக் கொள்வார்கள்? தங்களின் சாப்பாடு சரியில்லாமல்தான் தாய் வீட்டில் இருந்து குழம்பு கொண்டு வருகிறார் என நினைக்க மாட்டார்களா ? பேசிச் செய்த கலியாணம். அதுவும் கிழட்டு வயதில் செய்த கலியாணம். கலியாணம் முடிந்து பத்து நாள் கூடச் செல்லவில்லை.

> இதைப் பழக்கப் படுத்தினால் மாமி குழம்பு கொடுத்துவிடுவார் என்று மருமகளும், மருமகள் ஏதாவது கறி வைப்பார் தானே என்று மாமியும் சிந்திக்கும் ஒரு நாளில், நான் ரம்ளர் தண்ணீர் விட்டுத்தான் புட்டுச் சாப்பிடவேண்டிய ஒரு நிலை வரும் என்ற கள்ளப் புத்தியும் ஓடியது.

ஆளையாள் இன்னும் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை. அதற்குள் அம்மாவின் வாஞ்சையால் இப்படி ஒரு பிரச்சனை வரப்போகிறதே என்று ஒரே குழப்பம்.

இதற்கிடையில், இதைப் பழக்கப் படுத்தினால் மாமி குழம்பு கொடுத்துவிடுவார் என்று மருமகளும், மருமகள் ஏதாவது கறி வைப்பார் தானே என்று மாமியும் சிந்திக்கும் ஒரு நாளில், நான் ரம்ளர் தண்ணீர் விட்டுத்தான் புட்டுச் சாப்பிடவேண்டிய ஒரு நிலை வரும் என்ற கள்ளப் புத்தியும் ஓடியது.

இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தவனாக புன்னாலைக்கட்டுவனில் பற்றைகள் உள்ள ஓரிடத்தில் மோ. சைக்கிளை நிற்பாட்டினேன். குழம்புப் போத்தலை எடுத்து நன்கு குலுக்கி கவிட்டுத் தரையில் ஊற்றினேன். வெற்றுப் போத்தலை மூடி, bag க்கினுள் வைத்துக்கொண்டு ஏழாலை வந்தேன். நேரே கிணற்றடிக்கு சென்று கை கால் முகம் கழுவி போதலையும் நன்கு கழுவி bag க்கினுள் வைத்து விட்டு அப்பாவியாக மனைவியின் சாப்பாட்டைச் சாப்பிட்டேன்.

மாமியார் உரைத்த மந்திரத்தின்படி மனைவி இப்போ புட்டுக்கு குழம்பு வைப்பதை வாடிக்கையாகக் கொண்டு விட்டார்.

பின்னேரங்களில் அம்மா குழம்பு தருவதும் அதை புன்னாலைக்கட்டுவன் மண் ஆசையாக குடிப்பதும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

ஒருநாள் கோப்பாயில் இருந்து புறப்படும் போது "கொஞ்சம் பொறு தம்பி! குழம்பு கொதிக்குது இறக்கித்தாறன்" என்றார் அம்மா.

"நேரம் போட்டுது அம்மா.இண்டைக்கு குழம்பு வேண்டாம். அங்கை அம்பிகா குழம்பு ஒவொருநாளும் வைக்கிக்கிறா".

"இறக்கீட்டன் இந்தா கொண்டு போ" என்று அம்மா கொதி குழம்பை போத்தலினுள் விட்டுத் தந்தார். வழமை போல் பூமாதேவி கொதி குழம்பைக் குடித்தார்.

அடுத்தநாள் அம்மாவிடம் தேனீர் குடித்துக் கொண்டிருக்கும்போது, அம்மா

"நேற்று குழம்பு எப்படி இருந்து?" என்று கேட்டார்.

"சூப்பர் அம்மா"

பொய் எப்போதும் மிகையாகவே வரும்.

"நீ அவசரப்படுத்த, அரைஅவியலாய் இறக்கிப் போட்டன்"

"ஓமம்மா கத்தரிக்காய் வடிவாய் அவியேலைத்ததான்"

"என்ன?"

எங்கையோ சொதப்பி விட்டதை புரிந்து கொண்டேன்.ஆனாலும் சமாளித்து

"அரைஅவியலாய்தான் இருந்தது".

"எது கத்தரிக்காயோ?"

வசமாக மாடுப்பட்டு விட்டேன் என்பது புரிந்தது.ஆனால் எங்கே என்பது புரியவில்லை.

பதில் கூறாது தேனீர் கோப்பையை பார்த்தபடி தேநீரைக் குடித்தேன்.

அம்மாவிடம் இருந்து "---ம் --" என பெருமூச்சு ஒன்று கிளம்பியது.

தேனீர் கோப்பையை வைக்க நான் குசினிக்கு சென்றபோது அங்கு ஒரு மொந்தன் வாழைக் குலையில் சில காய்கள் பிடுங்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

அன்றில் இருந்து அம்மா எனக்கு குழம்பு தந்து விடுவதில்லை.

**Facebook: Vadakovay Varatha Rajan**



# ஒப்பாரிக்கோச்சி

## சிறுகதைத் தொகுப்பு




## நோயல் நடேசன்

**Facebook: Noel Nadesan**

எழுத்தாளர் மு.சிவலிங்கம் பல வருடங்களுக்கு முன்பு தனது ஒப்பாரிக்கோச்சி சிறுகதைத் தொகுப்பினை எனக்குத்தந்திருந்தார்.

ஏதோ காரணத்தால் இந்தப் புத்தகம், சிறுவயதில் தொலைத்த சில்லறைக் காசாக நழுவிவிட்டது. புதிய வீடு மாறியபோது மீண்டும் கையில் கிடைத்தது, இம்முறை வெளிநாட்டுப் பயணத்தின்போது எடுத்துச் சென்றேன். முழுக்கதைகளைப் படித்ததும், இதுவரையில் ஏற்கனவே படித்த பல கதைகளில் நான் காணாத, அல்லது காணத் தவறிய மலையக மக்களின் வாழ்வின் குறுக்கு வெட்டு முகத்தை எழுத்தாளர் சிவலிங்கத்தின் கதைகளில் என்னால் காணமுடிந்தது.

கதைகள், கார் கதவைத் தொடும்போது ஏற்படும் ஸ்ரரிக் மின் அதிர்வை மனதில் ஏற்படுத்தியது. அவை புனைவற்ற சிறுகதைகள். பச்சைப் பசுமையான மலையகம், தடிப்பான துயரத்தில் நெய்யப்பட்ட கரும் பாயாக விரிந்தது. மனதில் படபடத்தது.

84 ஆம் ஆண்டுகளில் நுவரெலியா நகரத்தின் அருகே இறாகலையில் உள்ள சூரிய காந்தி தோட்டத்தின் மத்தியிலுள்ள அரச மிருக வைத்தியசாலையில் நான் ஆறு மாதம் வேலை செய்த காலத்தை நினைவு கூரவைத்தது. சிறுவயதில் அப்பன் எனக்கு அடித்த முதல் அடி நினைவுக்கு வருவதுபோல், மனதை ஈரமாக்கியது. அக்காலத்தில் சிங்கள கிராம மக்கள், தோட்டத் தொழிலாளர்களின் லயங்களை எரித்த சம்பவமே என்னை நாட்டை விட்டு வெளியேறவைத்தது. ஒருவிதத்தில் சிங்கள மக்களாலோ அல்லது அரச படைகளாலோ நேரடியாகப் பாதிப்பற்றவனாக நாட்டை விட்டு

வெளியேறிய நான், மற்றைய இலங்கைத் தமிழர்களிலிருந்து வேறுபடுகிறேன்.

நான் மலையத்திலிருந்த காலத்தை வைத்து 1988 இல் மக்கள் குரல் என்ற அவுஸ்திரேலிய கையெழுத்து சஞ்சிகையில் எழுதியதே எனது முதல் ஆங்கில கட்டுரை. அது இன்னமும் விக்கிப்பீடியாவில் உள்ளது.

பிற்காலத்தில் இலங்கை சென்ற போது, நான் கண்ட மலையக மக்களின் வாழ்வு நிலைமைகள் பல மடங்கு முன்னேறியிருந்தாலும், காணி அற்ற நிலைமை நிழலாகத் தொடர்கிறது. மற்றைய இலங்கையின் பகுதிகளில் நடந்த நகரமயமாக்கல், அட்டை வேகத்தில் மலையகத்தில் ஊர்கிறது. இதனால் தொழிலாளர் வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள், சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தத்தால் ஏற்பட்ட நிலையற்ற தன்மையுடன் மலப்புழுக்களாக நெளிவதை எழுத்தாளர் மு.சிவலிங்கம் பல கதைகளில் காட்சிப்படுத்தியுள்ளார். ஏனைய எழுத்தாளர்களைப்போன்று மலையக மக்கள் பாதிப்படைவதற்கு அரசும் தொழிற்சங்கத் தலைவர்களும்தான் முற்றிலும் பொறுப்பு என்று காண்பிக்காது, மலையக மக்களது மனநிலைகளும் அதற்குக் காரணம் என்பதை “பல்லுப்பெருமாள்” சிறுகதை மூலம் எழுத்தாளர் தெளிவாகக் காட்டுகிறார். தோட்டத்தில் ஒரு ஏக்கர் காணி கொடுத்தபோது அதை வாங்காது வயதான கிழவியொருத்தியின் காம்பரா லயத்துக்காகச் சண்டை போடுவதும், பின்பு சிங்கள தொழிலாளிக்கு அந்த காணி போனபோது மனமுவந்து அங்கு தோட்ட வேலை செய்வதுமான கதையாக “பல்லுப் பெருமாள்” கதை வருகிறது. இந்தக் கதை நகைச்சுவை சொட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

பல கதைகள் மக்களைச் சுரண்டும் தொழிற்சங்கத் தலைவர்கள் பற்றியது. ஆடுகள் கூட சிறந்த மேய்ப்பனைத் தேடும்போது, நமது வட- கிழக்கு தமிழினம் தொடர்ச்சியாகக் கையாலாகாத தலைவர்களை தேர்ந்தெடுப்பதுபோல், மலையக தொழிற்சங்க வாதிகளும் மக்களை ஏமாற்றுபவர்கள் எனத் தெளிவாகக் காட்டுகிறார்.

சிறுகதைகளின் கருக்கள், பிரித்தானியர்கள் காலத்திலிருந்த நிலையிலிருந்து நிகழ்காலம் வரையும் தொடர்கின்றன.

முதற்கதையான “ஒப்பாரிக் கோச்சி” சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தில் நாடற்றவர்களாக வலுக்கட்டாயமாக அனுப்பப்படுபவனது நெருக்கடி நிலையைச் சொல்கிறது. இரண்டாவது கதை, தோட்டப் பாடசாலைகளை, தனி ஆசிரியர்களாக ஐந்து வகுப்புகளைக் கட்டி இழுக்கும் பரிதாப நிலையை காட்டி, எப்படி தோட்டப் பாடசாலைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை புரியவைக்கிறது. பல கதைகள் சுகாதார, மருத்துவ நிலையங்களின் பற்றாக்குறை பற்றியது. அதைவிட ஒரு கதை மலையக சிறுவர்கள், கொழும்பிலிருக்கும் செல்வந்தர் வீடுகளில், பாலியல் மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளாவதாக நமக்குக் காட்டுகிறது.

> “
> பல கதைகள் மக்களைச் சுரண்டும் தொழிற்சங்கத் தலைவர்கள் பற்றியது. ஆடுகள் கூட சிறந்த மேய்ப்பனைத் தேடும்போது, நமது வட- கிழக்கு தமிழினம் தொடர்ச்சியாகக் கையாலாகாத தலைவர்களை தேர்ந்தெடுப்பதுபோல், மலையக தொழிற்சங்க வாதிகளும் மக்களை ஏமாற்றுபவர்கள் எனத் தெளிவாகக் காட்டுகிறார்.
> ”

மொத்தத்தில், நீண்ட காலமாக நீரிழிவு உபாதையால் பாதிக்கப்பட்டு அதனைப் புறக்கணித்து விட்டவனை பார்க்கும் மருத்துவர், இறுதியில் அவனது சிறு நீரகம், கண்கள், இதயம் , கல்லீரல் எல்லாம் பழுதாகி இருப்பதாகவும் அத்துடன் அவனது கால் நரம்புகள் வேலை செய்யாது, விரல்கள் மரத்தோ அழுகியோ போய்விடும் எனச்சொல்து போன்ற காட்சியை இந்தக் கதைகளை வாசித்து முடிக்கும்போது நாம் எமது மனக்கண்ணில் தரிசிக்க முடியும்.

கதைகளைப் படிக்கும்போது வேறு ஒரு எண்ணமும் ஏற்பட்டது. கதை சொல்லல் என்பது நேரடியாக முகத்தில் ஒருவர் நிமிர்ந்து காறித்துப்புவது போன்றிருந்தது . அதாவது குற்றவியல் மருத்துவர் பிரேதப் பரிசோதனையில் கத்தியால் கீறிக்காட்டுவதுபோன்ற தன்மை இங்கு தெரிகிறது.

வாசிப்பவரின் கற்பனைக்கோ ஒளிவு மறைவுகளுக்கோ கதையாசிரியர் இடம் கொடுக்காதது ஒரு குறைபாடு என இங்கு கூறமுடியாது . ஏனென்றால் நமது விமர்சகர்கள், “தெளிவாகக் கூறவேண்டும். அல்லது நேரடியாகச் சொல்லவில்லை” என்பார்கள்.

ஜோன் ஹேசி (John Richard Hersey ) “ஹிரோஷிமா” நாவலில், அமெரிக்கா போட்ட அணுக்குண்டால் ஏற்பட்ட விளைவுகளைச் சித்திரிப்பார். குண்டு வெடிப்பின் விளைவுகள், எப்படி புயலாக உருவாகி, தீயாகப் பரவி மக்களைக் கருக்கியது என்பதோடு இளம்பெண்களது தோல்கள் கருகியதையும் விவரிப்பார். ஒரு பத்திரிகையாளராகச் சென்று இப்படியான உண்மை நிகழ்வுகளை நாவலாக்கியுள்ளார். இதனால் வாசகர்களுக்கு அதிர்வுகள் ஏற்படும் . இப்படியான நேரடியான கதை சொல்லல் உத்தி செய்தியாளர்களால் போர் முனைக்கதைகள் சொல்லப் பயன்படுகிறது. தற்போது உக்ரேய்ன் போர்முனையில் நடப்பதை விவரிக்கும் பிபிசி மற்றும் சி என் என் போன்றவை, கேட்பவர்களது மூளையைச் சலவை செய்யும் உத்தியாகப் இந்தப் போர்முனையை பாவிக்கின்றன.

இவை புதியதல்ல, ஏற்கனவே உள்ளதுதான். முன்பாக நேச்சுரலிசத்தோடு எழுதியவர்களான பிரான்சிய எழுத்தாளர்கள் எமிலி ஷோலா, மாப்பசான் போன்றவர்கள் இத்தகைய எழுத்தைப் பாவித்தார்கள். இவர்களது கதாபாத்திரங்களின் வாழ்வை அவர்கள் வாழும் சூழ்நிலை தீர்மானிக்கிறது என்பதோடு, துருக்கிய கோப்பிபோல் கசப்பான எழுத்தாக இருக்கும்.


இப்படியான எழுத்துகள் தமிழில் அதிகமில்லை. தமிழ்நாட்டு எழுத்தாளர் இமையம் மட்டும் இதைத் தனது முக்கிய எழுத்தாகப் ( Genre) பாவிக்கிறார். இவரது எழுத்துகளிலும் இப்படியான கசப்பான தன்மை வார்த்தைகளில் வந்து நமது மனதில் தங்கி நிற்கும்.

புத்தகத்தைப் படித்து முடித்தால் நாக்கில் பட்ட கசப்பான மாத்திரையின் உணர்வுபோல் தேங்கி இருக்கும். மு. சிவலிங்கத்தின் ஒப்பாரிக்கோச்சியிலும் அப்படியான கசப்பு உங்களுக்குக் கிடைக்கும்.

# நமக்கு வாய்த்த கவிஞர்கள்

## கற்சுறா

Facebook: Katsura Bourassa




## தொட்டால் தீட்டு 2

ரசனை கொண்ட எழுத்துக்களை எழுதுபவர்களாகவும் கவிதைப் பரப்பில் பல்வேறு தளங்களை உருவாக்க முனைவதாகவும் சொல்லிவரும் பலர் தமது எழுத்துக்களை மட்டுமே தொடர்ந்து காவியலையும் நிலையில் தம்மைத் தாமே “கவிஞர்” என்று அழைப்பதன் மூலம் அவர்கள் பேருவகை கொள்கிறார்கள்.

இவர்கள், தாங்கள் “போலச் செய்யும் கவிஞர்கள்” என்பதனை ஒருபொழுதிலும் உணர்ந்து கொள்வ தேயில்லை. அதனைவிட இன்னொரு நிலையிலிருந்து “இத்தனை காலத்தில் இவ்வளவு கவிதைகளை எழுதுவேன்” என்றும், “இந்த வருடத்திற்குள் எனது கவிதைத் தொகுதியைக் கொண்டு வருவேன்” என்று அறிக்கையையும் அறிவிக்க முடிகிற தொழிற்சாலைக் கவிஞர்களாக இருந்து விடுகிறார்கள் என்பதனையும் அவர்கள் விளங்கிக் கொள்வதில்லை.

தமக்கு முன்னால் பெயரெடுத்த கவிஞர்களைப் பார்த்துத் திரும்ப வார்த்தைகளை மாற்றி எழுதுவதே அவர்களது பெரும் தேடலாய் இறுதிவரையும் இருந்து விடுவதுதான் இன்றைய அதிக கவிஞர்களின் மிகப்பெரிய அபத்தம்.

ஒரு கவிதையை நீ எழுதுகிறாய் என்றால் அதற்குள் நீ என்ன தர்க்கத்தைப் பெறுகிறாய்? இந்தச் சமூகம் அந்தக் கவிதைக் கூடாக என்ன தர்க்கத்தைப் பெறுகிறது? என்ற ஆகக் குறைந்தளவு இரண்டு கேள்விகளாவது நமக்குத் தேவைப்படுகிறது. ஏற்கனவே எழுதியதை பார்த்து எழுதும் “போட்டோக் கொப்பி” மிசினாக ஏன் நீ இருக்க வேண்டும்.?

என்ற அடிப்படைப் புரிதல் இருந்தால் இந்த அபத்தம் நடக்கவே நடக்காது.

நமக்குள் எழுந்தருளியிருந்த பல கவிஞர்கள் கவிதைத் தொழிலை மறந்து இன்று வேறு தொழிலுக்குப் போய் விட்டார்கள் என ஒரு வார்த்தையை முதற்பதிவில் எழுதியிருந்தேன்.

இதனையும் கொஞ்சம் விலாவாரியாக நாம் நோக்க வேண்டும்.

யாரந்தப் பல கவிஞர்கள்?

ஒரு தொகுப்பினை மனதில் நிறுத்திச் சில கவிதைகளை எழுதித்தள்ளும் மனநிலை என்பதுவே பல்வேறு இடங்களில் நிகழ்ந்தவை. அத்துடன் இந்தப் பெயரெடுத்த கவிஞர்கள் தங்களுக்குக் கீழேயுள்ளவர்களை தங்கள் விசுவாசிகளைக் கவிஞராக்கும் நோக்கில் ஒழுங்கு செய்யப்பட்ட தொகுப்புக்களே நம்மத்தியில் ஏராளமாய்ப் பரவிக் கிடப்பவை. (அதன் உதாரணங்களை இங்கே சொல்லத் தேவையில்லை என்றே நினைக்கிறேன்.) அவ்வாறு தொகுத்தளித்த தொகுப்புக்களைக் கூடக் கைவிட்டு அந்தப்பல விசுவாசிகள் சீவியப் பொழுதிலும் கவிதை குறித்து எவ்வித உரையாடலும் அற்று வேறு தொழிலுக்குச் சென்று விட்டார்கள் என்பதனைத்தான் நான் சொல்லியிருந்தேன். அவர்களுக்கு கவிதை குறித்து எந்தச் சலனமும் எக்காலத்திலும் ஏற்படுவதில்லை. அதனை அவர்கள் திரும்பிப் பார்த்ததும் இல்லை. இன்று வரை இந்த சமூகம் அவர்களைக் காணும் பொழுதிலெல்லாம் கவிஞர் என்ற முன் அடைமொழியுடன் அழைத்தாலும் அவர்கள் அது குறித்துக் வெட்கம் கொள்வதில்லை. இலக்கியக் கூட்டங்களில் அல்லது பொது வெளிகளில் கவிஞரே வாருங்கள். கவிஞரே தேனீர் குடியுங்கள் என்று பெயரெடுத்த கவிஞர்களின் போலி அழைப்பில் பேரானந்தம் கொள்கிறார்கள். அதனையே தங்கள் பெருந்தகுதி என எண்ணிப் பெருமிதம் கொள்கிறார்கள்.

> “நமக்குள் எழுந்தருளியிருந்த பல கவிஞர்கள் கவிதைத் தொழிலை மறந்து இன்று வேறு தொழிலுக்குப் போய் விட்டார்கள்.”

**ரொரன்டோவில் நடைபெற்ற சில கவிதைத் தொகுதிகள் குறித்த ஒரு அறிமுக நிகழ்வில் அங்கே அருகில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு நூலினை எடுத்து (அது ஒரு மொழிபெயர்ப்பு நாவல் என நினைக்கிறேன்) அதில் இருந்த ஒரு பந்தியை ஒரு தமிழ்க் கவிதையை வழமையாக வாசிக்கும் தொனியில் வாசித்துக் காட்டி, இதன் உணர்வு எப்படியிருந்தது எனக் கேட்டேன். அனைவரும் மவுனமாக இருந்தார்கள். நல்ல கவிதை எனச் சொன்னார்கள். யார் எழுதியது எனக் கேட்டார்கள். இது கவிதை இல்லை. நாவலின் ஒரு பந்தி எனச் சொன்னேன்.**

அதற்கு அப்பால் கவிதைகுறித்து எவ்வித கரிசனையையும் இவர்களிடத்தில் காணமுடியாது.

ஆனால் இப்படியான விசுவாசத்திற்காக எழுதிக் கொடுக்கப்பட்ட கவிஞர்கள் தவிர்த்து எமது பொதுவாழ்வில் இன்று தினம் இயங்கிக் கொண்டிருக்கும்- பக்கம் பக்கமாய் எழுதித் தள்ளிக் கொண்டிருக்கும் கவிஞர்களது கவிதைத் தொகுப்புக்கள் குறித்து சில நடைமுறைகளை நாம் பேசிவிடத்தான் வேண்டும்.

ஒரு கவிஞருக்குத் தனது கவிதைகளைத் தொகுக்கும் மனநிலை தோன்றும் போது அந்தக் கவிஞரின் கவிதைத் தளம் வேறு ஒரு தளத்தில் இந்த சமூகத்தில் உரையாடியிருக்க வேண்டும், அதுவரையில் இந்த சமூகத்தை அந்தக் கவிதைகள் மெல்லிதாகவேனும் உருக்குலைய வைத்திருக்க வேண்டும் என நான் உணருகிறேன். ஆனால் இந்தக் கவிதைகளைத் தொகுத்த கவிஞர்களே தமது எழுத்துக்களைத் தொடர்ந்து காவித்திரிந்தும் அது நடைபெறுவதில்லை. அப்படியிருக்க தாமே தமது தொகுப்புக்களைக் காவியலைய வேண்டிய அவலம் அவர்களது வாழ்காலம் பூராவும் இருந்துவிடுகிறது என்பது வேதனையானது. அவர்களது வாழ்காலத்தின் பின் அந்தக் கவிதைகளை யார் காவித்திரிவார்கள் என்ற வினாவிற்கு அவர்களிடம் கூட விடையில்லை என்பதும் வேதனையானதுதானே. தமிழகத்தின் வியாபாரப் பதிப்பகங்களின் செயற்பாட்டிற்குள்ளால் அவர்கள் தற்காலிகமாக காவித்திரியப்பட்டாலும் நீள் நோக்கில் அவை வெற்றுக் காகிதங்களே.

கவிதையில் ஒரு தொகுப்பினைக் கொண்டு வரும்போது அந்தக் கவிதையின் காலாவதித் தனத்தையாவது கவிஞர் கைப்பற்றியிருக்க வேண்டும். ஒரு கவிதைத் தொகுப்பினை வெளிக்கொண்டு வந்து விட்டு அந்தக் கவிஞர் காலாவதியாகி விடக் கூடாது.

ஆனால் நடந்தது என்ன?

முதற் கவிதைத் தொகுப்பினை வெளிக் கொண்டு வந்த பின் காலாவதியாகியவர்கள் பலர். பல தொகுப்புக்களைக் கொண்டு வந்தாலும் அந்தந்தக் காலத்திலேயே காலாவதியாகிக் கொண்டிருப்போர் இன்னும் பலர்.

தமது தொகுப்பினைக் கொண்டு வரும்போது சமகாலப்பிரச்சனைகளை எழுத வேண்டும் என்ற நோக்கில் அகதிப்பிரச்சனை- நிறவெறிப்பிரச்சனை- அயல் வீட்டுப்பிரச்சனை- பெண்ணியப் பிரச்சனை- வீட்டில் புருசன் பெஞ்சாதிப்பிரச்சனை- வேலைப் பிரச்சனை- ஈழ யுத்தப் பிரச்சனை எல்லாம் எழுதிவிட்டேன், இன்னொரு கவிதை சாதியப்பிரச்சனை குறித்து ஒன்று எழுதினால் தொகுப்பினைக் கொண்டு வந்து விடுவேன் என்ற நிலையில் எழுதிக் கொண்டு இருக்கும் இன்றைய கவிஞர்களை நான் அறிவேன்.

இப்படித்தான் இயங்குகிறது நமது சூழலில் கவிதைத் தொழிற்சாலை.

ரொரன்டோவில் நடைபெற்ற சில கவிதைத் தொகுதிகள் குறித்த ஒரு அறிமுக நிகழ்வில் அங்கே அருகில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு நூலினை எடுத்து (அது ஒரு மொழிபெயர்ப்பு நாவல் என நினைக்கிறேன்) அதில் இருந்த ஒரு பந்தியை ஒரு தமிழ்க் கவிதையை வழமையாக வாசிக்கும் தொனியில் வாசித்துக் காட்டி, இதன் உணர்வு எப்படியிருந்தது எனக் கேட்டேன். அனைவரும் மவுனமாக இருந்தார்கள். நல்ல கவிதை எனச் சொன்னார்கள். யார் எழுதியது எனக் கேட்டார்கள். இது கவிதை இல்லை. நாவலின் ஒரு பந்தி எனச் சொன்னேன்.

வசனங்களை முறித்துக் கீழே கீழே எழுதுவதாலோ -அல்லது அவ்வாறான தொடர் தொனியில் அதனை வாசிப்பதனாலோ அது கவிதை ஆகாது. நமது கவிதை வாசிப்பு முறை என்பது தொலைதூரத்தில் இருந்து வருகின்ற இராணுவ வண்டியின் இரைச்சலின் தொனியை ஒத்தமாதிரி இழுத்து இழுத்து ஏற்ற இறக்கங்களுடன் இருந்துவிடுகிறது என நான் முன்பொருமுறை எழுதியிருந்தேன். அது அருவருப்பை உண்டாக்குவது. அனைத்துக் கவிதைகளையும் ஒரே சத்தத்துடன் வாசிப்பது கவிதைக்கு இழுக்கு. ஒரே சத்தத்துடன் வாசிக்கும் கவிதைகளை எழுதுபவர்களை நாம் ஏன் வேறு வேறு பெயர்களைக் கொண்டு அழைப்பான்?

இப்படித்தான் இன்றும் ஒரே கவிதைகளைப் போல் "போலச் செய்யும்" கவிஞர்கள் நம்மத்தியில் ஏராளம் உள்ளார்கள். அதனை அட்டவணைப்படுத்தும் இடம் இதுவல்ல என்பதனால் தவிர்க்கிறேன். "போலச் செய்யும்" கவிஞர்களையும் இந்தச் சீர் கெட்ட கவிதைச் சூழல் எந்தவித புதுஅறிவையும் பெறவிடாது உசுப்பேத்தி உசுப்பேத்தி ஒன்றுமில்லாதவர்களாக்கித் தெருவில் விட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கிருக்கின்ற தன்நெஞ்சறிந்த கதைகளைக் கூடத் தன்னியல்பாய்ச் சொல்லமுடியாதவர்களாக்கி வெறும் மூடர்களாக்கி வேடிக்கை பார்த்துக் காயடித்து வைக்கிறது இந்த இலக்கியச் சூழல்.

இன்னொருபுறம் தனது கதையைத் தான் அறியும் விதத்தில் எழுதத் தொடங்குபவரை நவீன கவிதை- நவீனம் கடந்த கவிதை- பரீட்சாத்தக் கவிதை- கவிதையில் சத்திர சிகிச்சை என்று பெரும் சிந்தனையாளர்களைப் போல் பேசி அவர்களைக் குழப்பியடித்து காயடித்து முட்டாளாக்கி வைகைக்கிறது வேறொரு முட்டாள் கூட்டம்.

தம்முடைய வருமானத்திற்காக இயல்பாய் எழுதக் கூடியவர்களது எழுத்தை மாற்றி எழுதவைக்கும் தமிழ் நாட்டுப் பதிப்பகச் சூழலுக்குள் அள்ளுப்பட்டு இன்று அவர்களிடம் பெயரெடுக்க எழுதிவரும் ஈழத்தவர்களது அவல நிலையைப் போல் இருப்பவர்கள்தான் இந்த வகை முட்டாள்க் கவிஞர்களும். இவர்கள் தம்மையும் கண்டடையவில்லை. கவிதையையும் கண்டடையவில்லை. வாசிப்பின் அறிவில் எதையும் அவர்கள் கண்டடைய முயலவில்லை.

இப்படியானவர்களை இன்னும் மடை மாற்றி அலையவைக்கும் செயற்பாட்டில் இயக்குபவர்கள் நமது பட்டியலாளர்கள். இவர்கள் தரும் துன்பத்திற்கும் அளவேயில்லை.

இவர்கள் சிறந்த கவிதை அல்லது கவிஞர்கள் என அடையாளம் காட்டும் கவிஞர்களின் பட்டியல்களை எழுதிச் செல்லும் செயல் சொல்லி மாளாது. அவ்வளவு நீண்ட துன்பச் செயல் அது. எழுதும் கவிஞர்களின் கவிதைகளுக்கிடையில் இருக்கும் எந்தத் தனித்துவங்களையும் இவர்களால் சொல்ல முடிவதில்லை. அந்தக் கவிதைகள் ஏற்படுத்தும் தர்க்கங்களையும் இவர்களால் கண்டு சொல்லமுடிவதில்லை. சங்கக் கடை வரிசையில் நிற்பவர்கள் யார் என்று கேட்டால் பெயர்களைச் சொல்வதைப் போல் வரிசையாகச் சொல்லிக் கொண்டு இருப்பார்கள். அவ்வளவுதான் அவர்களுக்கும் தெரியும்.

ஆனால் தமக்கு ஜால்ரா போடுபவர்களாகவும் தம்மை ஒரு சொல்லும் நோக எழுதாதவர்களாகவும் தமது சீடர்களாகவும் தமக்குள்ளால் கவிஞர் என்ற பெயரை எடுத்துவிட அலைபவர்களாகவும் யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்களைக் கண்டுபிடித்து வரிசைப்படுத்துபவர்கள்தான் இந்தப் பட்டியல் குருமார்கள்.. இந்தக் குருமார்களே தமது சீடர்களைத் தமிழ் நாட்டிற்கு தமக்குள்ளால் அறிமுகம் செய்து ஏற்றுமதி செய்கிறார்கள். தமிழ் நாட்டுத் தற்குறிகளுக்கும் இந்தவகை இலக்கியக் குருமார்கள் அடையாளப்படுத்தும் பட்டியலாளர்களைத் தவிர வேறு தேடல்கள் இருப்பதில்லை.

இதற்கு முக்கிய உதாரணமாகக் கனடாக் காலம் இதழில் தமிழ் நாட்டிலிருந்து ஜெமோகன் எழுதிய ஈழத்துக் கவிஞர்கள் குறித்த கட்டுரையைக் குறிப்பிட முடியும். இந்த வகை ஈழத்துக் குருமார்களை விடவும் மோசமானவர்கள் தமிழ்நாட்டுத் தற்குறிகள். இவர்களுக்கு ஈழத்துக் கவிதைச் சூழலின் மீதான உன்னிப்பான புரிதலோ தேடலோ ஒரு பொழுதிலும் இருந்ததில்லை.

சமூகத்தை உருக்குலைக்கும் எழுத்தாளர்களை அல்லது மறுத்து எழுதும் எழுத்தாளர்களை அல்லது தமது வலைக்குள் சிக்காது எழுதும் எழுத்தாளர்களை இவர்களால் கண்டுணர, அடையாளம் கொள்ள முடிவதில்லை. அவர்களைத் "தொட்டால் தீட்டு" என விலகிப் போவதும்.தமது அடையாளத்திற்குள் நிலைகொண்டு நிறுத்த முடியாத மனநிலை கொண்டவர்களுமாக இருந்து விடுவதுதான் இவர்களது அனைவரதும் அயோக்கியத் தனத்தின் உச்சம்..

இந்தப் பட்டியலாளர்கள் அடையாளம் காட்டும் கவிஞர்களின் கவிதைகள் ஒன்றையொன்று பிசிறாதது. இவ்வாறு பிசிறாத கவிஞர்களது எழுத்துக்களை மீண்டும் போலி செய்வது ஒன்றும் பெரும் சிக்கலான காரியமல்ல. ஆனால் அதற்குள் நிகழும் தர்க்கங்களைக் கொண்டு அவற்றைப் போலி என அடையாளம் காண்பது பெரும் இலகு. ஆனால் இந்தப் பட்டியலாளர்களுக்கு அதுவும் கூடத் தெரிவதில்லை. இவர்களும் அந்தப் போலிகளுக்கூடாகத் தமது இருப்பினைத் தக்கவைக்கச் சொறியும் முதுகே அது.

> இதற்கு முக்கிய உதாரணமாகக் கனடாக் காலம் இதழில் தமிழ் நாட்டிலிருந்து ஜெமோகன் எழுதிய ஈழத்துக் கவிஞர்கள் குறித்த கட்டுரையைக் குறிப்பிட முடியும். இந்த வகை ஈழத்துக் குருமார்களை விடவும் மோசமானவர்கள் தமிழ்நாட்டுத் தற்குறிகள். இவர்களுக்கு ஈழத்துக் கவிதைச் சூழலின் மீதான உன்னிப்பான புரிதலோ தேடலோ ஒரு பொழுதிலும் இருந்ததில்லை.

இதன் முக்கிய அடையாளங்களாகக் கடந்த காலங்களில் பல்வேறு நபர்களால் தொகுக்கப்பட்ட (புலம்பெயர்ந்தோர் கவிதைகள்- தொகுப்பு: ப. திருநாவுக்கரசு, பெயல்மணக்கும் பொழுது தொகுப்பு:அ. மங்கை) ஈழத்துக் கவிதைத் தொகுப்புக்களை நாம் காட்டிவிடமுடியும் என்றாலும் இங்கே நான் சுட்டிக் காட்டுவது "IN OUR TRANSLATED WORLD" என்று செல்வா கனகநாயகம் அவர்களால் தொகுக்கப்பட்ட மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்பு. இந்தக் கவிதைத் தொகுப்பினை நீங்கள் உன்னிப்பாகக் கவனிப்பின் நான் முதலிலேயே சொல்லிக் கொண்டு வந்த அத்தனை விசர்த் தனங்களையும் அது கையில் தாங்கியிருக்கிறது என்பதனை விளங்கிக் கொள்ள முடியும். தமிழில் தொகுக்கப்பட்ட அல்லது வேறு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளின் தேவை இவ்வாறான விசர்த் தனங்களிலிருந்தே செய்யப்பட்டிருப்பதனை நான் தொடர்ந்தும் அடையாளம் காட்ட முனைகிறேன்.அதன் பின்னாலிருக்கும் அசிங்கங்கள் பல்வேறு விதமானவை. இனிவரும் காலங்களில் அவைபற்றியும் நாம் பேச வேண்டும்.

"IN OUR TRANSLATED WORLD" என்ற நூல் கனடா இலக்கியத் தோட்டத்தின் வெளியீடாக ஒன்ராறியோ அரசு மற்றும் விஜய் ரீவியின் பண உதவியோடும் பல்வேறு நாடுகளின் வியாபாரக் கலாநிதிகளின் பண உதவியோடும் வெளிவந்தது என அவர்கள் அதில் அறிவித்திருக்கிறார்கள். இதில் வெளிவந்திருக்கிற கவிதைகள் எழுதிய பல கவிஞர்களை நீங்கள் இன்று எங்கு தேடினாலும் பிடிக்கமுடியாது. அவர்களைத்தான் தொழிலை மறந்து வேறு தொழிலுக்குப் போனவர்கள் என்கிறேன்.

நான் ஏற்கனவே சொன்னது போல் ப. திருநாவுக்கரசுவால் வெளியிடப்பட்ட புலம்பெயந்தவர்கள் கவிதைத் தொகுதியில் அடையாளம் பற்றிய புரிதலற்று தனக்கு வாய்த்த கவிதைகளை எடுத்து எவ்வாறு அடையாளப்படுத்தி பணம் பெற்றாரோ அதே போன்றதொரு செயற்பாடுதான்

இந்தத் தொகுதியிலும் நடைபெற்றது. இவர்கள் அடையாளப்படுத்தியிருக்கும் கவிஞர்களின் தரம்- அவர்களை அடையாளம் காட்டும் கவிதை- அவர்களது பட்டியல் நியாயமானதே இல்லை. இவர்களுக்கு சமகாலத்தின் கவிதைச் செல்நெறி தெரியவேயில்லை. அது அவர்களுக்குத் தேவையாய் இருந்திருக்கவேயில்லை என்பது அவர்கள் தெரிவு செய்த கவிதைகளிலும் அடையாளம் காட்டிய கவிஞர்களிலும் தெரிவதுமட்டுமல்ல, அவர்கள் எழுதியிருக்கும் முட்டாள்தனமான முன்னுரையிலும் அப்பட்டமாகத் தெரிகிறது.(இந்த முன்னுரையையாவது நீங்கள் அனைவரும் வாசிக்க வேண்டும் எனத் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.)

எவ்வாறு wilting laughter என்று 2009 இல் செல்வா கனகநாயகம் அவர்களால் சேரனதும் ஜெயபாலனதும் புதுவையினதும் கவிதைகளை மொழிபெயர்த்து மூன்று தமிழ்க் கவிஞர்கள் என அடையாளம் காட்டினாரோ அதே போன்று 78 கவிதைகளைத் தொகுத்து இந்தத் தொகுப்பினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதில் 400 கவிதைகளை எடுத்துத் தெரிவு செய்ததாக வேறு சொல்லியிருக்கிறார்கள். ஆக இவர்களுக்குக் கவிதையறிவும் இருக்கவில்லை கால அறிவும் இருக்கவில்லை.

நான் ஏற்கனவே அடையாளம் காட்டியது போல் இதுவும் ஒரு பகட்டுத் தொகுப்பு. அவ்வளவுதான். ஏனெனில் செழியன் என்ற கவிஞனை ஈழத்தில் அடையாளம் காட்டும் கவிதை என்பது வேறு.

“மரணத்தைக் கண்டு அஞ்சுபவர்களல்ல. ஆனால் புதிய எஜமானர்களுக்காத் தெருக்களில் மரணிப்பதனை நாம் வெறுக்கிறோம்” என்ற செழியனின் வரிகளை நாங்கள் யாரும் மறந்து போகவில்லை என்பதனை இவர்களுக்குச் சொல்லி வைக்க வேண்டியிருக்கிறது.

சுகனினுடைய கவிதைகளை அணுகினால் சுகனை அடையாளப்படுத்த வேண்டும் என்றால் இங்கே அடையாளம் காட்டிய கவிதைப் பொருளல்ல சுகனுடைய கவிதைகள்.. சுகனின் கவிதை அடையாளத்தை இவர்கள் தமக்கருகில் ஒருபொழுதிலும் கோடிடவே முடியாது. ஆனால் சுகனை இந்தத் தமிழ்க் கவிதைச் சூழலில் அவர்களால்

> அவரது ஏழாவது சொர்க்கம் நாவலை நீங்கள் வாசித்துக் கொண்டால் மனித உயிர்வதையின் உள் ஊற்று உங்களுக்குத் தென்படவும் புரியவும் முடியும். ஒரு எழுத்தாளனின் சமூகம் மீதான கவனம் எதுவாக இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவும், நமக்குள் இயங்கும் தற்குறிகளை கவனம் கொண்டு விலத்திப் பார்க்கவும் அது மிகவும் பயன்படும்



நிராகரிக்கவோ அல்லது மறந்து போகவோ முடியாதிருந்தபடியால் அவனை அடையாளம் கொள்ள முடியாத கவிதையூடு அடையாளம் காட்டியிருக்கிறார்கள். இது ஒரு திட்டமிட்ட செயல். ஆக, தமது இந்த வகைக் குளறுபடிகளுக்கெல்லாம் வசதியாக அவர்கள் தெளிவாக முன்னுரை எழுதியுள்ளார்கள். ஆனால் அதைத் தாண்டியும் அவர்களது பகட்டுத்தனம் அந்த எழுத்துக்கள் முழுமையிலும் அடங்கித் தெரிகிறது.

ஆனால் இவர்கள் அடையாளம் காட்டும் படைப்பின் தர்க்கத்திற்குள்ளும் பட்டியல் தனத்திற்குள்ளும் அகப்படாத இவர்கள் கையிலும் பிடிபடாதபடி ஒரு தரப்பினர் எப்படி நழுவிச் செல்கிறார்கள் என்று கேட்கும் தொனியிலேயே நான் மைக்கேலின் எழுத்துக்களைக் கோடிட்டேன். அவர் தன்னுடைய எழுத்துக்களை தொகுக்க முனையாத அடம் பிடித்தலிலிருந்தாவது நீங்கள் அதனை அறிந்து கொள்ள வேண்டும். இப்படியாவது எழுத முனையுங்கள் என்ற தொனியில் தன்னுடைய “ஏழாவது சொர்க்கம்” என்ற நாவலை அவர் அடையாளம் காட்டிய விதம் மிகவும் கவனிக்கப்படக் கூடியது.

அந்த நாவல் கூட இன்றுவரை யாராலும் கவனிக்கப்படவுமில்லை. பேசப்படவும் இல்லை. ஏன் வாசிக்கப்படவுமில்லை என்பதே என் அவதானிப்பு. இந்த சமூகத்தைக் கவிதைக் கூடாகப் பார்க்கத் தெரிந்த ஒரு மனம், நாவலுக்குள்ளால் அதனைக் காண விளைகிறது. ஒரு புகலிட வாழ்வில் அந்தரிக்கின்ற, இயக்கத்திலிருந்து விடுபட்டு வந்த ஒருவனது கதை அது. வாழ்வின் தர்க்கத்தை அது ஒவ்வொரு இடத்திலும் இயல்பாய்த் தோலுரிக்கும் பிரதி அது. திட்டமிட்டு வாசகனை மெய்சிலிர்க்க வைக்கச் செய்யப்பட்ட பிரதியல்ல அது. வாழ்வின் இழைகள் அறும் இடங்களை அது துல்லியமாக வார்த்தைகளுக்குள்ளால் உருக்குலைக்கிறது. அதேபோல் அவரது கவிதையும் கவிதைப் போக்கில் உரையாடும் கதைகளும் மிக முக்கியமாகப் பதிவு செய்யப்படவேண்டியவை.

ஒவ்வொரு கவிதையிலும் வாழ்வின் உத்தரிப்புக்களை மெல்லியதாய் உரையாடுவதைப் போல் காட்டாப்பபுக்காட்டி அவை புரியாத இடத்தில் அவற்றின் உயிர் விதையை அகற்றிவிடும் துடிப்பு அவரது எழுத்துகளை ஊன்றிக் கவனிப்பவர்கள் விளங்கிக் கொள்ளமுடியும். ஆனால் அவர் வெளிப்படையாக விதையை அகற்றிவிடுவேன் என அறிவிப்பது சமூகத்தின் மீதான எள்ளல் எதிர்வினை.. உண்மையில் இந்த அழுக்கேறிய சமூகத்தின் வீக்கத்தை மாற்ற விதையை அறுப்பதே சரியானது என்பது அவரது கவிதைத் தனம்.

அவரது ஏழாவது சொர்க்கம் நாவலை நீங்கள் வாசித்துக் கொண்டால் மனித உயிர்வதையின் உள் ஊற்று உங்களுக்குத் தென்படவும் புரியவும் முடியும். ஒரு எழுத்தாளனின் சமூகம் மீதான கவனம் எதுவாக இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவும், நமக்குள் இயங்கும் தற்குறிகளை கவனம் கொண்டு விலத்திப்



> தொட்டால் தீட்டு என கவனியாது பலர் கடந்து செல்லும் இன்னொரு வகைக் கவிதை முறை சுகனுடையது. சுகன் இந்த சமூகத்தை தன்னுடைய எழுத்துகளுக்குள்ளால் தொடர்ந்து கரைச்சலுக்குள்ளாக்குபவர்.
> ஆனாலும் அவர் தனது நடைமுறை வாழ்வில் எமக்கு இன்னொரு வகைக் கரைச்சலையும் தந்தபடி இருப்பார். அவர் அன்றாடம் நமக்குத் தரும் கரைச்சலுக்கும் அவர் தரும் கவிதையின் கரைச்சலுக்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கும்.

பார்க்கவும் அது மிகவும் பயன்படும் என்றே நினைக்கிறேன். ஆனால் ஒரு தொகுப்பினையும் வெளிக் கொண்டு வராத மனமுடையவரை எழுத்துலகில் கவனிப்பற்றுக் கடந்து செல்லும் தனம் தமிழ் நாட்டு அறிவுசீவிகளது வாழ்வு முறை. ஆனால் நம் நாட்டு அறிவுசீவிகளாக வலம் செல்வோரும் அதனையே கருத்தாக்குவது காடைத்தனம். முட்டாள்த்தனம்.

இதனை நான் சொல்ல வருவதால் மைக்கேல் மட்டுந்தான் ஒரு முக்கிய கவிஞன் என்பதோ? கவிஞருக்கான உணர்வைக் கொண்டு இயங்குபவர் என்பதோ அல்ல. அல்லது நித்திய காலத்திற்கும் அவர்தான் சொறியப் புறமுதுகு காட்டாதவர் என்பதோ அல்ல. சமகாலத்தில் இந்த சமூகத்தை தன்னுடைய எழுத்துக்களால் உருக்குலைப்பவர்களில் மிக முக்கியமானவர் அவர். ஆனால் அவரது எழுத்துக்கள் பரவலாகப் பேசப்படாதவை. இந்தத் தமிழ்க் கவிதைச் சூழலிலும் ஒட்டுமொத்த இலக்கியச் சூழலினாலும் அடையாளப்படுத்த முடியாது போன ஒரு எழுத்தாழுமை அவர். ஒரு சிறிய முகநூல் பதிவைக்கூட தன்னுடைய எழுத்துக்களால் அதிர்வு பெற வைக்கக் கூடியவர் என்கிறேன் நான்.

எனது வியாக்கியானங்களில் கூட நீங்கள் இணங்கியிருக்கத் தேவையில்லை. நீங்களாகத் தேடுங்கள். உங்கள் அறிவை இதற்குள் புகுத்தி அறிய முனையுங்கள். காட்டப்பட்ட கவிதைகளை மட்டும் கொண்டாடுவதும் கொண்டோடுவதும் வாசகரின் வேலையல்ல. அது தற்குறிகளின் வேலை. வாசிப்பில் புகுந்து அறிந்து போலிகளைக் கண்டறிந்து வாசகர்கள் காடாத்த வேண்டும் என்பதே எனது விருப்பு. அதற்கான ஒரு உரையாடலின் தொடக்கமே இது. தொட்டால் தீட்டு என இருக்கும் சமூகம் எவ்வாறு வளர்ச்சியடையாது, தன்னை விரிந்து வளர்த்துக் கொள்ளாது தனக்குரியதை அறியமுடியாது காலந்தள்ளியதோ அது போன்றதொரு நிலையை இந்த சமூகம் இலக்கியத்திலும் தொடராது இருக்கட்டும். குரு- சீடன் விளையாட்டை இனியாவது கைவிடுவோம்.

அதனால் தான் காட்சிக்கு காட்டப்படாத சில எழுத்து முறைகளை அது பேசும் தர்க்கங்களை இங்கே கோடிடுகிறேன்.

வாழ்வின் பிசிறல்களையும் சிறு சிறு அதிர்வுகளாய் தன் எழுத்திற்கூடாகக் கொண்டியங்கும் மைக்கேலின் எழுத்துக்கள் நீங்கள் அவரின் முகநூலில் முதலில் வாசிக்கத் தொடங்குங்கள்.

அவரது முகநூல் முகவரி 'Jeyaruban Mike Philip'

அவரது ஏழாவது சொர்க்கம் நாவல் வாசிக்க https://www.geotamil.com/index.php/2021-02-14-02-59-48/3544-2016-09-14-23-00-09 இந்தச் சுட்டியை அழுத்துங்கள்.

தொட்டால் தீட்டு என கவனியாது பலர் கடந்து செல்லும் இன்னொரு வகைக் கவிதை முறை சுகனுடையது. சுகன் இந்த சமூகத்தை தன்னுடைய எழுத்துகளுக்குள்ளால் தொடர்ந்து கரைச்சலுக்குள்ளாக்குபவர்.

ஆனாலும் அவர் தனது நடைமுறை வாழ்வில் எமக்கு இன்னொரு வகைக் கரைச்சலையும் தந்தபடி இருப்பார். அவர் அன்றாடம் நமக்குத் தரும் கரைச்சலுக்கும் அவர் தரும் கவிதையின் கரைச்சலுக்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கும். நான் இங்கே அவரது கவிதையின் கரைச்சல் பற்றியே பேசத் தொடங்குகிறேன்.

"முத்துமாரியம்மனுக்கூடாக BNP வங்கி முகாமையாளருக்கு" என்ற கவிதையாகட்டும் அல்லது "நோர்வேயிலிருந்து விமானம் புறப்பட்டது விமானப்பணிப்பெண் குடிக்க என்ன வேணடும் எனக் கேட்டாள் நான் முலைப்பால் வேண்டும் என்றேன்" என்று தொடங்கும் கவிதையாகட்டும்

செயின் ஆற்றில் ஒரு நாய் செத்து மிதந்து போவது போவோர் வருவோரைக் கவிதையைப்போற் கலவரப்படுத்திக் கடந்து போக வைக்கிறது.

நாய் - போவோர் வருவோர் - செயின் ஆறு கவிதையின் அழகியலையும் அழகியலிற் கவிதையும் தருகிறது. கவிதையையும் கலவரத்தையும் அழகியலையும் அமைதியையும் தந்ததற்கு நன்றி நாயே..! என்று எழுதும் கவிதையாகட்டும்

கவிதையூடாகச் சமூகத்தின் ஆட்டதிசையை கைமாற்றிவிடும் தர்க்கம் கொண்டலைபவன் சுகன்.

சுகனின் கவிதைகள் குறித்து அடுத்த இதழில் எழுதுகிறேன்.



போர்ச்செய்தியாளர்களும்
போரினுள் அடக்கம்தான்.

அவர்கள் எப்போதும் களத்தில் இருக்கிறார்கள்.

களம் இன்று வரையறைக்குட்பட்டதாயில்லை .
5000 கிலோ.மீற்றர் தொலைவிலிருந்து
செய்திகளைத்தருபவரின் முகம்,
அவரின் கண்களின் ஒளி ,அவரின் ஆர்வம்
ஒரு படைத்தளபதியினது ஈடுபாட்டினும்
குறைவானதல்ல.

இன்னும் செய்தியாளர் வழியான
போர்ப்பார்வையாளர்கள் அவரிடம்
இன்னும் இன்னும் என
அதிரடித் திருப்பங்களையும்
அழிவுகளின் காட்சிப்புலங்களையும்
படை நடாத்துகைகளின் ஒழுங்குமுறைகளையும்
தளவாடங்களின் இயங்குதல்களையும் அவற்றின்
போதாமைகளையும்
போரியல் நிபுணருக்கும் மேலாகச்
சுட்டிக்காட்டுகிறார்கள்.

போரின் சுமைகளை பார்வையாளர்கள்
சிறு சலிப்போடு ஏற்றுக்கொள்கிறார்கள்.
ஒரு வெற்றியை நோக்கிய தீர்மானத்தில்
பின்வாங்குவதோ
சமாதானத்திற்கான ஒரு தருணத்திற்கு
எதிராகவோ
பார்வையாளர்கள் சமரசம் செய்துகொள்ள
விரும்புவதில்லை.

நல்வாய்ப்பாக போர் முடிவதில்லை .

ஆநிரையைக் கைப்பற்றி அப்படியே
ஆங்கிருக்கும் ஒரு பெண்ணையும்
கைபற்றி சாய்த்துப்போகும் ஒரு நாளின்
மாலையில் போர்தர்மத்தின்படி
போரைத் தொடங்காதிருக்க
ஒரு ஏற்பு ஒரு ஒப்பந்தம் இருந்தது .

ஒரு பெண்ணைக் கேட்டால் ஒன்பது
பெண்களைக் கொடுத்து
தம் குலப் பெருமையை நிறுவிய காலம்
ஒன்றிருந்தது.

ஒரு குலத்தின் போர்த்தர்மம்
இன்னொரு குலத்தில் இல்லையெனில்
அக்குலத்துடன் போரில்லை.
போரைத் தொடங்கிவிட்டும்
காரணங்களைச் சொல்வதில்லை .

போர்ச்சூழலில் அகப்பட்ட பெண்களை
மலிவாக வாங்கிப் போகும்
ஒரு இடைத்தரகனைக் கண்டேன்.

நான் போரில் ஈடுபட்ட காலத்தில்
சிக்கனமாக இருந்திருந்தால்
மேலும் இரண்டு பெண்களை
வாங்கியிருக்கலாம்.

நிலங்களும் போருக்கான காரணங்களும்
எவருக்குத் தேவை?
நல்வாய்ப்பாக போர் முடிவதேயில்லை.

"இரண்டு போர்க்களச் செய்தியாளர்களைக்
காணவில்லை" என்ற அறிவிப்போடு
போருக்கு மேலதிகமாக ஒதுக்கப்படும்
பெருந்தொகையைக் கேட்டால்
வயிற்றைப் பற்றி எரிகிறது.

போர்ச்செய்திகள் படிப்பவரும்
போரினுள் ஒரு பகுதிதான்.

Facebook: Suhan Kanagasabai

**சுகன்**



# என்னவென்று சொல்லுவேன்?

காலை ஆறு முப்பதைக் காட்டியபடியே கடிகாரம் பறவைகளின் ஒலி எழுப்பியபடி என்னைத் துயில் நீக்கியது. நான் எனது படுக்கை அறையிலிருந்து எழும்பி, சோம்பல் முறித்தபடி கீழே வந்த போது, லூனா வழமை போல முகம் முழுவதும் புன்னகையுடன் எனக்காகக் காத்திருந்தாள். அவள் கண்கள் முழுவதும் அன்பும், வீட்டுத் தோட்டத்தில் ஓடிவிளையாடப் போகும் ஆவலும் ததும்பி வழிந்திருந்தன. அவள் தன் வாலைப் பலமாக ஆட்டியபடியே மெதுவாகக் குரைத்தாள். இப்படி மெதுவான தொனியில் ஆரம்பித்து , பின்னர் அட்டகாசமாய்க் குரைத்துப் பக்கத்து வீடுகளையெல்லாம் எழுப்பி விடுவாள்.

"உஷ்ஷ்ஷ், சத்தம் போட வேண்டாம், லூனா!"

இரகசியம் பேசுவது போல அவளுக்கு குரலைத் தணித்துக் கூறியதோடு, என் சுட்டுவிரலை என் வாயில் வைத்து, சத்தம் போடக்கூடாது என சைகையும் செய்தேன். அல்லாதுபோனால், குளித்துக் கொண்டிருக்கும் அம்மாவுக்கு நான் லூனாவுடன் தோட்டப்பக்கம் போவது தெரிய வந்து விடும்.

லூனா வாலை ஆட்டியபடியே தன் விளையாட்டுப் பொருட்கள் வைத்திருக்கும் கூடையை நோக்கிப் போய், அங்கு நின்றபடி என்னைப் பார்த்தாள். நான் அவளுக்கு வழமை போல கையை அசைத்து, அவளுக்குத் தேவையான பந்தை எடுத்து வரும்படி சைகையில் அனுமதி அளித்தேன். மிக்க சமர்த்தாக அவள் தனக்குப் பிடித்த பந்தை தன் வாயிற் கௌவியபடியே என்னைப் பின் தொடர்ந்தாள்.

நான் என்னால் முடிந்தவரை, சத்தம் எதுவுமின்றி, லூனாவுடன் எமது வரவேற்பறையிலிருந்து கால்களை மிக மெதுவாக, ஒவ்வொரு அடியாக வைத்து வெளியே போகும் கதவைத் திறந்தேன். நாங்கள் இருவரும் ஒருவாறு தோட்டத்திற்கு வந்து விட்டோம். இனி அம்மா குளித்து விட்டு வந்து எம்மைத் தேடும் வரை, எந்தச் சத்தமும் அம்மாவுக்குக் கேட்காது. கேட்கவும் கூடாது. முடிந்தால் விரைவில் விளையாடி முடித்து, வீட்டினுள்ளே போய் விட வேண்டும். எனக்கு அம்மாவை நினைத்து பயமாகவும், கவலையாகவும் சிறிது பரபரப்பாகவும் இருந்தாலும் லூனாவுடன் விளையாடுவதிலிருக்கும் ஆர்வம் அந்த உணர்வை அடித்துப் போட்டு விட்டது.

லூனா ஸ்ப்ரிங்கர் ஸ்பானியல் என்னும் மிகத் துடிப்பான இனத்தைச் சேர்ந்தவள். அவளுக்கு எப்போதும் ஓடித் திரிவதிலும், இப்படி மிகக் குறைந்த நேரத்தில் வெகு தூரம் ஓடிப்போய் பந்தைக் கவ்வி வருவதிலும் மிகுந்த ஆர்வமும்

பூங்கோதை
Facebook: Kala SriRanjan

> “காய்ச்சல் குறைஞ்சு தான் இருக்கு.” சொல்லியபடியே நீண்ட பெரு மூச்சொன்றை விட்டபடி என்னைக் கடந்து போனாள்.
> “காய்ச்சல் இருந்தால் எல்லோ குறையிறதுக்கு?” நான் எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன்.
> இன்று எனக்குப் பதிலாக லூனா மாட்டிக் கொள்ளப் போகிறாள். அவளை மிருக வைத்தியரிடம் கூட்டிப் போகும் சந்தர்ப்பம் இன்று வந்தாலும் வரக்கூடும். பாவம்.

திறமையும் இருக்கிறது. அவளது கால்கள் அவளை மின்னல் வேகத்தோடு ஓடச் செய்து விடுவதால் அவளும் என்னைப் போல ஆரோக்கியமானவளாகவே இருக்கிறாள்.

நானும் லூனாவும் நோய், நொடியேதுமின்றி நன்றாகவே இருக்கிறோம் என்பதை யாருக்காவது சொல்ல வேண்டும் போலத் தான் தோன்றுகிறது. ஆனால் யாருக்குச் சொல்வது என்பதில் எனக்கு நிறையத் தயக்கம் ஏற்படுகிறது. அம்மா கவலைப்படுவாள் என்பது எனக்கும் கவலையைத் தந்து விடுகிறது. அம்மா என்னை அடிக்கடி பாடசாலைக்குப் போக விடாமல் நிறுத்தி, வீட்டில் வைத்திருப்பதைப் பற்றி அப்பாவிடம் சொல்ல வேண்டும் என அடிக்கடி எனக்குள் ஓர் யோசனை தோன்றி மறைகிறது.

அம்மாவின் குளியல் முடியும் நேரம் எனக்குத் தெரிந்திருந்தபடியால், விளையாடுவதை நிறுத்தி விட்டு, நான் லூனாவையும் அழைத்துக் கொண்டு சத்தமின்றி வீட்டினுள்ளே நுழைந்தேன். அவளும் என் எண்ணங்களை அறிந்தவள் போல் தன் வாயிலிருந்த பந்தை, அதை வைக்கும் கூடையினுள் போட்டு விட்டு, ஒன்றும் தெரியாதவள் போல் மெதுவாகத் தன் வாலைச் சுருட்டியபடி, தானும் நிலத்தில் சுருண்டு கொண்டாள். நானும் என் பாடசாலை உடைகளை எடுத்துக் கொண்டு குளியல் அறையை நோக்கி நடந்தேன்.

அம்மாவைக் கண்டதும் நான் நித்திரைச் சோம்பலை முகத்தில்க் கட்டாயமாகப் பூசிக் கொண்டேன்.

“குட் மோர்னிங், டெய்சி!” அம்மா என் நெற்றியில் அன்போடு முத்தமிட்டாள்.

“சத்தம் போடாமல் குளிச்சிட்டு வா, லூனா எழும்பினால் கரைச்சல். அவளை இண்டைக்கு அவளிண்ட டொக்டரிட்டக் கூட்டிக் கொண்டு போக வேணும். அவளுக்கு காலில ஏதோ பிரச்சனை, நடக்கவே முடியாமல் திண்டாடுறாள், பாவம்.”

அம்மா சொல்லியவாறே தன் அறை நோக்கி நடந்தவள், திடீரெனத் திரும்பி என்னை நோக்கி வந்த போது என் இதயம் தாறு மாறாக அடிக்கத் தொடங்கியது. நான் என்னை அறியாமலேயே இரண்டு அடிகள் பின் நோக்கி நகர்ந்தேன்.

“டெய்சி, உனக்கும் நேற்றைக்குக் காய்ச்சல் அடிச்சதெல்லோ?” சொல்லியவாறே அம்மா என் நெற்றியில் தன் கையை வைத்து சுடுகிறதா எனப் பார்த்தாள்.

“இல்லை, இல்லை, எனக்குக் காய்ச்சல் இல்லை.” நான் மறுத்தவாறே அம்மாவின் முகத்தைப் பார்த்தேன். இப்படித் தான் அடிக்கடி சொல்லிக் கொள்கிறாள்.

அவள் எப்போது என்ன சொல்லுவாள் எனத் தெரியாத நிலை எனக்கு. பாடசாலையில் இன்று நானும் என் வகுப்பு மாணவர்களும் பங்கு பற்றும் நிகழ்வொன்று இருப்பதால், நான் இன்று பாடசாலைக்குப் போயே ஆகவேண்டும்.

“காய்ச்சல் குறைஞ்சு தான் இருக்கு.” சொல்லியபடியே நீண்ட பெரு மூச்சொன்றை விட்டபடி என்னைக் கடந்து போனாள்.

“காய்ச்சல் இருந்தால் எல்லோ குறையிறதுக்கு?” நான் எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன்.

இன்று எனக்குப் பதிலாக லூனா மாட்டிக் கொள்ளப் போகிறாள். அவளை மிருக வைத்தியரிடம் கூட்டிப் போகும் சந்தர்ப்பம் இன்று வந்தாலும் வரக்கூடும். பாவம்.

அப்பா வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்திருக்கலாம். அல்லது நான் பாடசாலைக்குப் போன பின்னர் தன் வேலையைத் தொடங்குவது போல ஒரு வேலையைத் தேடியிருக்கலாம்.

சூரியன் உதயமாக முதலே ஒவ்வொரு நாளும் தூரத்திலுள்ள தனது வேலைக்காக வீட்டை விட்டுப் போய் விடுவதும், மீண்டும் நான் தூங்கப் போன பின்னரே வீடு வந்து சேருவதும் எனக்குக் கவலையாக இருக்கிறது. இருந்தாலும் அவர் என்னோடு வார விடுமுறைகளில் தன் நேரத்தைக் கழிப்பது எத்தனை குதூகலமாக இருக்கிறது. அம்மா எனக்குப் பக்கத்திலேயே இருந்து கொள்வதும் நான் அப்பாவுடன் பேசுவதை உற்று உற்றுக் கேட்பதும் எனக்கொன்றும் உவப்பாக இல்லை.

“பள்ளிக்கூடத்துக்கு ஆயத்தமா? புத்தகப் பையை எடுத்தாச்சா?” அம்மா கேட்டபடியே என்னை ஏற இறங்கப் பார்த்தாள்.

“நான் ஆயத்தமாய்த் தான் நிக்கிறன்.” அமைதியாகச் சொன்னேன்.

எனக்கோ இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகப் பயமாக இருந்தது. நேற்று ஏன் பள்ளிக்கூடம் வரவில்லை என யாராவது அங்கு கேட்டால், நான் என்ன சொல்ல வேண்டும் எனத் தெரியாத நிலை எனக்கு.

இந்த முதலாம் வகுப்பு தொடங்கியதிலிருந்து இது எனக்கு மூன்றாவது பள்ளி. இதனாலேயே எனக்கு நிரந்தரமாய் தோழர் தோழிகள் இல்லாமற் போயினர். இந்தப் பள்ளியிலிருந்தும் அம்மா என்னை மாற்றாமல் இருக்க வேண்டும் என்பது எனக்கு பெரும் யோசனையைத் தருகிறது.

நேற்றும் அதற்கு முதல் நாளும் நான் பள்ளிக்குச் செல்லவில்லை. எனக்கு உடம்பு சரியில்லையாம். வீட்டில் நின்ற போது அம்மாவும் நானும் லூனாவும் எமது வீட்டிலிருந்து, ஒற்றை அடிப் பாதை வழியாகக் களைக்கும் வரைக்கும் நடந்தோம்.

ஆஷ், விலோ, அப்பிள், ஓக் மரங்களும், ஸ்ரோபெரி, பிளாக் பெர்ரி செடிகளுமாக சூரிய வெளிச்சம் நிலத்தில் விழாத அந்த அடர்ந்த காட்டுப் பகுதிக்கு மதிய உணவு, பழ ரசங்களோடு போயிருந்தோம்.

வசந்த காலத்தின் இறுதி நாட்கள் அவை. நான் பள்ளியில் படித்தது போலவே வசந்த காலத்தின் அழகை அங்கு காணக் கூடியதாயிருந்தது. இதமான குளிரோடு இருந்த அந்த இடத்தில் ஒரு கம்பளத்தை விரித்து நாம் மூவரும் உட்கார்ந்து கொண்டோம். அம்மா வழமை போலவே என்னை மிக அன்பாக நடத்தியது மாத்திரமல்ல, படிப்பில் கூட மிகவும் சுவாரசியமான விடயங்களைக் கற்பித்தாள். இருட்டத் தொடங்கிய போது, நான் அம்மாவின் அனுமதியோடு தேவையான அளவு ஸ்ரோபெரிகளை பறித்துக் கொண்டேன். இப்படி வீட்டில் நிற்கும் நாட்கள் எனக்கு வழமையாகிப் போயிருந்தன.

நான் பாடசாலைக்குப் போகாமல், வாரத்தில் ஒரு நாளோ இரண்டு நாட்களோ, வீட்டில் நிற்க வேண்டிய ஒவ்வொரு தடவையும் நான் என்னுடைய தோழர், தோழிகளைக் காணக் கிடைக்காமல் ஏங்கினேன். நான் மட்டுமல்ல என்னுடன் படிக்கும் பெனியும், டொமினிக்கும் அடிக்கடி என்னைக் காணாமல் ஏங்கத் தொடங்கியிருந்தனர். என்னுடைய வகுப்பாசிரியரும் நான் ஏன் குறிப்பிட்ட நாட்களில் பாடசாலைக்கு வரவில்லை என்ற கேள்வியை, அம்மா என்னை வகுப்பறையில் விட்ட பின், அம்மாவுடன் பேசிய பிற்பாடும் என்னிடம் கேட்கத் தொடங்கியிருந்தார்.

அம்மா அடிக்கடி என் வயதுக்குத் தேவையானவற்றை எல்லாம் தேடித் தேடி எனக்குக் கற்பித்ததில் நான் வாசிப்பதிலும் , எழுதுவதிலும் கணக்கிலும் திறமையாகவே இருந்து வருகிறேன் என்பது எனக்கு என் அம்மாவில் மிகுந்த நேசத்தைத் தருகிறது. அம்மா ஒரு தாதியாக சேவை செய்வதால் அவள் நிச்சயமாக ஒருவருக்கும் கெடுதல் செய்ய மாட்டாள் என்பது எனது திடமான நம்பிக்கையாகவும் இருந்தது. அப்படியிருக்கையில் வகுப்பாசிரியருக்கு அம்மா என்ன காரணத்தைச் சொல்லச் சொல்கிறாளோ அதையே நானும் சொல்வது தானே சரியாகவிருக்கும்? ஆனால் அம்மாவைப் பிரச்சனைக்குள் இழுத்து விடும் காரியம் ஒன்று தானாய் நடந்தே விட்டது.

***

நான் பாடசாலைக்குப் போகாத நாட்களில் ஒரு நாள், பெனி தனது ஆறு வயது பிறந்த நாள் கொண்டாட்டத்தைப் பற்றி தன் நெருங்கிய தோழமைகளுக்கெல்லாம் அறிவித்திருக்கிறாள் . வியாழன், வெள்ளி என இரு நாட்களும் நான் வீட்டில் இருந்ததால், எனக்கு இது பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. திங்கட்கிழமை நான் பாடசாலை போன போது அவள் தன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டது ஏன் என எனக்கும் முதலில்த் தெரியவில்லை. இடை வேளையின் போது அவள் என்னோடு கூடி விளையாட வராமல் தள்ளிப் போய் மற்றவர்களோடு சேர்ந்து கொண்டாள்.

“பெனி, என்னோட கதைக்க மாட்டியோ?”

மைதானத்தில் என்னைப் பார்க்காதது போல் நின்றவளை நான் மிகக் கவலையுடன், வலுக் கட்டாயமாகக் கேட்டேன்.

பெனி என்னைக் கோபிப்பாள் என நான் நினைத்தது நடவாமல், அவள் தன் பாட்டுக்குக் கேவிக் கேவி அழத் தொடங்க எனக்குப் பெரிய சங்கடமாகியது. அழுது சிவந்ததில் அவள் முகம் நான் பாடசாலைக்கு வராமல், அம்மாவுடன் போய்ப் பறித்து வந்த ஸ்ரோபெரிகள் போலச் சிவந்து போனது.

அன்று தான் முதன் முதலாக நான் எதற்காக பாடசாலைக்கு வராமல் வீட்டில் அடிக்கடி நின்று கொள்கிறேன் என்பதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டிய தேவை எனக்கு வந்தது.

பெனி தன் வெளிர் நீலக் கண்களை அகல விரித்து, நான் சொல்வதை மிக ஆச்சரியத்தோடு கேட்கத் தொடங்கினாள்.

“நீ பள்ளிக்கூடம் வராததால தானே என்ர பிறந்த நாளுக்குக் கூட உனக்கு நான் சொல்ல முடியேல்ல. அப்ப உனக்கு நோய் ஒண்டும் வரேல்லையோ ” பெனி நம்ப முடியாதவளாய்க் கேட்டாள். ஆனால் அவள் முகம் இன்னும் சிவந்து தான் இருந்தது.

“அம்மா தான் எனக்கு அடிக்கடி வருத்தம் எண்டு சொல்லுறா, ஆனால் எனக்கு அப்பிடி எதுவும் வாறேல்ல.” நான் கவலையோடு சொல்லி முடித்தேன்.

“நீ பள்ளிக்கூடம் வராததால தானே என்ர பிறந்த நாளுக்குக் கூட உனக்கு நான் சொல்ல முடியேல்ல. அப்ப உனக்கு நோய் ஒண்டும் வரேல்லையோ ” பெனி நம்ப முடியாதவளாய்க் கேட்டாள். ஆனால் அவள் முகம் இன்னும் சிவந்து தான் இருந்தது.

“அம்மா தான் எனக்கு அடிக்கடி வருத்தம் எண்டு சொல்லுறா, ஆனால் எனக்கு அப்பிடி எதுவும் வாறேல்ல.” நான் கவலையோடு சொல்லி முடித்தேன்.

இடைவேளை முடிந்து நாம் வகுப்பறைக்குப் போனபோது, அவள் ஒன்றும் சொல்லாமலே எங்கள் வகுப்பாசிரியை அவள் சிவந்த முகத்தைப் பார்த்து விட்டார் .

“பெனி, ஏன் உன்ர முகம் சிவந்து போய் இருக்கு? என்ன நடந்தது?”

அவ்வளவு தான். பெனி ஆதியோடு அந்தமாய் ஏன் நான் பள்ளிக்கு வருவதில்லை என்பதிலிருந்து தான் என்னை எவ்வளவு தூரம் ஏக்கத்தோடு, அடிக்கடி பள்ளியில் பிரிய நேரிடுகிறது என்பது வரை சொல்லி ஓவென்று அழத் தொடங்கி விட்டாள். அவளுக்கு அவள் கவலை.

***

அன்று பாடசாலை முடிந்து என் தோழர், தோழியர் அனைவரும் வீடு போன பின், நானும் அம்மாவும் என்

பாதிக்கப்பட்ட ஒருவர் தான் நோய் வாய்ப்பட்டிருப்பதாக அல்லது தமது கவனிப்பில் உள்ளவர்கள் நோய் வாய்ப்பட்டிருப்பதாக பாசாங்கு செய்வது வழக்கம். இவர்கள் வேண்டுமென்றே நோயின் அறிகுறிகளை தங்களுக்குள் உருவாக்கிக் கொள்வதோடு, இயன்றவரை தம்மைச் சுற்றி இருப்பவர்கள் தம்மை நம்பும்படி நடந்து கொள்வார்கள். தமது நோயின் குணம் குறிகள் பொய் என்பதை வைத்தியர்கள் அறியும் போது, ஒரு வைத்தியசாலையிலிருந்து இன்னொரு வைத்தியசாலைக்கு மாறுவதும் இவர்கள் இயல்பாக இருக்கும்.

வகுப்பாசிரியையும் மட்டும் என் வகுப்பறையில் இருந்தோம். எனக்கு மிகக் கலக்கமாகவிருந்தது. அம்மா, நான் கடந்த வாரத்தில் இரு நாட்கள் பள்ளிக்கு வராத காரணத்தை எனக்குச் சொல்லியிருக்கவில்லை. ஒரு நாளும் அப்படி அவள் மறந்ததில்லை.

“கடந்த வியாழன், வெள்ளியன்று தான் ஸ்ரோபெரி பிடுங்கப் போனதாய் டெய்சி எனக்கும் தன் தோழி ஒருவருக்கும் சொன்னது உண்மை என நான் நம்புகிறேன்.”

என் வகுப்பாசிரியை எங்கள் இருவரையும் பார்த்து அமைதியாகக் கேட்டதுடன், தான் நான் வராத நாட்களில் அம்மாவும் நானும் சொன்ன காரணங்களை எழுதி வைத்திருந்த ஒரு குறிப்பேட்டையும் எடுத்து மேசையில் வைத்தார்.

“இல்லை, இருந்தாற் போல் மூச்சடைத்ததில் அவளை அவசர வானூர்தி (Air Ambulance) மூலம் வைத்தியசாலையின் மருத்துவப் பிரிவுக்கு எடுத்துச் சென்றிருந்தோம். நேற்று ஞாயிற்றுக் கிழமை பின்னேரம் தான் டெய்சி வீட்டுக்கு வந்தாள்.” அம்மா திடமாகக் கூறினாள்.

“மன்னிக்க வேண்டும், நாம் பள்ளியிலிருந்து டெய்சியின் தந்தையோடும் தொடர்பு கொண்டோம், அவர் இது குறித்துத் தனக்கு எதுவும் தெரியாதெனவும், டெய்சி வீட்டில் தான் வார விடுமுறையிலும் இருந்ததாகவும் கூறுகிறார்.”

என் வகுப்பாசிரியையும் அம்மாவை விடுவதாய் இல்லை.

பல கேள்விகளும் அம்மாவின் பதில்களுமாய்க் கடந்து போன நீண்ட நேரத்தின் பின்னர், தலைமை ஆசிரியரும் வந்து எம்மோடு இணைந்து கொண்டார். அவர்களோடு தன்னை ஒரு கல்வி நல அதிகாரி (Educational Welfare Officer) என எமக்குத் தன்னை அறிமுகம் செய்து வைத்த ஒரு பெண்ணும் சேர்ந்து கொண்டதில் அம்மா சற்றே தடுமாறித்தான் போனாள்.

அன்றைய நாள் அம்மாவிற்கு மிகச் சவாலான நாளாக இருந்தது.

அம்மாவின் மனதில் ஒரு பாரதூரமான சிக்கல் ஒன்று இருப்பதாகவும், அதனை வைத்திய சிகிச்சை மூலம் சரியாக்கி விடலாம் எனவும் என் வகுப்பாசிரியையும் அந்தப் பெண் அதிகாரியும் என்னைத் தனியே கூட்டிப் போய் அறிவித்தார்கள். முன்பு செய்தது போல இலகுவாக என்னை வேறு பாடசாலைக்கு அம்மாவிற்கு மாற்ற முடியாதபடி போனது எனக்கு மகிழ்ச்சியாகவும் அம்மாவிற்கு கவலையாகவும் போனது.

இப்போதெல்லாம் அப்பா என்னைப் பாடசாலையில் இறக்கிய பின்னரே தனது வேலைக்குப் போகிறார். நானும் லூனாவும் நன்றாக ஓடி விளையாடுகிறோம். அத்தோடு அம்மா வைத்தியசாலையில், தன் மனதைத் தேற்றுவதற்கு சிகிச்சை எடுத்து வருவதால் நானும் பாடசாலைக்கு தேவையற்ற விடுப்பு எடுக்காமல் போய் வருகிறேன்.

***

Munchausen syndrome

முன்சாசன் சிண்ட்ரம் (Munchausen syndrome) என்பது ஒரு உளவியல் சிக்கல் ஆகும். Munchausen சிண்ட்ரம் முதன் முதலாக, ஒரு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பிரபு Baron Munchausen இன் உளவியல் சிக்கல் தொடர்பாக அறியப்பட்டதால், அவரது பெயரினால் இந்த உளவியல் சிக்கல் பெயரிடப்பட்டது. அவர் தனது சுரண்டல்கள் பற்றி, நம்பமுடியாத கட்டுக்கதைகளைக் கூறிப் பிரபலமானார்.

இதனால் பாதிக்கப்பட்ட ஒருவர் தான் நோய் வாய்ப்பட்டிருப்பதாக அல்லது தமது கவனிப்பில் உள்ளவர்கள் நோய் வாய்ப்பட்டிருப்பதாக பாசாங்கு செய்வது வழக்கம். இவர்கள் வேண்டுமென்றே நோயின் அறிகுறிகளை தங்களுக்குள் உருவாக்கிக் கொள்வதோடு, இயன்றவரை தம்மைச் சுற்றி இருப்பவர்கள் தம்மை நம்பும்படி நடந்து கொள்வார்கள். தமது நோயின் குணம் குறிகள் பொய் என்பதை வைத்தியர்கள் அறியும் போது, ஒரு வைத்தியசாலையிலிருந்து இன்னொரு வைத்தியசாலைக்கு மாறுவதும் இவர்கள் இயல்பாக இருக்கும். சில தாய்மார்கள் தம் குழந்தைகளின் மீது அதீத அன்பு வைத்திருப்பதாலும் இப்படியான ஒரு சூழலை உருவாக்கிக் கொள்கிறார்கள். இது குறித்து மேற்குலக நாடுகளில், குறிப்பாக பாடசாலைகளில் ஆசிரியர் பயிற்சிகளினூடாக விழிப்புணர்வு வழங்கப்படுவது வழக்கம். ஆனால் இது குறித்த பார்வைகள் அற்ற எமது தாயகத்திலும் இந்நோயின் குணம், குறிகள் உள்ளவர்கள் இருக்கிறார்கள். தாய் அல்லது தந்தை இதனால் பாதிக்கப்பட்டால், தமது குழந்தைகளை தன்னம்பிகை, தைரியமற்றவர்களாக வளர்த்து, அவர்களின் எதிர்காலத்தை சிதைத்து விடும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

Munchausen நோய்க்கு சிகிச்சையளிப்பது கடினமாக இருப்பது வழக்கம் என மன நல மருத்துவர்கள் கூறுகிறார்கள் , ஏனெனில் பெரும்பாலான நோயாளிகள் தங்களுக்கு ஒரு பிரச்சனை இருப்பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள் அல்லது சிகிச்சைத் திட்டங்களுடன் ஒத்துழைக்க மறுக்கிறார்கள்.

இந்நோய் பற்றிய தகவல்கள் மிகவும் சுவாரசியமானவை. மேலும் அறிவதற்கு இணையத்தில் தேடிக் கொள்ளலாம். இங்கு ஒரு சில இணைப்புகள் தரப்பட்டிருக்கின்றன.

Reference:

https://cpdonline.co.uk/knowledge-base/mental-health/munchausen-syndrome/

https://www.nhs.uk/mental-health/conditions/munchausen-syndrome/overview/

# புரிதல்




எஸ்.ஃபாயிஸா அலி
Facebook: Aaliya Aaliya

ஒவ்வொரு நாளும் சூரியன் உதிக்கிறது. பொழுது புலர்கிறது.ஏதோ ஒரு வகையில் எல்லோரும் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.ஓய்வு கொள்கிறார்கள். உணவு உட்கொள்கிறார்கள். மிக அமைதியாய் தூங்குகிறார்கள்.

ஆனாலும் ரீமாவிற்கு மட்டும் இந்தப் பொல்லாத நோயின் தாக்கமும் வலியும் மட்டும் தீருவதாக இல்லை.

ரீமா என்றால் புள்ளிமான் என்று அர்த்தமாம். எப்போதும் துள்ளித் திரியும் இந்தப் புள்ளிமானும் இந்த மூன்று நாட்களில் மட்டும் சோர்ந்து சுருண்டு போய் விடுகிறாள்.

ஒவ்வொரு நாளும் இந்தப் புள்ளிமானின் அழகான உதடுகளில் உச்சரிக்கப்படும் பிரார்த்தனைகள் எண்ணற்றவையே.

அவளுக்குத் தெரிந்த இறைநாமங்கள் அத்தனையையும் கூறிக்கூறி அழைப்பாள். கெஞ்சுவாள்.. கதறுவாள்..அழுது மன்றாடுவாள்...சில நேரம் “இது எனது இறைவன்தானே..!” என்ற உணர்வு மேலிடக் கத்தி,அழுது “என்ன இறைவா எனக்கு மட்டும் இப்படி ஒரு சோதனை,வலி...இதை இப்படியே எனக்குள் விட்டுவைத்து.. அவ்வளவு விரைவாக உன்னிடம் அழைக்கப் பார்க்கிறாயா..நான் வர மாட்டேன் வரவே மாட்டேன்...எனக்கு இன்னும் இந்தப் பூவுலகில் வாழ வேண்டும்... நிறைய நிறையப் படிக்க வேண்டும்... சாதிக்க வேண்டும்..என்னை விட்டு விடு..” என்று சண்டை கூடப் பிடிப்பாள்.

ஆனாலும் அவளுக்கு வலி தீர்ந்த பாடில்லை.

இன்னும் இருபது வயது கூட நிரம்பாத அந்தச் சின்னப் பெண்ணுக்கு அப்படி என்னதான் பெரிய வலி...?

இன்றைக்கும் காலையில் பாடசாலை போக வேண்டும் என்பதற்காக,அதிகாலையிலேயே எழுந்து விட்டாள்.

காலைக்கடன் முடித்தவுடன் உம்மும்மா அவளுக்கு சுடச்சுட இஞ்சி டீயும் இட்லி சம்பலும் கொண்டு அவளின் மேசையிலேயே வைத்து விட்டுச் சென்றார்.

பார்த்தவுடன் வாயூறியது அவளுக்கு.

இரண்டுமே அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

இந்த வலி அதிகரிக்கும் இவ்வாறான நாட்களில் அவளுக்கு ம்மும்மா பெரும்பாலும் முட்டை, பால் என்று தொடர்ச்சியாக வழங்குவார்.

என்றாலும் அவளுக்கு முட்டையின் வாசனை பிடிக்காது.

குமட்டிக் கொண்டு வரும்.

முட்டைப் பொரியல் மணமோ இல்லை அவித்த முட்டை உரிக்கும் மணமோ சமையலறைக்குள் இருந்து வெளிவரத் தொடங்கி விட்டால் போதும்.

இவளுக்கு வயிற்றுக்குள் இல்லாத பொருட்களும் வாந்தி என்ற பெயரில் வெளியே வந்து விடும்.

என்றாலும் இந்த மாதவிடாய்க்

> அது ஒரு கலவன் பாடசாலை.ஆண்களும் பெண்களும் இணைந்து கற்கும் பதினோராந்தர வகுப்பறை என்ற எந்தவொரு புரிந்துணர்வும் இன்றி,ஒரு தடவை அவர் போட்ட கூச்சலுக்குப் பின்னர், அவள் எவ்வளவு கடுமையான வயிற்று வலி என்றாலும் பள்ளிக்குப் போய் விடுகிறாள்.
>
> அதை நினைத்து, நசீரா டீச்சருக்கு கடும் சந்தோசம். "என்ன செத்தா போயீற்றாய்.. பாரு இப்ப இந்தா வாறாய்தானே.." என்ற நக்கல் வேறு.

காலங்களில் அவளுக்கு ஏற்படும் அளவுக்கு அதிகமான உதிரப் போக்கால் ஏற்படும் பலவீனத்தை சீர் செய்ய என்று ம்மும்மா கட்டாயமாக முட்டை சாப்பிடச் சொல்லுவார்.

ஆனாலும் இன்றைக்கு அவர் விடியற் காலையில் எழுந்து,தான் மிகவும் விரும்பும் தன் குட்டிப் பேர்த்திக்காக அவள் மிகவும் விரும்பும் இந்த மல்லிகைப்பூ போன்ற மிருதுவான இட்லியை சுடச்சுட அவித்து கூடவே அவளுக்கு மிகவும் பிடித்த மாசிச் சம்பலும் சேர்த்து உண்ணக் கொடுத்து இருக்கிறார்.

பாவம் உம்மும்மாவும்.இந்த வயதிலும் தனக்காகச் சமையலறைக்குள் இரவு பகலாகப் பாடுபடுகிறாரே என்று அவள் கவலைப்படாத நாளே இல்லை.

என்ன செய்வது எதிர்பாராத ஒரே கணத்தில் நடந்த அந்தக் கோர விபத்தில் அவளின் பெற்றோரும் தம்பியும் இறந்து போன இந்த ஐந்து வருடங்களாக ம்மும்மாதான் அவளுக்கு எல்லாமும்.

"இவளை ஒருவனின் கையில் பிடித்துக் கொடுக்குமட்டுமாவது என்னை அழைத்து விடாதே றப்பே..!" என்று உம்மும்மா அழும் போதெல்லாம் அவளுக்கும் கூடவே அழுகை வரும்.

என்றாலும் தைரியமாக இருக்க முயற்சி செய்வாள்.மனசைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயற்சிப்பாள்.

உம்மும்மாக்கும் ஆறுதல் சொல்வாள்.

சிலவேளைகளில் முடியாமல் அவளும் உம்மும்மாவுடன் சேர்ந்து அவளும் அழுது விடுவதுண்டு.

அந்த நேரம் உம்மும்மாவும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அவளைச் சமாதானப் படுத்தி விடுவாள்.

இப்படியாகத்தான் கடல் போன்று விரிந்த இந்தப் பெரிய வீட்டிற்குள் இந்த அப்பாவி ஜீவன்கள் ரெண்டும் தம் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில்தான், அவளுக்குக் கடந்த ஆறு மாதமாக இந்தப்பொல்லாத வயிற்று வலி.

"என்னமா யோசனை .. சாப்பாடு,தேத்தண்ணி எல்லாம் அப்படியே கெடக்கு. இட்லி நல்லா இல்லையா ..." என்ற உம்முமாவின் அன்பொழுகும் குரலுக்குச் சட்டென நிமிர்ந்தாள்.

"ஐயோ பாட்டி அந்தமாதிரி ருசியாக இருக்கு.நீங்களும் வந்தா சேர்ந்து சாப்பிடலாம் என்று பார்த்தேன்" என்று சமாளிக்கப் போனவளை... "எனக்கு எல்லாம் தெரியும் கண்ணே... உன்ர வருத்தத்தை இண்டைக்கு காட்டி நல்லாக்கி விடலாம்... நான் VOG கிட்ட கூட்டிப் போயி மருந்தெடுக்க எண்டு புக் பண்ணி இருக்கேன். பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் க்ளினிக் போவோம" என்று கூறியபடி அவளின் தலையை மென்மையாக தடவி விட்டார்.

அன்பு நிறைந்து பெருகும் அந்த முதிர்ந்த விரல்களின் மென் சூட்டில் அவளுக்கு இன்னும் கொஞ்சம் கண்கள் மூடி உறங்க வேண்டும் போலிருந்தது.

உம்முமாவை அணைத்துக் கொஞ்சி, அவரின் பூக்கன்னத்தில் மென்மையாக முத்தம் ஒன்றை வைத்தபடி, இரவே அயர்ன் பண்ணி வைத்திருந்த சீருடைகளை அவசர அவசரமாக அணிந்து கொண்டு பாடசாலைக்கு புறப்பட ஆயத்தமானாள்.

அவளின் பாடசாலை வீட்டிலிருந்து ஏறத்தாள நான்கைந்து கிலோமீற்றர் தொலைவில் இருந்தது.

வழமையாக அவள் பஸ்ஸில் தான் பயணம் செய்வாள்.

எனினும் இவ்வாறான வயிற்றுவலி ஏற்படும் துரதிஷ்டவசமான தருணங்களில் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டாம் என்பது பாட்டியின் கண்டிப்பான கட்டளை.

உதிரப் போக்கும் வயிற்று வலியும் கொஞ்சம் குறைந்திருக்கும் மூன்றாம் நாளில்தான் மறுபடியும் பள்ளிக்குக் கிளம்புவாள்.

அது அவளுக்கும் மிகவும் ஆறுதலாக இருக்கும்.

அவளின் வகுப்பாசிரியர் ஷாமிலா ரீச்சருக்கு அவளின் உடல்நிலையும் அவள் படும் அவஸ்தைகளும் தெரியும் என்பதால் இந்த விடயம் பெரிய சிக்கல்கள் எதையும் கொண்டுவரவில்லை.

"பாவம் நீங்க சின்னப் பொண்ணு தானே.இன்னும் ஓரிரு வருடங்கள் போனா எல்லாம் சரியாகிடும். எதுக்கும் பீரியட் வாற நேரம் உம்மும்மாவோட போய் ஒரு VOG ய பாருங்கமா" என்று சொல்லியும் இருந்தார்.

ரீமாவின் உம்முமாவுடன் அடிக்கடி தொலைபேசியில் உரையாடி அவளின் உடல்,உள நிலை மற்றும் கல்வி முன்னேற்றம், பாட அடைவுகள், மட்டுமில்லாது அவளின் பாதுகாப்பு தொடர்பிலும் அடிக்கடி உரையாடுவார்.

என்றாலும் அவர் இன்னொரு பாடசாலைக்கு மாற்றலாகிப் போனதில் இருந்து மறுபடியும் ஒரு பாரிய வெறுமையை உணர்வுபூர்வமாக அனுபவித்துக் கொண்டு இருக்கிறாள் ரீமா.

ஷாமிலாக்குப் பதிலாக வந்த புதிய கணித ஆசிரியை நசீரா நன்றாகப் படிப்பிக்கிறார்தான்.பிள்ளைகளின் ஒழுக்க, கலாசார விடயங்களில்

கண்டிப்பாகவும் கண்காணிக்கவும் செய்கிறார்தான்.

என்றாலும் அந்தக் கண்டிப்பினூடாக அவர் தெரிந்தோ,தெரியாமலோ பிள்ளைகளின் பிஞ்சு மனசை இனி இல்லையெனும் அளவிற்கு நோகடித்துக் கொண்டே இருக்கிறார்.
பாவம் பிள்ளைகள் இதை யாரிடம் முறையிடுவது என்று கூடத் தெரியாமல் தம் மனதிற்குள்ளேயே வைத்துப் புழுங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இவளுக்கும் "இப்படி பீரியட் நேரம் பள்ளிக் கூடம் கட்டடிக்கும் வேலைகள் சரி வராது" என்று கண்டிப்பாக சொல்லி விட்டார்.

"இதெல்லாம் என்ன புதுப் பழக்கம்..? நானும் இருபது வருசமா படிப்பிக்கிறன். ஒரு பொம்பிளைப் பிள்ளையும் இதுகள ஒரு விசயமாவே கணக்கெடுக்கிறயில்ல . எல்லாம் உனக்கு அந்த ஷாமிலா தந்து வெச்சிருக்கிற செல்லந்தான் காரணம். புள்ளகளுக்கிட்ட நல்ல பேர் வாங்க ஆசைப்பட்டு புள்ளைகள நாசமாக்கி வெச்சிருக்கா.."

அது ஒரு கலவன் பாடசாலை. ஆண்களும் பெண்களும் இணைந்து கற்கும் பதினோராந்தர வகுப்பறை என்ற எந்தவொரு புரிந்துணர்வும் இன்றி,ஒரு தடவை அவர் போட்ட கூச்சலுக்குப் பின்னர், அவள் எவ்வளவு கடுமையான வயிற்று வலி என்றாலும் பள்ளிக்குப் போய் விடுகிறாள்.

அதை நினைத்து, நசீரா டீச்சருக்கு கடும் சந்தோசம்.
"என்ன செத்தா போயீற்றாய்.. பாரு இிப்ப இந்தா வாறாய்தானே.." என்ற நக்கல் வேறு.

எப்பவும் இப்படி அவமானப்பட முடியாதே என்றுதான் இவ்வளவு வலியையும் பொருட்படுத்தாது அவள் இன்றைக்கு வெளிக்கிட்டு இருக்கிறாள்.
ஒவ்வொரு உடலும் அதன் இயக்கங்களும் அதனூடாக அந்த உடல் எதிர்கொள்ளும் வலிகளும் வெவ்வேறு விதமாய் உள்ளதை அவள் அறியவில்லை.அதிலும் இவ்வாறான வளர்ந்தும் வளராத சிறிய பிள்ளைகளை இந்த விடயத்தில் எப்படி வழிப் படுத்துவது என்றும் அவருக்கு புரியவில்லை.

அவருக்குத் தேவை தான் கற்பிக்கும் பாடத்தில் சிறந்த பெறுபேறு. அது மட்டுமே.

பஸ்ஸிலும் ஏகப்பட்ட சன நெரிசல். திங்கள் என்றால் வழமையாக இப்படித்தான். ஒருமாதிரி நசிந்து,நெளிந்து குந்த ஒரு இடத்தை பிடித்துக் கொண்டாலும் அருகில் நின்ற ஒரு கிழவரின் தொந்தரவில் மனசு வெறுத்துப் போனது அவளுக்கு.

என்ன செய்வது..? பெண்ணாகப் பிறந்த காரணத்தால் பிரத்தியேகமாக அனுபவிக்கும் சில சிக்கல்கள் தொடர்பில் அவளால் என்றைக்கும் தீர்வு காணமுடியாமல் தானே உள்ளது.

பள்ளிக்கூடத்தில் அன்றைக்கு அவள்தான் வகுப்புக்குச் சுத்தம் செய்ய வேண்டும். அவளின் நிலைமையை ஓரளவு உணர்ந்து வகுப்புத் தோழி ஒருத்தி கதிரை, மேசைகளை இழுத்துக் கொடுத்தது கொஞ்சம் ஆறுதல்.

பிறகும் காலை ஆராதனை... அதில் நீட்டி முழக்கிய அதிபர். எல்லாம் நல்லதுதான் சொல்கிறார்கள்.ஆனாலும் அங்கு நீண்ட நேரம் நிற்பதில் உள்ள சிரமம் அவளைப் போன்றவர்கள் மட்டுமே அறிவர்.

அவளுக்கும் லீவெடுக்கவெல்லாம் விருப்பமில்லை தான். அளவிற்கு மீறிய உதிரப் போக்கு. சுத்தமில்லாத பள்ளிக்கூட மலசல கூடம்.

இந்தப் புதிய மாதவிடாய்ச் சிக்கல்களை எப்படி எதிர்கொள்வது என்ற வழிகாட்டல்கள் இல்லாத குடும்ப,பாடசாலைச் சூழல் அவளுக்கு நிறைய அச்சங்களை மட்டுமே தந்து கொண்டிருந்தது.

எல்லாம் முடிந்து வகுப்பறைக்குள் மறுபடியும் வந்து உட்கார்ந்ததுதான் தாமதம்... சுள்ளென்று வலித்த வலியில் இடுப்பும் அடிவயிறும் நொறுங்கிப்போன உணர்வு.

"ம்மா.." என்று அணுங்கியவாறு குனிந்த போதுதான் இரத்தம் இளஞ் சூடாய் தொடை வரை ஊர்ந்து கொண்டு வருவதை உணர முடிந்தது.

டக்கென்று கால்களை ஒன்று சேர்த்து, தொடைகளை இறுக்கிக் கொண்டாள்.

உயிர் போகும் வலி.

மறுபடியும் "ம்மா...!" என்றபடி குனிந்தபோது, கரும்பலகையில் வரைபிற்கான ஆள்கூற்று புள்ளிகளைக் குறித்துக்கொண்டிருந்த நசீரா ரீச்சர் இவளைப் பார்த்து ஏதோ கேட்க,அவளும் பதில் தெரியாமல் தடுமாற வந்ததே அவருக்குக் கோபம்.

"வரவர உனக்கெல்லாம் படிக்கிற ஆசையே போயிற்று. மினிக்கிக் கொண்டு சும்மா வாரதும் போறதும்.. ச்சைக்.. இந்த சனியங்கள் எல்லாம் என்னத்துக்கு பள்ளிக்கு வந்து எண்ட உசிர எடுக்குதுகளோ.. இவள் மட்டுமாவது மெத்சில ஏ எடுப்பாள் என்று பார்த்தா ... சனியன் மூட் மாறிக் போகுது போல..
வரவர இப்படி மொக்காகிக் கொண்டு வாராளே...!"

சத்தத்தைக் கூட்டியும், குறைத்துமாய்
அவர் போட்ட கூச்சலில் பக்கத்து வகுப்பிலிருந்த ஆசிரியரும் என்னவோ.. ஏதோ என்று அவசரமாய் திருப்பிப் பார்த்து விட்டுத் தனது பாட த்தைத் தொடர்ந்தார்.

உடல் வலியோடு,எதிர்பாராத அவமானம் ஏற்படுத்திய மன வலியும் ஒன்று சேர..இனி, ஒன்றுஞ் செய்ய முடியாது என்பதை உணர்ந்து மெதுவாகத் குனிந்து தலையை மேசையில் புதைத்தபடி அழத் தொடங்கினாள் ரீமா.

பக்கத்தில் இருந்த அவளின் வகுப்புத் தோழி கையை ஆறுதலாய் பற்றிக் கொண்டு "விடுடி..இது ஒரு லூசு..." என்கிறாள்.

அருகில் இருந்த இன்னொரு மாணவன் "என்னவொரு சைக்கோடா இது.." என்கிறான். .

அப்போதுதான் மலர்ந்த ஒரு பிஞ்சுத்தாமரைப் பூ வார்த்தைகள் எனும் கொடிய அனல் பட்டு டக்கென பொசுங்கிற்று.

*(பிள்ளைகள் படிக்க வேண்டும்தான். ஆனாலும் அதற்காக அவர்களை, அவர்களின் வீட்டுச் சூழல், அவர்களின் உடல், உளநிலை என்பவற்றை எல்லாம் பொருட்படுத்தாது சும்மா தேவைக்கற்ற விதத்தில் ஏசிக் கத்திக் கொண்டு நிற்பதால் மட்டும் பிள்ளைகளுக்கு பாடங்கள் மனசில் படிந்து விடப் போவதில்லை.)*

# நிக்ஷறோன்
# லெனின் றொபின்சன்































நிக்ஷறோன் புகைப்பட ஆர்வலன். பேஸ்புக்கில் அடிக்கடி தன்னுடைய புகைப்படங்களைப் பகிர்வதுண்டு.

பல புகைப்படப் போட்டிகளில் பரிசுகளும் பெற்றிருக்கிறார். தற்போது கடல்சார் பொறியியல் கற்கைகளை மேற்கொண்டுள்ளார்.

என்னுடைய அண்ணன் லெனின் றொபின்சனின் இரண்டாவது மகன் என்பது அனாவசிய மேலதிக தகவல்.


















## எங்கே போய் முட்ட.....!

# தன்னைப் புகழாத ஏஜன்சிக்காரன் இல்லை!

அபத்தம் முதல் இதழில் எழுதிய ஏடு இட்டோர் இயலில் 'இந்தியாவின் பெரிய பணக்காரன் தான் இந்தியாவின் பெரிய கடன்காரன் என்பதையும், இந்தப் பணக்காரர்கள் தான் நாட்டைக் கொள்ளையடிக்கிறார்கள் என்பதையும் பற்றி இந்த ஊடகங்கள் வாயே திறப்பதில்லை என்று எழுதியிருந்தேன்.

அதானியின் சாம்ராஜ்யம் எப்படியாக மோசடிகளில் கட்டி எழுப்பப்பட்டது என்பது பற்றி அமெரிக்க முதலீட்டு நிறுவனம் ஒன்று புலன் விசாரணை செய்து வெளியிட்ட அறிக்கை புட்டு புட்டு வைத்திருக்கிறது.

அதானியின் நிறுவனங்களின் பங்குவிலை சரிந்து விழுந்து கொட்டுண்டத் தொடங்கியிருக்கிறது. விளையாட்டுச் சீட்டுகளால் கட்டப்பட்ட வீடு மாதிரி!

ஊதிப் பெருப்பிக்கப்பட்ட பங்குகளை அடகு வைத்து வாங்கிய கடன்களால், கடன் கொடுத்த அரச வங்கிகளும் சேர்ந்து உதிர்ந்து விழக் கூடும்.

இதே போல, ரபேல் விமான கொள்வனவுக்காக அம்பானி 12 நாட்களுக்கு முன்பாகப் பதிவு செய்த றிலையன்ஸ் டிபென்ஸ் அபத்தம் பற்றியும் தோண்டி எழுத ஒருவன் வராமலா விடுவான்?

மோடியின் முடிவுக்கான முகவுரையாக இதெல்லாம் இருக்கக் கூடும்!

பம்மாத்துக்கள் வரலாறாவதில்லை.

போலிகள் நிரந்தரமாவதும் இல்லை.

ஒரு நாளைக்கு எல்லாக் கதை சொல்லிகளின் கதை கட்டல்கள் எல்லாம் முடிவுக்கு வரத் தான் வேண்டும்.

அபத்தங்களை முடிவுக்கு கொண்டு வர அபத்தத்தால் மட்டும் முடியவும் கூடும்!

***

நண்பர் கிரிதரன் அபத்தம் இதழை தன் பேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்து பதிவிட்டிருந்தார்.

ஒரு தமிழ்ப் பேரறிஞர் ஓடி வந்து பின்னூட்டத்தில் 'அபத்தம் தமிழ்ச் சொல் அல்ல. தமிழுக்கு இல்லை சொல் தட்டுப்பாடு' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஒரு சஞ்சிகையின் உள்ளடக்கத்தில் என்ன இருக்கிறது என்பதைக் கூட தெரிந்து கொள்வதில் ஆர்வம் எதுவும் இல்லாமல், அட்டையைப் பார்த்து தீர்ப்பு வழங்கும் இந்த நெற்றிக்கண் நக்கீரர் ஒரு தனித்தமிழ் உபாசகர் போலும்.

வீதத்தை விழுக்காடு என்றும், ஆடி மாதத்தை சூலை மாதம் என்றும், ஸ்டாலினை இசுடாலின் என்றும், சோஷலிஸத்தை சோடலிசம் என்றும் தான் எழுதுவோம் என்று அடம் பிடிக்கின்ற மறத்தமிழ் கூட்டம் மாதிரி, இவரும் புறநானூற்றுத் தமிழ் மட்டும் தான் பயன்படுத்துவேன் என்று அடம் பிடிக்கும் ஒரு மொழிச்சீர்திருத்தக்காரர் ஆக இருக்குமோ என்று தேடினால்... அவரது பதிவுகளில் தனித்தமிழ் இருப்பதாக காணவில்லை.

முன்பு ஒரு காலத்தில் புறநானூற்றுத் தேசியத் தலைவர் தவிர்ந்த ஏனைய எந்த கடவுளரையும் விசுவாசிக்காத இந்தப் பகுத்தறிவாளர் அந்த ஒரே சூரியதேவனை விசுவசிக்காத சகல அரசியல் தலைவர்களையும் துரோகிகளாகத் திட்டிக் கொண்டிருந்தவர்... மண்டையில் போட வேண்டும் என்பது போல!

சூரியதேவன் நந்திக் கடலில் அஸ்தமனமான பின்னால், முள்ளிவாய்க்காலில் நீரினால் ஞானஸ்நானம் பெற்று பாவங்களைக் கழுவிக் கொண்டு, தற்போது தமிழரசுக் கட்சியிக்கு அல்லேலூயா பாடும் கனடாக் கிளை முக்கியஸ்தர். கனடாவிற்கு விஜயம் செய்யும் தமிழரசுக் கட்சி பிரமுகர்களை புலி ஆதரவாளர்கள் (ஆதரவாளினிகளும் தான்!) 'அம்மணமா வாடா வெளியால!' என்று அன்போடு அழைக்கும் போது கொதித்து எழுபவர்.

தமிழர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர் வைப்பதில்லை என்று புலம்பியிருப்பார். ஆனால், தலைவர் லெப்டினன்ட் கேணல், மேஜர், பிரிகேடியர் பட்டம் கொடுத்ததை பெருமையாகக் கருதியிருப்பார்.

அவரது ஈழம், அவரது கொள்கை.

நமக்கென்ன?

இப்படி எத்தனை யாழ்ப்பாணிகளைக் கண்டிருப்போம்?

இருந்தாலும் இந்த தூய தமிழ்ப் பெயர் விவகாரத்தில்...

'தமிழ் அரசும் தமிழ் தேசியமும் தூய தமிழ்ச் சொற்களா என்பதை இத்தமிழ்ப் பேரறிஞர் விளக்குவாராகில் தமிழ்த்தட்டுப்பாடு இல்லாத தலைப்பைத் தேட உதவும்' என்று பின்னூட்டம் விட்டேன்.

தலைக் கறுப்பு காட்டாமல் தலைமறைவாகி விட்டார்.

முன்பு என்றால், சிரித்து விட்டு கடந்து போயிருக்கலாம்.

இந்த அபத்தத்தை அம்பலப்படுத்தா விட்டால், அவர் சொன்னதே உண்மையாகியிருக்கும்.

நல்லவர்களின் மௌனம் தான்

அயோக்கியர்களின் அலப்பறைகள் வரலாறு ஆகக் காரணமாகியிருக்கிறது.

அந்தத் தவறை இனிமேலும் விட முடியாது என்பதால்...!

***

இன்பநிதியின் ஜோடிப்படம் இணையத்தில் வெளிவந்ததாக ஒரே களேபரம். பேஸ்புக்கில் கோஷ்டி மோதல் சொல்லி மாளாது.

அந்த பரபரப்பைப் பார்த்தால், ஏதோ அனிருத் வீடியோ மாதிரி பலான படமாக இருக்குமோ என்று... எனக்கோ இருப்புக் கொள்ளவில்லை.

உட்பெட்டிக்குள் வந்து விழ, நானும் பெரிதாக வட்சப் குழுக்களில் இல்லை. பேஸ்புக் மெஸஞ்சரில் யாராவது மனம் இரங்கி, உட்பெட்டிக்குள் அனுப்புவார்களோ என்று பார்த்தால், காரண காரியம் இல்லாமல் தங்கள் உரையாடல்களுக்குள் என்னை தொடுத்து விடுகின்ற எந்தக் குழுவும் கருணை காட்டுவதாகவும் இல்லை.

பின்னர் படத்தைப் பார்த்த போது சப்பென்று போய் விட்டது.

ஏற்கனவே நான் கண்டு கடந்து போன படம்.

இதை விட கிளுகிளுப்பான எத்தனை டிக்டொக்கில் இருக்கு!?

தாயாரே பச்சைக் கொடி காட்டியிட்டாரு.

அடுத்தவங்களுக்கு அங்கே என்ன வேலை?

சரி, அதற்கு இங்கே என்ன வேலை?

இப்படித் தான் சிறந்த படம், சிறுகதை என்றெல்லாம் ஆகா, ஓகோ என்று பெரியோர்கள், இலக்கிய விமர்சகர்கள் சொல்வதையும் பரபரப்பையும் நம்பி தேடிப் போனால் சப் பென்று இருக்கும்.

இதுக்காடா இந்தக் குதி குதிக்கறீங்க? ன்னு!

சும்மா ஒரு கதையை வாசித்ததற்கோ, பத்துப் பக்கத்தில் பிள்ளையார் புராணம் எழுத வைத்து விட்டார்கள்.

இப்போது இந்த உலக மகா காவியங்கள் மீதான ஈர்ப்பு போய் விட்டது. இதனால் முதல்நாள் ஷெல்பி மனநோயாளிகள் போல படம் போடும் வியாதி என்னைப் பீடிக்கவில்லை.

ஆனாலும் பொதுரசனையிலிருந்து விடுபட்டு விலகியது, இப்படிப் பரபரப்புகளின்போது மண்டையைக் குடையும் அளவுக்கு ஒரு வகையில் துன்பமாகத் தான் இருக்கிறது.

***

இன்பநிதி என்றதும் வாரிசு, துணிவு நினைவுக்கு வருகிறது.

முதல்நாள் முதல் ஷோ, தலயா? தளபதியா? என அடிதடிப்படுவது எல்லாம் இருக்கட்டும்.

அதைப் பார்க்க ஆயிரக்கணக்கில் கொடுத்து டிக்கட் வாங்கிய ரசிகர்கள் பற்றி சீரிய இலக்கிய ஆர்வலர்களுக்கு ஒரே சிரிப்பு.

காமன் மேனின் ரசனை பற்றி உயர் இலக்கியவாதிகளுக்கும் ஆர்வலர்களுக்கும் உள்ள வெறுப்பு சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அற்ப புழுக்களைப் பார்ப்பது போல!

ஆனால், தன் படத்திற்கு ஆயிரக்கணக்கில் கொடுத்து டிக்கட் வாங்கி பார்க்க வைக்கும் அளவுக்கு அவர்கள் இருப்பதால், அவர்களின் ரசிகர்கள் யார் நம்பர் வண் என்று மோதிக் கொள்கிறார்கள்.

எந்தப் புத்தகம் பற்றிச் சொன்னாலும் pdf please என்று பின்னூட்டம் விடும் அந்த இருநூற்றுச் சொச்ச இலக்கிய அடிதடிப்பொடிகளை வைத்துக் கொண்டு, புத்தகங்களை யாரும் பணம் கொடுத்து வாங்குகிறார்கள் என்று புலம்பிக் கொண்டே, யார் நம்பர் வண் என்று தங்களுக்குள்ளேயே மோதிக்கிறாங்களே?

இதற்கு எங்கே போய் முட்டலாம்?

அந்த பரபரப்பைப் பார்த்தால், ஏதோ அனிருத் வீடியோ மாதிரி பலான படமாக இருக்குமோ என்று... எனக்கோ இருப்புக் கொள்ளவில்லை. உட்பெட்டிக்குள் வந்து விழ, நானும் பெரிதாக வட்சப் குழுக்களில் இல்லை. பேஸ்புக் மெஸஞ்சரில் யாராவது மனம் இரங்கி, உட்பெட்டிக்குள் அனுப்புவார்களோ என்று பார்த்தால், காரண காரியம் இல்லாமல் தங்கள் உரையாடல்களுக்குள் என்னை தொடுத்து விடுகின்ற எந்தக் குழுவும் கருணை காட்டுவதாகவும் இல்லை.

***

மனுஷ்யபுத்திரனின் காதல் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவிற்கு வைரமுத்து வந்தது பற்றி மனுஷ் பெருமைப்பட்டிருக்கிறார்.

வைரமுத்து பற்றி குற்றச்சாட்டுகள் வெறும் குற்றச்சாட்டுகளாகவும், நீதிமன்றத்தில் நிருபிக்கப்படாதவையாக இருந்தாலும், எல்லாருக்குமே வைரமுத்து பற்றி தெரியும். தனது பாதுகாப்புக்காக அரசியல்வாதிகளை காக்காய் பிடிப்பதும், அதிகாரத்துக்கு வாழ்த்துப் பா பாடுவதும் தெரியும். அவர் தி.மு. கவோடு ஒட்டிக் கொண்டு இருப்பதால், குற்றம் சாட்டியவர் மீதான தனிமனித தாக்குதல்கள் மோசமாக இருந்தன. வைரமுத்து ஆளும் கட்சிகளின் நிரந்தர ஆதரவாளனாக இல்லாதிருந்தால், இதே கூட்டம் எப்படி அவரை குத்திக் குதறி இருக்கும் என்பதும் தெரியும்.

தி.மு.கவுக்கும் மோடிக்கும் வைரமுத்து ஒரே நேரத்தில் ஆதரவாளனாக இருப்பதன் பின்னணி வேறு எதுவாக இருக்கும்?

இருந்தும் நிமிடத்திற்கு ஒரு காதல் கவிதை எழுதும் மனுஷ்யபுத்திரன் மீரு வைரமுத்து பற்றிச் சிலாகிப்பதும், அவர் வந்தால் வரமாட்டோம் என்று சொன்னவர்களையும் மீறி கூட்டம் சேர்ந்ததையும் பற்றி பெருமைப்படுகிறார்.

சாரு விருந்தினராக வந்ததில் எக்ஸ்ட்ரா பெருமை வேறு.

சாருவின் மனப்பிறழ்வு எவருக்கும் தெரியும்.

அது பற்றி அவரோடு வாழ்ந்தவர்களே சொன்ன கதைகளும் தெரியும்.

அவரைத் தெரிந்தவர்கள் சொன்ன அபத்தங்களும் இங்கே அம்பலமாகின்றன. நித்தியானந்தாவுக்கு புகழ் சேர்ந்ததில் அவருக்கும் பங்குண்டு.

நம்ம புலன் பெயர் பக்கத்திலும் இந்த கவிஞர்கள், இலக்கியவாதிகள் தொல்லை சொல்லி மாளாது.

ரசிகைகளுக்கு காதல் கவிதைகள் எழுதுகிறார்கள். உட்பெட்டிகளுக்குள் வழிகிறார்கள். 'வாறியா, ரெண்டு பேரும் ....க்குப் போகலாம்,

வாழைப்பழத் தோப்புக்குள் வாலி போல் விளையாடலாம்' என்று பாட்டு எழுதுகிறார்கள்.

இதை consensual என்று உருட்ட ஒரு அல்லக்கை கூட்டம்.
கள்ள மௌனம் காக்கும் பெண்ணியக் கூட்டம் வேறு.

கல் எறிய முடியாதபடிக்கு, தாங்களும் பாவமில்லாதவர்களாக இல்லாதிருப்பதும், தங்கள் மீதும் இதே குற்றச்சாட்டு வந்தால் ஓடி வந்து முட்டுக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையும் தான் இந்த கூட்டுக் களவாணிகள் கள்ள மௌனம் காப்பதும், பரஸ்பரம் புகழ்ந்தேத்திக் கொள்வதற்குமான காரணம்.

அறம் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்கிறவர்கள் தான் அயோக்கியர்களாக இருக்கிறார்கள்.

***

தமிழ் இலக்கியத்தின் மும்மூர்த்திகளும் (ஓகே, நம்பர் வண் உலக நாயகன்கள்!) கூட்டிக் கழித்துப் பார்த்தால், கிட்டத்தட்ட மொத்த இலக்கிய ஆர்வலர்களாலும் வழிபடப்படுவோர். அவர்கள் படைப்பது மட்டும் தான் இலக்கியம் என்று அ(இ)டித்துரைக்கும் தொண்டரடிப்பொடிகள் உளர்.

இருந்தாலும், அவர்கள் புகழ்வது போதாதென்று இவர்களும் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சில நேரங்களில் வாசிக்கின்ற எங்களுக்கே கூச்சமாகவும் அருவருப்பாகவும் போகும் அளவுக்கு.

ஆசான் தன்னுடைய படைப்பு ஒரு உலகப்பெரும் அதிசயம் என்றும் அதை எந்த ஊடகமும் புகழ்ந்தேற்றவில்லை என்று கொதிப்படைகிறார்.

சாரு உலகத்திலேயே கண்டிராத பேட்டி ஒன்றை தான் வழங்கியிருப்பதாகவும், அதை வாசிக்காவிட்டால் தொலைந்து போங்கள் என்று எச்சரிக்கை விடுகிறார்.

மனுஷ்யபுத்திரன் தனது உலகத் தரத்திலான கவிதைகள் பற்றியும் அது இலக்கிய உலகில் நிகழ்த்திய அதிர்வுகள் பற்றியும் தானே சிலாகித்துக் கொள்கிறார்.

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதென்று பாடிப் புகழ பக்த கோடிகளும் அல்லக்கைகளும் இருக்கும் போது, தன்னைப் புகழாத ஏஜன்சிக்காரன் இல்லை என்பது

> ஆசானின் அடிப்பொடிகள் சந்திர மண்டலத்துக்கு நாய் விட்டுப் பார்த்தது போல, முத்தரை விட்டு பார்த்திருக்கிறார்கள்.
>
> Operation Success, Mission Accomplished என்றால்... விரைவில் ஆசான் நடித்த வீடியோ வெளியாகக் கூடும்.
>
> இலக்கிய உலகினரின் இறுதிப் புகலிடக் கனவே தமிழ்ச் சினிமா தானே!?

போல, இந்த உலகநாதர்கள்... ஓ... உலக நாயகன்கள் சுயதம்பட்டம் அடித்து, தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வதன் பின்னாலுள்ள உளவியலைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

Narcissism hits new heights.

or, reaching new lows!

நம்பர் வண்களுக்கே இந்தப் பிரச்சனை என்றால்...

அவர்களால் அங்கீகரிக்கப்படுதலே பிறவிப் பெரும் பயன் என்பது போல, தவம் கிடக்கிறவர்கள் எம் மாத்திரம்?

***

Narcissism reaching new lows தான்.

முத்தரின் புகழ் பாடும் வீடியோ ஒன்று வெளியாகியிருக்கிறது. இலக்கியவாதி ஒருவரை கடவுளாகச் சித்தரித்த மாதிரி, புகழ் பாடல்.

வாத்யாருக்கு 'நீங்க நல்லாயிருக்கோணும் நாடு முன்னேற' மாதிரி, 'பூக்கள் பூக்கும் தருணம்' பாட்டை உல்டா பண்ணி, டப்பாங்குத்து குரூப் டான்ஸ் சகிதம்...

முன்பு கனடிய இளையோர் இப்படித் தான் ஒருவர் ஈழத்தை அடிச்சுப் பறிக்கப் போறார் என்று தங்கள் பெற்றோர் சொன்னதை நம்பி, சிவப்பு மஞ்சள் உடைகளில் குத்தாட்டம் ஆடினார்கள்.

அவர் சூரியதேவன்.

இவர் நான் கடவுள்.


இப்படி உச்சம் தொட்ட சூரியதேவன் மண் கவ்வியதை நேரில் கண்டோமே!?

இலக்கிய உலகின் பவர் ஸ்டார் ஏன் தானே இதில் தோன்றி பரத நாட்டியம் ஆடவில்லை என்பது ஆச்சரியமாக இருந்தது.

போன அபத்தம் இதழில் எழுதியிருந்தேன். தெய்வீகனுக்கு இயல் விருது கொடுக்கக் கூடும், சயந்தனுக்கு கொடுத்த மாதிரி. இதை விட எத்தனை கேவலங்களையெல்லாம் கண்டு கடந்து வந்திருக்கிறேன் என்று.

எனது இப்போதைய பயம்...?

வீடியோவை தயாரித்து வெளியிட்டது அமெரிக்க விஷ்ணுபுர




youtube.com

**Kadavul Thodangiya Idam: A Musical Tribute**

வாசகர் வட்டம். முத்தரின் அங்கீகாரமும் ஆசீர்வாதமும் இல்லாமல் இது வெளிவந்திருக்க முடியாது. ஆசானின் அடிப்பொடிகள் சந்திர மண்டலத்துக்கு நாய் விட்டுப் பார்த்தது போல, முத்தரை விட்டு பார்த்திருக்கிறார்கள்.

Operation Success, Mission Accomplished என்றால்...

விரைவில் ஆசான் நடித்த வீடியோ வெளியாகக் கூடும்.

இலக்கிய உலகினரின் இறுதிப் புகலிடக் கனவே தமிழ்ச் சினிமா தானே!?

***

வயதானவர்கள் அறுபதாம் கல்யாணம் செய்வது போல, எழுத்தாளர் ஒருவர் தனது எழுத்துலகின் பதினைந்தாவது வருட நிறைவைக் கொண்டாடுவதாகவும், உச்ச நட்சத்திரங்கள் விழாவில் கலந்து கொள்வதாகவும் பேஸ்புக்கில் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

Mon Dieu!

பேஸ்புக் இலக்கியப் பிரபலங்களுக்கு எல்லாம் பேஸ்புக்கே வருடக் கணக்கைச் சொல்லிக் கொடுக்கிறது. விழாக் கொண்டாடுவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை குறைந்தளவு வருடங்களும் இல்லை.

இன்னும் எத்தனை பாராட்டு விழாக்களை நாங்கள் கண் கொண்டு பார்க்க வேண்டி வரப் போகிறதோ?

இலக்கிய உலகில், கேவலங்கள் தொடுவதற்கு இன்னும் உச்சங்கள் நிறையவே இருக்கின்றன போலத் தான் இருக்கிறது.

***

நகைக்கடை ஒன்று, மூத்த எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் பிறந்தநாளுக்கு தள்ளுபடி விளம்பரம் செய்ததை அவரே தன் பேஸ்புக் பக்கத்தில் பெருமையோடு பகிர்ந்திருந்தார். (தன்னைப் புகழாத ஏஜன்சிக்...!)

புத்தகத் திருவிழாவில் பதிப்பாளர்கள் விற்பனை அதிகம் நடைபெறவில்லை என்று புலம்பியதாக மனுஷ்யபுத்திரன் தன் பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

ஆக, புத்தகங்களையே விலை கொடுத்து வாங்காத இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளரின் பிறந்தநாளுக்கு செய்கூலியும் சேதாரமும் இல்லாமல் தள்ளுபடி வழங்கினால் நகை வாங்குவார்கள் என்று நம்பிய நகைக்கடைக்காரரின் தன்நம்பிக்கையை (அல்லது அசட்டுத் துணிச்சலைப்) பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

இருந்தாலும், pdf மாதிரி தங்க நகையையும் download பண்ணி share பண்ணும் இரகசியம் அந்த இலக்கிய ஆர்வலர்களுக்கு தெரியாமல் இருக்குமா!?

***

மூன்று தமிழும் ஓரிடம் நின்று பாடிய காவடிச் சிந்து பார்த்தேன்.

ஓ! ஆசானோடு காட்சியளித்த படம் பார்த்தேன்.

பிரபலங்களோடு பவ்வியமாகக் கை கட்டிக் கொண்டு பல்லிளித்தபடி படம் எடுப்பது சிலருக்கு narcissistic மனநோய். அவர்களை நண்பர்கள் என்று பீற்றிக் கொள்வது சிலருக்கு Ego boost.

இலக்கிய உலகினர் என்றால், பலருக்கு அதுவே அங்கீகாரம்.

பேஸ்புக்கில், பையில் புத்தகத்தைத் திணித்த செல்பி!

கனடாவிற்கு வரும் சினிமாப் பிரபலங்கள் உட்கார்ந்திருக்கும் கதிரைக்குப் பின்னால் நின்று வளைந்து நின்று போஸ் கொடுப்பது பற்றி, படம் எடுக்கும் போஸ்கள் பற்றி தாயகத்தில் எழுதிய கட்டுரை ஒன்றில் எழுதியிருந்தேன்.

ஆக, ஆசானுக்கும் தங்களுக்குமான நெருக்கத்தைக் காட்ட....

“
ஆக, ஆசானுக்கும் தங்களுக்குமான நெருக்கத்தைக் காட்ட... மேதகு ஆசானோடு இலக்கிய உலகின் சீமான்கள்!

அதை வைத்தே காலத்தையும் பிழைப்பையும் ஓட்டிக் கொள்ளலாம்.

ஆசான், குரு என்றால் அல்லக்கைகளும் சீடர்களும் இருக்கத் தான் செய்வார்கள்.

அது ஆத்மார்த்த குருவாக இருந்தால் என்ன? பரமார்த்த குருவாக இருந்தால் என்ன?
”

மேதகு ஆசானோடு இலக்கிய உலகின் சீமான்கள்!

அதை வைத்தே காலத்தையும் பிழைப்பையும் ஓட்டிக் கொள்ளலாம்.

ஆசான், குரு என்றால் அல்லக்கைகளும் சீடர்களும் இருக்கத் தான் செய்வார்கள்.

அது ஆத்மார்த்த குருவாக இருந்தால் என்ன?

பரமார்த்த குருவாக இருந்தால் என்ன?

***

மூன்று தமிழும் ஓரிடம் நின்று ஆற்றிய உரையையும் பார்க்க நேரிட்டது.

புலம் பெயர் இலக்கியம் எண்டா, நாங்கள்!

நாங்கள் எண்டா, புலம் பெயர் இலக்கியம்!

'பிறகென்ன பூ..க்கு!?' தான்! (மூலு!)

***

சாரு இலங்கை விஜயம் செய்கிறார் என்று பேஸ்புக்கில் ஒரு செய்தி. புத்தகக் கண்காட்சிக்குப் போன பக்த கோடிகள் யாரோ ஏற்பாடு செய்திருக்கிறார்கள் போல.

தனக்கு Burberry shirt தான் பிடிக்கும், குடிப்பதெல்லாம் விலையுயர்ந்த குடிவகைதான் என்று, ஓசியில் காலத்தை ஓட்டுகின்றவர். வாங்கிக் கொடுப்பதை 'இதையெல்லாம் திங்க முடியாது' என்று வீசி எறிகின்றவர்.

கொஞ்ச நாளைக்கு முன்னால் சாருவை அவர் தம் பிரதம சீடர், தான் பாங்கொங் கூட்டிச் சென்றது பற்றி பிரலாபித்திருந்தார், பாங்கொக் படுக்கைக் களியாட்டங்களுக்கும் வேறு யாராவது பிச்சை போட வேண்டிய நிலை போல!

எனவே, தமிழ்நாட்டு நட்சத்திரங்களை அழைக்கும் தற்போதைய திருவிழா உபயகாரர்கள் ஏற்கனவே பிரான்ஸ் கூட்டி வந்தவர்கள் பட்ட அவலங்கள் அபத்தத்தில் வந்ததைக் காணவில்லைப் போலும்.

இந்த ஓசி மன்னனைக் காண, பின்னுக்குப் பலாப்பழத்தோடு நிற்பவர்களைப் பார்த்து, அன்னாசிப்பழக் காரர்கள் சிரிப்பதில் நியாயம் இருக்கத் தான் செய்கிறது.

Consider yourselves warned! போன மாத அபத்தத்தை வாசியுங்க!

***

சாருவை இலங்கைக்கு கூட்டிப் போகிறார்கள்.

மனுஷ் தனக்கு வெளிநாட்டுப் பயணம் ஆசையாக இருக்கிறது என்று எத்தனை தடவை வெட்கத்தை விட்டுச் சொல்லியிருப்பாரோ, நான் எண்ண மறந்து விட்டேன்.

யாரும் அவரை அழைப்பதாகவோ, ஓசி டிக்கட் அனுப்புவதாகவோ இல்லை.

அவரது தொலைதூரக் கவிதைக் காதலிகள் உட்பட!

ஒருவேளை அவர்களும் உட்பெட்டிக் காதலோடு நிறுத்திக் கொள்கிறார்கள் போல, 'அவருக்குத் தெரிஞ்சா கொன்னுடுவார்'னு!

காதலிகளுக்கு கவிதை எழுதுவதை விட, காதலிகளைக் கவிஞைகளாக்கும் முயற்சியை நம்ம ஈழத்து கலை, இலக்கியர்களிடம் கற்றுக் கொள்ளலாமே!?

ஏறிப் படு... சே... பறக்கலாம்!

***

துறைசார் நிபுணர் ஒருவரின் கட்டுரையை தனது சஞ்சிகையில் தனது மனைவி பெயரில் வெளியிட்டு ஆசான் நீண்ட நாட்களுக்கு முன் மாட்டிக் கொண்டது பற்றி பேஸ்புக் பதிவு ஒன்று கொஞ்ச நாளைக்கு முன் ஓடியது. பின்னர் அதே விடயம் பற்றிய இன்னொரு பதிவு இப்போது சுற்றிக் கொண்டிக்கிறது.

முன்னைய பதிவில் அது சம்பந்தப்பட்ட யாரையோ தாஜா பண்ண ஆசான் நேரில் போய் அவர் வீட்டில் தங்கியிருந்தது பற்றி இருந்தது.

சாருவின் கதைகள் மற்றவர்களிடம் இருந்து திருடப்பட்டது என்று பதிவுகள் இணையத்தில் இப்போதும் உண்டு. தனது நண்பர் பார்வைக்கு அனுப்பியதை உருவியதாக நண்பரின் தொடர்பாடல் இணையத்தில் உண்டு.

ஆக...

நெற்றிக்கண் நக்கீரர் போன்ற இலக்கிய உபாசகராக இல்லாவிட்டாலும்...

மேதகுக்களின் எதை வாசித்தாலும் கேட்டுத் தொலைக்க வேண்டியிருக்கிறது...

இதை நீரே எழுதினீரா? இல்லை, பங்கருக்குள் பாலேய்ங்கங்கள் யாராவது...?

***

சஞ்சிகை ஆசிரியர் ஒருவரின் நூல் வெளியீடும் விமர்சனங்களும் உலகெங்கும் அமர்க்களமாக நடைபெறுகின்றன.




அவரைக் கண்டால், 'இதை நீரே எழுதினீரா? இல்லை, மண்டபத்தில் யாராவது எழுதிக்...?' என்று கேட்க வேண்டும் என்று நண்பருக்குச் சொன்னேன்.

'அதுதான் அவர் தனது எழுத்துக்களை ஒப்பேற்றியவர்களுக்கு முன்னுரையில் நன்றி சொல்லியிருக்கிறாரே!?' என்றார் நண்பர்.

அவரே சஞ்சிகை ஆசிரியர்.

மற்றவர்களின் எழுத்தை சொற்பிழையா? பொருட்பிழையா? என்று குற்றம் கண்டுபிடித்து, எடிட் பண்ணும் கலையில் தேர்ந்தவராக இல்லாத ஒருவர் எடிட்டராக இருக்க முடியாதல்லவோ?

எத்தனுக்கே எத்தன்கள்... ஓ... எடிட்டருக்கே எடிட்டர்களா என்று நாங்கள் எங்கே போய் முட்ட?

சஞ்சிகை வெளிவந்த பின்னால் தான் தன் சஞ்சிகையில் என்ன வெளிவந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் நிலையில் ஒரு 'எடிட்டரின் சீப்பு' இருந்தாலும்...

இத்தனை வருடங்களாக சஞ்சிகை விடுகிறேன் என்று...

தன்னைப் புகழாத ஏஜன்சிக்....!

***

உலக மகாகாவியங்கள் பார்க்காததால், பல மீம்கள் எனக்குப் புரிவதில்லை.

பயப்படுறியா, குமாரு! என்று ஒன்று ஓடித் திரிந்தது... வடிவேலு படத்துடன்.

அது வடிவேலு படத்தில் வந்திருக்க வேண்டும் என்பது நம்ம ஊகம்.

கூகிளில் தேடினால் அதற்கே பல பதிவுகள். ஆனால் அதன் நதிமூலம், ரிஷிமூலம் தெரியவில்லை.

அபத்தத்தின் வரவு கண்டு, 'பயப்படுறீங்களாடா, குமாருகளா?' என்று கடைசிப் பக்க கட்டுரையில் ஒரு வரி தான் வந்தது.

உண்மையிலேயே பல பேருக்கு அடிவயிற்றுக் கலக்கமாகத் தான் இருக்கிறது போலிருக்கிறது.

தாயகத்தின் பெயரைச் சொல்ல வேண்டியது கட்டாயம் என நினைத்து பயத்தில் உளறியதைப் பார்க்கவும் நேரிட்டது.

அபத்தம் வெளிவராதிருந்தால், அடித்து விட்டிருக்கக் கூடிய கதையே வேறு!

தங்களுடைய புரட்டுகள் அம்பலமாகக் கூடும் என்று பயப்படுகிறவர்கள், தங்கள் பிழைப்பில் மண் விழுந்து விடுமோ என்று கலங்குகிறவர்களோடு...

தங்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை என்று புலம்புகிறவர்களும், இவங்கள் பெரிய ஆளாகியிடுவாங்களோ என்று பொறாமைப்படுகிறவர்களும்...

தங்களை ஒரு உலகநாயகன் பிரபலம், உலகமே தங்களைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கிறது என்ற நினைப்போடு திரியும் Narcissist அல்லக்கைகள் உட்பட...

வரிக்கு வரி, வரிகளுக்கு இடையில் எல்லாம் தங்களைப் பற்றி ஏதாவது வந்திருக்கிறதா என்று ஆர்வத்தோடு வாசிக்கிறார்கள் என்று உளவுப்பிரிவு அறிக்கை சொல்கிறது.

ஆனால், கேட்டுப் பாருங்கள்!

'இன்னும் பார்க்கவில்லை!' என்று பதில் வரும்.

கழிவறைகளுக்குள் ஒளித்து வைத்து வாசித்து இன்பம் பெற...

அபத்தம் ஒரு புதிய 'பருவகாலம்!'.

இழுக்க இழுக்க இறுதி வரை இன்பம் தான்!

***

ஆக, இப்படியாகத் தானே நாங்களும்...

தன்னைப் புகழாத ஏஜன்சிக்....!

**ஜோர்ஜ் இ.**

## தமிழ்நாடு சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில்

# புலம்பெயர் இலக்கியம்

**சோபாசக்தி | ப.தெய்வீகன் | செல்வம் அருளானந்தம்**




தமிழக அரசு அண்ணா நூற்றாண்டு நிகழ்வாக இந்த முறை சென்னைப் புத்தகக் கண்காட்சியைச் சர்வதேசப் புத்தகக் கண்காட்சியாக அறிவித்திருந்தது. ஈழத்தமிழர்கள் மற்றும் புலம் பெயர் சமூகத்திற்கான பங்களிப்பினையும் கருத்தில் கொண்டு நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார்கள்.

நிகழ்வில் “புலம்பெயர் இலக்கியம் ” குறித்த அமர்வு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த அமர்வில் உரையாற்றப்பட்ட மூன்று உரைகள் குறித்த எனது எதிர்க் கருத்தினை இங்கே பதிவு செய்கிறேன்.

ஒரு கருத்துரைப்பில் வழமையாக அனைவரும் இறுதியில் தந்து விடும் கிளைமாக்சை நான் இந்தக் கருத்துரைப்பின் தொடக்கத்திலேயே சொல்லிவிடுகிறேன்.


ஆம், அந்த உரைகள் மீதான எனது கருத்து எதிர்க் கருத்தானதுதான். ஏனெனில் அவை வெறுமனே தற்குறிகளின் உரைகளாகக் குறுகிப் போய்விட்டன என்ற ஒரேயொரு காரணந்தான் அது. புலம்பெயர் இலக்கியம் என்ற நீண்ட பெரும் பரப்பை தம்முடன் மட்டும் முன்னிலைப்படுத்தி ஆற்றப்பட்ட உரைகள் அவை. அந்தப் பெரும் பரப்பில் மிக நீண்ட காலமாக எழுதப்பட்ட - விவாதிக்கப்பட்ட எந்தத் தர்க்கங்களையும் அவர்கள் தமக்கும் தமது நோக்கத்திற்கும் அப்பால் பேசிவிட முனையவில்லை. அவை குறித்து எவ்வித கரிசனையும் கொள்ளவில்லை.

தமிழ் நாட்டு முட்டாள்த்தனமான இலக்கியவாதிகளுக்குத் தாம் சொல்வதே ஆதாரம் என்பதாக அவர்கள் மூவரதும் நினைப்பும் உரைகளும் இருந்தன. தமிழ்நாட்டவர்கள் அறிந்து கொள்வதற்காக எந்தவிதமான ஆதாரங்களையோ ஆதாரங்களின் வழி அடையாளப்படுத்தல்களையோ அவர்கள் தெரிவிக்கவில்லை. உண்மையில் அவர்கள் மூவருக்கும் எழுத்தாளர்களுக்கு இருக்க வேண்டிய சமூகம் மீதான கரிசனை கொஞ்சமேனும் இருந்தால், இந்தப் புலம்பெயர் சூழலில் தமக்கு முன் செயற்பட்ட எத்தனையோ செயற்பாட்டாளர்களையும் எழுத்தாளர்களையும் ஆதாரங்களுடன் முன்நிறுத்தியிருப்பார்கள். முதன் முறையாகக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தித் தமது 20 நிமிடப் பேச்சினையும் பெறுமதி மிகத்தானதாக ஆக்கியிருக்க முடியும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அனைத்திலும் அவர்கள் தன்னிலை சார்ந்தே கதை சொல்லியபடி உரையாற்றினார்கள். அதனால் தான் அந்த உரைகளை எதிர்க்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்படுகிறது.

புலம்பெயர் இலக்கியம் என்ற பெரும் பரப்பு இந்த மூன்று தற்குறிகளுடன் மட்டும் குறுகிவிடுவதல்ல என்பதனை விளங்கிக் கொள்ள தமிழ்நாட்டுச் சூழலுக்கு இன்னும் நீண்ட காலம் எடுக்கும் என்பதனையே அந்த நிகழ்வு முழுவதுமாய்க் காட்டி நின்றது. அந்த உரைகளைச் செவிமடுத்தபடி அங்கே குழுமியிருந்த யாருக்குமே(இங்கிருந்து போனவர்கள் உட்பட) ஒரு எதிர்க்

**கற்சுறா**

Facebook: Karsura Bourassa



> **இந்த மாதிரிப் பொறுப்பற்று உளறுவோரின் கதைகளை வைத்துக் கொண்டு தான் ஜெயமோகன், எஸ்.ராமகிருஸ்ணன் போன்றவர்கள் ஈழம் மற்றும் புலம்பெயர் சூழலில் வாழும் மற்றவர்களையும் மனதில் அளவீடு செய்து வைத்திருக்கிறார்கள். அந்த மொக்கையான அளவீட்டின் வழியே தங்களது பித்தலாட்டக் கருத்துக்களை அவ்வப்போது உதிர்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.**

கேள்வியுமற்று போனது. நிகழ்வு முடிந்த பின்னால் கூட இன்று வரை அவர்கள் அந்த நிகழ்வு குறித்து ஒரு சிறு கருத்தினைக் கூட வெளிப்படுத்தாதது அறிவின்மையின் தொடர்ச்சியல்லவா?

ஈழத்தமிழ்ச் சூழலின் "புலப்பெயர்வு" என்ற அடையாளம் ஒற்றைத் தன்மையானதல்ல. அதற்குள் பல்வேறுவகைப்பட்ட தளங்கள் இருப்பதாகவே நான் உணருகிறேன்.

அவ்வாறான தளங்களில் உருவான "புலம்பெயர் இலக்கியம்" என்ற கருத்தமைவும் பல்வேறு தளங்களையுடையது என்பதனையும் நீங்கள் உணருவீர்கள். அதனால் உலகத் தமிழ்ப் பரப்பில் "புலம்பெயர் இலக்கியம்" என்ற கருத்தியல் தனியே ஈழத்தமிழர்களுக்கு மட்டுமானதல்ல என்பதனையும், இந்த அடையாளத்திற்குள் உலகத் தமிழ்ப்பரப்பில் பல்வேறு தரப்பினர் கவனம் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் எனபது எல்லோரும் அறிந்த விடயம்.

இந்த வாழ்வு மிக நீண்டகால வரலாறு கொண்டது.

நம் நெஞ்சறிந்து பல்வேறு காலத்தில் பல்வேறு தரப்பினரால் பல்வேறு நிலைப்பாடுகளில் புலப்பெயர்வை மேற்கொண்ட பெருந்திரள் சமூகத்தை உள்ளடக்கியது உலகத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல்.

அந்த வாழ்வியலிலிருந்து பல்வேறு விதமான எழுத்தாளுமைகள் உருவாகி வந்த நிலையில் அதனைச் சிறிதும் கவனத்திற்குட்படுத்தாது மேம்போக்காக இன்று தமிழகத்தின் இலக்கிய ஆதரவை மட்டும் நாடி, அதற்குள்ளால் தமது மேம்படுத்தலை நினைத்தெழுதி ஒரே திசையில் இயங்கும் மூன்று தற்குறிகளைத் தேடியெடுத்துப் பேச வைத்த செயற்பாட்டிற்கு இந்த நிகழ்வை ஒழுங்கு செய்த குழுவிற்கு எனது கண்டனத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

இது நல்லதொரு அறிகுறியல்ல.

சமகாலத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாக் கருதினாலும் மூன்று வேறுபட்ட கருத்தியல் நிலை கொண்டவர்களை முன்னிறுத்தியிருக்கவேண்டும். சரி அதுகூடப் பரவாயில்லை அதற்கான தேடுதல் தமிழ்நாட்டவர்களிடம் இல்லை என விட்டுவிடலாம். ஆனால் மூன்று வேறு தளங்களில் வேறு பூர்வீகங்களில் இருந்து எழுதுபவர்களை இங்கே ஒன்று சேர்த்திருக்க முடியும். அதனைக் கூடச் செய்யாது ஒரே செக்கில் சுழலும் மாடுகளைக் கொண்டு வந்து இங்கே சுற்றவிட்டதன் பின்னால் அதனை ஒழுங்கு செய்த குழுவிற்கு வேறு ஏதோ ஒரு விசேட காரணம் இருப்பதாகவே நான் உணருகிறேன். அந்தக் காரணத்தைத்தான் நாம் கண்டறிய வேண்டும். இந்த மூன்று உரைகளையும் செவிமடுத்தால் அந்தக் காரணம் உங்களுக்கு இலகுவாகப் புரிந்து விடும் என்றே கருதுகிறேன். அதனால் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, இந்த மூன்று உரைகளையும் நீங்கள் நேரம் ஒதுக்கிக் கேட்டு விடுங்கள். அப்போதுதான் இவர்களது பித்தலாட்டங்கள் உங்களுக்கு சிறிதாவது புரியத் தொடங்கும்.

இவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில், பல்வேறு தளங்களைச் சென்றடையக் கூடிய அளவில் மிக முக்கியத்துவம் வாய்ந்த அரங்கில் இவ்வாறு தற்குறித் தனத்தில் பொறுப்பற்று உளறும் இவர்கள், தமிழ்நாட்டவர்களுடனான தனிப்பட்டசந்திப்புக்களிலும் மாலை நேரக் கேளிக்கைகளிலும் இவர்களால் என்ன கதை அவர்களுக்குச் சொல்ல முடிந்திருக்கும்?

இந்த மாதிரிப் பொறுப்பற்று உளறுவோரின் கதைகளை வைத்துக் கொண்டு தான் ஜெயமோகன், எஸ். ராமகிருஸ்ணன் போன்றவர்கள் ஈழம் மற்றும் புலம்பெயர் சூழலில் வாழும் மற்றவர்களையும் மனதில் அளவீடு செய்து வைத்திருக்கிறார்கள். அந்த மொக்கையான அளவீட்டின் வழியே தங்களது பித்தலாட்டக் கருத்துக்களை அவ்வப்போது உதிர்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வுச் சூழலின் இலக்கியம் என்றால், அதற்குள் உன்னிப்பாக மிகப் பெரிய உரையாடல் மிக நீண்ட காலம் நடைபெற்று வந்தது. இதற்குள் எழுந்த இலக்கியத்தின் தகமையை, அது வேறுபடும் புள்ளிகளை அடையாளம் காட்டி, அவற்றின் இயங்கு திசை எதுவாக இருக்கின்றன என்கிற விவாதங்களும் பல்வேறு தளத்தில் நடைபெற்று வந்தன. அந்த வகையில் ஈழத்தமிழர்களது எழுத்துச் சூழலின் முக்கியத்துவமும் சிறப்புமாக "புகலிட இலக்கியம்" என்ற ஒரு வரையறையை ஒருபகுதியினர் அடையாளம் கொண்டனர். அக்காலத்தில் இது மிக நீண்ட பெரும் விவாதங்களை உருவாக்கியருந்தது.

இதன் மூல விவாதங்களை உருவாக்கியவர்கள் ஆரம்பகாலத்திலிருந்து புகலிட இலக்கியச் சந்திப்பினை உருவாக்கி நடத்தி வந்தவர்களே என்பது எனது அபிப்பிராயம். அதற்குள்ளாகத்தான் இந்த விவாதம் முனைப்புப் பெற்றது. இந்தப் "புகலிட இலக்கியம்" என்ற வரைவுமுறையைத்தான் அவர்கள் "EXILE LITERATURE" என்றார்கள். வெறுமனே அது அகதி இலக்கியமல்ல.

தான் சார்ந்திருந்த நாடும் அந்த நாட்டிலிருந்து தப்பி வந்த ஏக்கமும் மட்டுமல்ல தான் வாழ்ந்திருந்த நாட்டில், தான் தப்பி வருதலுக்கான முதற்காரணமாக இருந்தவர்களும், தொடர்ந்து மக்களுக்கு எதிரான

வன்முறையாளர்களாக இருப்பவர்களுமான பாசிசத் தன்மையுடையோரைக் கேள்விக்குட்படுத்தும் எழுத்துக்கள் இதில் முதன்மை பெற்றன. ஆனாலும் இன்னொருசாரார், தான் இழந்த வாழ்வும் நாடும் உறவுகளும் பற்றிய ஏக்கம் குறித்து எழுதுதலும் புகலிட இலக்கியம் என்ற வரையறைக்குள் அடங்கும் என்றார்கள்.

புகலிட இலக்கியமென்றாலும் ஒன்று புலம்பெயர் இலக்கியம் என்றாலும் ஒன்று என்றார்கள் இன்னொரு சாரார். ஈழத்தில் வாழ்ந்த காலத்தை விட புலம்பெயர்ந்து எத்தனையோ தசாப்தங்கள் ஆனாலும் பனியையும் தன் பாடசாலையைன் நினைப்பையும் எழுதி அழுது கொண்டிருக்கும் போலிகளும் அதற்குள் இருந்தார்கள். ஆனால் அதனை புலம்பல் இலக்கியம் என வகைப்படுத்தி ஏளனம் செய்தார்கள் இன்னொரு பகுதியினர்.

ஆனாலும் புகலிடம் என்ற அர்த்தம் ஈழ இலக்கியச் சூழலில் மிகுந்த கவனம் பெற்ற காலம் அது. ஏனெனில் ஈழம், யுத்த வன்முறைகளால் சூழ்ந்திருந்த ஆரம்பகாலங்கள் அவை. ஈழத்தில் பேச்சுச் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் நாலாபக்கத்தாலும் முடக்கப்பட்டிருந்த காலங்கள் அவை. அவை குறித்துப் பேசுவதற்கான சூழல் புகலிடத்தில் மிகக் குறைந்தளவாவது சாத்தியமாகியது. அந்தவகையில் இந்தச் செயற்பாட்டினைக் கருத்தில் கொண்டு எழுதிக் கொண்டிருப்போரை பொதுவான புலம்பெயர் இலக்கிய பொது அடையாளத்திற்குள் கொண்டு வகைப்படுத்த முடியாது என்ற கருத்து உருவாகியது. அதுகுறித்த விவாதங்களும் தொடர்ச்சியாக நடைபெற்றன.

1998ம் ஆண்டு காலத்தில் "புகலிட இலக்கிய விமர்சனம் பற்றி" என்ற கட்டுரை ஒன்றை நண்பர் கலைச்செல்வன் எழுதியிருந்தார்.

"இலக்கியத்தை இன்பம் துய்க்கும் பாரம்பரிய லாகிரி லேகியங்களாகக் கருதிவந்த உயர் மேட்டுச் சூழலில் இருந்து வந்தவர்களல்ல இன்றைய புகலிட எழுத்தாளர்கள்.

பொழுது போக்கிற்கும், காலத்தில் தெரிவதற்குப் பலதரப்பட்ட தெரிவுகளில் ஒன்றாக இலக்கியத்தைத் தெரிந்தவர்களுமல்ல இவர்கள்.

வேறு வழியின்றி எழுதுமாறு




நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். எழுத்தில் உண்மையை உணர்தல் என்பது தற்கொலை முயற்சி என்ற என்ற சூழலில் எழுதுபவர்கள். தனதெழுத்து தனதுயிரைக் குடிக்கும் என்ற சூழலில் தமது எழுத்துப்பற்றிய எழுத்து வியாபாரிகளின் வரையறுப்புக்களை அவர்கள் கணக்கில் கொள்வதில்லை.

யாருக்குத் தேவை பொத்தம் பொதுவான வரையறுப்புக்களும் வழிகாட்டல்களும்? என நினைப்பவர்கள்.

ஆயினும் புகலிட இலக்கியம் என்பது நீண்ட காலப் பாரம்பரியம் கொண்ட சர்வதேச இலக்கியத்துள் ஒரு முக்கியமான வகையறா என்ற வகையில் அதுபற்றிக் கரிசனை கொள்வது அவசியமாகும். புகலிட இலக்கியத்தைத் தேடுவதும் அதைச் சர்வதேச புகலிட இலக்கியத்துடன் பொருத்தி இனங் காண்பதுவும் தேவையான நல்ல விடயங்கள் தான். அது குறித்துப் பல இலக்கியச் சந்திப்புக்களில், சஞ்சிகைகளில் பேசப்பட்டும் வருகிறது. அதைக் கொஞ்சமேனும் பொருட்படுத்துதல் புகலிட இலக்கியத்தைச் செழுமைப்படுத்த பெரிதும் உதவக்கூடும்."

(1998 மே- யூன் எக்ஸில்)

மேற்குறிப்பிட்ட தற்குறிகளின் இந்த மூன்று உரைகளையும் கவனப்படுத்துவதற்கும் அதன் பின்னாலிருக்கின்ற அயோக்கியத் தனங்களை விளங்குவதற்கும் கலைச்செல்வனது கட்டுரையில் சொல்லப்பட்ட இந்தச் சிறு துண்டுக் கருத்து மட்டும் போதும் என நினைக்கிறேன்.

புகலிடச் சூழலில் 1994ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி தோழர் சபாலிங்கம் அவர்களை அவருடைய வீட்டில் அவரது மனைவி குழந்தையின் முன்னால் புலிகள் சுட்டுக் கொன்றபோது சபாலிங்கம் அவர்களின் இரத்தம் மட்டுமல்ல புகலிடச்சூழலிலிருந்த அனைவரது இரத்தமும் சேர்ந்து உறைந்தது. அன்றுடன் ஐரோப்பிய அரசியற் செயற்பாடுகள் மட்டுமல்ல புகலிடச் சூழலில் செயற்பட்டு வந்த இலக்கியச் செயற்பாடுகள் தேங்கியதுடன் வெளிவந்துகொண்டிருந்த சஞ்சிகைகளும் நின்று போயின. புகலிடச் சூழலின் இலக்கியப் பெருவெளி துப்பாக்கிக் குண்டுகளால் பூட்டப்பட்ட காலம் அது.

ஆனாலும் மாற்றுக் கருத்துக்கான சிறு வெளியை அக்காலத்தில் வழங்கிக் கொண்டிருந்தது "புகலிட இலக்கியச் சந்திப்பு" என்ற ஒரு நிகழ்வு மட்டுமே. 1988ம் ஆண்டு ஜேர்மனியில் தொடங்கப்பட்ட அந்தச் சந்திப்பு அந்த நாட்டிற்குள்ளேயே 13 சந்திப்புக்களை வெவ்வேறு பிரதேசங்களில் நடத்தியிருந்தது. 1992ம் ஆண்டில் ஜேர்மனுக்கு வெளியில் எடுத்து முதன் முறையாக பாரீசில் அந்த நிகழ்வை ஒழுங்கு செய்து முன்நின்று நடத்தியவர் தோழர் சபாலிங்கம் அவர்கள். பரீசிலிருந்த புலிகளது பாசிச அச்சுறுத்தலையும் எதிர்கொண்டு நிகழ்ந்த சந்திப்பு அது. அதில் கலந்து கொண்டவர்கள் இன்றும் மெய்சிலிர்த்துப் போகுமளவுக்கு அந்தச் சந்திப்பை நடத்தி முடித்தவர்கள் அதன் ஒழுங்கமைப்பாளர்கள். மிகவும் கடுமையான அச்சுறுத்தல்களுக்குள்ளால் நடந்த இரண்டு நாட்கள் நிகழ்வு அது. அதன்பின்னான 2 வருடங்களில் சபாலிங்கம் கொல்லப்படுகிறார். சபாலிங்கத்தின் கொலைக்கு மூன்று வருடங்களின் பின் பாரீசில் மீண்டும் 23வது இலக்கியச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்படுகிறது. அதுவும் புகலிட இலக்கியச் சூழலின் ஒரு முக்கிய வரலாற்றுப் பதிவு.

மிகவும் ஆக்குரோசமான மனநிலையுடன் பல நண்பர்களின் இணைவில் அது தொடங்கப்படுகிறது. புகலிடப் பாசிசத்தின் கயிற்றை அறுத்துவிடவும் அம்பலப்படுத்தவும் என நடத்தப்படுகிறது அந்தச் சந்திப்பு. அந்த 23வது இலக்கியச் சந்திப்பின்

வாயிலாக "இனியும் சூல் கொள்" என்ற இலக்கியத் தொகுப்பு மலர் வெளியீடு செய்யப்படுகிறது. அந்தப் பெயரிற்குத் தகுந்தாற்போல் அது, சபாலிங்கம் அவர்களது கொலையின் பின்னான அச்சத்திலிருந்து மீண்டெழும் ஒரு செயற்பாடாக புகலிடப் பாசிசத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழும் ஒரு முக்கிய கூட்டிணைவாக அந்த நிகழ்வு அடையாளம் காட்டி நின்றது.

"இனியும் சூல் கொள்" என்ற இந்த மலர்தான் "புகலிட இலக்கியம்" என்ற அடையாளப்படுத்தலை அறைகூவலாக வெளிப்படுத்தி நின்றது. அத்துடன் மெல்லத் தயங்கியிருந்த, கொலை அச்சுறுத்தலுக்குள் முடங்கியிருந்த, மனதை வெளியில் தூக்கிக் கொண்டு வந்து தைரியம் தந்தது.

இந்தத் தொகுப்பு யாருக்காகச் சமர்ப்பணம் செய்யப்பட்டது எனக் கவனிப்பீர்களானால் அன்றைய அந்தக் காலத்தின் பாடுகளை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

"கொல்லப்பட்ட சபாலிங்கத்திற்கும் கொல்லப்படப் போகும் அனைவருக்கும் சமர்ப்பணம்" என்ற அறிவித்தலுடனே அந்தத் தொகுப்பின் பக்கங்கள் விரியத் தொடங்கியது.

"இனியும் சூல் கொள்" என்ற அந்தத் தொகுப்பின் முன்னுரையிலிருந்து அன்றைய காலத்தை நீங்கள் விளங்கிக் கொள்ள முடிவதுடன் அன்றைய புகலிட இலக்கியத்தின் பாடுகளையும், அதனை மறைத்து நின்று தமிழ்நாட்டில் உரையாற்றிய மூன்று தற்குறிகளின் தேவைகளையும் விளங்கிக் கொள்ள முடியும்.

"23 வது இலக்கியச் சந்திப்பின் இச்சிறப்பிதழ் புகலிட இலக்கியத்தினதும், தமிழ்ச் சூழல் எதிர் கொள்ளும் எல்லாவிதமான அரசியல், ஆய்வுகளினதும் இலக்கியப் போக்குகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று சொல்வதற்கு நாம் தயாரில்லை.

அத்தகைய குத்தகை மனோபாவமும் நமக்கில்லை.

புகலிடச் சஞ்சிகைகள் மற்றும் வெளியீடுகளின் தொடர்ச்சியும் அச்செயற்பாடுகளில் பங்கு கொண்டோர் அனைவரினதும் தொடர்ச்சியான உழைப்பே இம்மலர்.

பாசிசச் சூழலில் எழுத்துக்கு ஏற்பட்ட அதே நெருக்கடிகள் நமது சஞ்சிகைகளையும் சந்திப்புக்களையும் பாதிக்கிறது.

நெருக்குவாரங்கள், இழப்புகள் இவையெல்லாவற்றையும் மீறி மனிதம் சார் முனைப்பு, தேடல், மாற்றுக் கருத்துக்களை எதிர் கொள்வதில் நமது பக்குவம்"

இவையே இம் மலரையும் இவ் இலக்கியச் சந்திப்பையும் சாத்தியமாக்குகிறது.

நாம் துணிச்சற்காரர்கள் அல்ல.

உண்மையிலேயே நாம் பயந்து போயுள்ளோம்.

மேற்கத்திய ஜனநாயகத்தில் நாம் நம்பிக்கை இழந்துள்ளோம்.

அடுத்தவனைச் சூடு வாங்க வைத்துவிட்டு, ஓர் இலக்கியப் போக்கை நிறுவுகின்ற சாமர்த்தியம் நமக்குச் சுட்டுப் போட்டாலும் கைவருவதில்லையாகையால் எதிர்ப்பியக்கப் பரிமாணம் இம் மலரிலும் காணக்கிடைக்கிறது.

நமது குரல்கள் ஈனஸ்வரத்தில் ஒலித்துக் கொண்டிருந்த போதிலும், தமிழ்ச் சூழலில், குறிப்பாக இலங்கையில் நாம் நிராகரிக்க முடியாத அபிப்பிராயக்காரராக இருக்கிறோம்.

நமது புகலிட சஞ்சிகைகள், சந்திப்புகள் இவற்றிலெல்லாம் இலங்கையின் யுத்தவெறியர்களுக்கு எதிரான கடுமையான கண்டனங்களை நாம் விடுத்து வந்திருக்கிறோம்.

இவ் யுத்தம் மறு கேள்வியின்றி நிறுத்தப்படவேண்டியது என்று குரல் கொடுக்கின்ற அப்பாவி மக்கள் நாங்கள்தான்.

நம்மையும் நம் எழுத்துக்களையும் கவுரவிக்கின்ற யாவரும் நமது சுகதுக்கங்களைப் புரிந்து கொள்கிற எல்லோரும் இந்த யுத்தத்திற்கு எதிரான நிலைப்பாடு உடையவர்களே." எனச் சொல்லிச் செல்லுகின்றது "இனியும் சூல் கொள்" என்ற மலரின் முன்னுரை.

இந்த முன்னுரையை வாசிப்பதினூடாக எனினும் "புகலிட இலக்கியம்" என்ற அர்த்தம் குறித்து மேலதிகமாகத் தமிழ்நாட்டு வாசகர்கள் தேடத் தொடங்க வேண்டும். அது அவர்களது கடமை என நினைக்கிறேன். இல்லை நாங்கள் செக்குமாட்டுத்தனத்தின் பின்னால்த் தான் மீண்டும் மீண்டும் சுற்றுவோம் என நீங்கள் அடம் பிடிப்பீர்களேயானால், நாங்கள் உங்களையும் கைகழுவிக் கடந்து செல்வதே சிறப்பு.

சோபாசக்திக்கு ஏற்பட்டிருக்கும் இலக்கியப் "பரநோயா" என்ற நோய், தன்னுடைய காலத்தின் முன்னிருந்து, இந்த வகை உரையாடல்கள் நடந்து வந்ததாக அவரால் சொல்லிவிடமுடியாது செய்து விட்டிருக்கிறது. - அதன் பெயர்களை அடையாளப்படுத்த முடியாது செய்து விட்டிருக்கிறது. எல்லாமே தன்னுடனேயே ஆரம்பித்ததாக தமிழ் நாட்டு முட்டாள்களுக்கு அவர் கதை சொல்லக் கிளம்பிக் கனகாலம். அவரைப் பீடித்துள்ள மிகப்பெரிய வியாதி அது. அந்த வியாதியை அவரால் கடந்து வெளிவரவே முடியாது. அவருக்கு அந்த வியாதி இருக்கின்றது என்பதையாவது நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அதிலிருந்து நீங்கள், நீங்களாகத்தன்னும் விடுபடவேண்டும்.

இந்த இலக்கியச் செயற்பாடு குறித்து அங்கே பேசிய சோபாசக்தியின் பேச்சில் மறந்தும் அவர் புகலிடச் சூழலில் செயற்பட்ட "புகலிட

> இக்கட்டான சூழலில் நாட்டைவிட்டுத் தப்பியோடி, வந்தடைந்த புலம் பெயர் சூழலிலிருந்து மேற்குறித்த பாசிசக் கருத்துக்களுக்கு ஆதரவாக எழுதியவர்களின் எழுத்துக்களை நாம் எவ்வாறு வரையறை செய்வது? அல்லது அந்த ஆதரவு நிலை இல்லாமலும் எவ்வித எதிர்க்கருத்தைத் தெரிவிக்காமலும் நாம் இலக்கியந்தான் செய்கிறோம் எனச் சுத்துமாத்து இலக்கியம் செய்து கொண்டிருந்தவர்களை நாம் எந்த வகையில் அடையாளம் கொள்வது? 40 வருடமாக நமது சமூகம் ஆயுதத்தால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த காலத்தில் ஒருவித சுரணையும் இல்லாது எழுதிக் கொண்டும் சஞ்சிகை நடத்திக் கொண்டும் இருந்த வீணர்களை நாம் எவ்வாறு அடையாளம் கொள்வது? அவர்களை என்ன பெயர் கொண்டு அழைப்பது?

இலக்கியச் சந்திப்பு" எனும் பெயரை அவர் மறந்தும் உச்சரிக்கவில்லை. ஆனால் தடுமாறி ஒரு இடத்தில் புகலிட இலக்கியம் என அவர் வாயிலிருந்து வெளிவந்ததை கணப்பொழுதில் நீங்களும் மறந்து போனீர்கள். இதனைத்தான் அவரது திட்டமிட்ட செயற்பாடு எனச் சொல்கிறேன். இந்த வகைத் தற்குறித்தனத்தை அவர் கையிலெடுத்து நீண்ட காலம். இந்த நிலை அவரை ஒருபொழுதிலும் காப்பாற்றிக் கரை சேர்த்து விடாது.

இங்கே இன்னொரு தளத்தையும் சுட்டிக் காட்ட வேண்டும். இக்கட்டான சூழலில் நாட்டைவிட்டுத் தப்பியோடி, வந்தடைந்த புலம் பெயர் சூழலிலிருந்து மேற்குறித்த பாசிசக் கருத்துக்களுக்கு ஆதரவாக எழுதியவர்களின் எழுத்துக்களை நாம் எவ்வாறு வரையறை செய்வது? அல்லது அந்த ஆதரவு நிலை இல்லாமலும் எவ்வித எதிர்க்கருத்தைத் தெரிவிக்காமலும் நாம் இலக்கியந்தான் செய்கிறோம் எனச் சுத்துமாத்து இலக்கியம் செய்து கொண்டிருந்தவர்களை நாம் எந்த வகையில் அடையாளம் கொள்வது? 40 வருடமாக நமது சமூகம் ஆயுதத்தால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த காலத்தில் ஒருவித சுரணையும் இல்லாது எழுதிக் கொண்டும் சஞ்சிகை நடத்திக் கொண்டும் இருந்த வீணர்களை நாம் எவ்வாறு அடையாளம் கொள்வது? அவர்களை என்ன பெயர் கொண்டு அழைப்பது?

எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களைப் போல் தமது இளைப்பாறிய காலத்தில் புலம் பெயர்ந்து வேறு நாடுகளில் இருந்து எழுதும் எழுத்துக்களை நாம் எவ்வாறு பிரித்துப் பார்ப்பது? என்ற விவாதங்கள் தொடரப்படவேயில்லை.

"ஒரு மனிதனின் நாட்குறிப்புகள்" என்ற செழியனின் எழுத்தையும் அ. முத்துலிங்கம் அவர்களின் எழுத்தையும் நாம் புலம் பெயர் இலக்கியம் என்ற வரையறைக்குள் பொதுமைப்படுத்தும் அபத்தம் குறித்து நாம் இன்னும் விவாதிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. அவை குறித்த கவனம் நம்மிடம் போதாதிருக்கிறது.

தமிழகத்திலிருந்து மலேசியாவிற்குப் பலம்பெயர்ந்து அங்கிருந்த கதைகளுடன் "புயலிலே ஒரு தோணி" என்ற ஒரு அற்புதமான நாவலைத் தந்த ப. சிங்காரத்தை புலம்பெயர் எழுத்தின் முன்னோடி என்றுதான் நாம் அடையாளப்படுத்த வேண்டும். அவரது

> "எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்களைப் போல் தமது இளைப்பாறிய காலத்தில் புலம் பெயர்ந்து வேறு நாடுகளில் இருந்து எழுதும் எழுத்துக்களை நாம் எவ்வாறு பிரித்துப் பார்ப்பது? என்ற விவாதங்கள் தொடரப்படவேயில்லை.
> "ஒரு மனிதனின் நாட்குறிப்புகள்" என்ற செழியனின் எழுத்தையும் அ.முத்துலிங்கம் அவர்களின் எழுத்தையும் நாம் புலம் பெயர் இலக்கியம் என்ற வரையறைக்குள் பொதுமைப்படுத்தும் அபத்தம் குறித்து நாம் இன்னும் விவாதிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது."

நாவலை வெளிக் கொண்டு வந்த ந.முருகேசபாண்டியன் அவர்கள் ப. சிங்காரத்துடன் உரையாடிய கதையை அப்படியே பதித்திருந்தார்.

"புயலிலே ஒரு தோணி"?

"அதுமட்டுமென்ன? அது பிரசுரமானது பெரிய கதை.

அதை 1962 வாக்கில் எழுதினேன்.

பல பிரசுர கர்த்தர்களிடம் கிடந்தது. ஒண்ணும் ஆகலை.

கடைசீல சென்னை நண்பர் ஒருத்தரின் விடா முயற்சியினால்

கலைஞன் பதிப்பகம் 1972 இல் வெளியிட்டது.

அதுவும் வெட்டிச் சுருக்கி வெளியாச்சு என்கிறார் ப. சிங்காரம்.

பாருங்கள் இதுதான் தமிழ்நாட்டு இலக்கியக்காரரின் அறிவு.

இதே அறிவோடு தான் இப்பொழுது புகலிட இலக்கியத்தையும் அவர்கள் அறிந்து கொள்கிறார்கள்.

அவர்களது அறிவில் எவ்வித மாற்றங்களும் நிகழ்ந்துவிடக் கூடாது எனத் தொடர்ச்சியாக வேலை பார்ப்பவர்கள்தான் இந்த மேற்சொன்ன வகைத் தற்குறிப் பேச்சாளர்கள்.

இந்த வகைத் தான்தோன்றித் தற்குறிகளின் இன்னொரு செயற்பாடு எனக்குள் அருவருப்பினை ஏற்படுத்தியது. அது குறித்து சில வருடங்களின் முன்னரே எனது முகநூலில் அதனைத் தெளிவு படுத்தியிருந்தேன்.

அதாவது, கனடிய அரசால் நிகழ்த்தப்படும் தமிழ்ப் பாடசாலையில் தமிழ்க் கல்விகற்கும் உயர் வகுப்பு மாணவர்களின் பாடத்திட்டத்தில் கல்விகற்கச் செய்யும் "தமிழியல்" என்ற பாட நூலில் அ. முத்துலிங்கம் அவர்களைப் புலம் பெயர் இலக்கியத்தின் முன்னோடி என்று சொல்லி கற்பிக்கப்படுவதினை சில வருடங்களுக்கு முன் நான் சுட்டிக்காட்டினேன். இது மிகப்பெரிய புரட்டுத்தனம். இந்தப் புரட்டுத் தனத்தை எனது குழந்தைகளுக்கும் அவர்கள் கற்பித்தார்கள். இது புரட்டுத் தனம் என அந்தப் பாடசாலையின் ஆசிரியருக்கு அறிவித்தும் அது கரிசனை கொகள்ளப்படவில்லை. இந்தப்புரட்டுத்தனத்தின் பின்னால் அ.முத்துலிங்கம் அவர்களை அண்டிப் பிழைப்பு நடத்தும் பல்வேறு தற்குறிகள் இருக்கிறார்கள் என்றே நான் அதன்பின்னால் அறிந்து கொண்டேன்

இந்த உரைகளை நிகழ்த்திய மூன்று தற்குறிகளைப் போன்று செயற்படும் வேறு சில தற்குறிகளின் செயற்பாட்டிற்தான், இந்தப் புரட்டும் எழுதப்பட்டிருக்கிறது. இந்தத் தவறு ஏன் நடக்கிறது? எதனால் நடக்கிறது? யாரால் நடக்கிறது? என்ற கேள்விகளை நாம் இனியாவது பொதுத் தளங்களில் கேட்கத் தொடங்க வேண்டும். தனது இலக்கியத் தோட்டத்தின் விருதாளர்களுக்குப் பணம் கொடுப்பதுபோல் இந்தப் புரட்டிற்கு முத்துலிங்கம் அவர்களிடம் இருந்து இந்த பாடத்திட்டதை வரையறுப்பவர்கள் எவ்வளவு பணம் பெற்றார்கள் என்ற சந்தேகங்கள் எமக்கு எழுகின்றன என்றாவது சொல்லிவைக்க வேண்டுமல்லவா? அண்மையில் தன்னைப் பற்றித் தான் ஒரு யாழ்ப்பாணன் என்றும் தான் ரொரண்டோ தமிழ் இருக்கையை உருவாக்கியவன் என்றும் சொல்ல வைத்து ஒரு பாடலை ஒருவாக்கித் தமிழ் நாட்டுப் பின்னணிப் பாடகனையும் கொண்டு பாடவைத்ததைப் பெருமை கொண்டவர் அவர்.

இந்த மாதிரியான செயற்பாடுகள் ஒரு சமூக எழுத்தாளனை மனங் கூச வைப்பவை. ஆனால் முத்துலிங்கம் , சோபாசக்தி, செல்வம் போன்றவர்களுக்கு அந்தக் கூச்சம் ஒருபொழுதிலும்

ஏற்படுவதில்லை. இவர்களே இந்தவகைச் செயற்பாடுகளைப் பின்நின்று வழிநடத்துகிறார்கள். மறுபக்கம் அதற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்கிறார்கள். தமது எழுத்துக்கள் பேச வேண்டிய தர்க்கத்தை விட்டு தமது எழுத்துக்களைப் பேச வைக்க வெவ்வேறு கைங்கரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது அவர்களுக்கு. தமது எழுத்துக்கள் மீது நம்பிக்கையில்லாத தன்மைதான் இந்தமாதிரியான உத்திகளைக் கையாள நினைப்பதன் பின்னால் இருக்கும் விளக்கம். இது ஒருபோதும் தேறாது.

இந்த வகையாக அறிவு கொண்ட அ. முத்துலிங்கம் அவர்களைப் பின்பற்றி அவரது விசுவாசியாக இருப்பதன் மூலம் பலர் தாமும் இலக்கிய அங்கீகாரம் பெற முடியும் என நினைக்கிறார்கள். அதனால் அவர் காசு கொடுத்துக் கொடுக்கும் விருதுகளை வாங்கி அவர் முன்னாலேயே போட்டோ எடுத்துப் போட பலர் வரிசையில் நிற்கிறார்கள்.அவ்வாறான தற்குறிகளை அவர் நன்கே கண்டுணர்ந்து அவர்களை விலைக்கு வாங்குகிறார். தமிழ் நாட்டுத் தலையாட்டிகள் அவர் கொடுக்கும் 500 டொலர் பணத்தைப் பெரும்பணமாக நினைத்து அந்தப்பணம் பற்றிய கதையையே பொது வெளியில் அறிவிக்கிறார்கள். முத்துலிங்கம் என்ற வியாபாரி தமது சிறுகதை குறித்து இவ்வாறு சொன்னார் கவிதை குறித்து இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் என்று ஒரு பொழுதிலும் அவர்கள் சொல்லுவதில்லை. “நக்கினார் நாவிழந்தார்”. இப்படி நாவிழந்து முத்துலிங்கத்தின் கயிறு தாவித் தமிழ்நாட்டின் கரையில் இறங்க ரொரண்டோவிலும் பலர் ஆயத்தமாகிறார்கள். அவர்களை நினைத்தால் தான் பாவமாக இருக்கிறது.

அடுத்து ப.தெய்வீகனது உரை. இந்த உரையைப் பற்றி என்னதான் சொல்லுவது. ப.தெய்வீகனை இது குறித்துப் பேசவேண்டும் என அழைத்து ஒழுங்கமைத்த ஒழுங்கமைப்பாளர்களுடன் மட்டுமே நான் நோக முடியும். தெய்வீகனுடன் அல்ல. அவரது இந்த உரையினைக் கேட்ட போது தெய்வீகனுக்கு புலம்பெயர் இலக்கியம் என்ற அடையாளமும் விளங்கவில்லை. புகலிட இலக்கியம் என்றாலும் தெரியவில்லை. அது ஏற்படுத்தி வந்த தர்க்கங்களும் விளங்கவில்லை.

ஆனால் ஒன்று தெரிகிறது அவர் தன்னிடம் வைத்துக் கொண்டு வஞ்சகம் செய்யவில்லை என்பது. அவருக்குத் தெரியாத விடயத்தை அவர் எப்படிப் பேசமுடியும்? மூன்றாம் கட்டப் ஈழப்போர், நாலாம் கட்ட ஈழப் போர் என்று வாழ்ந்து கொண்டிருந்தவரை புலம்பெயர் இலக்கியம் குறித்து உரையாற்றச் சொன்னால் இங்கேயும் கூட மூன்றாம் கட்டம், நாலாம் கட்டம் என்று கட்டம் கட்டிக் கொண்டிருக்கிறார். பாவம் அவர். இந்த இடத்தில் தெய்வீகனை விட்டுவிடுவோம்.

அபத்தம் முதல் இதழிலேயே அவரது எழுத்துக்களின் போலித்தனம் குறித்து ஜோர்ஜ் கிழித்துத் நார் நாராய்த் தொங்கப் போட்டுவிட்டார். நான் இங்கே விட்டு விடுகிறேன். கடந்து போகிறேன். அவரைப் பேச அழைத்த தற்குறிகளைத்தான் இந்த இடத்தில் திட்டித் தொலைக்க வேண்டும்..

அடுத்து காலம் செல்வம் என நாம் அன்போடு அழைக்கும் செல்வம் அருளானந்தம் அவர்களது உரை குறித்து நான் அதிகம் சொல்ல வேண்டியிருக்கிறது.

அவர் இந்தப் புலம்பெயர் இலக்கியச்சூழல் குறித்து ஒரு வருடத்தின் முன் “அகழ்” என்ற இணைய சஞ்சிகைக்கு வழங்கியருந்த நேர்காணல் எவ்வளவு பொய்மை கொண்டது அயோக்கியத்தனமானது என விரிவாக எழுதியிருந்தேன். அதனை நீங்கள் எனது “மற்றது” என்கிற வலைப்பதிவில் வாசிக்க முடியும். அந்த ஒரு பதிவிற்காகவே அவர் என்னை முகநூலின் நட்பு வட்டத்திலிருந்து நீக்கியிருந்தார். மீண்டும் இந்தப் புலம்பெயர் இலக்கிய உரையின் மூலம் மீண்டும் ஒரு தடவை தன்னை வெளிப்படையாக அம்பலப்படுத்தியிருக்கிறார்.

புகலிடச் சூழலில் அவர் ஒரு எழுத்தாளனாக இருப்பதும் தனது தனது காலம் சஞ்சிகையை வெளியிடுபவராகவும் இருப்பது எமக்கு ஒன்றும் சிக்கலில்லை. பாதகமில்லை. ஆனால் தன்னுடைய நலனுக்காகவும், தான் கொண்டிருக்கின்ற அரசியல் பிற்போக்குத் தனத்திற்காகவும் கண்முன்னால் நடந்த கதையை மடை மாற்றிப் பொய் சொல்லும் பொழுது அந்த இடத்தை இடைமறித்து இல்லை. அப்படி இல்லவே இல்லை என்று சொல்ல வேண்டிய தேவை எனக்கு இருக்கிறது என்றே கருதுகிறேன்.

இதனைத்தான் நண்பன் சோபாசக்தியின் செயற்படு குறித்தும் செய்ய விளைகிறேன். அவர் சொன்ன பொய்களை அம்பலப்படுத்தி அவரை ஒரு தற்குறி என அடையாளம் காட்டி நான் கட்டுரை ஒன்றை எழுதிய மறு நிமிடம் என்னை அவர் தனது முகநூல் நட்பு வட்டத்திலிருந்து நீக்கினார். அந்த நட்பு நீக்கம் என்னைப் பொறுத்த அளவில் மிகவும் வரவேற்கத்தக்க விடயமே. தமிழ் நாட்டுத் தலையாட்டிகள் போல் நாம் ஒருபோதும் அவருக்கு நமது தலையை ஆட்டமாட்டோம் என்பது அவருக்கு விளங்கியது மகா பெரிய விடயம் என்றே கருதுகிறேன்.

அவர் தனது சினிமா நடிப்பின் மூலம் புகழடைவதும் அதனால் பணம் சேர்த்துக் கொள்ளுவதும் எமக்கும் அளவில்லா சந்தோசம் கொண்டதுதான். ஆனால் அது அனைத்துக்குமான “தகமை” ஆகிவிடாது. அதனால் கிடைக்கும் புகழை ஒரு சமூகத்தின் ஒத்தோரிட்டியாக அவர் கருதிவிடக் கூடாது. தமிழ்நாட்டுச் சூழலில் ஒரு நடிகனுக்குக் கிடைக்கும் போலி விம்பத்தைப் போல், அந்த விம்பத்தின் மூலமாக ஈழச் சூழலில் கிடைக்காது என்பதனை அவர் உணர வேண்டும். ஆனால் தமிழ் நாட்டு சினிமா நடிகன் நான் நினைத்தால் 24 மணிநேரத்தில் இலங்கையை உலக வரைபடத்திலிருந்து நீக்கிவிடுவேன் எனத் தனது ரசிகர்களுக்கு கதை சொன்னது போல் சோபாவும் தனது தமிழ்நாட்டு வாசகர்களுக்கு எந்தப் புரட்டையும் அவிழ்த்து விடலாம் என எண்ணிக் கொள்ளக் கூடாது. ஆனால் அப்படியொரு நிலைக்குத் தான் அவர் வந்தடைந்திருக்கிறார். தன்னை அளவுக்கதிகமாக அவர்கள் நம்புகிறார்கள் என்றே அவர் நினைக்கிறார். அது நல்லதொரு சிந்தனையில்லை என உணரும் மனநிலையில் சோபாசக்தி அவர்கள் இல்லை. அப்படியான ஒரு போலி உணர்வினைத்தான் மற்றய உரையாளர்களான செல்வமும் தெய்வீகனும் அவர்குறித்து மறுபடியும் மறுபடியும் அங்கே ஏற்படுத்த முனைந்தார்கள். அது அந்த நிகழ்வை மேலும் மேலும் அசிங்கப்படுத்தியது.

சரி இந்த உரையில் செல்வம் அவர்கள் என்ன அப்படிப் பேசினார்? என்று பார்ப்போம்.

அவர் பேசத் தொடங்கும் போது “இது ஒரு அருமையான சந்தர்ப்பம் இப்படி எங்களுக்குக் கிடைப்பதில்லை” எனச் சொல்லிக் கொண்டு தொடங்குகிறார்.

அதிலும் ஏற்கனவே பேசிய இரண்டு பேரையும் விட தான் வயதில் மூத்தவன் என்றும் தனக்குக் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாது என்பதால் கேள்வி நேரத்தையும் எடுத்துக் கொஞ்சம் அதிக நேரம் நான் பேசியே முடித்துவிட்டுப் போகிறேன்" என்கிறார்.

அத்தோடு தனக்கு ஏற்கனவே தமிழ்நாட்டிலிருந்து வந்த தொலைபேசி அழைப்பு கனடாத் தமிழ் இலக்கியம் பற்றிப் பேசுமாறு சொன்னதாகச் சொல்லுகின்றார்.

இது ஒரு அருமையான சந்தர்ப்பம் இப்படி எங்களுக்குக் கிடைப்பதில்லை எனச் சொல்லிக் கொண்டு தொடங்கிய செல்வம் அவர்களுக்கு இங்கே பேச வேண்டிய தலையங்கமும் ஏற்கனவே கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு அது குறித்த எந்தக் கரிசனையும் இறுதிவரை இருக்கவில்லை என்று அந்த உரை முழுவதும் காட்டிச் செல்கிறார். அந்த உரை குறித்த எவ்வித தயார்படுத்தலும் அவரிடம் இல்லை. வெறும் உளறல் பேச்சு அது.

தொடக்கத்திலேயே, "ரொரண்டோ வில் குருசேவ் என்கின்ற ஒரு பையன் தாயகம் என்ற பத்திரிகையை கொம்பியூட்டரில் எழுத்தை உருவாக்கி நடத்திவந்த பொழுது நாம் அவருக்குத் துணையாயிருந்தோம் பின்பு அது வேறுமாதிரிப் போய்விட்டது என்கிறார்."

இங்கேதான் அவரிடம் இடைமறித்து அது என்ன "வேறு மாதிரி" என்று கேட்க வேண்டியிருக்கிறது. தேசியம் என்றும் தேசவிடுதலை என்றும் ஈழத்தில் நடந்த அராஜகங்களையும் மக்களுக்கெதிராக நடந்த அநீதிகளையும் ஆதரித்து நியாயம் சொல்லிக் கொண்டிருந்த அத்தனை சூழலிலும் தனித்து நின்று மறுத்து எழுதி வந்த பத்திரிகையைத் தான் அவர் "அது வேறு மாதிரிப் போய்விட்டது" என்கிறார். அவரது இந்தக் கருத்திற்குள் இருந்த காலத்தின் சூனிய அரசியலை இங்கிருந்து சென்றவர்கள் கூடத் துடைத்தெறியவில்லை. எல்லாம் ஒரே குட்டையின் மட்டைகள். அத்தோடு "நாம் துணையாயிருந்தோம்" என்றால் அந்த "நாம் என்பவர்கள்" யார்? அதுதான் "தமிழர் வகைதுறைவள நிலையம்" என்ற "தேடகம்" என்ற அமைப்பு. ஆனால் அந்தப் பெயரை அவரால் அந்த நிகழ்வில் அடையாளம் காட்ட முடியாது கடந்து செல்கிறார்.

அடுத்து, "புலம்பெயர்ந்த இலக்கியம் என்பது தமிழுக்கு இன்னொரு அணி. தமிழர்களுடைய இன்னொரு பக்கம் இந்தப் புலம் பெயர்ந்த இலக்கியம். அதில இருந்துதான் சோபாசக்தி போன்றவன் உருவாகிவந்துதான் தமிழனின் முதலாம் இடத்தில் இருக்கிறான் என்றால் அதுதான் புலம்பெயர் இலக்கியம்." என்கிறார்.

இந்தக் கருத்து என்ன விடயத்தை நமக்குத் தெரிவிக்கிறது? அது என்ன முதலாம் இடம்? எங்கிருந்து? எதனால்? எப்படி? அந்தத் தெரிவு அறிவிக்கப்படுகிறது? அதனை அடையாளம் சொல்லக் கூடிய எந்தக் கருத்தமைவும் அவரிடம் இல்லை. சும்மா வார்த்தைகளைப் போடுவது? அப்படி செல்வம் அவர்கள் தம்மைப்பற்றிப் போடும் வார்த்தைகளுக்காகவே சோபாசக்தி போன்றவர்களால் அவர் ஒரு "முக்கியமான ஆள்" என்பதாகச் அவ்வப்பொழுது அடையாளம் காட்டப்படுவார். செல்வம் அவர்களின் இந்த உளறல்கள் தான் சோபாசக்தி போன்றவர்களுக்குத் தொடர்ந்தும் தேவைப்படும் விடயம்.

அந்த உளறலின் தொடர்ச்சியாய் தொடர்ந்து "புலம்பெயர்ந்த கனடாத் தமிழிலக்கியத்தில் உதாரணத்திற்காக நான் மூன்று பேரைக் குறிப்பிடுகிறேன்" என்று சொல்லும் செல்வம் அவர்கள்

ஒன்று - முத்துலிங்கம்.

ஒன்று- சேரன்

ஒன்று- தேவகாந்தன் என்று சொல்லி இந்த மூன்று பெரையும் ஒரு அடையாளமாக நான் சொல்லலாம் என்கிறார். சரி, இந்த மூன்றுபேரும் ஒரு அடையாளம் என்றால் எவ்வாறு எனச் சொல்ல வேண்டும். என்ன வகை எழுத்துக்களால் தான் அவர்களை அடையாளம் காண்பதாக அறுதியிட வேண்டும். எதுவுமில்லை. இதில் புலம் பெயர்ந்த இலக்கியங்களாக அவை என்ன வகையில் அடையாளம் கொள்ளுகின்றன என்ற ஒரு சிறு கருத்துத் தெரிவுகூட அவரிடம் இல்லை.

தொடர்ந்து முத்துலிங்கம் அவர்களின் இலக்கியத் தோட்டப்பணி குறித்துக் கதை சொல்கிறார். அது ஒரு முக்கிய பணி என்கிறார்.

"அவர் தமிழ் நாட்டில் ஒரு கவிதைத் தொகுப்பிற்கு விருது கொடுத்தால் அந்தத் தொகுப்பின் இரண்டாவது பதிப்பில் அந்த விருது குறித்துப் பெருமையாகச் சொல்லிப் பதிப்புச் செய்கிறார்கள். அது முக்கியபணியாகத் தான் நான் அதனைப் பார்க்கிறேன்" எனச் சொல்கிறார்.

இவ்வளவுதான் அதற்கான தரமும் கேவலமும். தான் சொல்வது ஒரு கேவலமான கருத்து என்பதனைக் கூட உணராதவராக இருக்கும் நிலையில் செல்வம் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருப்பது அபத்தமில்லாது வேறு என்னவென்று சொல்ல?

தொடர்ந்து சேரன் கவிதைகள் ஜெயபாலனின் கவிதைகள் என்று தன்னுடைய வழமையான வால்பிடிப்புப் பேச்சாக, ஒரு அர்த்தமில்லாமல் பேசி பின் "பனைமரக் காடே பறவைகள் கூடே" என்று வந்துவிடுவதும் "சொந்த ஊரைப் போல வருமா" என்று வந்து விடுவதால் தான் இந்தப் புலம்பெயர் இலக்கியம் என்ற பெயர் வந்தது என்று சினிமாக்காரத் தமிழ் நாட்டுக்கு வாலைப் பிடித்துக் கதை சொல்கிறார். இந்தமாதிரியான உரையினைக் கேட்ட அங்கிருந்த தமிழ் நாட்டவர்கள் புலம்பெயர் இலக்கியம் என்ற கருத்தமைவை எவ்வாறு விளங்கிக் கொண்டிருப்பார்கள்?

அதன்பின் சபாலிங்கம், உமாகாந்தன் என உதிர்க்கும் கதைகள் வெறும் அபத்தம். எந்த அர்த்தங்களும் பொருந்தாதவை.

பின் யாழ்மையவாதம் குறித்துக் கதை சொல்லும் போது, "சாதி பாக்கிறவங்களும் யாழ்ப்பாணத்திலதான் சாதிக்கெதிரான போராட்டங்களும் நடந்தது யாழ்ப்பாணத்திலதான். இடதுசாரிகள் முன்னின்று நடத்தியது யாழ்ப்பாணத்திலதான். யாழ்ப்பாணத்திலதான் எல்லாம் நடந்தது? அப்ப ஏன் யாழ் மையவாதம் என்று நக்கலடிப்பான்?" என்றும் அதில் தனக்கு உடன்பாடில்லை என்றும் சொல்கிறார்.

"மல்லிகை ஜீவாவும் அங்கதான் இருந்தது டானியல் ஜீவாவும் அங்கதான் இருந்தது. தளையசிங்கமும் இங்கதான் இருந்தது. யாழ்ப்பாணத்தப் பற்றிச் சொல்லேக்க எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. அந்த இரத்தம்தான் எங்களுக்க இருக்கு. யாழ்ப்பாணத்தான் எப்படி என்று மகாகவியே சொல்லிட்டார் என்று அவருடைய "ஆறு நடந்து திரிந்து வயல்கள் செழிக்க" என்ற கவிதையைப் பாடிக்காட்டி பெருமிதம் கொண்டார்.

இது ஒரு பொறுப்பற்ற முட்டாள்த்தனப் பேச்சு இல்லாது வேறு என்ன?

அவரது இந்த முட்டாள்த் தனத்தை எப்படி நாம் வரையறுப்பது? "யாழ்ப்பாணியம்" என்பது யாழ்ப்பாணத்தில்

> **"யாழ்ப்பாணியம்" என்பது யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்களைப் பற்றியதல்ல. அந்தச் சிந்தனை. சைவஉயர் வேளாளச் சிந்தனை. ஆதிக்கச் சிந்தனை. அது அந்தப் பிரதேசத்தில் வாழும் அனைத்து மக்களிடமும் இருக்கிறது என்பதல்ல. அது எவ்வாறு பிராமணியத்தைப் போல் கட்டமைக்கப்படுகிறது. தனது நச்சு நாக்கை அது எவ்வாறு விரித்துக் கொள்கிறது. எவற்றிலெல்லாம் அது தனது கரத்தைக் கவ்விக் கொள்கிறது என்பது பெரிய வரலாறு. இந்தச் சாதாரண புரிதல் கூட அவரிடம் இல்லை.**

வாழ்பவர்களைப் பற்றியதல்ல. அந்தச் சிந்தனை. சைவஉயர் வேளாளச் சிந்தனை. ஆதிக்கச் சிந்தனை. அது அந்தப் பிரதேசத்தில் வாழும் அனைத்து மக்களிடமும் இருக்கிறது என்பதல்ல. அது எவ்வாறு பிராமணியத்தைப் போல் கட்டமைக்கப்படுகிறது. தனது நச்சு நாக்கை அது எவ்வாறு விரித்துக் கொள்கிறது. எவற்றிலெல்லாம் அது தனது கரத்தைக் கவ்விக் கொள்கிறது என்பது பெரிய வரலாறு. இந்தச் சாதாரண புரிதல் கூட அவரிடம் இல்லை.

அந்த யாழ்ப்பாணியச் சிந்தனை ஆதிக்கத்திற்கெதிராக அதற்குள் இருந்தும் அதற்கு வெளியிலிருந்தும் பலர் தொடர்ந்து இயங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருப்பார்கள். பிரமணியத்திற்கு எதிராக எத்தனை பிரமணர்கள் இன்றும் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள்? பாசிசப் புலிகளது சிந்தனையை எதிர்ப்பது என்பது அதிலிருந்த புலிப் போராளிகளை எதிர்ப்பதல்ல. ஒரு சிந்தனையை எதிர்ப்பது என்பது வேறு. இந்தச் சாதாரண அறிவு கூட இல்லாது செல்வம் அவர்களால் "யாழ்ப்பாணியம்" குறித்துச் சொல்லப்பட்ட விடயம் அற்பத்தனமானது. அருவருக்கத் தக்கது. முட்டை போண்டாத் தனமானது.

தொடர்ந்து புலம்பெயர் சூழலைத் தமிழ் நாட்டுச் சூழலில் சொல்ல வேண்டும் என்பதற்காக ஒரு கதையை அவிழ்க்கிறார்.

"ஒரு தரப்படுத்தலுக்காத்தான் எங்கள் யுத்தம் வீறு கொண்டது. ஆனால் இண்டைக்கு ஒவ்வொரு யூனிவேர்சிட்டியிலும் எண்ணூறு ஆயிரம் என்று எங்கள் மாணவர்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள். நான் வந்த காலத்தில "குயின் ஸ்றீற்" என்ற இடத்தில காலையும் பின்னேரமும் கோப்பை கழுவிற பொடியளைக் காணமுடியும். இப்ப அந்த றோட்டில முதலாளிமாராய் இருப்பதெல்லாம் தமிழ்ப்பெடியள்." என்கிறார்.

இது ஒரு அறிவிலி பேசும் தரவல்லவா?

இது இந்த பல்லின சமூகங்களைக் கொண்ட முதலாளித்துவ நாடுகளில் நடக்கின்ற ஒரு சுழற்சி முறை. இன்று ஈழத்தமிழர்களுக்கிருக்கின்ற நிலைதான் அதற்கு முதல் இத்தாலிய நாட்டுக்காரர்களுக்கும் கிரேக்க நாட்டுக் காரர்களுக்கும் இருந்தது. அவ்வாறுதான் யூதர்களும் இருந்தார்கள். கஸ்டப்பட்டு உழைத்து ரெஸ்ரோறன்ட் வைத்திருந்த இத்தாலி நாட்டுக்காரர்களின் பிள்ளைகள் அந்த உணவகங்களைத் தொடர்ந்து நடத்தப் போவதில்லை. அதனால் தான் அங்கே வேலை செய்த தமிழர்கள் அதனை எடுத்து நடத்தக் கூடிய சாத்தியம் உருவாகியது. அதே போல் நாளை இந்தத் தமிழர்களது பிள்ளைகளும் இந்த உணவகங்களைத் தொடரப் போவதில்லை. இந்த உலகம் அவர்களுக்கு வேறு மாதிரியான வாழ்வு முறையைக் கொடுக்கும். அதற்குள்ளாகத்தான் அவர்களது வாழ்வு வடிவமைக்கப்படும். அந்தரித்து வந்த சமூகம் போலான வாழ்வை நமது தமிழ்ப் பிள்ளைகள் கொண்டோடப் போவதில்லை. 8 மணித்தியால வேலையும் ஆட்டம் பாட்டம் சந்தோசம் என்றே அவர்களது இனிவரும் வாழ்வு அமைக்கப்படும். செல்வம் அவர்கள் தனது பிள்ளைகளிலிருந்தாவது அதனைக் கற்றிருக்க வேண்டும். ஆனால் அந்த கற்றலைத் தவிர்த்து தமிழ் நாட்டு இலக்கியக் கேள்விச்செவி முட்டாள்களை முழுதாகக் கவிழ்க்கும் திட்டத்தைக் கையிலெடுக்கிறார். இது செல்வம் அவர்களின் அறியாமை மட்டுமல்ல களவாணித் தனம்.

தரப்படுத்தலுக்காத்தான் எங்கள் யுத்தம் வீறு கொண்டது என்றால் நீங்கள் சொல்லுகின்ற போராட்டம் தொடங்கிய மண் எனப் புல்லரிக்கும் யாழ் மண்ணில் இன்று பெரு மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். ரொரண்டோவில் நிகழ்ந்த மாற்றம் ஏன் யாழ் மண்ணில் நடக்கவில்லை என்று இவ்வாறு முட்டாள் மனநிலையில் யோசிக்கும் செல்வம் அவர்கள் அதன் கணக்கை யோசிக்க வேண்டாமா?

"இப்ப ஒரு 15 வருசம் பத்து வருசம் தான் இந்த றேடியோக்களும் புத்தகங்களும் இருக்கும் என்று எல்லாரும் சொன்னவை. ஆனால் இன்றும் றேடியேவில் தமிழ்ப்பிள்ளைகள் தமிழில் பேசிக் கொண்டிருக்குதுகள்." என்று சொல்லும் செல்வம் அவர்களின் தடாலடி கனடாவில் அடுத்த தலைமுறை அவர்களும் தமிழில் தான் எழுதுகிறார்கள் என்று ஜயகரனையும் அருண்மொழி வர்மனையும் டி.சே.தமிழனையும் அறிமுகம் செய்கிறார்.

இந்த அறிமுகம் குறித்து இவர்கள் மூவரும் கூச்சம் கொண்டிருப்பார்கள் என்று நான் நினைக்கவேயில்லை. அவ்வாறு கருதியிருந்தால் அவர்கள் அது குறித்துப் பொது வெளியில் தமது கூச்சத்தையாவது வெளிப்படுத்தியிருப்பார்கள். இவர்கள் மூவரும் செல்வத்தையும் செல்வத்தின் தறிகெட்ட இலக்கியச் செயற்பாட்டையும் மென்போக்காக ஆதரித்து நிற்பவர்களே. அதனால் அவர்கள் அதனுள் இருக்கின்ற திருட்டுத்தனத்தை விளங்கிக் கொள்ளப் பொவதில்லை.

இந்த மூவரையும் அவர் அடையாளம் காட்டும் போது எங்கே எதனால் என்பதனை செல்வம் அறுதியிட வேண்டும். அது அவரிடம் ஒருபொழுதிலும் இருந்ததில்லை. தனக்குச் சாதகமானவர்களையும், தன்னோடு இணங்கியிருப்பவர்களையும், தன்னை ஒரு சொல்லும் நோகச் சொல்லாதவர்களையும், தான் இயங்குகிறத தளத்தில் தனக்குப் பின்னால் கரையேறத் துடிப்பவர்களையும் தமிழ்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் ஒரு ஏஜென்சியாக எப்பொழுதும் தான் இருப்பதாக அவர் நினைக்கிறார். அவர் பின்னால் அதற்காக அலைபவர்களும் நினைக்கிறார்கள்.

"புலம்பெயர்ந்த சூழலில்" கனடாவில் சாதி பார்க்கினம் அது உண்மை. கனடாவில் சாதிக்கு

எதிராகவும் இருக்கினம் அதுவும் உண்மை. அண்மையில் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு மேல்சாதிக்குள்ளும் ஒரு கீழ்சாதிக்குள்ளும் ஒரு சம்பந்தம் நடந்திட்டுது. பிள்ளையளுக்குத் தெரியாது. அதுகள் "லவ்" பண்ணீட்டுதுகள். தாய் தகப்பனால் சொல்லப்பட்டது என்னவெண்டால் நாங்கள் இத எதிர்க்கேலாது. ஐயோ அவன் ஒரு தமிழ்ப்பிள்ளையைத்தானே செய்யுறான். நாங்க விட்டுடுவம். ஆனா ஒரு வெள்ளைக்காரப் பிள்ளையையோ அல்லது சீனப் பிள்ளையையோ செய்யேல்ல. ஆனால் கலியாணம் செய்யும் போது நீங்கள் உங்கட ஆக்களுக்க புறம்பாகச் செய்யுங்கோ. நாங்கள் எங்கட ஆக்களுக்க புறம்பாகச் செய்யுறோம் என்று சொல்லப்பட்டது. அந்த யாழ்ப்பாண மனநிலை இப்பவும் அப்படியேதான் இருக்கிறது." என்கிறார்.

இங்கேதான் தன்னுடைய மிகப்பெரிய மாறுபாட்டை தனக்ககுத் தெரியாமலேயே உரைக்கிறார். தான் ஏற்கனவே பேசிய யாழ்ப்பாணியம் என ஒன்று இல்லை எனப் பேசிய கருத்தினை ஒரு பத்து நிமிட இடைவெளியில் தானே மறுத்துப் பேசுகிறார். அந்த முரண்பாட்டைக் கண்டு கொள்ளும் புலன் கூட அவரிடம் இல்லை. எதையும் சும்மா பேசிவிட்டுப் போகும் போடுதடிப் பேச்சாளனாகப் பேசிவிடும் நிலைதான் அவருடையது. அதனை அவர் ரொரண்டோவில் பேசும் பேச்சுக்களின் வாயிலாகக் கூட அறிய முடியும். ஆனாலும் யாரும் எதிர்க்கருத்துச் சொல்வதில்லை. செல்வம் அவர்கள் கூட்டங்களில் எவ்வளவு பிற்போக்குத் தனமான கருத்தைச் சொன்னாலும் அதனை இந்தப் படியேறக் காத்திப்போர் கண்டு கொள்வதில்லை.

யாழ்ப்பாணிய மனநிலை என அப்படி ஒன்று இல்லை என்பதாகச் சொன்னவர் இதுதான் யாழ்ப்பாண மனநிலை என்கிறார். ஆனால் எந்தத் தமிழ் நாட்டு இலக்கியக்காரனுக்கும் கூட இதனை விளங்கிக் கொள்ளவும் கேள்வி கேட்கவும் தோன்றவில்லை. அதனால்தான் அவர்களைத் தமிழ் நாட்டு முட்டாள் இலக்கியக்காரர்கள் என்கிறேன். அதனை விடவும் இங்கிருந்து சென்ற எந்த இலக்கியக்காரரும் அது தவறு என்று சொல்லத் துணிவு இல்லாத செல்வத்தின் அடியாட்களாக ஆகிவிடுவதுதான் அதிக அபத்தமான செயல்.

இந்த உரையில் நீங்கள் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில் சோபாசக்தி புலம்பெயர் இலக்கியம் குறித்துக் கதை சொல்லும் போது எவ்வாறு தெளிவாக எதையெல்லாம் அடையாளப்படுத்தாது பேசமுடியுமோ அவ்வாறு பேசிச் சென்றார். கேட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டுச் சூழலுக்கு பெரும் பரப்பான புலம்பெயர் இலக்கிய வாழ்வின் அனைத்துப் பரப்பிலும் சோபா என்ற அடையாளம் இருப்பதாகவே எனண்ணிக் கேட்டுக் கொண்டிருக்கும் வித்தையுடன் அந்தப் பேச்சை வடிவமைத்தார். அதுபோலவே கொஞ்சமும் விலகிப் போகாது செல்வமும் அதனைச் சரிவரக் கையாண்டார்.

கனடாவில் புலம்பெயர் இலக்கியம் என்ற தனது பேச்சை, இங்கே வெளிவந்த எந்த வேறு பத்திரிகைகளின் பெயர்கள் பற்றியோ, அல்லது இங்கே தேடகம் என்ற ஒரு அமைப்பு செயற்பட்ட விதம் பற்றியோ, அல்லது அது ஆரம்பகாலம் தொடக்கம் நடத்தி வந்த மிகப்பெரிய நூலகம் பற்றியோ, அந்த நூலகம் யுத்தகாலத்தில் புலிகளால் கொழுத்தப்பட்டது பற்றியோ எந்த ஒரு வார்த்தைகளையும் உச்சரித்துவிடாது மிக்க கவனமானத் தன்புகழ் மட்டும் பேசி வந்தது அயோக்கியத் தனத்தின் உச்சம். இலக்கியப் புரட்டு என்கிறேன் நான்.

தன்னுடைய "காலம்" இதழை 50 இதழ்கள் கொண்டு வந்தேன் என்று பெருமையாயும் பெரும் பாடாயும் சொல்லும் செல்வம் அவர்கள் அந்த இதழை ஏன் தொடங்கினார்? எவ்வாறு அதனைக் கொண்டு நடத்தினார்? அனைத்து மற்றய இதழ்களும் நின்று போக அது மட்டும் எவ்வாறு 50 இதழ்களைத் தாண்டியது? அந்த இதழில் என்ன விடயங்கள் பேசப்பட்டது? என்று பல்வேறு கேள்விகளை நாம் கேட்கத்தானே வேண்டும்.

நமது யுத்தகாலத்தில் என்ன வகையான சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன என்றும் அவற்றில் என்ன எழுதப்பட்டுக் கொண்டிருந்தன என்றும் கவனிப்பதுடன் காலம் என்ற செல்வத்தின் இதழில் என்ன வகையான எழுத்துக்கள் வெளிவந்து கொண்டிருந்தன என அதனைப் பக்கம் பக்கமாக நீங்கள் வாசிக்கத் தொடங்குவிர்களானால், அந்தப் பக்கங்கள் மலந் துடைத்து எறியவும் முடியாத பக்கங்கள் என்பதனை விளங்கிக் கொள்ள முடியும். ஈழத்து அல்லது புகலிட இலக்கியச் சூழலுக்கு எவ்விதத்திலும் அணுக்கமான பத்திரிகையாக யாரும் அதனைக் கொண்டாடுவதில்லை. அவருடன் தொங்கி அவர் வழியால் தமிழ் நாடு ஏறத் துடிப்பவர்கள் கொண்டாடும் சஞ்சிகை அது. நான் ஏற்கனவே சொன்னது போல் காலச்சுவடும் உயிமையும் கழித்து விட்ட ஆக்கங்களை அதிகமாக எடுத்துப் பிரசுரித்து வெளிவந்த சஞ்சிகை அது. அந்தப் சஞ்சிகை 30 வருடம் வந்தலென்ன, 50 இதழ் வந்தாலென்ன புகலிட இலக்கியத்தில் அதற்கு சம்பவமேயில்லை. அது எப்படி வரும் என்பதே அதிக இதழ்களுக்கு அவருக்கே தெரிந்திருக்காது. அது தமிழ்நாட்டுக்காரர்களின் குப்பைத் தொட்டி.

இது ஏன் குப்பபைத் தொட்டி என்று நான் சொல்கிறேன் என்பது இன்னும் பல பக்கங்களை எழுதக் கூடிய விடயம்.

ஆனால் செல்வம், சோபாசக்தி, தெய்வீகன் போன்றவர்கள் தமிழ் நாட்டு இலக்கிய உலகில் இவ்வாறு வேடம் தரித்து உலாவரமுடிகிறது என்றால், தமிழ்நாட்டு இலக்கியச் செயற்பாட்டாளர்களது முட்டாளத் தனமலல்லாது வேறொன்றுமில்லை என்ற உண்மையை மட்டும் சொல்லிக் கொண்டு இதனை முடிக்கிறேன்.

இந்த வகைத் தமிழ் நாட்டு "முட்டை போண்டா"க்களுக்கு சாராயப் போத்தல்களுடன் வெளிநாடு களிலிருந்து யார் வந்து எந்தப் பொய்யைச் சொன்னாலும் ஒரு சிறு கேள்வி கூட இல்லாது மவுனித்து மண்டியிட்டுப் பொறுத்துக் கொள்ளும் மனநிலையை மாற்றி அவர்களையும் மான ரோசமுள்ள மனிதர்களாகவும் முதலில் வாசித்துப் பகுத்தறிந்து அறியும் பக்குவம் வாய்த்தவர்களாகவும் மாற்றியமைத்திட என்ன வழி இருக்கிறது என்றும் நாங்கள்தான் நண்பர்களே ஆராய்ந்தறிய வேண்டும். அதுவரையும் இந்தவகைத் தற்குறிகளின் நெட்டூரத்தையும் அட்டூழியத்தையும் மெல்ல மெல்லத்தான் நாம் காடாத்த வேண்டும். இது ஒன்றும் இலகுவான விடயமல்ல.

ஆனாலும் காடாத்தி முடிக்கத்தான் வேண்டும். அது பெரும் உழைப்பினைக் கோரி நிற்கும் விடயம்.




# கொண்டல்

*2023 மாசி 20.*

இரண்டு வாரங்களுக்கு முன்னமே மாசிப்பனி மூசிப் பெய்யத் தொடங்கி விட்டிருந்தது.

கடந்த மாரிமழையும், வாடைக்காற்றும் வெறுங்கையை விரித்து உதறிக்காட்டிவிட்டு கமுக்கமாய்க் கடந்துபோய் விட்டது. இந்த மாசிப்பனிக் கடலாவது பஞ்ச பாதகமில்லாமல் கைதூக்கிவிடும் என்ற நம்பிக்கையைக் கைவிடாமல் தக்க வைத்திருக்கும் கப்பித்தான் இருதயநாதர் கயிற்றுக்கொடியில் கட்டிக்கிடந்த ஆறு பழைய வழிவலைகளையும் எடுத்து முற்றத்தில் விரித்துப்போட்டுச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார். மூப்படைந்த கண்கள் ஒளிமங்கிப்போனதால் வலைகளைச் செப்பனிடுவதில் அவருக்கு சற்று சிரமமாகத்தான் இருந்தது. ஆனாலும் அனுபவத்தில் பழுத்த அவரது கைவிரல்கள் கட்புலனின் வழிகாட்டல்களோ கட்டளைகளோ இல்லாமல் தம்பாட்டுக்கு வலைக் கயிறுகளைச் செப்பனிடுதலில் இயங்கிக்கொண்டிருந்தன.

இந்த சித்திரை இருபத்தெட்டு வந்தால் கப்பித்தான் இருதயநாதருக்கு எண்பத்திமூன்று வயது.

சங்குமுனைக் கரையோரக் கிராமத்தில் பதின்ம வயதில் கடலில் இறங்கிய தொழிலாளர்களில் இருதயநாதரும் ஒருவர்.

தீவகத்துக் கடற்பரப்பு முழுவதையும் உள்ளங்கையில் அள்ளிப் பருகும் திறன்போல் அனுபவங்களைக் கொண்டவர். இளவயதிலேயே தேக்குமரச்சிறகு கட்டித் தோணியும், மீன்கள் ஏற்ற இறக்கவென ஒரு சிறு மரவள்ளமும் சொந்தமாக வைத்திருந்தார். முப்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கட்டிமேய்த்துத் தொழில் செய்த பெருங் கடலோடி. சங்குமுனைக் கிராமத்தில் மட்டுமல்லாது அயலட்டைக் கிராமங்களைப் பொறுத்தவரையும் பெரு மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய தொழிலாளியாக, சம்மாட்டியாக, கூத்துக் கலைஞனாக விளங்கினார்.

தமயந்தி

அந்தக்காலத்தில் அண்ணாவி அந்தோனி கூத்துகளில் வரும் கரைத்துறைக் கப்பித்தான், கப்பல்க் கப்பித்தான் பாத்திரம் என்றால், அது இருதயநாதர்தான் என்று தீவகம் பூராவும் கூத்து மேடைகளில் கண்டுணர்ந்த சங்கதி. அதனால்த்தான் அவருடைய பெயரோடு “கப்பித்தான்” என்ற இணைப்பெயரும் சேர்ந்து கொண்டது.

**

*1995.*

“மேய்ப்பர்கள்தம் இடுப்பிலும் தோளிலுமாக சுமந்திருந்த மந்திரக்கோல்களின் பொருட்டு அச்சங் கொண்டிருந்த மந்தைகள் அவர்களது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து மாமிசமாகப் பின் தொடரலாயின.

> *“எங்கயண தொட்டப்பு...., இப்ப அமகாசக் கடலுமில்ல, அட்டமிப் பாடுமில்ல.... களங்கள் முழுக்க அட்டைப்பட்டியளப் போட்டு அடைச்சு வச்சிருக்கிறாங்கள் வம்பில புறந்தவங்கள்.... வீணாக வருகுது வாயில....”*
>
> *“அப்பிடியெல்லாஞ் சொல்லாத மோனே....! கடலும் தொழிலும் தெரியாதது அதுகளின்ர குற்றமில்லக் கண்டியோ.... இருவது இருவத்தஞ்சு வருசமாப் பூட்டிக்கிடந்த கடல்...., தொழிலறியாச் சந்ததிதானே இப்ப இருக்குதுகள்.... ஆரோ காசு குடுக்கிறாங்களெண்டு கை நீட்டி வாங்கிப்போட்டுதுகள்..... தங்களால ஏண்டியதத்தானே செய்யுங்கள்...?*

மீறிப் பேசவோ, மந்தைவிட்டு அகலவோ வேறேதும் முகாந்திரமில்லை. தப்பிப் பிழைத்தலுக்கு தவிர்க்க முடியாதாயிருந்தது மவுனித்தலெனும் சித்தம் மட்டுமே”

யாழ்ப்பாணம் வெளியேறிக் கொண்டிருந்தது.

தீவகக் கிராமங்களும்தான். அதுபோலவே சங்குமுனைக் கிராமமும் வன்னி நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது. சங்குமுனையை விட்டு சனங்கள் போனபின்னாலும் ஐந்தாறு குடும்பங்கள் மட்டும் ஊரைவிட்டுப் போகவில்லை. சுட்டாலும் செத்தாலும் இந்த மண்ணிலதான் என வெளியேறாமலிருந்த ஐந்தாறு குடும்பங்களில் இருதயநாதரும் மகிறம்மாவும்தான்.

அன்றிரவு தென்திசையிலிருந்து கரை வந்தேறிய கடற்படை சுட்டுக்கொண்டே ஊருக்குள் வந்தது. ஊரைவிட்டு வெளியேறாமலிருந்த ஐந்தாறு குடும்பங்களும் ஆலயத்துக்குள் தஞ்சமடைத்திருந்தனர். இரவிரவாய் ஊருக்குள் கேட்டுக்கொண்டிருந்த வெடிச்சத்தங்கள் அதிகாலையில் அமைதியானது.

கப்பித்தான் ஆலயத்தைவிட்டு மெல்ல மெல்ல தெருவில் இறங்கினார். படைகள் போய்விட்டன. வீட்டுப்பக்கம் சென்று பார்த்தார். அம்மி பொழிந்ததுபோல் வீட்டுச் சுவரெல்லாம் குண்டுகள் கொத்தி வைத்திருந்தன. கடற்கரைக்குச் சென்று பார்த்தார். சிறகுகட்டித்தோணி சிதறிக் கிடந்தது. மரவள்ளம் எந்தவித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை.

2009. மீண்டும் சங்குமுனைக் கிராமம் சனங்களால் நிரம்பப்பெற்றது. பதின்மச் சிறுசுகளாகவும், இளசுகளாகவும் வெளியேறியவர்கள் குடும்பங்களாகவும், குழந்தை குட்டிகளோடும் மீளவந்து சேர்ந்தார்கள்.

சங்குமுனைக்குள் மீண்டும் கூத்துச் சத்தங்கள் ஒலிக்கத் தொடங்கின. வேலிகளையே கண்டிராத சங்குமுனை வீடுவளவுகள் மதில்களால் சுற்றிக் கட்டப்பட்டன. மரவள்ளங்களும், சிறுதோணிகளும் இயந்திரப் படகுகளாக கரையெங்கும் அணிவகுத்தன.

இருதயநாதரிடமோ அந்தச்சிறு தோணி மட்டுமே. அதுவே அவருக்குப் போதுமானதாகவும் இருந்தது.

**

“என்ன தொட்டப்பு, வழிவலை செம்மயாக்கிறாய்.... ராவைக்குப் பாடு போகப்போறியோணை...? ”

கேட்டுக்கொண்டே முற்றத்துப் பூவரசோடு சைக்கிளைச் சாய்த்து வைத்துவிட்டு மண்ணெண்ணை பரலோடு இறங்கி வந்தான் வெங்கிலாசு.

“ஓமடாப்பன், இண்டைக்கு மாசி இருவது அமகாச இருட்டெல்லோ...., அதுதான் இந்த களத்தால ஒருபாடு போட்டுப் பாப்பமெண்டு நினச்சன்.” ஆறாவது வலையைச் செப்பனிட்டபடி வெங்கிலாசுக்குப் பதில் சொன்னார் கப்பித்தான்.

”தொட்டப்பு இதில பத்து லீற்றர் எண்ணை இருக்கு. உன்ர தோணிப் பேமிற்றுக்குத் இந்த மாசம் தரவேண்டிய இன்னும் இருவது லீற்றர் அடுத்த கிழமதான் வருமெண்டு தலைவர் சொன்னவர். காசு குடுத்திற்றன்... தொழில் வாய்க்கேக்க ஆறுதலாத் தந்தால் போதுமணை”

“எனக்கெதுக்கு ராசா எண்ணைய...? என்னட்டயென்ன மோட்டர் கீட்டரா இருக்கு.... நீ எடுத்து உன்ர தொழிலுக்குக் கொண்டு போவன் மோனே”

“தொட்டப்பு, சும்மாயிரணை. எண்ண கிடைக்காமல் அடிபடுகிறாங்கள் நீ என்னடாண்டால் வேணாமெண்டிறாய். விளக்கெரிக்க அடுப்புமூடயெண்டாலும் உதவுமெல்லோ... இருட்டுக்கயா கிடக்கப்போறியள் ரெண்டுபேரும்” சொல்லியபடியே எண்ணைப்பரலை வீட்டுவிறாந்தைக்குள் கொண்டுபோய் வைத்தான் வெங்கிலாசு.

”ம்..... அதுகுஞ் சரிதான்”

”எந்தக் கடலண தொட்டப்பு பாடு போடப்போறாய்?”

“இதில பெரியபுட்டிக் குடாவுக்குள்ள போகலாமெண்டிருக்கிறன். இண்டைக்கு அமகாசஅவதிக்கு ஏதாவது ஏறுந்தானே...?”

“எங்கயண தொட்டப்பு...., இப்ப அமகாசக் கடலுமில்ல, அட்டமிப் பாடுமில்ல.... களங்கள் முழுக்க அட்டைப்பட்டியளப் போட்டு அடைச்சு வச்சிருக்கிறாங்கள் வம்பில புறந்தவங்கள்.... வீணாக வருகுது வாயில....”

“அப்பிடியெல்லாஞ் சொல்லாத மோனே....! கடலும் தொழிலும் தெரியாதது அதுகளின்ர குற்றமில்லக் கண்டியோ.... இருவது இருவத்தஞ்சு வருசமாப் பூட்டிக்கிடந்த கடல்...., தொழிலறியாச் சந்ததிதானே இப்ப இருக்குதுகள்.... ஆரோ காசு குடுக்கிறாங்களெண்டு கை நீட்டி வாங்கிப்போட்டுதுகள்..... தங்களால ஏண்டியதத்தானே செய்யுங்கள்...?”

“என்ன தொட்டப்பு நீயே இப்பிடிச் சொல்லுறாய்....?”

“வேறயென்னத்தச் சொல்ல...., நெஞ்சுக்குள்ள ரெத்தக்கண்ணீர்தான் விடேலும்.... நீயும் நானும் சொன்னாப்போல கேட்டிடவா போறாங்கள். விடு மோனே...”

“அப்ப இது எங்கபோய் முடியப்போகுது தொட்டப்பு...?”

“எல்லாம் முடிஞ்சுபோம். வெறுங் கடல்லயென்ன உப்பா

அள்ளேலும்... ஊரோட எல்லாரும் திரும்ப வன்னிப்பக்கம் எதாவது கூலிக்குப் போவேண்டியதுதான்..."

"தொட்டப்பு.... இப்பிடி வேண்டா வெறுப்பாக் கதைக்காதேயணை. இதுக்கேதாவது செய்ய வேணுமணை. எல்லாந் தெரிஞ்சுகொண்டும் நீ இப்பிடிக் கதைக்கிறது சரியில்லத் தொட்டப்பு..."

"மோனே.... இதொரு இனஅழிப்பு"

"போராடுவந் தொட்டப்பு..."

"சரி, சட்டெண்டு ஓடிப்போய்ப் போராடு நீ"

***

இன்னுங் கொஞ்ச நேரத்தில் பொழுது மேற்குக் கடலுக்குள் முழுவதுமாக இறங்கிவிடும். காற்றமர்ந்து, அலைகளடங்கி கடல் மிகவும் அமைதியாகக் கிடந்தது. சிறிய மீன்குஞ்சு துள்ளினாலும் டொலக் டொலக் என்று கடல் பெரிதாகச் சத்தமிட்டது.

பல்லதீவின் வடகிழக்கில் பெரியபிட்டி. அதன் குடாக்கடலில்தான் கப்பித்தான் இருதயநாதரின் இன்றைய பாடு.

செக்கல்வானம் மெல்ல மெல்ல இருளத் தொடங்கவும் வலைகளைக் கடலில் இறக்கத் தொடங்கினார் கப்பித்தான். கடலில் மீன்களின் நட்மாட்டத்தை அவதானித்த கப்பித்தானின் கண்கள் பெருமிதத்தில் சிரித்தன. தனது கணிப்புத் தவறவில்லை என்பதும், கடலனுபவங்கள் மூப்பின் நிமித்தம் இன்னமும் தனது நினைவுகளிலிருந்து அகலவில்லை என்ற மிதப்பும் அவரை அணியத்தில் நெஞ்சு நிமிர்த்தி நிற்க வைத்தது.

வலைகள் கடலில் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதே ஆங்காங்கே மீன்கள் வலையில் சிக்கி கடலின் மேற்தளத்தில் அலையடிக்கும் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

ஒன்று இரண்டு மூன்று என சில நிமிடங்களிலேயே ஆறு வலைகளையும் கடலில் இறக்கிவிட்டு, மடிப்பெட்டியில் சுற்றி வைத்திருந்த சுருட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

சிறிது நேரத்தில் வடக்கிலிருந்து இரண்டு இயந்திரப் படகுகள் வெளிச்சம் பாய்ச்சியபடி கப்பித்தானின் தோணியை நோக்கி வேகமாக வந்தன. கடற்படையாக இருக்குமோ என்று ஒருகணம் எண்ணி அச்சப்பட்டார். இருக்காது. இப்போ அச்சப்பட என்ன யுத்தமா நடக்கிறது....? வந்தால் வரட்டும் ஏதாவது கஞ்சாக் கடத்தல்காரரை கண்காணிப்பதாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டார்.

இரண்டு படகுகளும் கப்பித்தானின் தோணியின் இரு புறங்களிலும் வந்து அணைந்து கொண்டன. இரண்டு படகுகளிலுமிருந்து பெரிய டோர்ச் லைட்டுக்களின் வெளிச்சத்தைக் கப்பித்தானின் முகத்துக்கு நேராகப் பாய்ச்சினர். கண்கள் கூச்சம் தாங்கமுடியாமல் இரண்டு கைகளாலும் முகத்தை மறைத்துக் கொண்டார்.

"ஆர்ரா பு..... இந்தக் கடலுக்க வரச்சொன்னது.....?"

படகில் வந்தவர்களில் ஒருத்தன் பெரிய சத்தமாகக் கத்தினான். இன்னொருத்தன் கப்பித்தானின் தோணியில் இரும்புக்கம்பியால் ஓங்கி அடித்தான். தோணி உடைந்து விடுமாப்போல சத்தத்துடன் சிலகணம் அதிர்ந்தது.

"இந்தப் பக்கம் வரப்படாதெண்டு தெரியாதாடா கிழட்டுப் பு....?" கேட்டபடியே மீண்டும் அவன் இரும்புக் கம்பியால் தோணியில் அடித்தான்.

இது கடற்படையில்லை என்பது கப்பித்தானுக்கு விளங்கிவிட்டது. சங்குமுனையைச் சேர்ந்தவர்கள்தான் சந்தேகமே இல்லை. அதுவும் எல்லாமே இனபந்துக்களின் இளைய தலைமுறைகள்தான்.

ஒவ்வொரு படகிலும் நான்கு நான்கு பேர் இருந்தனர். அவர்களோடு கூடவே போதையும் இருந்தது. அனைவரும் இளவட்டங்கள்.

"தம்பிமாரே..., என்ர கடல்ல தொழில்ச் செய்யாமல் வேறயெங்க ராசா நான் போறது...?"

கப்பித்தான் சொல்லி முடிப்பதற்குள் வலதுபக்க இயந்திரப்படகின் தளத்தில் நின்றவன் கப்பித்தானின் நெஞ்சில் காலால் எட்டி உதைத்தான்.

"உன்ர கடலோ...., கிழப்பிப்பார்ரா கிழடா கவட்டுக்க கிடக்கும் உன்ர கடல். இப்ப இந்தக் கடலெல்லாம் அட்டப்பட்டிக்கு லைசன்ஸ் எடுத்து வச்சிருக்கிறம். இந்தப் பக்கம் ஒருத்தரும் இனிமேல்ப்பட்டு வரப்பிடாது தெரியுமா?" இடதுபக்கப் படகில் நின்ற ஒரு மெல்லிய சுள்ளான் கீச்சுக்குரலில் சொன்னான்.

"இனிமேல்ப்பட்டு இந்தப் பக்கம் வந்தியெண்டால் கண்ணாவுக்குள வெட்டித்தாழ்ப்பம் கிழடா" இரும்புக்கம்பியோடு நின்றவன் கத்தினான்.

இரண்டு படகுகளும் கப்பித்தானின் வலைகள் கிடந்த பக்கம் போயின. வலைகளை இழுத்து கத்திகள் கொண்டு மாறிமாறி அறுத்தெறிந்தனர். அவர்கள் அறுத்தெறியும் வலைகளில் வெள்ளிக்காசுகள்போல் மீன்கள் பளிச்சிட்டதை அவர்கள் பாய்ச்சிய வெளிச்சத்தில் கண்டு கலங்கிப்போனார் கப்பித்தான் இருதயநாதர்.

****

"தொட்டப்பு.... பொலிசில போய் இன்றி போடுவம் எழும்பி வாணை...." வெங்கிலாசு திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டேயிருந்தான். கப்பித்தானோ எதையும் காதில் வாங்காதவராய் சர்வாங்கமும் இறுகிப்போய் முற்றத்தில் இருந்தார்.

"அந்தப் பூலுவத்துக்குப் புறந்தவங்கள் அட்டப்பட்டிக் காவலெண்டு

"உன்ர கடலோ...., கிழப்பிப்பார்ரா கிழடா கவட்டுக்க கிடக்கும் உன்ர கடல். இப்ப இந்தக் கடலெல்லாம் அட்டப்பட்டிக்கு லைசன்ஸ் எடுத்து வச்சிருக்கிறம். இந்தப் பக்கம் ஒருத்தரும் இனிமேல்ப்பட்டு வரப்பிடாது தெரியுமா?" இடதுபக்கப் படகில் நின்ற ஒரு மெல்லிய சுள்ளான் கீச்சுக்குரலில் சொன்னான்.
"இனிமேல்பட்டு இந்தப் பக்கம் வந்தியெண்டால் கண்ணாவுக்குள வெட்டித்தாழ்ப்பம் கிழடா" இரும்புக்கம்பியோடு நின்றவன் கத்தினான்.

கடல்ல அட்டாளக்கொட்டில் போட்டு நாளாந்தம் தண்ணியும் கஞ்சாவுமா அடிச்சுப்போட்டுக் கிடக்கிறாங்கள் தொட்டப்பு. பாவப்பட சனங்களின்ர களங்கண்டிப் பட்டியளையெல்லாம் வழிச்சுத்துடச்சு காஸ்சிலிண்டர் வச்சு காச்சித் தின்னாறாங்கள் தொட்டப்பு. இவங்களுக்கொரு பாடம் படிப்பிப்பம் எழும்பணை....“

“வேணாம் ராசா விடு. சுத்திச்சுத்திப் பாத்தா எல்லாஞ் சொந்தங்கள்தானேயப்பு. விடடா”

“நீ சரிவர மாட்டாயணை.....” சினந்துகொண்டபடியே வெங்கிலாசு சைக்கிளை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

“கப்பித்தான் அப்படியே இறுகிப்போனவராய் அசைவற்று முற்றத்திலேயே இருந்தார். தனது நெஞ்சில் அந்த இளைஞன் காலால் உதைத்ததுகூட அவருக்கு வலிக்கவில்லை ஆனால் இவர்கள் கடலின் கருமடியை உதைத்தும், கீறிக் கிழித்தும் செய்யும் அட்டூழியங்கள்தான் பெருவலியெடுத்தது.

அகலத் திறந்துகிடந்த வாசற்கதவு வழியாக நேற்று வெங்கிலாசு கொண்டுவந்து விறாந்தையில் வைத்த மண்ணெண்ணை பரல் கப்பித்தானின் கண்களில் பட்டது. ஏதோ எண்ணங் கொண்டவராக எழுந்து கோடிப்புறம் சென்றவர் மடிவலைக்குச் சாயமிடும் அண்டாப் பானையை எடுத்து முற்றத்தில் கொண்டுவந்து வைத்தார். வீட்டு விறாந்தையில் இருந்த மண்ணெண்ணை பரலை எடுத்துவந்து மூடியைத் திறந்து அண்டாவில் முழுவதையும் ஊற்றினார். பின்வளவில் சிதறிக்கிடந்த சிறகுகட்டித் தோணியின் பலகைத்துண்டங்களை எடுத்துவந்து அண்டாவுக்குள் போட்டார். எண்ணையில் மிதந்து ஊறியது சிறகுகட்டித் துண்டங்கள்.

சாமத்திற்கு சற்றுக் கிட்டவாக விழித்தபடி விறாந்தையில் உட்காந்திருந்த கப்பித்தானுக்கு மெல்லியதாக வாயூறத் தொடங்கியது. குதிக்கால் வியர்த்துக் கசிந்தது. நம்புதற்கு முடியாமலிருந்தது அவருக்கு. இப்போ எப்படிக் கொண்டல்காற்றும் மழையும் சேர்ந்து வரமுடியும் என்ற குழப்பம். மெல்ல எழுந்து வெளியே சென்று வானத்தை அண்ணார்ந்து பார்த்தார். ஏற்கனவே அமாவாசை கழிந்த இரண்டாம் நாளாகையால் இருளான வானம் இன்னும் கருமை கட்டிக்கிடந்தது. கிழக்குவானத்தில் கருமுகில்கள் கும்பல்கும்பலாக அடைத்து நின்றன. கப்பித்தானுக்கு வாயூறல் அதிகரித்தது. குதிக்கால்களிரண்டும் கசிந்து முற்றிலும் ஈரமாகிவிட்டன. ஆமாம் இன்னும் சற்று நேரத்தில் கொண்டலிடியும் பெருமழையும் வரப்போவதை உணர்ந்து கொண்டார். அத்தோடு அமாவாசை அவதியின் வெள்ளப்பெருக்கும் அதிகரிப்பதால் கடல் கொந்தளிக்கப் பார்க்குமே என எண்ணிக் கொண்டதோடு, யாராவது கடலுக்குப் போயிருந்தால் என்னவாகும் என்ற அச்சத்தினாலும் உடலம் நடுங்கத் தொடங்கினார்.

சில கணங்கள்தான் கழிந்திருக்கும். வலிந்த சண்டைக்கு எடுக்கப்பட்ட திக்விஜயப் படையணிபோல் கொண்டல்காற்றும், கொடிமின்னலும், இடிமுழக்கமும் எழுந்ததோடு பெருமழையும் கொட்டத் தொடங்கியது. வீட்டுக்கூரையைப் பிய்த்தெறிவதுபோல் உலுப்பியெடுத்தது கொண்டல்.

*****

இரவு அடித்துப் பெய்த பெருமழையின் வெள்ளம் ஓடிச்சென்று குளம் குட்டைகள், கடலைச் சேர்வதற்கான வழித்தடங்களற்று மதில்களால் சூழப்பட்ட சங்குமுனைக் கிராமத்தையே சூழ்ந்து நின்றது. விடிந்தும் விடியாததுமாய் சங்குமுனைச் சனங்கள் பூராவும் கடற்கரையை நோக்கி வெள்ளத்துக்குள்ளால் ஓடிக் கொண்டிருந்தார்கள். பொலிஸ் வாகனம் உட்பட பல வாகனங்களும் கடற்கரையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன.

அவசர அவசரமாக வெங்கிலாஸ் சைக்கிள் இல்லாமல், சாறத்தை நெஞ்சுவரை தூக்கிக் கட்டிக்கொண்டு, ஜட்டியோடு வெள்ளத்தில் உருண்டோடி வந்தான்.

“தொட்டப்பு! எணேய் தொட்டப்பு..... அட்டைப்பட்டியெல்லாம் புசலில அள்ளுண்டு போச்சுதாம். ஒரு தடிகூட மிச்சமில்லையாம். அட்டைக்கொட்டிலுக்குமேல மின்னலிடி விழுந்ததாம் எண்டும், சமையலுக்கு அவங்கள் வச்சிருந்த காஸ்சிலிண்டர் வெடிச்சதாமெண்டும் ஊரெல்லாம் கதையடிபடுகுது. என்ன ஏதெண்டு சரியா ஒரு விளப்பமுமில்லத் தொட்டப்பு.... பாவமணை பொடியள்... எல்லாரும் இளந்தாரிப் பொடியங்கள். வாழ்ற வயசு..... துறைக்குப்போய் என்னெண்டு பாத்திற்று வாறனணை....” சொல்லிவிட்டு வெங்கிலாஸ் சாறத்தைத் தூக்கித் தலையில் கட்டிக்கொண்டு வெள்ளத்துக்குள்ளால் கடற்கரையை நோக்கி ஓடிச் சென்றான்.

இருதயநாதர் வாசற்படியில் நின்றபடியே தாழ்வாரத்தைப் பார்த்தார். சாயப்பானை பத்து லீட்டர் மண்ணெண்ணையோடும் சிறகுகட்டிப் பலகைத் துண்டங்களோடும் மழைவெள்ளத்தில் மிதந்துகொண்டு கிடந்தது.

“போய்ச்சேருகிற காலத்தில ஏன்தான் இவனுக்கு இப்பிடிக்கொந்த பாவகாரியமெண்டு நினைச்சியா ஆழியாச்சி...?”

கடலை நினைந்து தனக்குள் உறுத்தலோடு உருகிக்கொண்டார் கப்பித்தான் இருதயநாதர்.

மெல்ல மெல்ல வடக்கிலிருந்து ஊர்ந்துவந்த வாடைக்காற்று வீட்டு வாசற்படியில் நின்றிருந்த கப்பித்தான் இருதயநாதரின் கன்னங்களைத் தடவியபடி அதுவும் சங்குமுனைக் கடற்கரையை நோக்கிப் பயணித்தது.



**Facebook: Thamayanthi Simon**

# உருட்டும் புரட்டும்

# பொங்கு தமிழ் மரபுரிமை மாதம்



ஜோர்ஜ் இ.

ஒரு சமூகம் முட்டாள்களைக் கொண்டதாக இருந்தால், அதன் தலைவர்களாக அயோக்கியர்கள் தான் வர முடியும். அந்த அயோக்கியர்கள் அந்த முட்டாள் சமூகம் கேட்க விரும்பும் பொய்களைச் சொல்வதன் மூலமாகத் தான் அந்தத் தலைமையைப் பெறுகிறார்கள். தக்க வைத்துக் கொள்கிறார்கள்.

தன்னுடைய இனத்தையே ஏமாற்றிப் பிழைப்பதை வாழ்வாகக் கொண்டிருப்போர் யாழ்ப்பாணித் தமிழினத்திலேயே அதிகம் உள்ளார்கள். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மூத்த தமிழினம்' போன்ற உருட்டுக்களை உண்மை என்று நம்பி, போலித் தற்புகழ்ச்சிகளில் மயங்குகின்ற இனத்தை சரியாகப் புரிந்து கொண்டதால் அந்த அயோக்கியர்கள் இந்த சமூகத்தை நன்றாகவே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தை பிறந்தால் இங்கே ஒரே கோலாகலம் தான்.

தமிழர் மரபுரிமை மாதம் என்று யாழ்ப்பாணிகள் எல்லாம் ஒரே பொங்கு தமிழ்.

கடும் பனி கொட்டும் குளிர் காலத்தில், சூரியனே வெளியில் தெரியாத காலத்தில், சூரியனுக்கு பொங்கல் வைக்கும் மணியான ஐடியாவைக் கொடுத்த தமிழனுக்கு மாமனிதன் பட்டம் வழங்கிக் கௌரவிக்க வேண்டியது புலன்பெயர் மேதகுக்களின் தலையாய கடமை.

தமிழரின் புத்தாண்டு என்று பனி மறையும் சித்திரை மாதத்தில் கொண்டாடியிருக்கலாம். மே மாதத்தில் என்றால் இன அழிப்பையும், கார்த்திகை மாதத்தில் என்றால் மாவீரர் மாதத்தையும் கனடா அங்கீகரித்திருக்கிறது என்று அவிழ்த்தே விட்டிருக்கலாம்.

இவ்வாறான அறிவுக் கொழுந்துகள் தான் எங்கள் சமூகத்தில் தலைவர்களாய் வந்து வாய்த்திருக்கிறார்கள் என்பது குறித்து யாழ்ப்பாணிகள் பெருமைப்பட வேண்டும்.

Heritage என்பதை மரபுரிமை என்று உரிமையைச் சம்பந்தப்படுத்தியதன் பின்னணி எதுவாக இருக்கும்?

Heritage என்பது Inheritance என்ற சொல்லிலிருந்து பிறந்தது. பூர்வீகச் சொத்து. முதுசொம். கொள்ளுப்பாட்டன் ஆட்டையைப் போட்ட முடிக்குரிய காணிகள் அவன் பரம்பரைக்குத் தானே கிடைக்கும். கிடைக்க வேண்டும்.

பாரம்பரியமாக வழிவழி வந்த பண்பாடுகளும் மரபுகளும். அதனோடு சேர்ந்து வந்த கலைகளும் இலக்கியங்களும்.

இதைத் தான் எங்கள் கலாசாரப் பாரம்பரியங்கள் என்கிறோம்.

இதில் உரிமை என்று இவர்கள் போட்டுக் கொண்டது, ஏதோ போராட்டம் நடத்தி வென்றெடுத்தது என்ற மாயையை உருவாக்கத் தான்.

வழமை போல, ஈழம் கிடைத்த கணக்கில் ரமில்ஸ் எல்லாம் இந்த மரபுரிமை மாதத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இது கனடாவில் மட்டுமல்லாமல், இப்போது லண்டனிலும் பெரும் கோலாகலமாக.

பஸ்களிலும் பஸ் தரிப்புகளிலும் விளம்பரம் என, பொங்குதமிழ் ஓசை உலகெமெல்லாம் பரவும் பெருமை கண்டு புல்லரித்த ரமில்ஸ் அதை பேஸ்புக்கில் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

மற்ற நேரங்களில் எல்லாம் 'நான்றி, வானக்கம்' கனடிய அரசியல்வாதிகள் எல்லாம் வேட்டி கட்டி வந்து வாழ்த்துச் சொல்லும் போதெல்லாம், ரமில் பிரமுகர்ஸ் எல்லாம் கோட் சூட் சகிதம் காட்சியளிப்பார்கள்.

இந்த மரபுரிமை மாதத்தில் மட்டும் ஒரு சேஞ்சுக்காக ரமில்ஸ் எல்லாம் பட்டுவேட்டிகளுடனும், கனடிய அரசியல்வாதிகள் எல்லாம் கோட் சூட்டுடனும் காட்சியளிக்கிறார்கள்.

கோட், சூட் போட்ட கனடிய அரசியல்வாதிகளுக்கு தமிழர் பாரம்பரியமான பொன்னாடை

போர்த்தலும் தவறாமல் நடக்கிறது. மாலை போடும் பாரம்பரியம் தற்போது பொன்னாடையில் வந்து நிற்கிறது. அவர்கள் இந்த பொன்னாடைகளை வைத்து என்ன செய்யக் கூடும்?

சுத்திச் சுத்தி சுப்பற்ரை கொல்லை என்பது போல, இந்த தமிழ் மரபுரிமை மாதத்தின் பின்னாலும் முழுக்க முழுக்க புலிவால் யாழ்ப்பாணிகள் மட்டுமே இருக்கிறார்கள். விளம்பரங்களில் கார்த்திகைப்பூ இருக்கும். இவர்களின் கற்பனைத் தமிழீழ வரைபடம் இருக்கும்.

இதில் இங்கு வாழும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் யாரும் சம்பந்தப்பட்டதில்லை. அவர்கள் இதோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதுமில்லை. அதற்கு யாழ்ப்பாணிகள் விடவும் மாட்டார்கள்.

இப்படி இது முற்றுமுழுக்க புலிவால் யாழ்ப்பாணிகளிற்கானது தான். யாழ்ப்பாணிகள் மட்டுமே இதற்கு உரிமை கோர முடியும்.

புலிகள் அழிந்து போன பின்னால், புலிகளை வைத்துப் பிழைப்பு நடத்தியவர்களும், மிரட்டிப் பிழைத்தவர்களும் தங்கள் பிழைப்பைத் தொடர வகுத்துக் கொண்ட வழிகளில் ஒன்று தான் இந்த கனடியன் ரமில்ஸை குஷிப்படுத்தும் தமிழர் பெருமை முயற்சிகள்.

இன அழிப்பு என்ற வெள்ளையர்களின் அங்கீகாரம், மகிந்த




கார்த்திகைப்பூத் தமிழீழம்

குடும்பத்தைக் கழுவேற்றும் இன அழிப்பு விசாரணை என்ற கனவுகளில் இருக்கும் யாழ்ப்பாணிகளைச் சுத்த அதே கூட்டம் புதிய அஜெண்டாவுடன் கிளம்பியிருக்கிறது.

இவர்களில் கனடிய அரசியல் கனவுகளோடு இருப்பவர்கள் அதிகம். இவர்கள் இந்த முட்டாள் தமிழர்களை தாங்கள் தமிழர்களுக்கான உரிமைகளைப் போராடிப் பெறுவதாகக் கதை சொல்லித் தான் வாக்குக் கேட்கிறார்கள்.

கறுப்புத் தலைகளைக் கண்டால், அந்தப் பக்கம் சுப்பர் மார்க்கட் வைக்கலாம் என்று நம்புகிற தமிழர்கள் மாதிரி, கறுப்புத் தலைகளைக் கண்டால் அவர்களின் வாக்குகளை நம்பி, தேர்தலில் வெல்லலாம் என்ற கனவில் இவர்கள் உள்ளார்கள்.

தமிழர்கள் அதிகமாக உள்ள, (பெரும்பான்மையாக உள்ள அல்ல!) பகுதிகளில் மட்டுமே இவர்கள் தேர்தலில் நிற்பதன் இரகசியம் இது தான். வழமை போல, இந்த இளிச்சவாய்த் தமிழர்களின் வாக்குகளை நம்பி, பல தமிழர்கள் தங்களுக்குள் போட்டி போட்டு, இருக்கிற அதே கொஞ்ச வாக்குகளைப் பிரித்துக் கொள்வது தான் இங்கே அதிகம்.

ஈழத்தைக் கனடிய பாராளுமன்றங்களில் வாங்கித் தருவார்கள் என்று நம்பி தெரிவு செய்கின்ற அதே நபர்களை, தாங்களே கொஞ்ச நாளில் துரோகிகள் என்று திட்டித் திரிவதும், அடுத்த முறை அவர்களுக்கு எதிராகவே வேலை செய்யும் அளவுக்குமான யோக்கியர்கள் இந்த ரமில்ஸ்.

உலகின் முதல் தமிழ் பேசும் வெளிநாட்டு யாழ்ப்பாணி என்று கள்ளவாக்குப் போட்டு, கனடியப் பாராளுமன்றத்தில் ஈழம் எடுக்கத் தெரிவு செய்த பெண்ணை அடுத்த முறை துரோகியாக்கியதும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரின் வேட்புப் பிரசார பதாகைகளை வெட்டி வீசியதும் இந்த யாழ்ப்பாணிகள் வந்து குவிந்த, பாருக்குள்ளே நல்ல நாடான கனடாவில் தான்!

புலிகளுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று மறுத்து அறிக்கை விட்ட மாகாண சபை உறுப்பினரை துரோகியாக்கி, அவர் இனஅழிப்பு முத்திரை வாங்கிக் கொடுத்தார் என்று தற்போது தூக்கிக் கொண்டாடும் சமூகம் இது!

இந்த இனத்தின் லட்சணம் இதுதான்.

யாழ்ப்பாணித் தமிழ் அரசியலில்

சுத்திச் சுத்தி சுப்பற்ரை கொல்லை என்பது போல, இந்த தமிழ் மரபுரிமை மாதத்தின் பின்னாலும் முழுக்க முழுக்க புலிவால் யாழ்ப்பாணிகள் மட்டுமே இருக்கிறார்கள். விளம்பரங்களில் கார்த்திகைப்பூ இருக்கும். இவர்களின் கற்பனைத் தமிழீழ வரைபடம் இருக்கும்.

இதில் இங்கு வாழும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் யாரும் சம்பந்தப்பட்டதில்லை. அவர்கள் இதோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதுமில்லை. அதற்கு யாழ்ப்பாணிகள் விடவும் மாட்டார்கள்.

இப்படி இது முற்றுமுழுக்க புலிவால் யாழ்ப்பாணிகளிற்கானது தான். யாழ்ப்பாணிகள் மட்டுமே இதற்கு உரிமை கோர முடியும்.

இதெல்லாம் சகஜம்பா!

இன அழிப்பு அங்கீகாரம், மகிந்த குடும்பம் நாட்டிற்குள் வரத் தடை என்றெல்லாம் கனடிய அரச தரப்பினரை முடிவு எடுக்க வைத்ததற்கான பெருமை தங்களுக்கே உரியது என்று ஏமாற்றி, வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சியில் தான் இந்த தமிழ் அரசியல்வாதிகள் உள்ளனர்.

இப்படியாக புலிகளின் கூட்டங்களில் நெஞ்சில் கை வைத்துச் சத்தியப்பிரமாண உரை நிகழ்த்தி புலி வேசம் போட்ட ஒருவர், தனது அரசியல் கனவுகளுக்காக இப்படி ஒரு மாதத்தைக் கொண்டு வர முயற்சிக்கிறார்.

கனடிய அரசியல்வாதிகள் தற்போது வந்திறங்கும் வந்தேறு குடிகளின் வாக்குகள் தங்கள் வெற்றியை நிர்ணயிக்கும் என்பதால், அவர்களைத் தாஜா பண்ண எல்லா நடவடிக்கைகளும் எடுக்கிறார்கள். இவர்களோடு ஒட்டிக் கொள்ளும் கோட் சூட் போட்ட கனடிய பிரமுகர்ஸ் இவர்களை



வேட்டி, சேலை உடுத்தி ஊர்கோலம் கொண்டு வரும்போது, அவர்களும் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுத்த கணக்கில் இவ்வாறான அறிவிப்புகளுக்கு உரிமை கோருவார்கள்.

இதெல்லாம் இவர்களைப் பயன்படுத்தி தாங்கள் அதிகாரத்தில் நிலை பெறுவதற்கானது தான். அதை விட, அவர்களோடு ஒட்டிக் கொண்ட சகல பிரமுகர்களும் ஒன்றில் தங்கள் அரசியல் கனவுகளோடோ, அதன் மூலம் பதவிகள் பெறுவதான கனவுகளோடோ சுயலாபம் கருதி இருப்பவர்கள் தான்.

இவர்கள் மூலமாக தங்கள் ஊடகங்களுக்கு விளம்பரப் பணம் கிடைக்கும் என்று நம்பும் ஊடகவியலாளர்களும், கிடைக்கும் சில்லறைகளுக்காக கொஞ்சம் அதிகமாகவே குரைத்து ஓடி வந்து முட்டுக் கொடுக்கும் அல்லக்கைகளும் இவர்களை விஐபி பிரமுகர்களாகப் புகழ்ந்தேத்தி, இந்த யாழ்ப்பாணிகளுக்கு உருட்டி விற்றுக்கொண்டே இருப்பார்கள்.

இவர்கள் உருட்டும் மகா உருட்டு எது என்றால், இந்த மரபுரிமை மாதம் என்பது தமிழர்களின் போராட்டத்தை அங்கீகரித்து, அவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட ஈழம் என்ற படம் தான்!

கனடாவில் நீண்ட காலமாகவே, அடிமைகளாக இருந்த கறுப்பின மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் வரலாறுகளையும் நினைவு கூர்வதற்காக Black History Month கொண்டாடப்படுகிறது.

கனடாவில் கனடிய பூர்வீக, சீக்கிய, இந்து, இஸ்லாமிய, பங்களாதேச, அராபிய, ஐரிஷ், லத்தீன் அமெரிக்க, இத்தாலிய, பிலிப்பினோ, போலந்து, யூத, டச்சு, கிரேக்க, போத்துக்கேய, அல்பேனிய, ஹங்கேரிய இனங்களுக்கு எல்லாம் தேசிய ரீதியிலோ, மாகாண ரீதியிலோ, நகரசபை மட்டத்திலோ இப்படியான மரபு மாதங்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இது அந்தந்த சமூகங்களின் பங்களிப்புகளை அங்கீகரிக்கவும், அந்த சமூகத்தினரைக் குஷிப்படுத்தி வாக்குகள் பெறவும் அரசியல்வாதிகள் செய்யும் கைங்கர்யம். தங்கள் சமூகத்தை அங்கீகரிக்கக் கேட்டு, மறுத்தால் வாக்களிக்க மாட்டார்கள் என்ற எண்ணம்.

தெலுங்கர்களும் மலையாளிகளும் தங்கள் மரபுரிமை மாதத்தைப் பெறும் நாள் தொலைவில் இல்லை என்னும் அளவுக்கு அவர்களின் தொகை அதிகரிக்கிறது.

போதிய அளவு சிங்களவர்கள் இருந்தாலும், அவர்கள் இந்த முயற்சியில் ஈடுபடாததற்கு, இங்கு வந்து சேர்ந்தவர்கள் படித்தவர்களாகவும், தங்கள் சமூகத்தை ஏமாற்றத் தெரியாதவர்களாகவும் இருப்பதுவும் காரணமாக இருக்கலாம்.

இப்படியாகப்பட்ட ஒன்று தான் தமிழர் மரபுரிமை மாதமும். இதை ஏதோ போராட்டம் நடத்திப் பெற்ற உரிமை மாதிரித் தான் ரமில் பிரமுகர்ஸ் உருட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களும் ஏதோ கனடா தங்களை மட்டும் தான் அங்கீகரித்திருக்கிறது என்ற பெருமையில் புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்கள்.

இந்த மரபுரிமை மாதம் என்பது, இந்த அரசுகளின் வெறும் பிரகடனங்களுடன் நிறுத்தப்படுவதில்லை. அதைக் கொண்டாடுவதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படுகின்றன.

அங்கே தான் யாழ்ப்பாணி தன் சுயரூபத்தைக் காட்டுகிறான். இதை தான் மட்டுமே ஆரம்பித்ததாக ஒருவர் உரிமை கோரிக் கொண்டிருக்க, அதனால் அவர் அடையப் போகும் அரசியல் லாபத்தின் மீதான பொறாமையும், கிடைக்கும் பணம் மீதான வாயூறலும் மற்றவர்களைச் சும்மா இருக்க விடுமா?

யாழ்ப்பாணி தானே!

இவர்களின் தமிழ் வளர்ப்பு உருட்டலின் பின்னால் இருப்பது இதில் புரளும் பணமும், அதைச் சுலபமாகச் சுருட்டலாம் என்ற எண்ணமும் தான்!

அரச உதவிப் பணம் என்றால், சகல சித்துவிளையாட்டுக்களும் செய்யத் தெரிந்த யாழ்ப்பாணி தானே!?

சட்டவிரோதமான அனைத்து வழிகளிலும் அதைப் பெற்றுத் தருவதாக வானொலியிலேயே பகிரங்கமாக விளம்பரம் செய்வான் அவன்.

கடையைத் திறந்து, கரிபியன் மீனை யாழ்ப்பாணக் கடல் விளைமீன் என்று விற்றாலும், போட்டிக்கு அதே மூலையில் கடை போடுகின்ற அதே யாழ்ப்பாணி தானே!?

தமிழர்களின் பிரதிநிதிகள் தாங்கள் என்று கனடிய அரசியல்வாதிகளுடன் தோள் உரசும் புலிவால் சங்கம், இப்போது தானும் போட்டிக்கு இந்த மரபுரிமை மாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

“

மற்ற நேரங்களில் எல்லாம் ‘நான்றி, வானக்கம்’ கனடிய அரசியல்வாதிகள் எல்லாம் வேட்டி கட்டி வந்து வாழ்த்துச் சொல்லும் போதெல்லாம், ரமில் பிரமுகர்ஸ் எல்லாம் கோட் சூட் சகிதம் காட்சியளிப்பார்கள்.

இந்த மரபுரிமை மாதத்தில் மட்டும் ஒரு சேஞ்சுக்காக ரமில்ஸ் எல்லாம் பட்டுவேட்டிகளுடனும், கனடிய அரசியல்வாதிகள் எல்லாம் கோட் சூட்டுடனும் காட்சியளிக்கிறார்கள்.

”

அதற்குக் கிடைக்கும் பெரும் பணம் வாய்க்கால் வழியோடி கலை நிகழ்ச்சிகள் நடத்துவோருக்கும் கொஞ்சம் கிடைக்கிறது.

காசைத் தூக்கி எறியாவிட்டால், காலை தூக்காத, ஆடாதபாத நாட்டிய நாரீமணிகள் எல்லாம் தமிழ் பண்பாட்டைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். பாவம் அவர்களின் மாணவிகளின் பெற்றோர். தங்கள் பணத்தில் தான் இந்தக் கூத்துக்களுக்கு உடைகளை வாங்க வேண்டும்.

ஆனால், மொத்தப் பணத்யையும் ஆட்டையைப் போடுவது நாரீமணி டீச்சர்கள் தான்!

இந்த மரபுரிமை மாதத்தில் சிறப்பு நிகழ்ச்சி பொங்கல் நிகழ்ச்சி. தமிழர்களின் பண்பாட்டுப் பெருமை.

அதற்கு இந்த புலிவால் சங்கம் Gala Dinner ஏற்பாடு செய்திருக்கிறது.

காலையில் நடக்கும் பொங்கலுக்கும் இரவு நேர டின்னருக்கும் என்னடா சம்பந்தம்? என்று மூளையைக் கசக்காதீர்கள்.

அங்கேதான் இருக்கிறது விசயம்.

அங்கு கனடிய அரசியல்வாதிகள் வந்திறங்குவார்கள். தங்கள் அரசியல் கனவுகளோடு அலையும் கோட் சூட் கனவான்கள் அவர்களோடு செல்பி எடுக்க முண்டியடிப்பார்கள். அரை குறை ஆங்கிலத்தில் பிதற்றுவார்கள்.

இதற்கான கட்டணமாக விஜபி டிக்கட்டுக்கள் 150 டொலர்களுக்கும் சாதாரண டிக்கட்டுக்கள் 100 டொலருக்கும் விற்பனையாகித் தீர்ந்து விட்டன.

தங்கள் இனப் பெருமையைக் கொண்டாடுகின்ற விழாவிற்கு, தாங்களே செல்ல முடியாத அளவுக்கு




தீர்மானிக்கப்பட்ட விலை.

அதனால் பயன்படப் பெறுவது யாரோ!

இது தமிழர்களுக்கான கொண்டாட்டம் இல்லை, ரமில் பிரமுகர்ஸ்க்கான self-promotion event.

இங்கே சமுகம் அளிக்கும் கனடிய அரசியல்வாதிகள் இவர்கள் தான் தமிழர் பிரதிநிதிகள், இவர்கள் சொல்லும்படி தான் இந்த யாழ்ப்பாணி மோட்டுக்குடிகள் வாக்களிக்கும் என்று, இவர்களுக்கு நிதி உதவிகளையும் மானியங்களையும் அள்ளி வழங்குவார்கள்.

கிடைக்கும் அந்தப் பணத்தில் இந்த யாழ்ப்பாணிப் பிரமுகர்கள், தங்கள் பிள்ளைகள், மருமக்கள், மாமன், மச்சான் எல்லாரையும் பெரும் சம்பளத்தில் வேலைக்கமர்த்திக் கொள்வார்கள். அதில் கொஞ்சச் சில்லறையை இந்த ஊடக, அல்லக்கைகளுக்கு சிதற விட்டால் போதும், அவர்கள் முட்டுக் கொடுத்துக் கொண்டு இருப்பார்கள்.

இப்படி தமிழையும் தமிழரையும் கூறு போட்டு விலை கூறி விற்று, இந்த அயோக்கியர் கூட்டம் தங்கள் அரசியல் கனவுகளையும் சுயநலன்களையும் நிறைவேற்றிக் கொள்ளும். தங்கள் குடும்பத்தினருக்கு அரசியல்வாதிகளுடனான நெருக்கங்களைப் பயன்படுத்தி வேலைவாங்கிக் கொடுக்கும்.

இதெல்லாம் போதாதென்று, நாங்களும் களத்தில நிக்கிறம் எண்டு காட்ட, நாடு கடந்த தமிழீழ அரசும் போட்டிக்கு பொங்குகிறது.

தமிழனின் ஒற்றுமை இலட்சணம் அப்படி!

தங்களை வைத்து இந்த அயோக்கியர்கள் பிழைப்பு நடத்துவது இந்த யாழ்ப்பாணிகளுக்கு பிரச்சனை இல்லை.

தாங்கள் போராட்டத்திற்கு என்று புலிக்கு கொடுத்த பணத்தைச் சுருட்டிய பட்டப்பகல் கொள்ளையர்களையே இன்றைக்கும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிற இவர்களுக்கு இது எல்லாம் ஒரு பொருட்டு இல்லை.

இவர்களுக்குத் தேவை, இவர்கள் கேட்க விரும்பும் பொய்களைச் சொல்லி குஷிப்படுத்த எப்போதும் ஆள் வேண்டும்.

அதற்கான அயோக்கியர்களுக்கு இந்த சமூகத்தில் எந்த தட்டுப்பாடும் இல்லை.

ஏனென்றால், அந்த அயோக்கியர்கள் எல்லாம் இந்த சமூகத்தின் உள்ளேயிருந்து தானே வருகிறார்கள்.

பொங்கும் Pot ல் இருப்பது தானே, spoon இலும் வரும்!

“தாங்கள் போராட்டத்திற்கு என்று புலிக்கு கொடுத்த பணத்தைச் சுருட்டிய பட்டப்பகல் கொள்ளையர்களையே இன்றைக்கும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிற இவர்களுக்கு இது எல்லாம் ஒரு பொருட்டு இல்லை.
இவர்களுக்குத் தேவை, இவர்கள் கேட்க விரும்பும் பொய்களைச் சொல்லி குஷிப்படுத்த எப்போதும் ஆள் வேண்டும்.
அதற்கான அயோக்கியர்களுக்கு இந்த சமூகத்தில் எந்த தட்டுப்பாடும் இல்லை.”

# இருமல்

மனோ (பிரான்ஸ்)

அவன் இருமிக்கொண்டே இருந்தான். அவன் ஒவ்வாமையில் தவித்தான். போலிகளும், பொய்மைகளும் அவனைச் சூழ்ந்து துரத்தின. அவனால் மனிதர்களுடன் அதிகம் சமரசம் செய்துகொளள முடியவில்லை. பொய்மை அவனை வதைத்தது.

திருப்தியின்மைகூட ஒரு நோய்தான். நடி! வாழ்வில் நடி! என்று காலம் திரும்பத் திரும்ப அவனுக்குப் போதித்துக்கொண்டே இருந்தது.

"உலகம் ஒரு நாடகமேடை" ஆனாலும் ஓர் சிறிய எல்லையைத் தாண்டுவதற்கே அவனுக்குச் சிரமமாக இருந்தது.

பொங்கல்

இருமிக் கொண்டே அவன் மனதுக்குள் பொங்கியது

உடல் சோர, பொங்கல் இனிக்கவில்லை

மனம் சோரா பொங்கலை மனம் நாடியது.

அவரவர் பார்க்கும் கோணங்களைப் பொறுத்து, பழகும் எல்லையைப் பொறுத்து எல்லா மனிதர்களும் நல்லவர்கள் என்றுதானே அறிந்து வைத்திருக்கிறான். பழகும் எல்லையை எப்படித் தீர்மானிப்பது?

ஓ! அதற்குள்தான் வாழ்வின் சூட்சுமமே அடங்கியிருக்கிறதா?

அவன் துரியோதனனாக மாறிக் கொண்டிருந்தான். தர்மனைப்போல அவனால் முடியவில்லை

ஏன் வாழ்வு சலிக்கிறது? எங்கே தவறு நிகழ்கிறது?

ஏன் அவனால் உலகோடு ஒத்தோட முடியவில்லை?

பொய்களை உலகம் இலகுவாக நம்பிவிடுகிறது. உண்மைகளை உரசிப்பார்க்க உலகிற்கு நேரமில்லை. உண்மையை நிலைநிறுத்த உயிரைக் கொடுத்துதான் போராடவேண்டியிருக்கிறது.

போராடி...?

உடலும் மனமும் சோர அவன் கட்டிலில் வீழ்ந்தான். தினசரி ஒழுங்குகள் அவனையறியாமலே மாறுகின்றன.

காலை எழுந்து குளித்து தேநீர் அருந்தியபின் தன் அறைக்குள் வருகிறான். அழகாக விரிக்கப்பட்டிருக்கும் கட்டிலின் வனப்பு அவனை ஈர்க்கிறது. சாய்ந்துவிடச் சொல்கிறது உடல். இல்லை வேண்டாமென்கிறது மூளை.

இன்று பொங்கல் நாள். மகிழ்ச்சியை கைலேந்தியபடி ஓடித்திருந்த நாள்.

வெடித்த பட்டாசுகளும், பூந்திரிகளும், கொடியில் வைத்துக் கொழுத்தி விளையாடிய வாணங்களும் நினைவுகளாய்... ஏக்கங்கங்களாய்...

நீர்கொழும்பிலிருந்து அப்பா கட்டுக்கட்டாய் வெடிப்பெட்டிகளை வாங்கிவந்தார். வட்டப்பெட்டிக்குள் நூறு வெடிகள் இருந்தன. புத்தக வெடிக்குள் 25 வெடிகள் இருந்தன. மான் மார்க், யானை மார்க், அனுமான் மார்க் பட்டாசுப் பெட்டிகள் அவை. அட்டை வாணங்கள் இரவு முற்றித்தில் அழகாய் சுழன்றன. ஒரு சின்னப் பையனுக்கு இவ்வளவு வெடிகள் அதிகம். அயல் வீட்டுச் சிறுவர்களுக்கும் கொடுக்கும்படி அம்மாவும், அம்மம்மாவும் வற்புறுத்தினார்கள்.

போட்டி அவர்களுடன் தானே? பெருமையடிப்பது

அவர்களுக்குத்தானே? எப்படி அவன் கொடுப்பான்?

ஆனாலும், கொடுத்தான். அவர்கள் முகங்கள் மலர்ந்தன. நாணத்தில் சிவந்தன. அவனும் மலர்ந்தான்.

நான்கு நாட்களாகியும் கொழுத்திய வெடிகள் தீரவில்லை. அவன் வைத்து வைத்துக் கொழுத்தினான்.

அவனது குட்டி நண்பர்களின் மனங்கள் பொருமித்தானிருக்கும்! வேகித்தான் இருக்கும்! அவனுக்கென்ன அதைப்பற்றி அக்கறை! அவனுக்கென்ன கவலை! தான் மட்டும் ஜெயித்தால் போதும். தான் மட்டும் மகிழ்ந்தால் போதும். ஊர் அடங்கியபோதும் அவனது வெடிகள் வெடித்தன. அவனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது தனது வெடிகள் வெடிக்கும்போது அயலெல்லாம் தன்னைத்தான் நினைப்பார்கள். தன்னைப்பற்றியே பேசுவார்கள். அதற்காகவே அவன் வெடித்தான்.

உழவர் திருநாள், சூரியனுக்கு நன்றி செலுத்தும் பெருநாள் என்பதெல்லாம் அவனுக்குத்தெரியாது. உணர்வுபூர்வமாக அவனுக்குள் எதுவும் இறங்கவில்லை. யாரும் உணர்த்தவும் இல்லை. வெறுமனே உதட்டில் மட்டும் வாய்பாடுபோல உச்சரித்தான். அதையே தன் பிள்ளைகளுக்கும் கடத்தினான்.

இந்த நல்ல நாளில் கட்டிலில் சரிவது அவனுக்கு உவப்பாயிருக்கவில்லை. இருந்தும் அவனையறியாது அவனையும் மீறி வீழ்ந்தான். உடல் அசதியாக இருந்தது. இரண்டு மணிநேரங்கள் ஆழ்ந்த உறக்கம். மனைவிகூட அவனை எழுப்பாதிருந்தது ஆச்சரியமாக இருந்தது.

இன்று லீவு நாள். சும்மா இருந்து பழக்கப்படாத உடம்பு. சோம்பிக்கிடக்கவும் முடியாதிருந்தது. திட்டமிட்டிருந்தபடி பொங்கல் விழாவுக்குப் போனான்.

இருமியது. மனிதர்களைக் கண்டபோது அவனுக்கு அதிகம் இருமியது. பஸ்ஸிற்குள் இருமியபோது எல்லோரும் அவனைப் பார்த்தார்கள். அவன் தலை குனிந்தது.

பொங்கல் விழாவில் பட்டிமன்றம் நடந்தது.

யார் யாரோ என்னென்வோ எல்லாம் தாறுமாறாய் பேசினார்கள். யார் எந்தப்பக்கம் என்பது அவர்களுக்கே தெளிவில்லாது இருந்தது. இதற்குள் தலைவர் வேறு தன்பாட்டுக்கு ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்.

அவனுக்கு இருமல் வந்தது.

“அவன் தடித்த குளிராடைகளால் தன்உடலை பாதுகாப்பாக மூடியிருந்தபோதும் அவனுக்குக் குளிர்ந்தது. சுற்றி நின்றவர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.இந்தக் குளிருக்குள் பொருத்தமில்லாத பண்பாட்டு உடைகள். எல்லோரும் நடிகர்கள் போல வேடமணிந்திருந்தார்கள். சரி ஆசை யாரைத்தான் விட்டது? கோடைகாலமென்றாலும் பரவாயில்லை. இந்தக் குளிருக்குள் விறைக்க விறைக்க “தம்” கட்டியபடி நின்று கொண்டிருந்தார்கள்.”

அடிக்கடி இருமிக்கொண்டு வெளியே போய் வந்தான்.

பேராசிரியர் ஒருவர் யூரியுப்பில் பேசும்போது குறிப்பிட்டார். தான் பதினைந்து நிமிடங்கள் பேசுவதற்கு 3-4 மணிநேரங்களாவது குறைந்தது பேச்சைத் தயாரிப்பேன் என்று. எதுவித தயாரிப்புமில்லாது மேடையேறுவர்களுக்குத்தான் எத்தனை துணிவு? கேட்டால் கன்னி முயற்சி என்று சமாதானமுயற்சி செய்வார்கள். வயது அறுபது தாண்டி நிற்கும். இனி முயன்று தானென்ன...! விட்டுத்தானென்ன!

அடிவயிற்றிலிருந்து மாபெரும் இருமலொன்று அவனுக்குப் புரக்கடித்துக்கொண்டு வந்தது. கூட்டத்தைக்குழப்பாது பதறாது வெளியே போனான்.

அறுபது வயதுச் சிறுமிகள் நடனம் ஆடினாரகள்.

ஆசை யாரைத்தான் விட்டது. வடிவேலு கோவை சரளாவின் நகைச்சுவைக் கோணத்தில் கூட அவனால் ரசிக்கமுடியவில்லை. இருமலைக் கஸ்ரப்பட்டு விழுங்கிக் கொண்டிருந்தான்.

வெட்டவெளியில் பாரம்பரியக் கலைவடிவம் என்று ஏதேதோ செய்துகொண்டிருந்தார்கள். சொல் மட்டும் ரசிக்கக்கூடியதாக இருந்தது. அவர்கள் தங்களுக்குள் ரசித்தார்கள். குரல், பாவமின்றி காட்டுக்கத்தல் கத்தியது. கலையைக் கலையாகச்செய்தால் தானே எதையும் ரசிக்கமுடியும். பொய்மைக்குள் நின்று நாங்களும் சிலம்பாட முடியாது

அவன் தடித்த குளிராடைகளால் தன்உடலை பாதுகாப்பாக மூடியிருந்தபோதும் அவனுக்குக் குளிர்ந்தது.சுற்றி நின்றவர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். இந்தக் குளிருக்குள் பொருத்தமில்லாத பண்பாட்டு உடைகள். எல்லோரும் நடிகர்கள் போல வேடமணிந்திருந்தார்கள். சரி ஆசை யாரைத்தான் விட்டது? கோடைகாலமென்றாலும் பரவாயில்லை. இந்தக் குளிருக்குள் விறைக்க விறைக்க “தம்” கட்டியபடி நின்று கொண்டிருந்தார்கள். அவன் தொடர்ந்தும் இருமிக்கொண்டே இருந்தான்.

ஒரு தொலைக்காட்சியாளன் அவனை நெருங்கினான்.

இந்த நிகழ்ச்சியைப்பற்றி என்ன நினைக்கிறியள்?

ஓம் நல்லா இருக்கு.

இது தமிழருக்கு ஒரு பெருமையாக கருதுறியளா?

ஓம். நிச்சயமாக.

உங்களுக்கு மகிழ்ச்சிதானே!

ஓம்.

உங்களுக்குத் திருப்திதானே!

ஓம்.

அவன் இருமிக்கொண்டே பதிலளித்தான். இருமல் முன்பை விட பலமடங்கு அதிகமாக இருந்தது.

எங்கும் பொய்மை நிரம்பியிருக்கிறது.

எனக்கு நானே எப்படிப் பொய்யாக இருப்பது? அவன் தனக்குள் குழம்பினான்.

தொடர்ந்தும் இருமிக்கொண்டே இருந்தான்.

**Facebook: Mano Sinnathurai**



# புத்தனின் பல் (லா)






இலங்கையின் பிரபல யூடியூபரும் சமூக ஆர்வலருமான செபல் அமரசிங்க, கண்டியில் உள்ள புனித பல்லக்கு பௌத்த ஆலயத்தை (தலதா மாளிகை) அவதூறாகப் பேசியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசையும் மதத்தையும் பிரிக்க வேண்டும் என்று இவர் தொடர்ந்து பிரசாரம் செய்து வந்தவர்.

மக்கள் தங்கள் ஓய்வு நேரத்தை செலவழிக்க செல்லும் வழிபாட்டுத் தலங்களுக்குள் நாம் மதத்தை மட்டுப்படுத்த வேண்டும். ஆட்சியில் மதகுருமார்களிடமிருந்து எங்களுக்கு அறிவுரைகள் தேவையில்லை என்பது இவர் நிலைப்பாடு.

அவரது காணொளியில், புனிதப் பல்லக்கு ஒரு 'லப்ப" என அவர் விவரித்ததன் மூலம் தங்கள் மதத் நம்பிக்கையை இழிவு படுத்தியதாக கூறப்படுகிறது, இந்த சொல்லாடல் பெரும்பாலும் சிங்களத்தில் ஆண் பிறப்புறுப்புக்கான சொல்லாக பயன் படுத்தப்படுகிறது. தமிழில் நாங்கள் 'என்ன மசிறு" என்பது போல.

புத்தனின் இந்த பல்லிற்க்கும் மயிருக்கும் கூட தொடர்புண்டு. புத்தர் இறக்கும் போது தனது எந்த அடையாள சின்னங்களையும் சேகரிக்கவோ வணங்கவோ வேண்டாம் என்று கேட்டுக்கொண்டாராம். அப்படி இருந்தும் அவரது தகனத்தின் பின் அவரது அபிமானத்திற்குரிய பெண் சீடரான கேமா, சாம்பலில் இருந்து குருவின் இடது மேல் கோரைப் பல்லைப் எடுத்துக்கொண்டு (திருடி) கொண்டு கலிங்கத்து அரசனுக்கு அதை கையளித்தார்.

இதுதான் புத்தர் பெண்களை சங்கத்தில் சேர்க்க கூடாது என்று ஆரம்பத்தில் விடாப்பிடியாக இருந்தாரோ என்னவோ!

இதன் பின் புத்தரின் பல்லை வைத்திருபவர் ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்க ஆசீர்வதிக்கபட்டவராக நம்பப்பட்டது. இப்படித்தான் பௌத்தம் சஷ்திரியர்களின் (அரசர்களின்) மதமாக உருவெடுத்தது. அதன் பின் அந்த ஒரு பல் பல கட்டுகதைகளுடன் போர், திருட்டு மற்றும் வழிபாட்டு கொண்டாட்டங்களுக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளையும் தாண்டிநிலைத்து நிற்கின்றது. அகிம்சையை போதித்த புத்தரின் பெயரால் அந்த பல்லிற்க்காக தொடர் போர்கள் நடந்தன.

கலிங்கத்திற்கு சென்ற பல் அங்கே 800 ஆண்டுகள் அரசர்களால் பாதுகாகப்பட்டு வந்தது. அதை கைப்பற்ற பல போர்கள் நடந்தன. கைப்பற்றியவர்கள் பௌத்தத்திற்கு மதம் மாறி மாற்று மதத்தவரை துன்புறுத்தினார்கள்.

**வில்லா ஆனந்தராம்**

இந்த படை எடுப்புகளில் இருந்து பல்லைப் பாதுகாப்பாக வைத்திருக்க, அதை அரசனின் மகள், மருமகன் மூலம் இலங்கைக்கு கடத்த மன்னன் முடிவு செய்தான். இந்த நேரத்தில், பௌத்தம் இலங்கையில் நன்கு வேரூன்றி இருந்தது, மேலும் தீவு ஆட்சியாளர்கள் பௌத்தத்தை வளர்த்த இந்திய அரசுகளுடன் நெருங்கிய உறவைப் பேணினர். அரசன் குஹாசிவனின் மருமகன் மற்றும் மகள் என்று கூறப்படும் தந்தா மற்றும் ஹேமமாலா ஆகியோரால் அந்த பல் துறவிகளின் ஆடைகளை அணிந்துகொண்டு, வழிப்போக்கர்களால் கவனிக்கப்படாதபடி ஹேமமாலாவின் கூந்தலுக்குள் மறைத்து வைக்கப்படு கடத்தி சென்றதாக நம்பப்படுகின்றது.

இறுதியாக இலங்கையின் தலைநகரான அனுராதபுரத்தை அடைந்தது, தென்னிந்தியச் சோழர்களின் படை எடுப்பு, மற்றும் ஆளும் மன்னர்களின் ஒற்றுமை இல்லாமை காரணமாக பல் அவ்வப்போது பாதுகாப்பற்ற இடர்பாடுகளை எதிர்கொண்டது. ஆயினும், 11ஆம் நூற்றாண்டில்முதலாம் விஜயபாகு மன்னன் பொலன்னறுவைக்கு தலைநகரை மாற்றும் வரை, பல் அனுராதபுர ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததாக வரலாற்றுப் பதிவுகள் குறிப்பிடுகின்றன.

மன்னன் முதலாம் விஜயபாகு தனது சமகாலத்தவரான பர்மாவின் மன்னருடன்

நட்புறவைப் பேணிவந்துள்ளன். பர்மிய மன்னன் அந்த பல்லை தனக்கு அனுப்பும் படி கேட்டுக்கொண்டான். ஆனால் விஜயபாகு புத்திசாலிதனமாக அந்த பல்லின் ஒரு போலி பிரதியை அனுப்பிவைத்ததாக கூறப்படுகிறது.

பல்லிற்க்கான தொடர் போட்டி போராட்டங்களில் ஜாவா நாட்டின் மன்னன் சத்ரபானு என்பவரும் இரு முறை படையெடுத்தார், ஆனால் வெற்றி பெற முடியவில்லை.

தென்னிந்திய பாண்டிய நாட்டிலிருந்து பெரும் போர்வீரரான ஆரிய சக்ரவர்த்தியின் கீழ் நடந்த படை எடுப்பில் பல் மற்றும் நினைவுச்சின்னங்கள் பாண்டிய மன்னனின் கைக்கு போனது. பின்னர் மன்னன் மூன்றாம் பராக்கிரமபாகு பாண்டிய நாட்டின் தலைநகருக்குச் சென்று, நட்புரீதியான கோரிக்கைக்கு பின் பல்லும் மற்றய நினைவுச்சின்னங்களையும் திரும்பக் கொண்டு வந்து பாரம்பரிய சடங்குகளைத் தொடக்கினார்கள்.

மார்கோ போலோவின் கூற்றுப்படி, சீனப் பேரரசர் குப்லாய் கான், ராஜாவிடம் இருந்து பல், மற்றும் நினைவுச் சின்னங்களைப் பெற ஒரு தூதரை அனுப்பினார்.

இருப்பினும், இரண்டு போலி பற்களை அனுப்புவதன் மூலம் சீனப் பேரரசரை மகிழ்விக்க மன்னரால் முடிந்தது, சீன அரசரும் அவற்றை நம்பிக்கையுடன் பெற்றுக்கொண்டாராம். புத்தனின் பல் பின்னர் தம்பதெனிய, கோட்டே இராச்சியம் என்று பயணித்து கடைசியில் கண்டியில் குடியேறியது.

அரசருக்கு பாதுகாப்பும்





அதிகாரமும் செலுத்தும் அங்கீகாரம் என்னும் பல்லை காவிக்கொண்டு அரசர்கள் சண்டை போட்டதும் ஓடி ஒழிந்ததும் தான் வரலாறு.

தற்போதைய இருப்பிடமான தலதா மாளிகையும், போத்துகேயரால், டச்சுகாரரால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது.

வேடிக்கை என்னவென்றால் 1989 ஆம் ஆண்டு தம்மை மாக்ஸீயவாதிகள் என்று சொலிக்கொள்ளும் ஜே.வி.பி காரரும் பல்லைக் கைபற்றினால் தங்களுக்கு அரசியல் அதிகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தலதா மாளிகையை தாக்கினார்கள். பின்னர் 1998 இல் தமிழீழ விடுதலைப் புலிகளும் பல் மாளிகையை தாக்கினார்கள். இவை எதுவும் வெற்றிகரமாக முடியவில்லை.

இலங்கையில் உள்ள நினைவுச் சின்னங்களைத் தவிர, பிற நாடுகளில் உள்ள பல நினைவுச்சின்னங்களும் புத்தரின் பல் நினைவுச்சின்னம் என்று அழைக்கப்படுகின்றன.

அவற்றுள்

- சீனாவின் பெய்ஜிங்கில் உள்ள படாச்சு பூங்காவின் லிங்குவாங் கோயில் புத்தர் நினைவு மையம்
- தைவானில் காஹ்சியுங்கில் உள்ள ஃபோ குவாங் ஷான் மடாலயம்.
- ஜப்பானின் காமகுராவில் உள்ள எங்ககு கோயில்.
- சிங்கப்பூரின் சைனாடவுனில் உள்ள புத்தர் டூத் ரெலிக் கோயில்

என்பன சில.

இவை எல்லாம் உண்மை எனில் புத்தருக்கு எத்தனை பற்கள் இருந்தன என்று ஆச்சரியமாக இருக்கும்.

1980 இல் பர்மாவில் ஒரு துறவியால் கண்டுபிடிக்கப்பட்டது என்று ஒரு புத்தனின் பல் சிங்கப்பூரில் முளைத்தது அதற்கு கோவிலும் கட்டப்பட்டது. அந்த பல்லை ஆராய்ந்த டாக்டர்கள் நிபுணர்கள் அது மனித பல்லே இல்லை என்று தீர்மானித்தார்கள். இது சிங்கபூரில் சாத்தியம்.


சிறீலங்காவில் கதையே வேறு. பல்லுக்கு கிட்டே ஈ, கொசுவுமே போக முடியாது.

இவர்கள் புத்தனின் பல் என்று கோரும் கோரைப்பல் 7.5 செ.மீ இருக்குமாம். ஒருவேளை இது சீன புத்தரின் பல்லாக இருக்குமோ, அவர்தான் பெரிதாக வாயை திறந்து சிரிகிறார்.

சேப்பல் அமரசிங்க மீது வைக்கப்படும் குற்றச்சாட்டு இந்த பல் அவமதிப்பால் பௌத்தர்களாகிய எங்களின் உணர்வுகளையும், மதிப்பிற்குரிய துறவிகளின் உணர்வுகளையும் அவர் புண்படுத்தி விட்டார் என்பதாகும்.

இந்த குற்றச்சாட்டும் , அதை தொடர்ந்த சிறை வைப்பும் அப்பட்டமான மனித உரிமை மீறல்.

பேச்சுரிமைக்கு தடை. மதங்கள் விமர்சிக்க படலாம். நக்கலும் நையாண்டியும் விமர்சனத்தின் ஒரு ஆரோக்கியமான அணுகுமுறையே. சிலரது உணர்வுகள் பாதிக்கப்படும் என்பதற்க்காக உண்மைகள் பேசப்படாமல் போக முடியாது. ஏசுவின் பிறப்பு பற்றி பல அசிங்கமான விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. நம்ம பெரியார் கூட பிள்ளையார் சிலையை போட்டு உடைத்தார், ராமர் சிலைக்கு செருப்பால் அடித்தார் என்கிறார்கள். இவை எல்லாம் ஏற்றுக்கொள்ளும் சமூகம் தான் ஜனநாயகத்தை மதிக்கும்.



Facebook: Villa Anantharam

# துயரம் தந்ததொரு இழப்பு

ஜோர்ஜ் இ.



1962-2022

அவன்
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்தான் என்பதை
இந்த வையம்
அறிந்து கொள்வதற்காகவே...

அவன்
இறக்க வேண்டியதாக இருந்தது!

***

நீ விடை பெற்றாய் என்றதும் 'ஐயோ'
என்றேன் என்னையறியாமலே.
நான் சொன்ன போதும் 'ஐயோ'
என்றார்கள் உன் நண்பர்கள்.

நண்பர் ஜீவா சதா தன் பேஸ்புக் பதிவில் எழுதியது.

***

அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக பேஸ்புக் நண்பர்களின் பதிவுகள் எனது பக்கத்தில் அவ்வப்போது வந்து கொண்டிருந்தன.

'நண்பா, எழுந்து வா!'

எந்த தொடர்புகளும் இல்லாமல், எங்கெங்கோ சிதறிப் போய் வாழ்ந்தாலும், ஏதோ என்றவுடன் துடித்துப் போகின்ற நட்பின் பெருமை எனக்கும் தெரிந்தது தான்.

மலையடிவாரத்து எதிரொலிகள் போல, வந்து நிறைந்து கொண்டிருந்த பதிவுகள் செய்த நண்பர்களோ ஊடகங்களில் பிரபலமானவர்களாகவும், முன்னைய விடுதலை இயக்கங்களில் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்களாகவும் இருந்தார்கள்.

எல்லாரும் என் நட்பு வட்டத்திற்குள் தான் இருந்தார்கள்.

இவர்களின் விபரிப்புகளின்படி ஒரு பிரபலமானவராக இருக்க வேண்டும் என்ற ஊகம் தவிர அவர் பற்றி வேறு எதுவும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஊடகங்கள், அரசியல், கலை, இலக்கியம் என்று பல்வேறுபட்ட துறைகளில் ஆர்வம் கொண்டு ஆதிக்கம் செலுத்திய ஒரு ஆளுமையை, என் நட்பு வட்டத்திற்குள் அடங்கியிருப்பவர்களுக்கு நன்கு தெரிந்திருந்த ஒருவரை, நான் தெரிந்து கொள்ளாமல் இருந்தது கூட எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஓரிரு தினங்களில் அவர் காலமாகி விட்டார் என்ற துயரச்செய்தியும் பல பதிவுகளாக வந்தது. அந்தப் பதிவுகளுக்கு குவிந்திருந்த 'அமைதியில் இளைப்பாறும்' ஆத்மசாந்தி பின்னூட்டங்களும் துயரக் குறிகளும் என்னை இன்னமும் ஆச்சரியத்துக்குள்ளாக்கின.

இருந்தாலும், மரண வீடுகளுக்கு கைத்தடியைக் கொடுத்து அனுப்புகிற உடையார் போல, ஒரு வெறும் சம்பிரதாயத்திற்காக எனக்கு தெரிந்திருக்காத ஒருவரின் மரணத்திற்கு அஞ்சலி செலுத்துவதற்கு மனம் ஒப்பவில்லை என்பதற்கு, அவர் எனக்கு தெரிந்திராதவர் என்பது மட்டும் காரணமாக இருக்கவில்லை.

முன்பின் தெரியாதவர்களின் மரண ஊர்வலம் வந்தாலும், வீதியோரமாய் நின்று, அந்த ஆன்மா சாந்தி பெறட்டும் என்று பிரார்த்திக்கும் நாகரிகச் சிந்தனை போல, இந்த இழப்பும் எனக்கும் ஒரு துயரமானதாகத் தான் தெரிந்தது.

சம்பந்தம் இல்லாதவர்களின் மரண அறிவித்தல்களில் போகிற போக்கில் எவரும் துயரக்குறியையோ, ஆத்மசாந்திப் பின்னூட்டத்தையோ கடமைக்காக, எந்த உணர்வுகளுமின்றி போட்டு கடந்து போய் விட முடியும்.

ஆனால், அந்த இழப்பை எதிர்கொண்ட குடும்பத்தினருக்கு அது ஆறுதலாகி விடுமா?

திடீரென்று எல்லாமே இருண்டு வெறுமையாகிப் போயிருக்கும் துணை, உறைக்கின்ற உண்மையை விளங்கியும் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கும் சகோதரர்கள், பெற்றோர்கள், மரணத்தினதும் இழப்பினதும் பாரதூரத்தை புரிந்து கொள்ள முடியாதிருக்கும் குழந்தைகள் என்று, மரணிக்கும் ஒவ்வொருவருக்கும் இருக்கும் உறவுகள் அந்த இழப்பை எதிர்கொள்வதற்காக படும் அவலத்தை இந்த குறிகளும்

குறிப்புகளும் எப்படி ஆறுதல் படுத்த முடியும்?

எந்த இழப்பையும் வெறும் வார்த்தைகளால் ஆறுதல் படுத்த முடிவதில்லை. அந்த இழப்பை எதிர்கொள்ளக் கூடிய மன உறுதி கிடைக்க வேண்டும் என்று வேண்டுவதையும், ‘உறுதியாக இருங்கள்’ என்று கேட்டுக் கொள்வதையும் தவிர, சம்பந்தம் இல்லாதவர்களால் அந்த துயரை நீக்க வேறு எதையும் செய்ய முடியாது.

இந்த இழப்பிலும் உங்களுக்குத் தேவைப்படும்போது, உதவக் கூடிய நிலையில் கைக்கு எட்டிய தூரத்தில் நிற்கிறேன் என்பதை உணர்த்த, கைகளைப் பற்றிக் கொண்டு மௌனமாகக் கூட நெருக்கமானவர்கள் உணர வைக்கலாம்.

எது எப்படியாயினும் சம்பந்தப்பட்டவர்கள் தாங்களாகவே அந்தத் துயரத்தை தாங்கி மீள வேண்டியதாகத்தான் வாழ்க்கை இருக்கிறது.

அவருடைய குடும்பத்தில் மனைவி, பிள்ளைகள் எதிர்கொண்டிருக்கக் கூடிய வேதனையும் வலிகளும் எப்படியிருந்திருக்கும் என்பது எனக்கும் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்றாகத் தான் இருந்தது.

சமூகத்தை நேசிக்கின்ற ஒருவர் தனது குடும்பத்தினருக்கு எதையும் சேர்த்து வைத்திருக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு.

இழப்பு என்பதை விட, வாழ்வை தொடர்ந்து நகர்த்திச் செல்வதில் உள்ள சிக்கல்கள் சில நேரங்களில் இழப்பை விட அதிகமானதாக இருக்கும்.

ஆனால் இந்த மரணம் எனக்குள் ஏற்படுத்திய பாதிப்பு இன்னொரு பரிமாணம் கொண்டது.

ஒரு சமூகத்தில் ஏதோ ஒரு விதத்தில் தனது முத்திரையைப் பதித்த ஒருவரை, பாதிப்பை விட்டுச் சென்ற ஒருவரை, அவர் வாழும் காலத்தில் தெரிந்து கொள்ள முடியாமல்...

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த ஒருவரை, அவரது வாழ்வை பெருமைப்படுத்த, அவர் சிவலோக பதவி அடையும் வரை காத்திருக்கின்ற ஒரு கல்வெட்டுச் சமூகமாகத்தான் நாங்கள் இருக்கிறோம் என்பது தான் என்னுள் ஏற்படுத்திய அந்த பாதிப்பு.

வாழும் போதே கௌரவிப்போம் என்று ஒரு பொன்னாடையைப் போர்த்தி விட்டு போவது, எந்த விதத்திலும் ஒரு பேஸ்புக் பதிவுக்கான விருப்பக் குறியை விட மேலானது இல்லை என்னும் அளவுக்குத் தானே எங்கள் சமூகத்தில் இருக்கிறது.

ஒரு எழுத்தாளனாக, கவிஞனாக, ஊடகவியலாளனாக, தன் வாழ்வை சமூகத்திற்காக தியாகம் செய்த போராளியாக இருந்த ஒரு மனிதனை, ஒரு சமூகமாகக் கொண்டாடாமல், குண்டு வீச்சில் இறந்து போனவர்களின் எண்ணிக்கையில் ஒன்று போல வெறும் எண்ணாகக் கொள்வதைப் போன்ற துயரம் எதுவாக இருக்கும்?

எங்கள் சமூகத்தில் ஏன் உண்மையான திறமைசாலிகளும், சமூகத்தை நேசிப்பவர்களும் கொண்டாடப்படுவதில்லை என்பதைப் பற்றி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதக் கூடிய அளவுக்கு எத்தனையோ விடயங்களை அவதானித்திருக்கிறேன்.

அதற்கான காரணங்கள், பின்னணிகள் என்ன என்பதை வேறு எங்காவது விலாவாரியாக விளக்கக் கூடும்.

அவரது மரணம் குறித்து கருத்து சொன்னவர்கள் எல்லோருமே அவருடைய நற்பண்புகளைச் சொன்ன போது, அதெல்லாம் கல்வெட்டுகளில் சொல்லப்படுவது போல ஒரு புனைவாகவோ, சம்பிரதாயமாகவோ இல்லாமல், உண்மையாக இருப்பது எனக்கு தெளிவாகவே தெரிந்தது.

அவரோடு சக போராளிகளாகவும், ஊடகவியலாளர்களாகவும் இருந்தவர்கள் மட்டுமில்லாமல், அவர் ஆசிரியராக இருந்த ஊடகங்களில் பிரசுரமான தங்கள் கவிதைகள் குறித்து அவர் கொண்டிருந்த அக்கறை பற்றி கருத்து தெரிவித்தோர் என பல்வேறுபட்டவர்களும் அவரது நற்குணங்கள் பற்றி தெரிவித்தது கூட ஒரு விதத்தில் ஆச்சரியமாகவும் இருந்தது.

திரைப்படங்களுக்கு பாடல் கூட எழுதிப் பாராட்டுப் பெற்றார் என்று கூட ஒரு நண்பர் தெரிவித்திருந்தார்.


நண்பர் ஜீவா தன் பதிவில்...

’இலக்கிய உலகில் கொம்பு முளைத்த பலரை தூரமாக நின்று பார்த்திருக்கிறேன். எவ்வாறு உனதருகே நின்றேனோ? ஆனாலும் சின்னதாய் ஒரே ஒரு கொம்பு உனக்கு முளைத்திருந்தால் பல்கலைக்கழகத்தில் பேராசானாய் இருந்திருப்பாய்.’

என்று கூறியிருந்தார்.

இவ்வாறான ஒரு பெரிய ஆளுமை எப்படி எனது வாழ்வுப் பாதையில் குறுக்கிடாது போனார் என்பது எனக்குப் புதிராகவே இருந்தது. எங்களுடைய வாழ்வுகள் ஏதோ ஒரு வழியில் சந்திக்காவிட்டாலும், ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளும் அளவுக்குக் கூட இல்லாமல் போயிருக்கிறோம்.

இருந்தாலும், நண்பர் ஜீவா சதா தனது பதிவில் குறிப்பிட்டிருந்த ஒரு விடயம் எனக்கு இரண்டு விடயங்களை நினைவுபடுத்தியிருந்தது.



**தனது சமூகத்தை நேசித்தவர்கள், அதே சமூகத்தால் மீட்பர்கள் எனக் கொண்டாடப்பட்டவர்களால் கொலை செய்யப்படும் அவலம் எங்கள் சமூகத்திற்கு உரியது தானே.**

அமுது சஞ்சிகையில் அவர் பணியாற்றிய விடயம்.

நண்பர் ஜீவா சதா முன்பு என்னுடன் ஒரு தடவை உரையாடும் போது ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

அமுது சஞ்சிகைக் காலங்களில் தாங்கள் கொழும்பில் நடமாடிய வேளைகளில் தங்களுக்கு பிடரியில் கண் இருக்கும் என்று.

போராட்டம் என்ற பெயரில் படுகொலை அரசியல் நடத்திய கும்பல் ஒன்று, எந்த பேதமும் இல்லாமல் நாட்டுத் தலைவர்கள் முதல் மாற்றுக் கருத்து அடிமட்டத் தொண்டர்கள் வரை உயிர் குடித்துக் கொண்டிருந்த காலம் அது.

படுகொலைகளும், துரோகிகள் அழிக்கப்பட்டு, ஈழம் மலரும் என்று புலன் பெயர்ந்த ஆனந்த தாண்டவங்களும் எமது சமூகத்தை ஆட்கொண்டிருந்த காலம் அது.

அமுது சஞ்சிகையில் இருந்தவர்களும் இந்த கொலைவெறி மனநோயாளிகளின் கொலைப்பட்டியலுக்கு தப்பியிருக்க நியாயமில்லை.

எனவே, இவ்வாறான உயிர்ப் பயத்துடனான வாழ்வை அவர் கொண்டிருந்திருக்கவும் கூடும்.

பின்னர் நண்பர் ஆதவனுடன் இவர் பற்றி கேட்ட போது, இவருடன் இயக்க நண்பர்கள் மூன்று வள்ளங்களில் இந்தியா புறப்பட்ட போது, மற்ற வள்ளங்களில் சென்றவர்கள் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதாகவும், இவரது வள்ளம் இயந்திரக் கோளாறு காரணமாக போக முடியாமல் போக நேர்ந்ததால் அவர் உயிர் தப்ப நேர்ந்ததாகவும், அதை தன்னை சந்தித்தபோது விபரித்துக் கொண்டிருந்த போது அழத் தொடங்கினார் என்று கூறியிருந்தார்.

தனது சமூகத்தை நேசித்தவர்கள், அதே சமூகத்தால் மீட்பர்கள் எனக் கொண்டாடப்பட்டவர்களால் கொலை செய்யப்படும் அவலம் எங்கள் சமூகத்திற்கு உரியது தானே.

அடுத்ததாக, அவர் அமுது சஞ்சிகையில் இருந்ததால் என்னைப் பற்றிய பரிச்சயம் கொண்டவராகவும் இருந்திருக்கவும் கூடும்.

அமுது சஞ்சிகை நான் எழுதிய ஏடு இட்டோர் இயல் கட்டுரைகள், சிறுகதை போன்றவற்றை மறுபிரசுரம் செய்திருந்ததால், என்னைப் பற்றி அவருக்கு சில நேரம் தெரிந்திருக்கவும் கூடும் என்ற எண்ணம் வந்தது.

தன்னை முதன்மைப்படுத்தாமல், தான் பெயர் வாங்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் அவர் வாழ்ந்ததால், அவர் வெளியில் அறியப்படாமல் எனக்கு தெரிந்தவராக இல்லாதிருந்திருக்கக் கூடிய சாத்தியங்களும் உண்டு.

அத்துடன் அவர் அங்கு செயற்பட்ட காலங்களில் நான் நாட்டை விட்டு வெளியேறியிருந்ததாலும் அவரை நான் தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம்.

***

அவரது மரணச் சடங்குகளின் போது எடுக்கப்பட்ட படங்களில் என் மனதில் இன்றும் பதிந்திருப்பது...

அவரது முகத்தில் இருந்த புன்னகை!

இந்த வாழ்வின் துன்பங்களை விட்டு நீங்கியதற்கான மகிழ்ச்சியோ, ஒரு பெரிய ஆளுமை ஒருவரை கொண்டாடாத இந்த சமூகம் பற்றிய கேலிச் சிரிப்போ...

எனக்குத் தெரியாது.

ஆனால், புன்னகை தவழ்ந்த மரணங்களை நான் இதுவரை கண்டதில்லை.

இந்த இழப்பின் போதான தருணங்களில் நான் பேஸ்புக்கில் எதையும் எழுதாது தலைமறைவாகியிருந்தேன்.

இவ்வாறான ஒருவரின் மரணத்தின்போது, இவரின் மரணம் பற்றி எதையும் குறிப்பிடாது பேஸ்புக்கில் நான் போட வேண்டும் என்று நினைத்திருந்த பதிவு தான்...

*அவன்*
*வையத்துள் வாழ்வாங்கு*
*வாழ்ந்தான் என்பதை*
*இந்த வையம்*
*அறிந்து கொள்வதற்காகவே...*
*அவன்*
*இறக்க வேண்டியதாக இருந்தது!*

தலைமறைவாக இருந்ததால் அந்தப் பதிவைப் போடவும் விரும்பவில்லை.

இப்படித் தான் அடிக்கடி நான் தலைமறைவாகி விடுவேன்... சொல்லாமல் கொள்ளாமல்!

இதைப் போல எனது நண்பர்கள் சிலரும் அவ்வப்போது தலைமறைவாகி விடுவார்கள்.

சொல்லிச் செய்வார் பெரியோர்.

சொல்லாமல் செய்வார் கயவர்... என்னைப் போன்று.

இப்படி காணாமல் போனோரை எப்போதாவது திடீரென்று நினைவு வரும்போது...

உட்பெட்டிக்குள் வெறும் 'ஓகே?' என்ற கேள்வியோடு நலன் விசாரிப்பேன்.

இப்படியாகத்தான் என் பேஸ்புக் நண்பர் ஒருவரும் கொஞ்சக் காலம் முன் காணாமல் போய் விட்டார்.

அவரும் முன்பின் தெரிந்திருக்காத ஒருவர் தான்.

என் நட்பு அழைப்புகளின் பூர்வீகம் பற்றிய புதைபொருள் ஆராய்ச்சிக்கு எல்லாம் நான் போவதில்லை.

யாராக இருந்தாலும், சங்கப் பெயர்களில் இருந்தாலும், அதன் பின்னால் யாரோ மனிதர்கள் தானே இருக்கிறார்கள், அதுவும் என்னுடைய கிறுக்குத் தனத்தையும் கிறுக்கலையும் கண்டு அழைப்பு விடுக்கின்ற பெருந்தன்மைக்காக!

இடைவிடாத இன்பம் துய்க்க அழைப்பு விடுக்கும் அரைகுறை ஆடை அழகிகள் தவிர்ந்து,

அனைவரும் என் நண்பர்கள் தான்.

அவரது நட்பு அழைப்பு வந்து ஏற்றுக் கொண்டதும், தினசரி அவரது

பதிவுகள் வரும்.

பல்வேறு பட்ட இலக்கிய நூல்களில் இருந்து தான் ரசித்த சிறு பத்திகளைப் பதிவேற்றுவார்.

தன் சொந்தக் கருத்துகளைப் பதிவிட்ட போதும், பெரும்பாலானவை தான் ரசித்த இவ்வாறான பகுதிகளை பதிவு செய்வதாகத்தான் இருந்தது.

அந்தப் பதிவுகள் எனக்கு மிகவும் உவப்பானவையாகவும் இருந்தன.

இதனால், அவரது பதிவுகள் வந்ததும், பெரும்பாலும் முதலாவதாக வரும் இதயக் குறியோ, விருப்புக்குறியோ என்னுடையதாகத் தான் இருக்கும்.

தினசரி நான் ஆவலோடு எதிர்பார்க்கின்ற ஒரு பதிவாகத் தான் அவருடைய பதிவுகள் இருந்தன.

தான் ரசித்து இன்புற்றிருந்ததை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கின்ற அவருடைய இயல்பு என்னுடையது போன்றது தானே!

இதனால் அவரது பதிவுகள் மீது எனக்கு ஈர்ப்பு இருந்ததில் ஆச்சரியமில்லை.

சாதாரண தலைப்பு படம் மாற்றலுக்கே நூற்றுக்கணக்கான இதயக்குறிகள் குவியும் பேஸ்புக்கில்...

வழமை போல, இவரது பதிவுக்கான விருப்புக்குறிகள் மிக குறைந்த அளவிலானவையாகவே இருந்தன. ஒரு முப்பதைத் தாண்டிய நினைவில்லை.

திடீரென்று அந்த கயவரும் ஒரு நாள் சொல்லாமல் செய்தார்!

தலைமறைவாகி விட்டார்.

எனக்கோ அது பெரும் இழப்பாக இருந்தது. தினசரி நான் எதிர்பார்க்கின்ற பதிவுகள் காணாமல் போகும் போது ஆளைக் காணோமே? என்ற கேள்வி எழுவது வழமை தானே.

இரண்டு கிழமை ஆளைக் காணவில்லையே என்று, 2019 கிறிஸ்மஸ் முதல் இரவில், அவரது உட்பெட்டிக்குள் ஆங்கிலத்தில் 'எப்படி இருக்கிறீர்கள்? நலமாயிருப்பீர்கள் என நம்புகிறேன்' என்ற ஒரு செய்தி அனுப்பினேன்.

அதற்கு பதில் வரவில்லை.

ஆனால் மறுநாளே, கிறிஸ்மஸ் தினத்தில் எழுத ஆரம்பித்திருந்தார்.

எனக்கோ மகிழ்ச்சி.

வழமை போல நான் ரசித்து ருசிக்கும் விடயங்களை தொடர்ந்து எழுத தொடங்கியிருந்தார்.

தமிழ் இலக்கிய எழுத்தாளர்கள் மட்டுமன்றி, உலக இலக்கியங்களில் இருந்தும், போதாக்குறைக்கு 'சொன்னவர் யாராய் இருந்தால் என்ன?' என்றும் பதிவுகள் வந்து கொண்டிருந்தன.

எனக்கும் 'எழுதுகிறவர் யாராக இருந்தால் என்ன?' எதையோ கற்றுக் கொள்கிறேன் தானே!? என்ற நினைப்பு.

தொடர்ச்சியாக பதிவுகள் வந்ததால் அவருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை. அவர் தொடர்பாட விரும்பியிருந்தால் எனக்கு பதில் எழுதியிருப்பார் தானே என்ற எண்ணத்தில் அவர் பதில் எழுதாததையும் பொருட்டாக நினைத்ததில்லை.

என்னைப் போலவே, பல்வேறு விடயங்களை வாசிக்கின்ற அவருடைய ஆளுமை பற்றிய என் மதிப்பு உயர்வானதாகத் தான் இருந்தது.

திரும்பவும் அடுத்த மார்ச் 19 ம் திகதியோடு காணாமல் போய் விட்டார்.

திரும்பவும் ஆளைக் காணவில்லையே என்று ஏப்ரல் 3 ம் திகதி ஆங்கிலத்தில் ஒரு உட்பெட்டிச் செய்தி.

நீங்கள் எங்கே? நீங்கள் ஒகேயா?

அதற்கும் பதில் இல்லை.

எனக்குத் தெரிந்து அவருடைய நண்பராக இருந்தவர் கவிஞர் கருணாகரன் சிவராசா தான்.

அவருக்கு உட்பெட்டிச் செய்தி ஒன்று அனுப்பினேன்.

ஆள் எங்கே?

அவர் உடன் பதில் அனுப்பினார்...

'அவ்வளவு நாட்களும் நமக்கருகில் இருந்தார். ஆனால் நம்முடனில்லை. அவ்வப்போது ஐந்து நிமிசமளவில் சந்திப்பார். அவ்வளவு தான்.'

உடனடியாக கருணாகரன் இணையம் மூலமாக தொலைபேசி அழைப்பில் வந்தார்.

அது தான் அவருடன் நான் முதலாவதாகவே கதைத்த நிகழ்வும்.

நீண்ட காலமாக நட்பு வட்டத்தில் இருந்தாலும், நேரடித் தொடர்புகள் இல்லாவிட்டாலும், பரஸ்பரம் எங்கள் சிந்தனைப் போக்குகளை அறிந்த நட்புகளாக நாங்கள் இருந்தோம்.




அவர் காணாமல் போன நண்பர் பற்றிய விடயங்களை சொல்லியிருந்தார்.

'ஆளைக் கண்டால் நான் தேடியதாக சொல்லுங்கள்!' என்றதற்கு கருணாகரன் உறுதிமொழியும் தந்தார்.

இப்படியே அந்த முகநூல் நண்பரும் காணாமலே போய் விட்டார்.

இடைக்கிடை அவர் பற்றிய நினைவுகள் வரும். அவர் பதில் அளிக்காதபடியால் உட்பெட்டித் தொடர்பு பற்றி ஆர்வமும் இருக்கவில்லை.

நானும் அடிக்கடி சொல்லாமல் கொள்ளாமல் தலைமறைவாகி, பின்னர் நீண்ட நாட்களின் பின் பழையபடி முருங்கை மரத்தில் ஏறுவது போல, அவரும் சில நேரங்களில் திரும்ப வரக் கூடும்.

அல்லது திண்ணைப்பேச்சு வீரர்களிடம் ஒரு கண்ணாய் இருக்கணும், அண்ணாச்சி என்று முழுமையாகவே பேஸ்புக்கை விட்டு நீங்கி, உருப்படியாக எதையாவது செய்து கொண்டிருக்கக் கூடும். அதை எதற்காக குழப்புவானேனன்? என்று நானும் இருந்து விட்டேன்.

தற்போது கொஞ்ச நாட்களுக்கு முன் நண்பர் கருணாகரன் சிவராசா தன்னுடைய பதிவு ஒன்றில் இறந்து போன தனது நண்பர் பற்றிய பதிவு ஒன்றில்...

அவரது முகநூல் பக்கம் பற்றி குறிப்பிட்டிருந்தார்.

அப்போது பார்த்த போது தான்...

என் நண்பர் வட்டம் இழப்பினால் பெரும் துயருற்ற சிதம்பரப்பிள்ளை சிவகுமார் என்ற அந்த ஆளுமை, நான் ஆவலோடு வாசித்துக் கொண்டிருந்த தாருண்யன் ரவி என்ற உண்மை தெரிந்த போது...

'ஐயோ!'

***

அவன்
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்தான் என்பதை
இந்த வையம்
அறிந்து கொள்வதற்காகவே...

அவன்
இறக்க வேண்டியதாக இருந்தது!



# ரோசாப்பூப் போட்ட சாப்பாட்டுக் கோப்பைகள்

அவள் தனது விருப்பத்திற்கேற்ப தனது வாழ்வில் செய்த மிகவும் சிலவற்றில் அவளுக்கு அதீதத் திருப்தியைத் தந்தது அவள் வளர்த்த ரோசாச் செடிகள்தான்.

ரோசாப்பூக்கள் மீதான அவளது விருப்பத்தை அவள் யாருக்காவும் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை.

சிறிய வயதிலிருந்தே அவள் ரோசாப்பூக்களை கண்டால் அவற்றில் லயித்துவிடுவாள்.

கைப்பணி வகுப்பின் போது திசுத்தாள்களினால் ரோசப்பூக்கள் செய்யக் கற்றுக்கொண்ட அன்று அவள் மிகவும் மகிழச்சியடைந்திருந்தாள்.

அவள் பள்ளித்தோழி ரோசாவைவிட மல்லிகைப்பூவிற்கே அதிக வாசம் உண்டென அவளைச் சீண்டிய போதேல்லாம் அவளுக்கு அழுகையும் வந்திருக்கிறது.

ஆனால் அவள் ரோசா மீதான தன் விருப்பத்தைக் கைவிடவில்லை. அவளை ரோசாப் பைத்தியமென வீட்டிலும் நண்பர்களும் அழைத்தபோதும் அவள் ரோசா மீதான தனது விருப்பத்தைக் கைவிடவில்லை. அவளுக்குத் தெரிந்த எந்த வீட்டில் ரோசாச்செடிகள் இருந்தாலும் அவள் வெட்கத்தை விட்டு ஒரு தடியைக் கேட்டு வாங்கி வந்துவிடுவாள். அவற்றைப் பக்குவமாகத் பதப்படுத்தி நட்டு, அவை பூத்துச் செழிக்கும்வரை சிரைத்தையுடன் பராமரிப்பாள். அவளுக்குப் பரிசாகக் கிடைக்கும் பொருட்களிலும் ஆடைகளிலும் கூட ரோசப்பூக்கள் இருந்தால் அது அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அவள் சேலை அணியும் காலங்களிலும் அவளிடமிருந்த ரோசாப்பூப்போட்ட சேலையைத்தான் அவள் அதிகம் விரும்பி அணிந்தாள். அவளுக்கு முதலில் கிடைத்த காதல் கடிதத்துடன் இருந்த எதோவொரு வீட்டிலிருந்து அவசரமாகப் பறிக்கப்பட்ட காம்பிலிருந்து பிரிக்கப்பட்ட ரோசாப்பூவை வாஞ்சையுடன் பாதுகாத்து வந்தாள். அந்த நிறைவேறாக் காதலிற்காக அவளும் அவனும் எத்தனையோ அடிகளை வாங்கியிருந்தாலும் அவ்வப்போது கடிதங்களுடன் இணைக்கப்பட்டிருந்த அவளுக்காகப் பறிக்கப்பட்ட ரோசாப்பூக்களின் நினைவுகள் அவளுக்குள் பசுமையான நினைவுகளையே பொதித்திருந்தன.

***

அவளது உடலைத் தின்று கொண்டிருந்த வலியைக் குறைப்பதற்காக அவளுக்கு பல மாத்திரைகள் கொடுக்கப்பட்டிருந்தன. அவளது உடலிலிருந்து வெளியேறிய குருதியை ஈடுசெய்வதற்காக அவளுக்கு இரத்தமும் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்து. அவள் அந்த வைத்தியசாலைக்கு வந்து எத்தனை நாட்கள் கடந்து விட்டன என்பது அவள் நினைவில் இல்லை. அதனை நினைவில் நிறுத்த முயற்சிக்கும் போதெல்லாம் ஆற்றாமை மேலிட்ட துயரம் அவள் கண்களிலிருந்து ஆறுகளைத் தோற்றுவித்தன. அவள் நினைவுகள் பராங்கற்களாக அவளை அழுத்தியபோது அவள் தன் உடலில் இன்னும் அதிகமாகவே வலியை உணர்ந்தாள்.

அவளது வாழ்வின் பயங்கரமானச் சுவடுகளை அழிக்க அவள் எடுத்த முயற்சியில் அவள் மீண்டும் தோற்றுப் போயிருந்தாள். தோல்விகள் அவளுக்கு பழக்கமானவை. அவளது தோல்விகளுக்காக அவள் எப்போதும் தன்னைத்தானே தண்டித்தாள். அவளுக்கு முன்னெழும் சுவர்களை உடைத்துக்கொண்டு வெளியேறுவதை தவிர்த்து அவள் தன்னை வதைக்க பழகியிருந்தாள். தன் இயலாமையின் உச்சத்தை நெருங்கிய போது தான் அவள் தன்னை அழிக்கவே

உமா ஷாணிகா

முடிவுசெய்தாள். மனவுளைச்சலில் உழன்று கொண்டிருந்த அவளுக்கு அந்தக்கணம் அதீத துணிச்சலைக் கொடுத்ததா என்ற கேள்விக்கு அவளிடம் பதிலேதும் இல்லை. கண்ணீர்த் திரைக்குள் அவளது இரு குழந்தைகளின் அச்சம் நிறைந்த முகங்களும் கூக்குரல்களும் நினைவில் விம்பங்களாக வந்து விழுந்தன.

ச்சீ.. எனக்கு எப்படி மனம் வந்தது? மேலும் அழுவதைத் தவிர அவளுக்கு வேறு ஒன்றும் மிச்சமிருக்கவில்லை. அவள் தன்னைப் பற்றி எடுத்த முடிவிற்காக மீண்டும் மீண்டும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த படுவாள் என்பது அவளுக்குத் தெரியும்.

கதவைத் திறந்து கொண்டு உள்நுழைந்த தாதி "வி கேற்ரஸ் ஈனன் ஹொயிற்ர பிரவ் கு..ண சேகாரான்? (இன்று உங்கள் சுகம் எப்படியிருக்கின்றது திருமதி குணசேகரன்?) எனக் கேட்டுக் கொண்டு அவளுக்கு ஏற்றப்பட்டிருக்கும் மருந்துகளின் அளவுகளை பரிசோதித்துவிட்டு, அவள் மேசையில் சாப்பிடாமல் வைக்கப்பட்டிருந்த மதியச் சாப்பாட்டை திறந்து பார்த்துவிட்டு, உணவு உனக்குச் சுவையாக இருக்கவில்லையா என்று கேட்டுக்கொண்டே அதனையும், அதனுடன் இருந்த கிளாஸ்களையும் வெளியே எடுத்துச் சென்றாள்.

அவள் ஒரு மதிய வேளை அந்த வைத்தியசாலையின் அவசரப் சிகிச்சைப் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்டு, பின் விசேட கண்காணிப்புப் பகுதியில் வைக்கப்பட்டு இப்போது ஒரு தனியறைக்கு மாற்றப்பட்டிருந்தாள்.

வைத்தியர்களும் பொலிசாரும் மொழிபெயர்ப்பாளரின் உதவியோடு அவளிடம் கேட்கும் கேள்விகளுக்கு அவள் பதில் கூறும் போதெல்லாம் அவள் சுமந்து நின்ற கோரமான இறந்தகால நினைவுகளை வார்த்தைகளுக்குள் குறுக்கிக் கொண்டாள். அவளால் தன் கதையை முழுமையாகச் சொல்லமுடியவில்லை. அவளது விசும்பல்கள் வார்த்தைகளை விழுங்கின. வைத்திய பரிசோதனைகளின் போது அவளின் உடல் பாகங்களில் காணப்பட்ட காயங்களும் இரத்தக் கண்டல்களும் அவள் வாழ்வு பற்றி உரையாடல்களுக்குள் சிக்குண்ட வார்த்தைகளை மீறிய கதைகளைக் கூறின.

***

தர்சினியின் திருமணப் பேச்சுகள் எழுந்த போது அவளுக்குப் பிடித்த

> "எங்கடை ஆக்களுக்கை பாருங்கோ... பெடியன் குணமான பொறுப்பான பெடியனாக இருந்தால் போதும்" என்ற கோரிக்கைகளுடன் தேடப்பட்ட மாப்பிள்ளைகளுக்குள் சாதகம் உட்பட அனைத்துப் பொருத்தங்களுடன் கூடிய வரனாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர் தான் குணசேகரன்.

ரோசாப்பூப் போட்டச் சேலையுடன் பக்குவமாக அவள் வளர்த்த ரோசாச்செடிகளுக்கு முன்னின்று ஓரிரு படங்கள் எடுக்கப்பட்டன. அவள் திருமணத்தில் அவள் விருப்பத்தில் நடந்தது அது மட்டுமே.

அவள் யாரைத் திருமணம் செய்யவேண்டும், அவள் இணைந்து வாழ்பவருக்கு எத்தகைய குணாதிசயங்கள் இருக்கவேண்டும் என்ற எந்த விடயத்திலும் அவள் விருப்பம் கேட்கப்படவில்லை. "எங்கடை ஆக்களுக்கை பாருங்கோ... பெடியன் குணமான பொறுப்பான பெடியனாக இருந்தால் போதும்" என்ற கோரிக்கைகளுடன் தேடப்பட்ட மாப்பிள்ளைகளுக்குள் சாதகம் உட்பட அனைத்துப் பொருத்தங்களுடன் கூடிய வரனாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர் தான் குணசேகரன்.

அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்ட பின் அவள் ஜேர்மனிக்கு வருவதற்குமுன் அவனுடன் இரண்டு மூன்றுமுறை தொலைபேசியில் பேசியிருக்கிறாள்.

அவன் அவனோடு வாழத் தொடங்கியபோது தான் எல்லாமே பொருந்தி வந்ததாக இணைக்கப்பட்ட ஒரு உறவில் இருக்ககூடிய ஒவ்வாமைகளை அவள் இனங்கண்டாள்.

அவை பற்றி அவள் பேச முற்பட்டபோதேல்லாம் "போகப் போகச் சரிவரும், குடும்பம் என்றால் எல்லாம் இருக்கும், நீ தான் அஜஸ்ட் பண்ணிப் போ என்றும், அவன் குடிபோதைக்கு அடிமையாகி இருப்பது பற்றி அவள் பேசியபோதெல்லாம் "அங்கு குளிருக்கு எல்லோரும் குடிக்கிறவையாம், உண்டை கெட்டித்தனம் தான் அவனை மாத்துறது" என்ற அறிவுரைகள் தான் அவள் மீது வீசப்பட்டன.

ஆரம்ப நாட்களிருந்து குணசேகரானால் அவள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளையும் அத்துமீறல்களையும் அவள் விதி என்ற சொல்லினூடகவும் தன் இயலாமை என்ற புரிதலுடனுமே சகித்துக்கொண்டாள். அவனது குணாதிசயங்களுக்கும் அவன் குடிப்பழக்கதிற்கும் சம்பந்ததமில்லை என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தாலும் அவளால் தெரிவு செய்யப்படாத வாழ்வின் துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியவளாக அவள் தனித்து விடப்பட்டிருந்தாள். குணசேகரனின் சொற்களினாலும் உடல்ரீதியாகவும் அவள் மீதான தாக்குதல்கள் நொடிப்பொழுதில் நிகழக்கூடியவையாகவே இருந்தன. அவற்றிலிருந்து தப்புவதற்கான எந்த உத்திகளும் அவளுக்குப் பயனளிக்கவில்லை அவன் வரும் போது கதவு திறக்காமல் அயர்ந்து தூங்கினால் "யாரோடு படுத்து இவ்வளவு களைப்பு" என்றும் கடையிலிருந்து பிந்தி வரும்போது "எவனோடு படுத்துப்போட்டு வாறாய்" என்றும், அவள் சமைக்கும் உணவில் பிழை கண்டுபிடித்துச் சாப்பாட்டுக் கோப்பைகளால் அவள் மீது தூக்கி எறிவதும், அவள் வயிற்றில் ஓங்கி உதைப்பதும், அவளது தலையை சுவரில் அடிப்பதும், படுக்கையறையில் அவள் உடல்மீதான அத்துமீறல்களும் அவள் "மணவாழ்வு" என்ற சட்டகத்திற்குள் நாளாந்தம் அனுபவித்து வந்த வன்முறைகள்.

***

அவர்களது திருமணம் குணசேகரனின் சகோதரி வாழும் சுவிற்சலாந்து நாட்டில் நடைபெற்றாதால் தர்சினியின் பள்ளித்தோழி குமுதினியால் அதில் கலந்து கொள்ளமுடியவில்லை. அதனால் சில வாரங்களிற்குப்பின் தர்சினியைப் பார்ப்பதற்கு தனது கணவருடன் வந்திருந்தாள்.

தனது திருமணப் பரிசாக வீட்டிற்குத் தேவையான பல சமையல் உபகரணங்களுடன் சாப்பாட்டு கோப்பைகள் செட் ஒன்றையும் அன்பளிப்பாக கொண்டு வந்திருந்தாள். ஆறு சதுரவடிவிலான பெரிய கோப்பைகளும், ஆறு சூப் சாப்பிடக்கூடியதான சிறிய ஆழமான கோப்பைகளும் அதில் அடங்கியிருந்தன. அவை எல்லாவற்றிலும் சிவப்பு மஞ்சள் ரோசா நிறத்திலான ரோசாப் பூக்கள் பதிக்கப்பட்டிருந்தன. "உமக்கு

ரோசாப்பூக்கள் விருப்பமென்று இதைத் தேடி வாங்கினான். கவனமாகப்வைச்சுப் பாவியும" அந்தப் பெட்டியில் பதிக்கப்பட்டிருந்த கோப்பைகளின் படத்தைத் தர்சினி பார்த்தபோது அவள் கண்கள் கலங்கின. அவள் நண்பியின் கண்களில் கசிந்த நீரின் அர்த்தத்தை மகிழ்ச்சியெனவே குமுதினி அன்று கணித்தாள்.

"பார்த்தீரா.. உமக்கு என்ன விருப்பமென்றதை நான் மறக்கவில்லை"

நண்பியின் தோள்களைஅன்பாகப் பற்றிக் கொண்டாள். அவளை அணைத்தபடி தர்சினி மெதுவாக அழுதாள்.

"உமக்கு ஒரு பிரச்சனையும் இல்லைத்தானே?" மெதுவாகக் கேட்டாள். இல்லையென்ற தர்சினியினின் தலையசைப்பு அன்று அவளுக்கு ஆறுதலைக் கொடுத்தது.

***

பத்து ஆண்டுகளாக தர்சினி அனுபவித்த வந்த கொடூரமான வாழ்க்கையில் அவள் எதற்காக தாக்கப்பட்டாள் என்பதை பகுத்தறிந்துச் சொல்வதற்கு அவள் மறந்து போயிருந்தாள்.

அவள் ஜேர்மனிக்கு வந்த நாளிலிருந்து குணசேகரனின் விருப்பங்களுக்கமையவே அவள் வாழ்வை மாற்றியமைக்கக் கற்றுக் கொண்டாள். அவன் செய்யும் விடயங்கள் பிடிக்காவிட்டாலும் அனுசரித்துப் போவதால் கொஞ்சமாவாது நிம்மதியை அடையலாமென்ற அவள் எதிர்பார்ப்பு பொய்த்துக் கொண்டே போனது.

அவள் முதலில் கருவுற்ற போது, தந்தையான பின்பு குணசேகரனில் மாற்றங்களைக் காணாலாம் என்ற அவளது எதிர்பார்ப்பு, அவன் அவள் வயிற்றில் உதைத்தில் அக்குழந்தை கருவிலேயே அழிந்த நாளே சுக்குநூறாய் சிதறிப் போனது.

அதன் பின் அவளுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்த பின்னரும் அவளது வாழ்க்கைச் சூழலில் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை. ஆரம்பத்தில் சிலவற்றைப் சொல்லிப் புரியவைக்கலாமென சில எத்தனங்களை அவள் எடுத்தாலும் அவை தொடர்ச்சியான தோல்விகளையே அவளுக்குத் தந்தது. ஆரம்ப காலங்களில் அவள் உணவு பரிமாறும் போது "வாயில் வைக்க ஏலாது.. இப்படியா சமைக்கிறது . . இங்கு அனுப்ப முதல் கொம்மா சமைக்கப் பழக்கவில்லையா?" என்று கேட்டபோது, நிதானமாகச் சாப்பிட்டால் தானே ருசி தெரியிறதுக்கு என்று இவள் வேடிக்கையாகச் சொல்ல, அவன் சாப்பாட்டுக் கோப்பையைத் அவள் மீது தூக்கி எறிந்துவிட்டு, அவள் வாயிலும் ஒரு குத்து குத்தினான்.

அதற்குப் பிறகு அவன் சொல்பவற்றிற்கு எதிர்த்துப் பேசாமல் இருந்தாள். ஆனால் அவளது மௌனம் அவளுக்கு கிடைக்கும் அடி உதைகளிலிருந்து அவளைக் காப்பாற்றவில்லை. தமது வீடு, நண்பர்கள் வீடு, கோயில், கடைகள் தெரு என்ற வித்தியாசமின்றி அவள் அவனது தாக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கிறாள். சில சமயங்களில் குளிருக்குள் குழந்தைகளுடன் வெளியே நிற்க வைக்கப்பட்டும் இருக்கிறாள். அவள் மீது படர்ந்த அந்த பயங்கரத்தின் நிழல் குழந்தைகள் மீதும் பரவத் தொடங்கியிருந்தது. தாயின் கண்ணீருடன் நனைந்தும் , அச்சத்தை கண்களில் ஏந்தியும் அவர்கள் வளரத்தொடங்கியிருந்தார்கள்.

***

சமையலறையின் அலுமாரிக்குள் அடுக்கப்பட்டிருந்த சாப்பாட்டுக் கோப்பைகளுக்குள் அந்த ரோசாப் பூப்போட்ட அந்தச் சாப்பாட்டுக் கோப்பைகளைப் பார்க்கும் போது அவளுக்கு குமுதினியின் ஞாபகம் வரும். அவளுடன் தொலைபேசி அழவேண்டும் போலிருக்கும். ஆனால் குணசேகரன் இல்லாத நேரம்தான் அவளால் குமுதினியுடன் கதைக்க முடியும்.

"அவவின்ர அட்வைஸ் எனக்குத் தேவையில்லை என்று சொல்லு. நீயும் அவளோடை என்னைப் பற்றி எதுவும் கதைச்சதெண்டு கேள்விப்பட்டா கொலைதான் நடக்கும்" அந்த மிரட்டலுக்குப் பின் அவன் இருக்கும் போது குமுதினியுடன் பேசுவதைப் தவிர்த்திருந்தாள்.

கவனமாகப் பாவியும் என அவள் அன்பாகச் பரிசளித்த அந்தக் கோப்பைகளைப் பத்திரமாக நீண்ட காலம் வைத்திருக்கவே விரும்பினாள். ஆனால் அந்தச் சிறைக்கூடத்தில் அவள் அனுபவிக்கும் தண்டனைகளின் கருவிகளாக அந்தக் கோப்பைகள் ஒவ்வொன்றும் உடைந்து சிதறின.

சிதறியக் கோப்பைத் துண்டுகளைக் குப்பையில் போடுவது போல் உடைந்து நொறுங்கிக் கொண்டிரும் தனது வாழ்வையும் ஏறிந்துவிடலாமென்று அவள் பலமுறை நினைத்திருக்கிறாள். உடைந்திருக்கும் கோப்பைத் துண்டுகளில் பளபளப்பான பூச்சுக்களுக்கிடையில் தெரியும் கரகரப்பான உள்ளீட்டைப் பார்க்கும் போதெல்லாம் குடும்ப வாழ்வை அதனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பாள். வெளிப்பூச்சுக்குள் உள்ளடக்கியிருக்கும் முரட்டுத்தனமும் பொய்மையும் நாளும் அவளைக் குத்திக் காயப்படுத்துவதாகவே அவள் உணருவாள்.

***

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை குணசேகரன் தமிழ்ப்படம் பார்த்துக் கொண்டிருந்தான். விதுனனும் விதுஷாவும் வீட்டுக்குள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். தர்சினி சமையலில் மூழ்கியிருந்தாள். அவர்களை அறைக்குள் போய்ச் சத்தம் போடாமல் இருக்கும்படி அவன் கத்திகொண்டிருந்தான். தர்சினியைக் தூசண வார்த்தைகளால் திட்டியபடி அவர்களை எச்சரிக்கும் படி அவன் கட்டளையிட்டுக் கொண்டிருந்தான். வீட்டில் குணசேகரன் வீட்டில் இருக்கும் நாட்களில் அவர்கள் கலகலப்பாக விளையாடுவதை அவன் விரும்புவதில்லை. அவர்கள் சத்தம் போடும் பட்சத்தில் அந்தக் கோபத்தை தர்சினி மீது தான் காட்டுவான்.

கையில் கிடைக்கும் ஏதாவது பொருளொன்றை எடுத்து அவள் மீது வீசி விடுவான். குழந்தைகள் பீதியால் ஒடுங்கி அமைதியாகி விடுவார்கள். ஆனால் மறுநாள் மீண்டும் அவர்களிடமிருக்கும் குழந்தைகள் மீண்டும் அவர்களை வெளியில் கொண்டு வந்துவிடுவார்கள். தர்சினி குழந்தைகளிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள். "அப்பா படம் பார்க்கிறார் தானே நீங்கள் போய் அறைக்குள் போய் படம் கீறுங்கோ. நான் அப்பாவிற்குச் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு, உங்களுக்குத் தீத்தச் சாப்பாடு கொண்டு வாறேன்".

தர்சினி கோழிக்குழம்பின் சுவையைப் பார்த்து இறக்குவதற்குள் "பளார்" என்ற சத்தமும் அம்மா என்ற கூக்குரலும் கேட்டு வரவேற்பறைக்குள்

"வாயில் வைக்க ஏலாது.. இப்படியா சமைக்கிறது? இங்கு அனுப்ப முதல் கொம்மா சமைக்கப் பழக்கவில்லையா?"

பதறிக்கொண்டு ஓடியவளை விதூஷா ஓடிவந்து அணைத்துக் கொண்டாள். விதுனன் நிலத்தில் விழுந்து வலியால் துடித்துக் கொண்டிருந்தான்.
"உங்களுக்கு எத்தனை நாள் சொல்லுறது. பிள்ளைகளுக்கு கை ஓங்கவேண்டாமென்று.. எனக்கும் அடிக்கிறது போதாதென்று இப்ப பிள்ளைகளிலும் கைவைக்க வெளிக்கிட்டிட்டீங்கள்".

அவள் ஆத்திரத்தில் கத்தினாள். கையிலிருந்த ரிமோர்ட் கொன்றோலரை அவள் மேல் எறிந்துவிட்டு சோபாவிலிருந்து பாய்ந்து வந்து அவளை கைகளாலும் காலினாலும் தாக்கத் தொடங்கினான். தலைமயிரைப் பிடித்திழுத்து சுவரில் முகத்தை அடித்தான். அவள் முகத்திலிருந்து பீறிட்டு வந்த உதிரத்தைப் பார்த்துக் குழந்தைகள் உறைந்து போயிருந்தார்கள்.

***

தன்மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளிலிருந்து விடுதலையடைவதற்கான வழிகளை அவள் நிறுத்தி நீண்ட காலமாகியிருந்தது. கரைந்து போயிருக்கும் தனது வாழ்நாட்களில் மகிழ்ந்திருக்கக் கூடியத் தருணங்கள் அற்றுப் போயிருந்தது பற்றி அவள் அலட்டிக்கொள்ளவில்லை. அவள் தன்னம்பிக்கையை இழந்தவளாக தான் தாக்கப்படுவதற்காகவே படைக்கப்பட்டவள் என்றும், தான் தாக்கப்படுவதற்கு தன்னில் குறைகள் இருக்கின்றதென்பதை நம்பவும் ஆரம்பித்திருந்தாள். தன் உயிர் போகும் நாள் தான் தனது விடுதலை என்பதை திண்ணமாக நம்பினாள். குழந்தைகள் இல்லாவிட்டால் தனது முடிவுகளை எடுப்பதில் இலகுவாக இருக்கும் என்பதைத் தினந் தினம் நினைத்துக்கொண்டாள். "பிள்ளைகளுக்கு நஞ்சைக் கொடுத்துவிட்டு நானும் சாகலாமென்று நினைக்கிறேன்" என அவள் குமுதினியிடம் சொன்னபோது, "விசர்க்கதை கதைக்காமல் அவனை விட்டிட்டுப் போய் தனிய இரும். நீர் அம்மா என்றாப் போலே பிள்ளைகளின் உயிரை எடுக்கிறதுக்கு உமக்கு உரிமையில்லை. .நீர் வெளியில் வந்து ட்ரிட்மன்ட் எடும். அதுவரைக்கும் நான் பிள்ளைகளை வடிவாப் பார்க்கிறேன்".

குமுதினியின் வார்த்தைகள் அவளுக்கு ஆறுதலைத் தந்தாலும் அந்த வார்த்தைகளை உயிர்ப்பிப்பதற்கான வழி இருக்கின்றதென்பதில் அவள் நம்பிக்கையற்றிருந்தாள்.

***

தமது தாயின் மீதான தந்தையின் அகோரமான தாக்குதல்களும், அவற்றிற்குள் வதைபட்டுக்கொண்டிருக்கும் அவர்களின் தாயின் நிர்க்கதியற்ற நிலையும் விதுனனினதும் விதூஷாவினதும் பழக்கவழக்கங்களிலும் செயல்களிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தன.

அவர்களின் ஆசிரியர்கள் இவளை அழைத்து வீட்டுச் சூழல் பற்றி பலமுறை கேட்டும் இவள் உண்மையை ஒரு போதும் சொன்னதில்லை. அவள் வெளியில் தனது பிரச்சனைகளைச் சொல்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டால் குணசேகரன் தன்னை இன்னும் அதிகமாகத் தாக்குவார் என்பது அவளுக்குத் தெரியும். இவள் மறைத்திருந்த உண்மைகள் குழந்தைகள் வழியே ஆசிரியர்களிடம் கசியத் தொடங்கியிருந்தது.

இவள் தனித்திருந்து அழுவதும், அவள் மேல் வந்து விழும் கோப்பைகள் தூண்டுகளால் தன் கையைக் கீறி அதைப்பார்த்து கொண்டிருப்பதையும் விதூஷா பலமுறை அவதானித்திருக்கிறாள். அம்மாவிற்கு ஏதோ ஒரு ஆபத்து நிகழப்போகின்றதென்ற பயம் அவள் பிஞ்சு மனதிற்குள் உட்புகுந்திருந்தது. பாடசாலையில் விளையாட்டு மைதானத்தில் அவள் விளையாடாமல் அதனையே நினைத்து கொண்டிருந்தை அவதானித்த ஆசிரியை அவளை அணைத்து ஆறுதல் கூறினார். "நீ கவலை படாதே.. உங்களுடைய அம்மாவும் நீங்களும் ஒரு பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல வழிவகுக்கிறோம்" என்ற உறுதி மொழியையும் அவளுக்கு அவர் கொடுத்திருந்தார்.

***

தீடிரென்று அவளுக்குள் ஒரு இனம் புரியாத உத்வேகம் எழுந்தது. ஆற்றாமைக்குள் தன்னைப் புதைத்திருந்திருந்தவளுக்கு அந்தக் கணம் ஏதோவொன்று தோன்றியிருக்கவேண்டும். கழுவிக் கவிழ்க்கப்பட்டிருந்த இரண்டு கோப்பைகளை எடுத்து ஓங்கி நிலத்தில் போட்டு உடைத்தாள். அவள் பத்திரப்படுத்த நினைத்த அந்த ரோசாப்பூப்போட்ட கோப்பைகள். அந்த சிறிய சமையலறையின் நலாப்பக்கமும் சிதறி விழுந்தன. அவள் அழுத படி அந்தத் துண்டுகளை எடுத்து கழுத்திலும் வயிற்றிலும் தாறுமாறாகக் குத்தினாள். அவள் உடலிலிருந்து உதிரம் வழியத் தொடங்கியது. அவள் கண்கள் மங்கத் தொடங்கின. "தோம்" என்ற சத்தம் கேட்டு ஓடிவந்த குழந்தைகள் திகைத்து நின்றன.
இரத்த வெள்ளத்தில் இருந்த தாயைத் தொட்டு . .அம்மா எழும்புங்கோ என விதுனன் கத்தினான்.
விதுஷா ஓடிப் போய் ஆசிரியை சொல்லிக் கொடுத்தது போல் தனது தொலைபேசியில் இருந்து அவசரப் பிரிவிற்கான பொத்தானை அழுத்தினாள்.

***

அந்த வைத்தியசாலைக்கு முன்புறமாகவிருந்த குளத்தில் நீந்திக் கொண்டிருந்த வாத்துகளுக்கு விதுனனும் விதுஷாவும் பாண்துண்டுகளை எறிந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் மகிழ்ச்சியில் சிறுவர் பாதுகாப்பு நிலையத்தின் அவர்களுக்கான பொறுப்பதிகாரியும் கலந்துகொண்டிருந்தாள். அந்தக் குளத்தைச் சுற்றி வளர்ந்திருந்த அடர்த்தியான மரங்களில் பட்டு தவழ்ந்து வந்த காற்று இதமாகவிருந்தது. அவர்கள் இருக்கும் திசையை நோக்கி சக்கரநாற்காலியில் தர்சினியை அமர்த்தி குமுதினி தள்ளிக் கொண்டு வந்தாள். தாயை அருகாமையில் கண்டவுடன் குழந்தைகள் இருவரும் ஓடிவந்து அவளை கட்டி அணைத்துக் கொண்டார்கள். அவர்களை நெஞ்சோடு அணைத்தபடி முத்தமிட்டாள்.
"என்ர செல்லங்கள்."

அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்தது. அவர்கள் தாயிடமிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு ஓடிச் சென்று அவளுக்காகக் கொண்டுவந்திருந்த இரு ரோசாப்பூக்களையும் அவளிடம் கொடுத்தார்கள்.

இரண்டு அழகான ரோசாப்பூக்கள். ஷோனா(அழகா)? விதுனன் தாயைப் பார்த்தபடிக் கேட்டான். "ஸேர் ஷோன்"(மிகவும் அழகாக இருக்கின்றன)

அவள் மீண்டும் ரோசாப்பூக்களின் அழகை ரசிக்கத் தொடங்கியிருந்தாள்.



Facebook: Uma Shanika



# மீ ரூ

## தங்கம்

Facebook: Thankam Sinnathamby




“மீ ரூ” பற்றி குறிப்பாக புலம்பெயர்ந்த ஈழத்துப் பெண்கள் “குத்தி முறியவில்லை” என்று பல முற்போக்கு இடது. வலதுசாரிகளுக்கு கடுமையான விமர்சனங்கள் இருக்கின்றன, அவை தொடர்பான கொதிப்புக்கள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றன.

இந்த பதிவை மீ ரூ வின் ஒரு பகுதியாக நான் பார்க்கிறேன். என் மீதான மீ ரூ எப்போது ஆரம்பித்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் ஐந்தாம் வகுப்பில் பிள்ளையாராக நாடகம் ஒன்றில் பங்கேற்ற போது நடந்த சம்பவத்தில் ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன். பிள்ளையார் அம்மை அப்பனைச் சுற்றி வந்து மாம்பழத்தைப் பெற்றுக் கொண்ட கதையது. நான் ஒரு குக்கிராமம் ஒன்றில் படித்துக் கொண்டிருந்த காலமது. அம்மாவும் அப்பாவும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் பிறந்தவர்களுக்கு என்னைப்போல பல ஆரம்ப பாடசாலைகளும், ஏனைய பாடசாலைகளும் அமைந்து விடுவதுண்டு. சின்மய வித்தியாலயத்தில் ஆரம்பித்து மாஸ்டர் இன்ஸ்ரிரியூற்றில் முடிவுற்றது எனது பள்ளிப்பருவம்.

நான் வசித்த அந்தக் கிராமத்தில் இருந்த பள்ளிக்கூடத்தில் ஏதோ ஒரு கலைவிழாவுக்கான நாடகம் ஒன்றில் எனக்கு அந்த பிள்ளையார் வேடம் கிடைத்திருந்தது. நான் அங்கிருந்த காலத்தில் என்னுடன் விளையாடுவதற்கு சின்னப்பிள்ளைகளே இல்லை, எல்லோரும் என்னைவிடப் பெரிய அண்ணாக்கள்தான். அவர்கள் விளையாடும் போது ஓரத்தில் நின்று பந்து பொறுக்குவதற்கு மட்டும் என்னை அனுமதிப்பார்கள். காலப்போக்கில் அவர்கள் கருணைகாட்டி என்னைத் தங்கள் அணியில் சேர்த்துக் கொண்டார்கள். எனக்கு சொல்லப்பட்ட விடயம் எங்கள் அணியைச் சேர்ந்த யாராவது பந்தை அடித்தால் ஓட வேண்டும். அதுவும் வேகமாக ஓடி தொடங்கிய இடத்திற்கு வந்து விட வேண்டும். பக்கத்து வீட்டில் இருந்த சிறிதர் எப்போதும் எதிரணி அவர் கையில் பந்து கிடைத்தால் ஓடுபவர் மீது குறி தவறாமல் தொட்டுச் செல்லும் பந்து, ஆள் அவுட். நான் வண்டு மாதிரி சில்லென்று ஓடி வந்துவிடுவேன். அந்த அண்ணாக்கள் அடித்த பற்றைய பந்தையோ நான் தொட்டதே இல்லை அதற்கான அதிஸ்டம் எனக்கு கிட்டவேயில்லை.

எங்கள் வீடு ஒரு பல்கலைக்கழகம், அது ஒரு கூட்டுக்குடும்பம். நான் தான் அந்தக் குடும்பத்தில் சின்னப்பிள்ளை. ஓய்வு பெற்ற ஐயா, அம்மம்மா, வேலை தேடிக்கொண்டிருந்த மாமாக்கள், அவ்வப்போது ஓ.எல், ஏ.எல் சோதனை எடுப்பதற்காக வந்து தங்கியிருக்கும் அண்ணாமார்கள், அக்காமார்கள் என வீடு அமர்க்களப்படும். இதற்குள் அம்மா ஒரு வாத்தியார். அப்பா அவ்வப்போது விஜயம் செய்வார். வீட்டில் எப்போதும் யாராவது ஒரு மாமா எனக்கு சாப்பாடு தருவார், குளிப்பாட்டி உடுப்பு போட்டு என்னை ஏதோ ஒரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைப்பார்கள். ஒன்றில் அம்மா படிப்பிக்கும் பள்ளிக்கூடம் அல்லது பக்கத்து வீட்டு அன்றி படிப்பிக்கும் பள்ளிக்கூடம்.

எங்களுடன் விளையாட வராத சில பெரிய அண்ணாக்கள் என்னை "பொடியன்" என்று கூப்பிட்டார்கள். நானும் ஒரு "பொடியனவாகவே" வளர்ந்தேன்.

பெரும்பாலான காலங்களில் எனது தலைமயிர் மேல்நோக்கி இருந்ததாகத்தான் எனக்கு ஞாபகம், என்னைப் "பொடியன்" என்று கூறுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

காலப்போக்கில் அம்மா வீட்டிற்கு அருகில் இருக்கும் பள்ளிக்கூடத்தில் படிப்பிக்க ஆரம்பித்த போது, பக்கத்துவீட்டு முத்துப்பிள்ளை ஆச்சி என்னையும் தனது பேரன் சித்தம்பலத்தையும் பள்ளிக்கு அனுப்பி வைப்பார், சித்தம்பலத்தின் வீட்டு வேலியும் பள்ளிக்கூட வேலியும் ஒன்றுதான், அதால அவையின்ர கம்பிவேலியால குனிஞ்சு போன அங்காலிப்பக்கம் போயிராலாம். இல்லாட்டி சுத்தி கனதூரம் நடக்க வேணும், மாடு, வண்டில் எல்லாம் வரும், பிறகு காணுக்க விழுந்திருவம், அதால வேலியால குனிஞ்சு போறது சுகம்.

சித்தம்பலம் என்னைவிட சரியான உயரம் அவருக்கு குனியவராது, நான் அவருடைய முழங்கால் அளவிலதான் இருப்பன் சட்டென்று கம்பிவேலிக்குள்ளால குனிந்து பள்ளிக்கூடப்பக்கம் போய்விடுவேன். சித்தம்பலம் ஒரு மாதிரி குனிந்து முதுகில கம்பி கீறி வந்து சேருவார். இரண்டுபேரும் கையைப் பிடித்துக் கொண்டு ஓலைக் கொட்டில் வகுப்பில முதலாவது வரிசையில் போய் இருந்திருவம். பிறகு ரெண்டுபேரும் அண்ணாமார் தரும் பிஸ்கட்டை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்து விடுவோம். வரும் போது எனது பிஸ்கட்டுக்களை காகம் பறிக்காமல் காப்பாற்றும் பணி சித்தம்பலத்தினது.

இரண்டுபேருமாக முத்துப்பிள்ளை ஆச்சி வீட்டு முத்தத்தில் இருந்து பிஸ்கட்டுக்களைச் சாப்பிட்டு விட்டு, நானும் சித்தம்பலமும் எங்கள் வீட்டுக்குப் போவோம். மத்தியானச்சாப்பாடு கிடைக்கும் வரை விளையாடுவோம். சித்தம்பலத்திற்கு கதைக்க வராது. தம்தம்ததம், தம்தம்ததம், என்றுதான் கதைப்பார். பிறகு சித்தம்பலம் தன்னுடைய வீட்டுக்குப் போய்விடுவார்.

நான் பள்ளிக்கூடம் முடிந்து சாப்பிட்டு போட்டு அண்ணாக்கள் எப்போது விளையாட கிறவுண்ட்ஸ்க்கு வருவார்கள் என்று பார்த்துக் கொண்டிருப்பேன். அவர்கள் வந்தவுடன் நானும் போய் அவர்களுடன் சேர்ந்து கொள்வேன். அவர்களும் வேறு வழியில்லாமல் என்னைத் தங்களுடைய எல்லா விளையாட்டுக்களிலுமே சேர்த்துக் கொண்டார்கள். என்னுடைய பெரும்பாலான நேரம் அண்ணாக்களுடனும், சித்தம்பலத்துடனுமே கழிந்தது.

எங்களுடன் விளையாட வராத சில பெரிய அண்ணாக்கள் என்னை "பொடியன்" என்று கூப்பிட்டார்கள். நானும் ஒரு "பொடியனவாகவே" வளர்ந்தேன்.

சிறுமிகளுடனான அறிமுகம் எனக்கு ஐந்தாம் வகுப்பிலேயே கிடைக்கிறது. அந்த வகுப்பில் தான் இந்த நாடகமும் அரங்கிற்கு வருகிறது. எனக்கு எப்போது தலைமயிர் கீழ் நோக்கி வளரத் தொடங்கியது என்று எனக்குத் தெரியாது. பெரும்பாலான காலங்களில் எனது தலைமயிர் மேல்நோக்கி இருந்ததாகத்தான் எனக்கு ஞாபகம், என்னைப் "பொடியன்" என்று கூறுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

இந்த பிள்ளையார் பாத்திரத்திற்கு மேக்கப் என்றெல்லாம் இல்லை. பிள்ளையாரின் முகத்தையும் நீளமான ஒரு தும்பிக்கையையும் ஒரு கார்ட்போட் மட்டையில் கீறி, வெட்டி அதனை கழுத்தில் தொங்க விட்டார்கள். அந்த தும்பிக்கை கால்வரை நீளமாக இருந்தது. இடறி விழாமல் இருப்பதற்கு மட்டையைப் பிடித்து இடுப்பில் நூலால் கட்ட வேண்டும். அந்த மட்டையில் கண்களுக்கான இரண்டு தூவாரங்கள் இருந்தன, அதன் மூலம் வெளிஉலகைப் பார்க்கலாம். அந்த மட்டையை தாங்கியபடி சிவபெருமானையும் உமாதேவியையும் சுற்றி வர வேண்டும். அவர்கள்தான் அம்மையும் அப்பனும்.

சிவபெருமானாக வேடம் ஏற்றிருந்த அண்ணாதான் என்னை தங்கள் அணியில் சேர்த்துக் கொண்டவர். அவருக்கு என்மீது எப்போதும் உண்மையான அன்பு, எங்கையாவது கள்ளமாங்காய் பறித்தால் அல்லது என்ன குழப்படி செய்தாலும் எனக்கும் பங்குண்டு. உமாதேவியாக நடித்த அக்காவை எனக்குத் தெரியாது.

இந்த பிள்ளையார் வேடத்திற்கு கறுப்பான குண்டான ஒருவரைத் தேடியதாகவும் ஆனால் அப்படி யாரும் கிடைக்காத பட்சத்தில் நிறப் பொருத்தம் காரணமாக எனக்கு அந்த வேடம் கிடைத்ததாக நான் எட்டாம் வகுப்பு படிக்கும்போது அறிந்து கொண்டேன். இதில் இன்னுமொரு விடயமும் இருந்தது. முருகனுக்கு நடித்தவரும் ஒரு பெண்தான் ஆனால் முருகனைப் போல "வெள்ளைநிறமாகவும்" "வடிவாகவும்" இருந்ததால் அவர் தெரிவு செய்யப்பட்டதாகவும் அறிந்து கொண்டேன். இந்த சின்ன நாடகத்தில் இவ்வளவு அரசியல் இருந்திருக்கெண்டு எனக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லைதானே.

கலைவிழா இரவுதான் நடைபெற்றது. நாங்கள் எல்லோரும் பல தடவை ஒத்திகை பாரத்து, பிறகு எல்லோரும் உடுப்புக்களைப் போட்டுக்கொண்டு வசனம் பேசிப்பார்த்து எல்லாம் வடிவாகச் செய்தோம். எங்கள் முறை வந்தது. நாங்கள் எல்லோரும் நாடகத்தை திறம்படச் செய்து முடித்தோம். பிள்ளையார் முகமுடியைப் போட்டுக்கொண்டு அம்மையையும் அப்பனையும் சுத்தி வந்த போது இடறப்பட்டு ஒருமாதிரி மாம்பழத்தை வாங்கிக் கொண்டேன். எங்களுக்கு இரண்டாவது பரிசு கிடைத்து, அதனால் கோபமடைந்த முருகன் மயில் இறகைத் தூக்கி எறிந்து விட்டு, அழுது கொண்டு போனதாகவும் சொல்லப்பட்டது.

அந்த இடத்தில் இன்னொரு விடயமும் நடந்தது. பிள்ளையாரின் வயித்தில யாரோ கிள்ளிப் போட்டாங்கள், அதுவும் நகம் தோலைக் கிழித்து கீறல் அடையாளம் வாற அளவுக்கு கிள்ளிப் போட்டாங்கள். பிள்ளையாருக்கு இதெல்லாம் தெரியாது மாம்பழம் கிடைச்ச சந்தோசத்தில ஆவெண்டு கொண்டு நிண்டது மட்டும் ஞாபகம் இருக்கு.



# ஒன்று...1! இரண்டு...2! மூன்று...3!

## சிறீனோ சிறீ சிறீசு

(முன்னாளைய அளவெட்டி சிறீசுக்கந்தராசா)

### ஒரு நாடகம்

ஒன்று

வெளி காலம் மனம்

வெளி பெரிது: ஆதலின் பிரபஞ்சம்
பிரமாண்டமானது.
அண்டசராசரத்து அபூர்வங்கள்,
ஆச்சரியங்கள் ஆனந்தத்தின்
கோடானுகோடிகள்...
எல்லையில்லை...

எல்லையில்லாயல்லையெனின்,
எல்லையேயில்லை!
முடிவிலை... - முடிவிலி ...
முடிவில் எதுவும் இலி ...!

எல்லையிலாதலினால்,
முடிவிலையாதலினால்,
முடிவில் எதுவுமிலை.

ஆதலினால் யாவும் பூஜ்யந்தானா??
பூஜ்யத்துள் ராஜ்யம் இருப்பது
எனிறெடுப்புப் பொய்யும்...
சில வேளைகளில் மெய்யும்....
ஆகும் (ஆமா?)

“இல்லை” என்பது இல்லை...
இருப்பு என்பது இருக்கிறது ...
என்பர். (உம்) “இல்லை” என்பது
இருப்பின் இல்லையும் ஆகலாம்.

அப்போ எல்லாமே “இல்லை”யின்
இருப்பா....?
(Existence of Nothingness)

அல்பேர்ட் ஜன்ஸ்ரைன் (Albert
Einstein) எது சொல்லியிருந்தும்,
ஸ்ரெபென் ஹௌக்கிங்க் (Stephen
Hawking) எது சொல்லிக்
கொண்டிருந்தும் வெளியின்
வெளிப்படை என்பது வெறுமையா?

நேரமும் நகரும்:
நிறுத்த முடியாது...
தொடமுடியாது...
தொடரமுடியாது...
உணரமுடியாது.

மனமுயிராய் பரந்து பறக்கிறபோதும்
போகும்....
மனம் உறைந்து (துயிலில்)
தற்காலச் சாவில் தவிக்கிறபோதும்
போகும்.....

காலத்தைக் கட்டுவதற்கு
கடவுளாலும் முடியாதென்று
கவிஞனொருவன்
சொன்னான்.

கடவுள் சினப்பாரா...?

இது வெளிக்கு வெளிச்சமோ
என்னவோ,
கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

மனம் எது...? சிக்மக்ட் ஃப்றொய்ட்
(Sigmund Freud) மண்டையைப்
பிய்த்து (மனதைப் பிய்த்து)
சொன்னது எது....?

இடது பக்க இதயமா மனம்?
அன்றி மண்டையா மனம்...? ...

ஆமாம்மாம்....
மண்டையே... மனம்....!

எண்ணம், சிந்தனை, யோசனை
எல்லாம் மனஸ்தான்....
மனஸ்தான் மன்... மனிதன்....
மாகாணிக்குறுணிக் குறுணல்
மனஸையும், மண்டாலாதிபெரு
அண்ணப்பேரண்டத்தையும்
எப்படியளக்க...?

ஒருவேளை, உலகம் என்று
ஒன்று, என்று இல்லையோ,
என்னவோ! எல்லாம் மாயமோ?...
நாமறியோம்.....!
சரி....அறிந்து தான் எதை
கிழிக்கப்போகிறோம்?

இரண்டு

சின்ன குட்டி - விட்ட - வட்டு -
மஹாவெடிப்ப விசிறிலில்
மஹா அண்டம் பிறந்தெரிந்து,
பிறகும் எரிந்து -
எரிந்தவை எகிறப்பெற்று,
எகிறியவை மேலும் எரிந்து,
எரிந்தவை மீள எகிறி -
பாரிய பால்வீதி போல்,
வீதி பாவி பரிதி பரிந்து
“பார்” வந்து, “வந்துபார்” என்று
கண்ணில் கடுவடி வெடித்ததாய்
சிதில மனிதன் வரமுன் -
ஒரு கல உயிர் வந்து,
கடல் நிறைந்தது,
சில கரையேறி, மண்ணேறி,
மரமேறி, பவனமேறிப் பவனி வந்து,
வந்து பார்க்காவிடினும்,
“பார் வந்து” என்று மனிதச்

*சிதிலத்துடன் சிதில மனிதன் வந்து,*
*வளர்ந்து, வளைந்து,*
*வரலாற்றில் வழுக்கி, விழுந்தும்*
*மீசையில் பிறந்த மண்*
*படவில்லையென்று புளுகி,*
*மேலும் புளுகி, தீ கண்டு,*
*அதனால் தீயல் கண்டு,*
*சக்கரம் கண்டு, மொழி கண்டு,*
*மேலும் வழுக்க வழி கண்டு,*
*குரோதம் - விரோதம் -*
*ரௌத்திரம், அபூர்வமாய் புனிதமும்*
*கண்டு, ரோதனை என்று தெரிந்தும்*
*தேகத்தீயில் தோய்ந்து,*
*ரோகம் அப்பி ...*
*இப்படியே... இப்படியே...*
*செத்து நாசமறுக்கும் வரை நாறி,*
*நாசம் அறுத்து, நாசம் மறுத்து*
*நாசம் அறுத்து - மறுத்ததை*
*அறுத்து, அறுத்ததை மறுத்து .....*
*ஐய்யய்யைய்யைய்யய்யைய்யோ, ....*
*நான் யார்???*

*இரண்டு...*

*காலம் மனம் வெளி*

*ஒன்று*
*காலம் காலமாக -*
*காலங்காலமாக -*
*காலம் பிறக்கிறது.*
*காலம் பிறக்க,*
*காலம் காலமாகிறது...*

*காலத்தூடு வெளி நகர்கிறபோது*
*வெளியூடு காலம் நடக்கிறது.*

*வெளிக்கு வெளியே*
*காலம் வெளி ஏறாமல்*
*வேலி போட்டு வைத்திருக்கிறது*
*காலம்...*

*காலத்துள்ளே கரைந்திருக்கிறது*
*வெளி...*

*ச்சே...!*
*இந்தக் காலமும் வெளியும்.....*
*மனது கொடுத்ததே*
*காலமும் வெளியும்! ...*
*அல்லது (கேள்வி)*
*மனது கொடுத்ததோ*
*காலமும் வெளியும்....?*

*இரண்டு*
*மனம்... வெளி... காலம்...*
*மனவெளிக்காலத்திலாவது*
*மனம் வெளிக்குமா...?*

*இரண்டு*
*காலம்... மனம்... வெளி...*

*வெளியில் வழி தோன்றும்:*
*விரைய உருமாறும்*
*(விரையும் உருமாறும்)*

*எளிய வழக்காகுமோ?*
*வாழ்க்கை எழிலர் வரமாகுமோ-*
*பெட்டாய்*
*எளியர் எழிலாகுமோ?*

*வளியில் பழிபோட்டு*
*வெளிறும் குறுபூச்சி*
*வழியின் வகைத்தாகுமோ? காலம்*
*இழியர் வசமாகுமோ- அடியேய்*
*வழிய வகையாகுமோ?*

*மனதைப் புரட்டி வெளிமறுத்து*
*சுடுகால இருளில் புதையுண்ட*
*பெடியோய், நீ*
*இருக்க இடமில்லை இகத்தில் -*
*ஐய்யய்யோ*
*இறங்கு மனக்கால வெளிக்கு!*

*மூன்று... (நாடகம்)*

*ஒன்று*
*(திரை விரிகிறது)*
*நான்: ஓடு நீ மனமே: என்னை*
*விட்டு.*
*மனம்: ஓடு நீ மடையா என்னை*
*விட்டு.*
*நான்: என் மனமே நானென்றால்,*
*என் மடையா - உன்*
*மடையா - எது உண்மை மடை?*
*மனம்: எதுவும் உண்மை*
*மடையல்ல மடையா.*
*வெளிக்கோடு*
*நான்: வெளிக்கோட*
*“வெளிக்கிட்டா” ஓட? ஓடி.....?*
*மனம்: ஓடி, ஓடி வெளியூடு ஓடி,*
*காலத்தூடு ஓடி காலமாகு....?*

*(திரை மூடுகிறது)*
*இரண்டு*

*(திரை மறைவில் நடக்கும் நாடகம்)*
*காலமும் வெளியும் மனமும்*
*சந்திக்கிற பொழுது....*
*வெளி: வெளி பெரிதா, நீ பெரிதா?*
*காலம்: நீ நிலைக்கும் பிரமாண்டம்.*
*நான் நகரும் பிரமாண்டம்*
*நிலைப்பதற்கு மேலால் எந்நேரமும்*
*நகரும் பிரமாண்டம்.*
*வெளி: என்னுள் இருப்பதே*
*காலம்: என்னூடு நகர்வதே காலம்.*
*ஆதலின் நானே பெரிது*

*காலம் : உன் பிரமாண்டத்*
*தனத்துக்கு நானே அளவு கோல்.*
*ஆதலின் நானே பெரிது.*

*(மனம் வைக்கிறார்......*
*அதாவது மனம் வருகிறார்)*
*மனம்: காலமாகட்டும்,*
*வெளியாகட்டும்....*
*வெளி காலமாகட்டும்: காலம்*
*வெளியாகட்டும்*
*மனமே காலத்தையும்*
*உருவாக்குவது :*
*வெளியையும் உருவாக்குவது.*
*மனமே எல்லாம்......!*

*மூன்று*
*(திரை இடையில் தொங்குகின்றது*
*திரிசங்கு சொர்க்கம்...... மாதிரி)*

*காலமும் வெளியும் கைகலக்கின்றன*
*மனமும் இடையில் மசிகிறது.*
*காலம், வெளி காலாகாலமும்*
*இருக்கின்றன. (.... என்று*
*படுகிறது....!)*

*மடிகிறது மனம்*

*மனம் : (ஒப்பாரியில் தொடங்கி,*
*ஈழையிழுத்து இறுதியில் இல்லாமல்*
*போகும் காலம்)*
*இருங்கள் நீங்கள்....*
*காலமும் வெளியும்*
*நான் போய்விடுவேன்*
*காலங்கணிக்கப்படாவிட்டாலும்*
*என்னால்.....*
*வெளி வெறிக்கப்பட்டாவிட்டாலும்*
*என்னால்.....*
*எப்படி இருப்பீர்கள்.......?*



**Facebook: Sreeno Sri Sreesu**



# நாடற்றவர் பட்டாளத்தின் தோற்றமும் இலங்கைப் பொருளாதாரத்தின் சரிவும்

சதீஸ் செல்வராஜ்

இலங்கை

பந்தொன்றை கைமாற்றி மாற்றி ஆட்டங்காட்டுவதைப் போல மக்களை மென்றுத் தின்னும் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு வித்திட்டவர்கள் யாவர் எனும் விடயமும் ஒவ்வோர் அணியின் மீதும் விரல் சுட்டும் விவகாரமாகிவிட்டது.

ஆம்! 75 வருட காலமாக மாறி மாறி ஆட்சிபீடமேறிய ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட அவர்களது வழித்தோன்றல்கள் ஒத்தக் கொள்கை கொண்ட தம் எதிரணியின் பக்கமே இந்தப் பந்தை உருட்டிவிட்டு விளையாட்டுக் காட்டுவது வழக்கமாகவிருக்கிறது. நாட்டின் பேரழிவில் பிரதான வகிபங்கு கொண்டவர்களாக, கடன் வாங்கிக் குவித்த ஜாம்பவன்களாக ராஜபக்ஸக்கள், ரணில், மைத்திரி ஆகியோர் உள்ளபோதிலும், இதற்கு அத்திவாரமிட்ட முன்னைய ஆட்சியாளர்களுக்கு மறந்தும் கூட பாவ விமோசனம் வழங்கிவிட இயலாது. நாட்டை நாசமாக்கிய இக்கும்பல் தம்மைத் தாமே குற்றமற்றவர்களென அறிவித்து விடுவித்துக் கொள்கின்ற போதிலும் அது ஒருபோதும் இறுதி தீர்ப்பாகவும் ஆகிவிடாது. இந்த வளவுக்காரர்கள் (நிலசுவாந்தர்கள்) எல்லாம் தம் வர்க்க நலன்சார்ந்து சிந்தித்தனரேயன்றி சாதாரண மக்கள் மீது கரிசனை காட்டிலர். அதன் விளைவையே இன்று எமது நாடு அனுபவிக்கின்றது.

தவிர, ஆளும் வர்க்கத்திற்கு கொஞ்சமும் சளைக்காத மக்களை ஏமாற்றும் யுக்திகளை சரிவர கையாளும் சிறுபான்மை இனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும், முதலாளித்துவ சிந்தனை கொண்ட ஏனைய குட்டிக் கட்சிகளும் சந்தர்ப்பவாத கும்பலும் கூட நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது போல காட்டிக் கொள்வதைப் பார்க்கையில் வேடிக்கையாக இருக்கிறது.

ராஜபக்ஸக்களுக்கு எதிரான கோசம் நாட்டில் வலுத்தப்பொழுது இவர்களில் பலரும் தங்களை சுயாதீனமாக இயங்கும் குழுக்களாக அறிவித்துக் கொண்டனர். சரியாகச் சொன்னால், உலகில் இருக்கும் அத்தனை அயோக்கியத்தனங்களையும் புரிந்துவிட்டு சபரிமலைக்குச் சென்று தங்களை புனிதர்களாக காட்டிக்கொள்வது போன்றாகும். அவர்கள் ஆளும் தரப்பில் இருந்தால் என்ன? எதிர்த் தரப்பில் இருந்தால் என்ன? தவளைப் பாய்ச்சலில் தேர்ச்சிப் பெற்ற இவர்களுக்கு இருவீடும் ஒருவீடே என்பதை விளங்கிக் கொள்ளாதோரை எந்தப் பிரிவில் நாம் அடக்குவது?

மற்றும் ஆளும் கூட்டத்தை ஆதரித்த சாதாரண மக்களும் கூட தொடக்கத்தில் நாட்டின் அழிவுக்கான பொறுப்புக்கூறலில் இருந்து நழுவஎண்ணிய போதிலும், பொருளாதார நெருக்கடியின் முதல் அடி இவர்கள் தலையில் விழுந்ததால், அவர்கள் தம் தவற்றை உணர்ந்து கிளர்ந்தெழுந்தனர்.

**இன்று இலங்கையரில் பெரும்பாலானோர் தம்மை சுயவிமர்சனத்திற்குட்படுத்தி நிலமையை சரிசெய்யவும் தயாராகிவிட்டனர். ஆனாலும் எஞ்சியுள்ளவர்கள் இரத்தத்தில் ஊறிப்போன பாரம்பரிய அரசியலுக்காகவும், வறட்டு கௌரவத்திற்காகவும், "இவர்களோடு இருப்பதால் ஏதாவது தேறுமா?" என்ற கொள்கையுடனும் இருப்பதை சுட்டிக்காட்டிவிடாமல் இருக்கவும் முடியாது.**

இன்று இலங்கையரில் பெரும்பாலானோர் தம்மை சுயவிமர்சனத்திற்குட்படுத்தி நிலமையை சரிசெய்யவும் தயாராகிவிட்டனர். ஆனாலும் எஞ்சியுள்ளவர்கள் இரத்தத்தில் ஊறிப்போன பாரம்பரிய அரசியலுக்காகவும், வறட்டு கௌரவத்திற்காகவும், "இவர்களோடு இருப்பதால் ஏதாவது தேறுமா?" என்ற கொள்கையுடனும் இருப்பதை சுட்டிக்காட்டிவிடாமல் இருக்கவும் முடியாது. இந்த இரண்டாம் ரகத்தினரின் பேராதரவால் ஆளும் கூட்டம் உற்சாகத்துடன் இருக்கிறது. இவ்வாறு பல வகையிலும் ஆளும் வர்க்கமும் அதற்கு ஒத்து ஊதுபவர்களும் மக்களுக்கு பொறுப்புக் கூறுவதில் இருந்து தப்பித்துக் கொள்ள முனைகின்ற போதிலும்,மக்களது நீதிமன்றம் ஏற்கெனவே அவர்களை குற்றவாளிகளாக அறிவித்துவிட்டது. இந்த அச்சத்தின் காரணமாகவே தேர்தலும் கூட இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆனாலும், இதுவரையில் அதிகாரத்தில் இருப்பதற்கு காண்பித்த வித்தைகளின் தொடர்ச்சியை மீளவும் தொடங்குவதற்கு அவகாசம் கிட்டிவிடாதா என்று ஆளும் வர்க்கம் மிக நுணுக்கமாக அவதானித்தும் ஆராய்ந்தும் வருகிறது. ஆம்! இதுநாள் வரை மக்களை பிளவுப்படுத்தி தமது சிம்மாசனத்தை காப்பாற்றிக் கொள்ள பிரிவினைவாதத்தைப் பயன்படுத்திய இவர்கள் அதனை மீளவும் பரீட்சித்துப் பார்க்க காத்துக் கொண்டிருக்கின்றனர்.

தமக்கு பக்கபலமாக கறுப்பு ஊடகங்களையும், குண்டர் படைகளையும், கள்ளவியாபாரிகளையும், போலி சாமியார்களையும் (போலி பிக்குமார், பூசாரி, ஞாணக்கா என்று பட்டியல் நீளும்.) கொண்டுள்ள இவர்கள், தங்களுக்கான பாதுகாப்பு கவசங்களாக சட்டங்களையும் அரச இயந்திரங்களையும் பயன்படுத்துகின்றனர்.

அதிகார இருப்புக்காக இவர்கள் பின்பற்றிய பிரிவினைவாதபோக்கே நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கான வித்தினை ஆழ விதைத்தது என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆம்! பெயரளவிலான சுதந்திரத்தின் பின் தோட்டத் தொழிலாளர்களின் மீது தொடுக்கப்பட் முதல் அடியே இலங்கைப் பொருளாதாரத்திற்கு கிடைத்த முதல் தர்ம அடியாகும்.

இலங்கையில் நாடற்றவர் பட்டாளத்தின் தோற்றமும் இலங்கைப் பொருளாதாரத்தின் சரிவும் ஒரே புள்ளியிலேயே தொடங்கியது. 1948 இற்கு பின்னரான ஆட்சியை "நாட்டின் சாபம்" என்று நாம் உரைப்பதற்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகும்.

இந்து சமுத்திரத்தின் குட்டித் தீவு உலக நாடுகளுடன் வர்த்தகத்தில் போட்டிப்போட அடியெடுத்து வைத்தநேரம் இது வெள்ளையர்களின் காலனியாகவிருந்தது. அதுவரை உலக மக்கள் அறிந்திராத "சிலோன்" எனும் நாமம் உலக அரங்கில் உச்சரிக்கப்படலாயிற்று. ஆம்! உச்சரிக்கும் ஒவ்வொரு நாவையும் கிறங்கச்செய்யும் சுவையை "சிலோன் டீ" கொண்டிருந்தது.

இது உலகச் சந்தையில் தமக்கான அங்கீகாரத்தை வென்றெடுத்தது. ஆனால், இந்த வெற்றியின் நாயகர்களான, நாயகிகளான தோட்டத் தொழிலாளர்கள் வெள்ளையனின் தோட்டப் புறங்களுக்குள்ளேயே சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், இவர்களின் உழைப்பின் சாறு உலக தேநீர் பிரியர்களை அடிமையாக்கி வைத்திருந்ததுடன், வெள்ளை முதலாளிகளுக்கு இலாபத்தையும் நாட்டிற்கு பாரிய அந்நிய செலாவணியையும் ஈட்டித்தந்தது. அதனால், 1948 ஆம் ஆண்டு ஆசியப் பொருளாதார வரிசையில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருந்தது. முதல் இடத்தை ஜப்பான் தக்கவைத்திருந்தது. அச்சமயம் எவ்வித ஏற்றுமதியும் செய்யாமல் 17 மாதங்களுக்கு இறக்குமதி செய்வதற்கு போதுமான நிதி ஒதுக்கம் இலங்கைத் திறைசேரியில் இருந்தது.

சிங்கள மக்களுடைய உற்பத்தி பொருட்கள் உள்ளூர் சந்தைகளிலேயே போட்டியிட்டன. அவர்கள், குளக்கட்டுமானப் பணிகள், தாதுகோபுரம் அமைத்தல், சேனை பயிர்ச்செய்கை உள்ளிட்ட விவசாயம் சார்ந்த பணிகளிலேயே ஈடுபட்டனர். உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படக் கூடிய உற்பத்திப் பொருட்கள் குறித்து அவர்களின் பார்வை இருக்கவில்லை.

-ஆனால், உள்நாட்டு பொருளாதாரத்தின் வலிமையில் இவர்களது பங்கும் பிரதானமாகவிருந்தது. முஸ்லிம்களும் ஏனைய இந்தியர்களும் வியாபாரத்தில் செல்வாக்கு செலுத்தினர். இந்தியர்களின் தலையீட்டில் இலங்கையின் சிங்கள, தமிழ் சினிமாவும் வளர்ச்சி கண்டது. இவ்வாறு எல்லா புறத்திலிருந்தும் பொருளாதாரத்தின் உறுதித்தன்மைக்கான போசாக்கு கிடைத்தது. சுதந்திரத்திற்கு முன்பு பிரித்தானிய இலங்கையில் பிரிவினைவாத போக்கினை மீறிய ஒன்றுபட்ட சமூகத்தின் (இலங்கையர்) வெற்றியாக இது இருந்தது. ஆனாலும், 1920 இல் பேரினவாத கருத்தியலவேரூன்ற ஆரம்பித்துவிட்டிருந்து. இதுவும் வர்த்தக நலன் சார்ந்த போட்டியினால் தோற்றுவிக்கப்பட்டது.

1948 இல் ஜப்பானின்

தலாவருமானம் 90 அமெரிக்க டொலராகவும், இரண்டாவது இடத்தில் இருந்த இலங்கையின் தலாவருமானம் 89 அமெரிக்க டொலராகவும் இருந்தது. ஆனால், இன்றுபோலவே அன்றும் தேசிய உற்பத்தியை அனுபவிப்பவர்கள் சிறுபான்மை மேட்டுக்குடிகளாகவிருந்தனர்.

தற்போதைய புள்ளிவிபரத்தின்படி, உயர்மட்டத்தில் உள்ள 10 சதவீதமானோர் தேசிய உற்பத்தியில் 38.7 சதவீதத்தை அனுபவித்து வருவதுடன், 10 சதவீத கீழ்மட்ட சனம் வெறும் 1.1 சதவீதத்தையே அனுபவித்து வருகின்றமை கவனிக்கத்தக்கது. நாட்டில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வை இது அம்பலப்படுத்துகிறது. இந்தக் கீழ் மட்டச் சனத்தில் பெரும்பான்மையினராக தோட்டத் தொழிலாளர்கள் அன்றுமுதல் இன்றுவரையில் இருக்கிறார்கள்என்பது அவலமாகும்.

சுதந்திரத்திற்கு முன்பு பெருந்தோட்டத்துறை பெரும் இலாபம் ஈட்டியபோது, வறுமையில் உழன்ற தோட்டத் தொழிலாளர்களால் 10 சதத்தால் சம்பளத்தை உயர்த்தி தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டு 1940 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பொலிசாரால் ஒடுக்கப்பட்டது. இதன்போதே கோவிந்தன் என்ற துடிப்பான இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டார். ஜனவரி 10 ஆம் திகதியென்பது மலையகத் தியாகிகளை நினைவுகூரும் தினமாகும்.

இவ்வாறே தொழிலாளர்களின் சம்பள உயர்வு போராட்டம் இன்றுவரையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

1948 இல் உலகச் சந்தையில் 200 அமெரிக்க டொலர் ஈட்டினால் ஒரு டொலர் இலங்கைக்கானது. ஆனால், இன்று 2000 அமெரிக்க டொலருக்கே ஒரு அமெரிக்க டொலர் கிடைக்கிறது. நாளுக்கு நாள் இதன் இடைவெளியும் விரிந்துகொண்டே செல்கிறது. இவ்வாறு இலங்கையின் பொருளாதாரம் வீழ்த்தப்பட்டமைக்கான பிரதான காரணமாகவிருப்பது ஆட்சியதிகாரத்திற்காக பிரிவினை வாதத்தை விதைத்து மக்களை பிளவுபடுத்தியமையே ஆகும்.

அதனால், ஆட்சியாளர்களின் ஊழல், மோசடி, அழிவுகர பொருளாதார கொள்கை உள்ளிட்ட நாசக்கார வேலைகள் எல்லாம் பிரிவினைவாத கோசத்தால் மூடிமறைக்கப்படுகின்றன.

அதன்படி, ஆளும் வர்க்கத்தின் இருப்புக்கு அச்சுறுத்தலாகவிருந்த இடதுசாரிகளுக்கு 1947 இல் பெருந்தோட்ட மக்கள் ஆதரவாக வாக்களித்ததன் காரணத்தால் சுதந்திரத்தின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஸ்தாபகர் டீ.எஸ்.சேனநாயக்கவின் தலைமையில் மலையக மக்களின் வாக்குரிமையும் குடியுரிமையும் பறிக்கப்பட்டு அம்மக்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து தமது இருப்பு குறித்த கேள்வி எழுந்தமையால் இந்திய வம்சாவளிகள் பலரும் இலங்கையில் இருந்து இடம்பெயர தலைப்பட்டனர். பெருந்தோட்டங்களை விட்டும் வெளியேறினர். இது இலங்கை பொருளாதார சரிவின் தொடக்கமாகும்.

அதனையடுத்து 1956 கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள சட்டம் இலங்கை பொருளாதாரத்திற்கு பலத்த அடியாய் இருந்தது. சிங்கள மொழி தவிர்ந்த ஏனைய மொழி ஊடாக வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் அதிருப்தி அடைந்தனர்.

பலரும் தமது தொழிலை கைவிட நிர்பந்திக்கப்பட்டனர். பொருளாதார நிபுணர்கள் பலரும் நாட்டை விட்டு வெளியேறினர். முதலீட்டு வரவுகள் தடைபட்டன. அதற்கடுத்த கட்டமாக ஆட்சியாளர்களாலும் சிங்கள மேட்டுக்குடி முதலாளிகளாலும் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட இனவாத, மதவாத கலவரங்களில் இலங்கையர்கள் மேலும் பிளவுபட்டுப்போயினர்.

தொழிலாளர் வர்க்கம் தங்களுக்குள் மோதி அழிந்தன. உடைமைகள் அழிப்பு, உயிரிழப்புகள் என்று மரண ஓலங்கள் எழுந்தன. இதில் சிறுபாண்மையினர் நாதியற்றவர் களாயினர். அதனால் பேரினவாதம் நாட்டில் உக்கிரமடைந்தது போலவே சிங்களவர்களுக்கு எதிரான சிறுபான்மையினரின் இனவாதமும் மேலோங்க ஆரம்பித்தது. மக்கள் மத்தியில் குரோதமும், வெறுப்பும், பகைமையும் வேரூன்றியது. சிறுபான்மை மக்களும் கூட வடக்கு தமிழர்கள், கிழக்குத் தமிழர்கள், மலையகத்தவர்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் என்று பிளவுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு நந்தவனத்தில் பூத்துக் குலுங்கும் பல வர்ண மலர்களைப் போல பண்பாடுகள் பலவும் அழகானவைதான். ஆனால், இவர்கள் இனவாத, மதவாத மற்றும் பிரதேசவாத ரீதியில் துண்டாடப்பட்டுள்ளமை வேதனைக்குரிய விடயம். இது அவர்களின் தலைவர்களுக்கு காசுபார்த்தல், அரசியல் அதிகாரம் என்று பயனாகியிருக்கிறது என்பதும் கவனிக்கத்தக்க விடயமாகும்.

பிரிவினைவாதம் தமது இருப்புக்கு தக்க பாதுகாப்பை வழங்குவதையும், வருவாய்க்கான அட்சயப்பாத்திரமாய் விளங்குவதையும் நன்கறிந்த ஆட்சியாளர்கள் 1970, 1977, 1989, 2018, 2019 என்று தொடர்ந்து இனக்கலவரங்கள் உருவாவதற்கு காரணமாயினர். இதில் பாரிய இலாபத்தையும் கண்டனர்.

கோட்டாபய ராஜபக்ஸ பெற்ற மாபெரும் தேர்தல் வெற்றி இதன் பின்புலத்தில் அமைந்த அண்மைய நிகழ்வாகும். ஆனால், இந்நிலையை எட்டும்போது நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தே விட்டது. அதனாலேயே இலங்கையில் தற்போது எழுந்த எழுச்சி போராட்டங்களின் போது இனவாதம் மற்றும் மதவாதத்திற்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.


நாட்டின் தேசிய இனங்களுக்கிடையில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதும் சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளை ஏற்றுக்கொள்வதும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் பிரதான பங்குவகிப்பதாக இருக்கிறது. அவ்வாறு தேசிய ரீதியில் மக்கள் ஒன்றுபடும்போது மக்களை பிளவுப்படுத்தி ஏமாற்றிய அரசியற் கலாச்சாரங்கள் எல்லாம் அடிபட்டு அழிந்துபோகும். அந்தக் காலமே தற்போது பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஆக, நாடு முன்னேற வேண்டுமாயின் மக்களை பிரிப்பவர்களுக்கு சாவுமணி அடித்தேயாக வேண்டும்.

**facebook:Sadhees Selvaraj**



# ஜெயந்தீசனின் குட்டிக் கதைகள்

# ‘தாலி’பான்




என்ரை அக்கா எனக்குப் போன் பண்ணினவா. ஆனா அவ என்ரை அக்கா இல்லை. ஆனா நான் பீரோக் கிளீனிங் வேலை செய்யேக்கை அவவும் வேலை செய்தவா. அப்ப அவவை எல்லாரும் அக்கா எண்டுதான் கூப்பிட்டினம். அதாலைதான் அவ இப்ப என்ரை அக்கா.

ஆனா அவ எனக்கு இளமை. அவவிண்ட புருஷன் ஒரு தலிபான் எண்டு சொல்லேக்கை நான் நடுங்கீட்டன். "அவர் ஆபுகானிஸ்தானோ?" எண்டு கேக்க அவ விழுந்து விழுந்து சிரிச்சா.

"ஜெயந்தீஸன், அவர் சுத்தமான தமிழர், பண்டிதர்." எண்டா.

எனக்குப் பண்டிதரெண்டாப் பயம். அதுக்கு நான் பேசிற மோசமான தமிழ்தான் காரணம்.

"அக்கா, எனக்குத் திருக்குறளைப் படிக்க விளங்காது. நான் உங்கடை வீட்டுக்கு வந்தா அவர் எனக்கு அதை விளங்கப்படுத்துவாரா?"

அப்பவும் அக்கா விழுந்து விழுந்து சிரிக்கிறா.

"அக்கா, ஏன் உங்களுக்கு இப்பிடிச் சிரிப்பு? நான் வள்ளுவனைப் படிக்கிறது இப்ப மோட் இல்லையோ?"

"ஜெயந்தீஸன். அவர் உண்மையான பண்டிதர் இல்லை. அது அவற்றைப் பூனைப்பேர்."

"பூனைப்பேரோ?"

"எஸ்க்யூஸ் மீ, அது அவற்றை புனைபேர். ஆனா, அவர் முடு கூடப் படிச்சதில்லை."

"அக்கா. அவர் சுத்தமான தமிழர் எண்டிறியள். நான் அவரிட்டை தமிழ் படிக்கமுடியுமோ?"

"அவர் தமிழ் கதைக்கிறது எனக்கும் விளங்காது." என்ற அக்கா "எங்கடை குளிர்சாதனப் பெட்டியிலை இப்ப கொஞ்சம்தான் குளிர் வருகுது. அதைத் திருத்த உங்களுக்கு ஆரையும் தெரியுமே?" எனக் கேட்டார்.

"ஆரும் தேவையில்லை. நான் வந்து பாக்கிறன்." என்றபோது "எவ்வளவு?" எண்டு கேட்டா.

"அக்கா உங்களுக்கு எண்டா எல்லாம் இலவசம்தான்" என்றபோது அவவின் முகத்தில் பெருகிய நன்றிப் பெருக்கைப் பார்க்க எனக்கு அதிக விழிகள் தேவை எண்டு பட்டது.

ஒரு வெள்ளிக்கிழமை பின்னேரம் அவவின்ர வீட்டை போனபோது அவர் இல்லை.

"எப்ப வருவார்?"

"பிந்தி, பிந்தித்தான் வருவார்." எண்டபடி அவ குளிர்சாதனப் பெட்டியைக் காட்டினா.

குளிரைக் கூட்டிற பட்டனை முறுக்கெண்டு முறுக்கினன். மூண்டு நிமிடத்துக்குப் பிறகு பெட்டிக்குள்ள கையை வைச்சா சைபீரியாவுக்குப் போன மாதிரி இருந்தது.

"அக்கா, வாங்கோ. கையை வையுங்கோ" எண்டு கத்தினன்.

"எதுக்கை?" எண்டு கூச்சத்தோடை கேட்டா.

"குளிர்சாதனப் பெட்டிக்கை."

கையை வைச்சா, பிறகு "ஐயோ" எண்டு கத்தினா. அவவிடை கை விறைச்சுப் போய் இருந்திது. நான் அதனைப் பிடிச்சுத் தடவித் தடவி விறைப்பை நீக்கிவிட்டு "அக்கா, நீங்கள் கலியாணம் முடிச்சனியள். ஏன் உங்கடை கழுத்தில தாலி இல்லை?" எண்டு கேட்டன்.

"பொறுங்க." எண்டு சொல்லிவிட்டு அவ ஒரு அறையுக்க நுழைஞ்சா.

பிறகு ஒரு தராசோட வந்தா.

"ஏன் தராசு?" எண்டு கேட்டன்.

"நிறுக்க." எண்டுவிட்டு பிறகும் அறையுக்கை நுழைஞ்சா.

பிறகு ஒரு பெட்டியைத் தள்ளிக்கொண்டு வந்தா.

"திறவும்" எண்டா.

திறந்ததும் நான் மயங்கி விழுந்தேன்.

விழித்தபோது நான் பெட்டியில் கண்ட தாலி தராசில் இருந்தது.

"இதை எப்பிடிப் போடுறது? பாருங்க நிறையை." எனச் சொன்னா. பாத்தன்.

"உங்கட அவர் ஓர் தாலிபான்" எண்டு மீண்டும் மயங்கி அக்கா மீது விழுந்தன்.



# மிக்சி கிரைண்டரும் அவளும்...!

இன்னும் கொஞ்சம் தூங்க வேண்டும்
என்கிறது மனசு
இல்லையில்லை எழுந்து விடு
என்கிறது மூளை..

கெஞ்சும் இதயத்தின் குரல்
உச்சத்தில் நின்று
குரல் கொடுத்துக்
களைத்துப் போகிறது..

ஆனாலும்
மூளைச் சலவைகளுக்குள்
தன்னைத் தொலைத்து விடும்
ரகமில்லை அவள்

தோசைக்கும் இட்லிக்குமாக
வலிகளைக் கடக்கும்
மிக்சி கிரைண்டருக்கும்
அவளுக்கும் பெரிதாக
வித்தியாசம் கிடையாது

தேவைக்காக மட்டுமே
அழுத்தப்படுவதும்
தேவைகள் முடிந்ததும்
தூக்கி மூலையில் வீசப்படுவதும்
வாடிக்கையாக

அவள்
எப்போதும் மாற்றங்கள்
இல்லாத மாற்றங்களை நோக்கி
என்றாவது ஒரு நாள்
அவள் ஓய்வெடுக்கக் கூடும்
அப்போது பழுதடைந்த
மிக்சியைப் போலவே
வீட்டிலுள்ள பாவனையற்ற
பொருட்களோடு
துணையாக இருக்கக் கூடும்.

பூர்ணிமா கருணாகரன்
Facebook: Poornima Karunakaran

George

# யுத்தக் குற்றங்களுக்கான பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்



## அட்மிரல் தக்கிஜிரோ ஒனிஷி (Takijiro Onishi, 1891-1945) அவர்களின் பாணி!

இன்றும் கொண்டாடப்படுகின்றார் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ். அவரது தேசிய இராணுவத்தில் மலாயாவில் இருந்த இந்தியத் தமிழர்கள் பெருமளவில் போராளிகளாக இணைந்து கொண்டனர். ஜப்பானியத் துருப்புக்களிடம் அவர்கள் கையளிக்கப்பட்டு இறக்கும் வரை வேலை வாங்கப்பட்டோராயும், மிக மோசமான இன்னல்களை அனுபவித்தும் இறந்துபட்டனர். முத்தம்மாள் பழனிச்சாமி என்ற மலேசிய எழுத்தாளர் “போற்றப்படாத மாவீர்கள்” என்ற தலைப்பில், சியாம்(தாய்லாந்து) ரயில் பாதை அமைக்கவென்று கொண்டு செல்லப்பட்ட பலநூறு தமிழர்களில் உயிருடன் மீண்ட ஒரேயொரு பொன்னுச்சாமி என்பரின் கதையினை உருக்கமாக எழுதி வைத்திருக்கின்றார்.

தேசிய இராணுவத்தில் இணைந்த தமிழர்கள் ஜப்பானியத் துருப்புக்களிடம் பட்ட அவஸ்தைகளையும் இன்னபிறவற்றையும் ப.சிங்காரம் அவர்கள் “புயலிலே ஒரு தோணி”, “கடலுக்கு அப்பால்” என்ற தான் எழுதிய இரண்டேயிரண்டு நாவல்களிலும் குறித்துப் போகின்றார். தென்கிழக்காசியாவில் இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் புரிந்த போர்க்குற்றங்கள் பற்றி சொல்லி மாளாது. ஜப்பானியத் துருப்புக்களின் பாலியல் தேவைகளுக்காக கொரியாவின் பெண்களை இராணுவப் பாலியல் தொழில் நிலையங்கள் அமைத்துப் பயன்படுத்தியதற்கு இன்னமும் தமக்குக் கொடுக்கப் படவேண்டிய ஈடுசெய்தொகைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர் இன்றும் உயிருடனிருக்கின்ற அந்தப் பெண்கள்.

மிகுந்த தயக்கத்துடனேயே ஜப்பான் தான் ஆக்கிரமித்த நாடுகளின் பெயர்களை சுமார் எழுபது வருடங்களின் பின்னர் தாழ்ந்த குரலில் உச்சரிக்கின்றது. சீனா, கொரியா , பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் அவர்கள் செய்த அட்டூழியங்கள் சொல்லி மாளாதவை. ஆனால் மிக மோசமான போர்க் குற்றவாளியான இந்த நாட்டின் கடந்தகாலப் போர்க் குற்றங்கள் அந்த நாட்டில் நினைக்கப்படுவதில்லை. மாறாக அவை போற்றப்படுகின்றன.

**நடராசா சுசீந்திரன்**

நினைவாலயங்களாக, மாவீர்களாக!

பலிகொடுப்பதற்கான தேவை உருவாகின்றபோது, பல நூற்றாண்டு களைக் கடந்த பன்னெடுங்கால வீரப் பிரதாபங்கள் மீள உயிர்பிக்கப்படுவது நடைபெறும். இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பான் பலத்த அழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருகின்றது. கடலெங்கும் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் மிகுதியாக நிலைகொண்டிருகின்றன. ஆளணிப் பற்றாக்குறையும் சொற்ப விமானங்களே கைவசம் இருந்தமையாலும் மிகச் சொற்பமான தம் தரப்பு இழப்புக்களுடன் பாரிய அழிவுகளை எதிரிக்கு ஏற்படுத்தும் வியூகமொன்றினை வகுக்க வேண்டிய தேவை ஜப்பானிய இராணுவ உயரதிகாரிகளுக்கு ஏற்பட்டது.

இவ்வாறு ஜப்பான் நாடு, தமக்கு மிகக் குறைந்த உயிர் இழப்பில் எதிரிக்கு ஆகக் கூடுதலான இழப்பினை ஏற்படுத்த மேற்கொண்ட நடவடிக்கையே “தற்கொலை விமானப்படை”யாகும். எரிபொருளுக்கும் தனித்த விமானி ஒருவர் இருப்பதற்கு மட்டுமான கொள்ளளவு போக மிகுதி வெடிகுண்டுகளால் நிரப்பப் பட்ட விமானத்தினை ஓட்டிப்போய்

எதிரியின் நிலைகளுடன் மோதுதல் என்பது அத் தாக்குதல் முறை. இது ஏதோ இரண்டாம் உலகப் போரில் கண்டடையப் பட்ட போர்முறையல்ல மாறாக இது பல நூற்றாண்டுகாலப் பண்பாட்டின் உச்ச நிலைப் போர்வியூகம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இவ் வகையான நடவடிக்கையின், வியூகத்தின் அண்மைக்கால உதாரணமாக 11 ம் திகதி செப்டெம்பர் 2001 இல் நியூயோர்க்கின் உலக வர்த்தக நிலையத்தின் மீது மேற்கொண்ட முதலாவது விமானத் தாக்குதலைக் குறிப்பிடலாம். ஜப்பானியர்கள் அதற்கு, அந்த வியூகத்திற்கு “கமிகாசே” என்று பெயரிட்டனர்.

கமிகாசே என்பது “ஆண்டவப் புயல்” என்று அர்த்தமாகும். பதின்மூன்றாம் நூற்றாண்டின் கடைசிக் காலங்களில் ஜப்பான்மீது குப்பிளாய் கானின் மொங்கோலியப் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. பின் பேச்சுவார்த்தைக்கு அனுப்பப்பட்ட குப்பிளாய் கானின் தூதுக் குழுவினர் தலைகளை வெட்டித் திருப்பி அனுப்பியது ஜப்பான். இதனால் குப்பிளாய் கான் சுமார் ஒருலட்சத்து நாற்பதாயிரம் படையினருடன் ஜப்பான் மீது படையெடுத்தார். திடீரென கிழக்குச் சீனக் கடலில் எழுந்து வீசிய பெரும் புயலில் குப்பிளாய் கானின் படைகள் மாண்டன. ஜப்பான் காப்பற்றப்பட்டது. அன்று வீசிய அந்தப் பயங்கரப் புயல் “இறைவனின் சித்தம்”, “கடவுள் ஏவிய காற்று” என்று ஜப்பானியர்களின் நம்பிக்கையில் ஆழப்பதிந்திருக்கின்றது.

இந்தப் பெயரையும், இந்த இராணுவ நடவடிக்கையினையும் ஜப்பானிய மன்னரிடம் முன்மொழிந்தவர், இரண்டாம் உலகப்போரில் விமானப்படை உயரதிகாரியான அட்மிரல் தக்கிஜீரோ ஒனிஷி (Takijiro Onishi-1891-1945) என்பவர்.

தக்கிஜீரோ ஒனிஷி அவர்களின் திட்டத்தின்படி 20 தொடக்கம் 21 வயது கெட்டிக்கார மாணவர்களைத் தெரிந்தெடுத்து மிகக் குறுகியகால விமான ஓட்டிப் பயிற்சியளித்து வெடிகுண்டு விமானங்களில் ஏறி எதிரிகளின் நிலைகளுடன் மோதித் தற்கொலைக்கு அனுப்புவது. இவ்வாறு தற்கொலை விமானிகளாக சுமார் 4000 இளைஞர்கள் இரண்டாம் உலகப் போரின்போது கொல்லப்பட்டிருகின்றனர் என்றும் கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்கள், பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலகொண்டிருந்த அமெரிக்கக் கடற்படைத்தளங்கள், பேர்ள் ஹாபர் (Pearl Harbor) என்ற துறைமுகம் போன்றவை மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தக்கிஜீரோ ஒனிஷியின் வெற்றிகரமான தாக்குதல்கள் என்று பேர்ள் ஹாபர் (Pearl Harbor) துறைமுகத் தாக்குதல், பிலிப்பைன்ஸ் நாட்டின் அமெரிக்க விமானத்தளத்தில் இருந்த கிட்டத்தட்ட அனைத்து போர்விமானங்களும் அழிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றனர்.

மேலும் சீனாவில் சூறையாடப்பட்ட பெருந்தொகைச் செல்வங்களை ஜப்பானுக்குள் கடல் மற்றும் வான்வழியூடாகக் கொண்டு வந்து சேர்த்திலும் தக்கிஜீரோ ஒனிஷியின் பங்களிப்பு இருந்திருகின்றது. முதலாம் உலகப் போரின்போது இங்கிலாந்திலும் பிரான்சிலும் தங்கியிருந்து போர் விமானங்களை வெற்றிகரமாக இயக்குதல் பற்றிய அறிவினைச் சேகரித்திருகின்றார். உலகப் போரின் முடிவில் தக்கிஜீரோ ஒனிஷியால் ஏற்பாடு செய்யப் பட்ட கமிகாசே- விமானிகள் தற்கொலைப் படையணியின் உருவாக்கமும் தாக்குதல்களும் அர்த்தமற்ற, “விசுப்புக்கு வேட்டையாடிய”, மாகொடிய அநியாயச் செயல்கள் என்றே சொல்லப்படுகின்றன. ஆனாலும் தக்கிஜீரோ ஒனிஷி அவர்கள் எடுத்த, தன் உயிரினை மாய்த்துக்கொள்ளும் முடிவின் காரணமாக இன்றும் ஜப்பானில் சிலைவைத்து நினைவுகூரப்படுகின்றார்.

சமுராய் மரபு என்பது நீண்டகாலமாக ஜப்பானில் நிலவிய, சில நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கைவிடப்பட்ட “மானங்காத்தல்” மரபாகும். அதன்படி சிக்கன வாழ்வு, ராஜ விசுவாசம், சண்டை-தற்காப்புக் கலைகளில் தேர்ச்சி மரணம் வரை மானத்தினைப் பேணுதல் வழிவழி வந்த பண்பாடு என்று கொள்ளப்படுகின்றது. ஜப்பான் சரணடைவதை தக்கிஜீரோ ஒனிஷி ஒருபோதும் விரும்பவில்லை. ஆனாலும் ஜப்பானிய மன்னர் சரணடைவு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்ட பின்னர் இரண்டாம் உலகப்போர் முடிவிற்கு வந்தது.

உலகப்போரின் இறுதியில் தான் மேற்கொண்ட அர்த்தமில்லாத அநியாய கமிகாசே விமானிகள் தற்கொலைப் படை உருவாக்கத்திற்காக பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாட்டினையும், மன்னிப்புக் கேட்கவேண்டிய மனச் சாட்சியினையும் உணர்ந்து தக்கிஜீரோ ஒனிஷி தனக்குத் தானே தண்டனை வழங்க முன்வந்தார்.

சமுராய் மரபின் படி தோற்றுப்போன ஒரு சமுராய் வீரன், தனது வாளினால் தன் வயிற்றினைக் கிழிப்பான். அதன் வேதனை உணரப்படுமுன்னரே, அந்த வீரனால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அவனது உதவியாள் தயாராக இருக்கும் சமுராய் வாளினால் அந்த வீரனது தலையினை ஒரே வெட்டில் உடலில் இருந்து துண்டித்து விடவேண்டும்.

இந்தக் கௌரவத் தற்கொலையினை “செப்புக்கு“ என்று கூறப்படுகின்றது. தக்கிஜீரோ ஒனிஷியவர்கள் போர் முடிவுக்கு வந்த அடுத்த நாள், அதாவது 16ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 1945 இல் செப்புக்கு முறையில் தனது தற்கொலைக்கு ஏற்பாடு செய்தார். தன் தவறுணர்ந்து ஜப்பானிய மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கடிதம் எழுதினார். தனது வயிற்றினை தானே வாளால் கிழித்தார். ஆனால் தலையினை வெட்டுவிடுவதற்கு ஆள் வைத்திருக்கவில்லை. தனக்குத்தானே தண்டனை வழங்கும் நிமித்தம் அடுத்த பதினைந்து மணி நேரம் அந்த மரண வலியினை தன் தவறுகளுக்காக ஈடுசெய்தார். இறுதியில் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகையுடன் மரனத்தினை ஏற்றுக்கொண்டார். தந்து மரணத்தினைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டவர் எடுத்த புகைப்படம் இதனைக் கூறி நிற்கின்றது.



**Facebook: Nadarajah Suseendran**

# பாவம்



மொனிக்கா

அஸ்தமனங்கள் சூரியனை
ஆட்கொண்டதா?

சூரியன் அஸ்தமனத்துக்குள்
சரணடைந்ததா?

மதங்களுக்குள் அரசியல் புகுந்ததா?
அரசியலுக்குள் மதங்கள் புகுந்ததா?

இன்று
ஒரு போயா தினம்.

ஒலிபெருக்கியில் பன ஓயாது
ஒலித்துக் கொண்டிருந்தது.

புண்ணிய பூமியில் பூஜைக்காய்
பூப்பறித்து செல்லும் பெண்கள்.

என் தோட்டத்து வேலியில்
பூத்துக் கிடந்த
நந்தியாவட்டை பூக்களும்
திருட்டு போயிருந்தன.

போதி மரத்தின் கீழ்
புத்த பெருமான் விழிகள் மூடி
அமர்ந்திருப்பது
விடிந்தும் எரிகின்ற
விளக்குகளின் வெளிச்சத்தில்
பிரகாசமாய் தெரிந்தது....

கலங்கிய நீரோடையில்
சிட்டுக்குருவிகள் சிறகு நனைத்துப்
பறந்தன.

பெண்கள் சேலை முந்தானையை
தரையில் இழுத்துச் செல்வது
போன்று சில புறாக்கள் நனைந்த
சிறகுகளை தரையில் நீட்டி
இழுத்துச் சென்றன.

பெண் புறாக்களாக இருக்குமோ?

எங்கோ ஒரு சேவல் கூவி
செட்டை அடித்து ஓய்ந்தது.

எங்கும் துளசி செடிகள்
தொட்டா சினுங்கி செடிகள்...
குப்பை மேனி செடிகள்...
கற்பூரவள்ளி செடிகள்...
பெயர் தெரியாத
நிறைய மருத்துவ செடிகள்..
எங்கும் வாசனையாக.

விடிந்ததும் விடியாத விடியலில்
மெல்லிய பனித்திரை
அந்த ஊரை மூடிக் கிடந்தது..

மரக்கிளைகளில் இலைகள்
நீர்த்துளிகளின் ஈரம் சுமந்து
நின்றன.

அங்கு ஒரு கலங்கிய நீரோடை
குப்பைகளை சுமந்து தள்ளாடி
தள்ளாடி ஓடிக்கொண்டிருந்தது.

வீட்டில் எஞ்சிய குப்பைகளை
இந்த ஓடையில் வீசிவிட்டு செல்லும்
மனிதர்கள்.

சில தெரு நாய்கள்
அந்த கலங்கிய நீரோடையில்
அழுகிய உணவுகளை
சாப்பிட்டு கொண்டிருந்தன.

சில நாய்கள் மீது தீ தழும்புகள்.
சில நாய்கள் மீது
காயத்தின் வடுக்கள்...

சில நாய்கள் ஒரு கால் உடைந்து
மூன்று கால்களில்
நொண்டி நொண்டி
நடந்து சென்றன.

புகை கக்கி வேகமாய் பறக்கும்
வாகனங்கள்.

அந்த பாதையோரம் அச்சமின்றி
படுத்துக் கிடந்த சில நாய்கள்.

அவை பசி மயக்கத்தாலும்

தூக்க கலக்கத்தாலும் சோர்வுற்று
படுத்துக் கிடந்தன.

அவற்றின் கண்களில் தெரிந்த
சொல்ல முடியாத வேதனை.

நள்ளிரவில் பாம்பு, பன்றி,
குரங்குகள். யானைகள்.
திருடர்கள், பேய்கள்...
எது வந்தாலும் விரட்டி அடித்து
ஊரை விடியும் வரை
காவல் காக்கும் இந்த நாய்களுக்கு
கிடைக்கும் பரிசு தான்
இந்த அழியாத வடுக்களும்
அவமான சொற்களும்.

ஒரு பெரும் மரத்துக்கு கீழ்
சின்னஞ் சிறிய பெட்டிக்கடை.

புழுதிஅந்த கதவினை
மறைத்து இருந்தது.

அங்கே
சிறிய ஒரு கண்ணாடி பெட்டிக்குள்
வட்ட வட்டமான ரொட்டிகள்
அவை எல்லாவற்றையும்
வாங்கி கொண்டு பணத்தை
கொடுக்கின்றேன்.

நோனா, சம்பல் என்றாள்.

வேண்டாம் எனக்கூறி
அந்த ரொட்டிகளை அங்கிருந்த
நாய்களுக்கு ஒவ்வொன்றாக
கொடுக்கின்றேன்.

இன்னும் சில நாய்கள்
எங்கிருந்தோ ஓடிவந்தன.

ரொட்டியை
கடிக்காமல் விழுங்கும் வேகம்...

சில வேகமாய்
வாலை ஆட்டிக் கொண்டே
உண்டன.

சில என் கைகளை முத்தமிட்டன.
சில என்னைச் சுற்றி வட்டமிட்டன.
சில என்னை நுகர்ந்து பார்த்தன.
சில தனது முன்னங் கால்களை
தரையில் பதித்து நன்றி கூறின.

அந்த பெண்ணின் பற்கள்
வெற்றிலைக் கறை படிந்த சிவப்பாய்
எண்ணை வடிந்த கூந்தல்.

ஒரு சீத்தை துணியை
சாரம் போன்று உடுத்தியிருந்தாள்.

அவளது நலிந்த உடற் தோற்றம்
அவளது ஏழ்மையைக் காட்டியது.

அவை இனி
தினம் தினம் உன் வருகைக்காக
காத்திருக்கும் என்றாள்.

என் வீடு அந்த மலை
அடிவாரத்தில்.

நடந்து செல்ல
ஒரு மணித்தியாலம் செல்லும்.

நான் கடை திறக்க பிந்தினால் என்
வீடுவரை வந்து
எனக்காக காவலிருந்து
என்னை கூட்டி வரும் நாய்கள்
இவை.

நோனா நீங்கள் நாய்களுக்கு
இவ்வளவு ரொட்டிகளையும் வாங்கி
கொடுக்கும்போது என் வயிறு
எரிந்து போயிற்று.

எனக்கு மூன்று பிள்ளைகள்
ஒரு நேர உணவு தான்...

பேச முடியாத ஜீவன்கள் பாவம்
என்றேன்...

அவை பசியுடன் வாழ பழகிக்
கொண்டவை... என்றாள்.

அவளது கைகளில் கொஞ்சம்
பணத்தை கொடுத்து உன்
பிள்ளைகளுக்கு இதில் உணவை
வாங்கி கொடு என்றேன்.

திடீரென காலில் விழுந்து
கும்பிட்டாள்..

அவளது கைகளை பிடித்து எழ
சொன்னேன்...

நோனா...
நாடு நாசமாய் போய் விட்டது...

இந்த குறுகிய காலத்தில் எத்தனை
வேதனைகள்

எரிவாயு வாங்க வரிசையில் நின்று
மயங்கி விழுந்து இறந்தவர்கள்
எத்தனை பேர்...

எரிவாயு வீடுகளில் வெடித்து
அதில் இறந்தவர்கள் ஏழுபேர்....

பசளை இல்லாமல் விவசாயம்
செத்துப் போய் விட்டது.

விலைவாசி உயர்ந்து கொண்டே
போகுது.

மின்சார கட்டணம் இரு மடங்காக
உயர்ந்துள்ளது...

பள்ளிக்கூடங்களுக்கு பிள்ளைகள்
தேங்காய் துண்டுகளை எடுத்து
செல்லும் கொடுமை.

எங்கும் போதை பொருள்
பிள்ளைகள் நாசமாய் போய்
கொண்டு இருக்கிறார்கள்...

மருத்துவ மனைகளில் மருந்துகள்
இல்லை.

மருத்துவர்கள் எல்லாம்
வெளிநாடுகளுக்கு வேலை தேடி
செல்கிறார்கள்.
தொழிற்சாலைகள் நிறைய
மூடப்பட்டு விட்டன. தினம்

தினம் கொலைகள்....
கொள்ளைகள்.

கூலி வேலைக்கு சென்றாலும்
கிடைக்கும் பணத்தில்

ஒரு நேர உணவு தான்.

சிறையில் மக்கள் நிரம்பி
விகிறார்கள்.
நாடு நாசமாய் போய்விட்டது...

வெளிநாட்டுக்கு வேலைகள் தேடி
போன பெண்கள் அறைகளில்
அடைக்கப்பட்டு விபச்சாரத்திற்காக
விற்கப்படுகிறார்கள்.

அந்த பெண்கள் தங்களை
காப்பாற்றி நாட்டுக்கு கூப்பிடும்படி
கூறியும் அரசாங்கம் அவர்களை
கூப்பிட பணம் இல்லை என
மறுத்து விட்டது.

எங்கள் எதிர்காலம்
சுடுகாடாகி விட்டது.

அவளது விழிகளில்
கண்ணீர் நிரம்பி இருந்தது.

நோனா இப்போது சொல்...
நாய்கள் பாவமா...?
நாங்கள் பாவமா...?

இதற்கான விடையை இன்னும்
தேடிக் கொண்டிருக்கின்றேன்.



# தோழர் குமாரசாமி பரராஜசிங்கம்

(1935:2007)

## வயதிற்கும் அநுபவத்திற்கும் மதிப்பளித்து மரியாதை நிமித்தம் தூரத்தே தள்ளி நிற்கும் போதில்

# ஓர் குழந்தையைப் போல் ஓடி வந்து இடைவெளியை அழிக்கும் நம் தோழர்

பதினைந்து வருட முன் பின்னிருக்கும் கலைச்செல்வனுடன் குணரத்தினராசாவின் கள்ளப் பாஸ்போட்டில் சிலிப்பரேற்றில் கனவான் போல் படுத்திருந்து ஜேர்மன் இலக்கியச் சந்திப்பிற்கு போனதிலிருந்து இன்றைய 32 வது பாரிஸ் சந்திப்பு வரை தோழர் பரா அவர்களைப் பார்ப்பதன் கணத்தில் எனக்கு ஒரு மானசீகமான ஆன்மபலம் வந்து சேர்வதை விபரிப்பது விடுதலையையும் சுதந்திரத்தையும் மாற்றுக் கருத்தின் மகிமையையும் விரித்துரைப்பதற்கு இணையானது.

ஆசிரியப் பெருந்தகை என்பதன் அர்த்தபூர்வமான எடுத்துரைப்பு என்பது சிறப்பான முன்னுதாரணமான வாழ்க்கைமுறை அறநெறிவாழ்வு வாய்மை சொல்லவரும் விடயதானங்களில் ஆழமான பரிச்சயம் மனோதிடம் உறுதி, த(ா)ன்முனைப்பின்மை கனிவு பொறுமை எனும் பூட்கை இப்படியாக அச்சொல் அனைத்தையும் அள்ளிக் கொண்டு வரும். கல்விப்பெருந்தகை செல்வப் பெருந்தகை என்பதற்கு வேறு வேறு விபரிப்புக்கள் விகுதிப்படும்.

ஆசிரியப் பெருந்தகையினை ஈரெழுத்திற் சுருக்கினாற் பரா எனப் பாற்படும். இவ்வகையில் நானும் நாங்களும் தோழர் பரா அவர்களுக்கு கற்றுக் குட்டி மாணவர்களே!

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை என்று தமிழ் மறையை மேலும் சுருக்கலாம். திருவள்ளுவர் வள வள என்று எழுதுவார் என்றும் ஓர் கருத்துண்டு. மேலும் சுருக்கின் பரா வாகும்.

உரைக்கின் ஒருவன் தன்னிடமுள்ள நல்ல குணங்கள் தன்னை விட்டு நீங்காதிருக்க வேண்டுமாயின் பொறுமையாக இருந்து பழக வேண்டும். பொறுமை தான் வாழ்வின் உயர்விற்கு வழிகாட்டி.

அதே நேரத்தில் ஓர் போராளிக்குரிய போர்க்குணாம்சம் அவருடன் ஜீவத்துடிப்பாய் சுவாசமாய் இயக்கமாய் இருந்து கொண்டிருப்பதே அவரின் முழுமை பெற்ற அடையாளம். இஸ்லாத்தில் கமால் என்னும் பரிபூரணத்தன்மை.

ஒரு இருபதாண்டுகள் புகலிடம் புதிய சிந்தனைகளுக்கும் மாற்றுக் கருத்துக்களினை மதிக்கும் பக்குவத்திற்கும் ஒரு சிலரையாவது தயார்படுத்தி வைத்திருக்கிறதெனின் அது தோழர் பரா அவர்கள் போட்ட அத்திவாரம். அவரின் நுண்ணறிவு இந்த இலக்கியச் சந்திப்பையாவது காப்பாற்றி விட வேண்டும் என்பதில் பெரு வேட்கை கொண்டு நிற்கிறது.

மாற்றுக் கருத்துக்கான வெளிகளைத் தமக்கு மட்டுமே உரிமை கோரி அடையாளப்படுத்துவதற்கெதிராக பரா தனிமனிதனாக நின்று குரலுயர்த்தியிருக்கிறார். இந்த ஒரு புள்ளியில் மட்டுமே அவர் அழுங்குப் பிடியராக இருந்து வருகிறார். இந்த ஓங்கியொலிக்கும் ஒரேயொரு குரல் அவரை அதிகாரத்தையும் தலைமையையும் காப்பாற்ற விரும்புவராக சிலரைக் கருத வைத்திருக்கிறது. இவ்விடயத்தில் தோழர் பரா அவர்களின் விடாக்கண்டத்தனம் மட்டுமெ இவ்விலக்கியச் சந்திப்பைக் காப்பாற்றி வந்துள்ளது.

அவரின் காரியார்த்தமான உழைப்பும் மதிநுட்பமும் இந்த நிலைக்கு காரணமாக இருந்திருக்கிறது. மாற்றுக் கருத்து என்றால் இலக்கியச் சந்திப்பு என்று நாம் எல்லோரும் கருதுகின்ற நிலைக்கு பலருடைய உழைப்போடு பரா அவர்களின் கடுழியம் முதன்மையானது. எழுதப் பேச இருக்கின்ற உரிமைக்கு முதல் எழுதவும் பேசவும் ஊக்கப்படுத்தவும் பத்திரிகையாளர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். படைப்பாளர்கள்

> “எழுதப் பேச இருக்கின்ற உரிமைக்கு முதல் எழுதவும் பேசவும் ஊக்கப்படுத்தவும் பத்திரிகையாளர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். படைப்பாளர்கள் எழுதியலாளர்கள் தங்கள் சுதந்திரத்தைப் பத்திரிகைகளிலும் ஊடகங்களிலுமே இனங் காண்கிறார்கள். படைப்பாளர்களின் புதியன முயற்சிக்கும் முனைப்பு ஆளுமை பத்திரிகை ஆசிரியர்களினாலேயே காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றது.
>
> இவ்வழியில் தாயகம் ஜோர்ஜ் குருசேவ், சிந்தனை பரா இவர்கள் இன்று வரை தனித்துவமானவர்கள். தாயகத்திற்கும் சிந்தனைக்கும் திருப்பி ஏங்கும் நிலைக்கு இதுவே காரணமாகும். எனது படைப்பின் முழுச் சுதந்திரமான மனநிலையை தாயகத்திலும் சிந்தனையிலுமே நான் அநுபவித்திருக்கிறேன்.”

எழுதியலாளர்கள் தங்கள் சுதந்திரத்தைப் பத்திரிகைகளிலும் ஊடகங்களிலுமே இனங்காண்கிறார்கள். படைப்பாளர்களின் புதியன முயற்சிக்கும் முனைப்பு ஆழுமை பத்திரிகை ஆசிரியர்களினாலேயே காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றது.

இவ்வழியில் தாயகம் ஜோர்ஜ் குருசேவ், சிந்தனை பரா இவர்கள் இன்று வரை தனித்துவமானவர்கள். தாயகத்திற்கும் சிந்தனைக்கும் திருப்பி ஏங்கும் நிலைக்கு இதுவே காரணமாகும். எனது படைப்பின் முழுச் சுதந்திரமான மனநிலையை தாயகத்திலும் சிந்தனையிலுமே நான் அநுபவித்திருக்கிறேன்.

இடதுசாரிச் சிந்தனைகளைப் புகலிடத்தில் பலர் பரப்புரை செய்தனர். ஆனால் கருத்தளவிலும் நடைமுறையிலும் பராவின் வாழ்வியல் அபூர்வமானது. தமிழ்த் தேசிய இனவாத பிரதேச சாதிய அடையாளங்கள் அவரில் கனவிலும் கவிந்ததில்லை.

சர்வதேசியம் கம்யூனிசம் பேசிய யாழ் உயர் வேளாளர்கள் சாதியம் தலித்தியம் என்று வரும்போது தமது சாதிப் புத்தியை மறைக்க முடியாமல் திணறுவதையும் உளறுவதையும் நாம் பார்த்து வருகிறோம். புகலிடத்தில் தலித் மாற்று விளிம்புநிலை அரசியல் அறிமுகமான காலத்திலிருந்து இன்றுவரை இவற்றின் தனித்துவத்தை அங்கிகரிப்பதிலும் தமிழ்ச்சமூகத்தில் தலித்தின் முதன்மையைப் பேணுவதிலும் ரொஸ்கிய சர்வதேசிய முகாமிலிருந்து வந்த தோழர் பரா காட்டிவரும் கரிசனம் நெகிழ்ச்சியையும் மெய்சிலிர்ப்பையும் கொண்டு வருவது. இதில் ஒரேயொரு தனிமனிதர் அவர்.

வேட்டை நாய்களுக்கும் உள்ளான் குஞ்சுகளிற்கும் உள்ள இடைவெளி அது. கம்யூனிஸ்டாக இருப்பதற்கான கடைசித் தருணமிது.

யயாதி தன் மகனிடம் கேட்கிறான்
மகனே இவ்வுலகின் சந்தோசங்கள் அனைத்தும் அநுபவித்துத் தீர என்னால் முடியவில்லை.
உனது இளமையை எனக்குத் தா
தோழர் பராவின் எழுபதாவது அகவை பூர்த்தியாகும் இவ்வேளை பரா எனும் என்றும் இளைஞனை நாம் கேட்போம் மகனே உனது கௌரவம் பேரன்பு மனிதநேயம் சமத்துவம் இவை எல்லாவற்றையும் எமக்குத் தா.

**சுகன்**

## அரசியல், சமூக வரலாற்றின் ஒரு நல்ல பொக்கிஷம்



சாதி, இனம், மொழி, மதம் மற்றும் இன்ன பிற எல்லைகளை அழித்தவொரு மனிதனுக்கு
நாங்கள் புரிந்தபடியும்
எங்களுக்குத் தெரிந்தபடியும்
எங்களால் முடிந்தபடியும்
மதிப்பளித்து இறுதி விடைபெற்றோம்.
அமைதி கொள்ள அது போதும்!
என்று தோழர் குமாரசாமி பரராஜசிங்கம் அவர்களின் மறைவின் பின்னர் எழுதியிருந்தோம்.

அவர் இறந்து பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. “பரா மாஸ்டர்” என்று எங்களால் செல்லமாக அழைக்கப்பட்ட தோழர் குமாரசாமி பரராஜசிங்கம் அவர்கள் தனது 72 ஆவது வயதில் 16.12.2007 இல் பெர்லினில் மாரடைப்பு காரணமாகக் காலமானார்.

இலங்கையில் இடதுசாரி அரசியலிலும், தொழிற்சங்க அரசியலிலும் நீண்டகால அனுபவம் மிக்க பரா அவர்கள் 1983 இல் இருந்து ஜெர்மனியில் ஸ்ருட்கார்ட் நகரத்திலும், பின்னர் 1997 இல் இருந்து தன் குடும்பத்தினருடன் பெர்லினில் வசித்தார்.

1985 இல் இருந்து “சிந்தனை” என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார். அரசியல் கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள், முற்போக்கு அரசியல், அரசியல்-இலக்கியக் கூட்டங்கள், குறும்பட விழாக்கள் என்று பரா எப்பொழுதும் உற்சாகமாக இயங்கிக் கொண்டிருந்தவர்.

நெருக்குவாரங்களும் அச்சுறுத்தல்களும், கொலை மிரட்டல்களும் புகலிடத்திலும் இருந்த ஒரு காலத்தினைக் கடந்துவந்திருக்கின்றோம் என்று இன்று எண்ணிப் பார்க்கையில் கொஞ்சம் பெருமிதமாகவும் இருக்கின்றது.

பிரான்ஸ் பாரிஸில் சபாலிங்கம் கொல்லப்பட்டதை எப்பொழுதும் நினைக்க வேண்டி இருக்கின்றது. 1988 இல் தொடங்கிய இலக்கியச் சந்திப்பின் மிக முக்கிய செயற்பாட்டாளராக விளங்கிய தோழர் பரா பன்முகத் தன்மையை எல்லா விடயங்களிலும் உள்ளடக்கிய, சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத் தளங்களை உருவாக்க வேண்டுமென்பதில் ஒரு போராளியாகவும் இருந்திருக்கின்றார்.

மாற்றுக் கருத்துக்களை கேட்கவும் எதிர்கொள்ளவும் ஆத்ம பலமும் அறிவுப் பலமும் தோழர் பராவிற்கு அவரது இடதுசாரி அரசியல் கற்றுக் கொடுத்திருந்தது.

கணக்கியல், கணணியியல் போன்றவற்றில் நீண்டகால ஆசிரிய அனுபவமுடைய பரா அவர்கள் புகைப்படக் கலைஞனாகவும் இருந்தார். பௌதிகவியல் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்குப் பின் கணக்காளராக இலங்கை மீன்பிடிக் கூட்டு ஸ்தாபனத்தில் நீண்டகாலம் சேவையாற்றினார். இவர் “பரா குமாரசாமி” என்ற பெயரிலும் ஆங்கில மொழிக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

பரா எப்பொழுதும் சமூக அக்கறை கொண்டவராக சமூகத்தின் பிற்போக்குத் தனங்கள் மீது கறாரான விமர்சனங்கள் கொண்டவராக, துணிச்சலான அரசியல் விமர்சனங்களை முகமனற்று முன்வைப்பவராக இருந்தார்.

கனடாவில் நடைபெற்ற “சமாதானத்துக்கான கனடியர்கள்” ஒழுங்கு செய்த பேச்சரங்கிலும், பிரான்ஸ் தலித் மேம்பாட்டு முன்னணி ஒழுங்கு செய்த தலித் மகாநாட்டிலும் பேராளராகக் கலந்து கொண்டார். இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச வலைப்பின்னல் (INSD), இலங்கை ஜனநாயகப் பேரவை (SLDF)போன்ற புகலிட அமைப்புக்களில் ஆர்வத்துடன் செயற்பட்டார்.

குழந்தை மனம் கொண்ட பரா அவர்கள் எல்லா வயதினருடனும் மிகுந்த நட்பு பாராட்டுபவராக, சிறியவை என்று பாராமுகமாக ஒதுக்கப்படும் விடயங்களிலும் பார்வை குவிப்பவராக கலக்கமற்ற மனமும் கவலையற்ற லோகாதாய வாழ்வும் வாழ்ந்துவிட்டு சென்றார்.

இலங்கையின் கடந்த கால அரசியல், சமூக வரலாற்றின் ஒரு நல்ல பொக்கிஷத்தை நாம் இழந்தோம். பதினைந்து வருடங்கள் கடந்து சென்றன.

ஆனாலும் மனித நேயமும் சமூக மாற்ற வேட்கையும் கொண்ட மனிதர்கள், பொருட்டற்ற சிறுசிறு அம்சங்களிலுங் கூட கவனங்குவித்து வாழவேண்டியது என்பது அவரிடம் நாம் கற்றுக்கொண்ட பாடமாக இருக்கின்றது.

**சுசீந்திரன் நடராஜா**




# மாயா 'யதார்த்த' தொலைக்காட்சிகள்

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

வருடம் இரண்டாயிரம்.

வட அமெரிக்காவில் பெரும் பரபரப்பு. Survivor எனப்படும் Reality show ஒன்று தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது.

போர்ணியோ காடுகளில் ஒரு கூட்டம் பேரை கொண்டு போய் விட்டு, எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் அவர்கள் எப்படித் தப்பிப் பிழைக்கிறார்கள் என்பதை நேரடியாகப் படம் பிடித்து ஒளிபரப்புகிறார்கள் என்ற ஒரே அல்லோலகல்லோலம்.

பத்திரிகைகளில், தொலைக் காட்சிகளில் எல்லாம் இந்தப் பரபரப்பு சொல்லி மாளாது. வேலையிடங்களில் பெரும் பேசுபொருளாகும் அளவுக்கு எங்கும் எதிலும் Survivor. இதுதான் இந்த யதார்த்த தொலைக்காட்சி என்ற genre வில் வட அமெரிக்காவில் முதலாவதானது.

இது ஒன்றும் அமெரிக்க தொலைக்காட்சி கண்டுபிடித்த அற்புதம் அல்ல. Expedition Robinson என்ற பெயரில் சுவீடிஷ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நிகழ்ச்சி ஒன்றை அமெரிக்காவில் இந்தப் பெயரில் புதிதாகத் தயாரித்து வெளியிட்டார்கள்.

புது உலகம் காண கடல் பயணம் போய், கப்பல் மூழ்கி எல்லாரும் இறந்த பின்னால், தீவு ஒன்றில் கரை ஒதுங்கி 28 வருடங்கள் வாழ்ந்த றொபின்சன் குரூசோ நாவல் கதை போன்று இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றியோரும் எந்த நவீன வசதிகளும் இல்லாத ஆதிவாசி வாழ்க்கை வாழ்வதைப் படம் பிடித்துக் காட்டுவதாகத் தான் இத்தனை பில்டப்பும்.

அப்போது நான் அதீத றொறன்ரோ ஸ்டார் பத்திரிகை வாசகன். அதன் Entertainment பகுதி மட்டும் எங்கள் ஊர் பத்திரிகைகள் சைஸில் இருக்கும். போதாக்குறைக்கு மூன்றாம் பக்கத்து அரைகுறை ஆடையழகிகளில் மையல் கொண்டோர் வாங்கி வந்து வீசி எறிந்த றொறன்ரோ சண் வேறு வேலையிடத்தில் சாப்பாட்டு அறையில் இருக்கும். அதில் அந்த ஷோ பற்றி கிசுகிசுக்கள் வேறு.

தொலைக்காட்சிகள் வேறு தங்கள் Entertainment பகுதிகளில் அவதானிகள், ஆர்வலர், ஆய்வாளர் உரையாடல்கள் என, கிட்டத்தட்ட வடஅமெரிக்க வாழ்க்கையை இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

அது நியாயமானது தான். தென் சீனக் கடற்பகுதியில் அமைந்துள்ள ஆசியாவின் பெரும் தீவு போர்ணியோ. இந்தோனேசியா, மலேசியா, புரூணை ஆகிய மூன்று நாடுகளும் பங்கு போடும் தீவு.

இங்குள்ள காடுகள் பற்றி திகிலூட்டும் கர்ண பரம்பரைக் கதைகள் உள்ளன. அதில் மனிதர்களை உண்ணும் மனிதர்கள், கொடிய மிருகங்கள் மட்டும் அன்றி, மனிதர்களை வளைத்துப் பிடித்து உறுஞ்சி, எலும்புக் கூட்டை வீசி எறியும் தாவரங்களும் இருப்பதாகவும், அந்தக் காட்டுக்குள் செல்பவர்கள் திரும்பி வருவதில்லை என்றும் அந்தக் காலத்து மித்திரனிலும் அது போன்ற பரபரப்பு பத்திரிகைகளிலும் (குமுதம்?), மாயாவி சித்திரக் கதைகளிலும் வாசித்த ஞாபகம்.

அவ்வாறான ஒரு தீவில் எந்த வித வசதிகளும் உதவிகளும் இல்லாமல், கப்பலில் கொண்டு போய் ஒரு கூட்டம் பேரை இறக்கி விட்டு, இதனுள் நீங்களே உணவு, உறையுள் எல்லாவற்றையும் தேடிக் கொள்ளுங்கள், நாங்கள் திரும்பி வரும் போது உங்களில் யார் தப்பியிருப்பார்களோ அவர்களே வெற்றியாளர்கள் என்பது போல கதை விடும் போது, அது திகிலூட்டுவதாகத் தானே இருக்கும். அதைத் தத்ரூபமாகப்

படம் பிடித்துக் காட்டும் போது வெற்றி பெறத் தானே செய்யும்.

ஆனால் வெறுமனே தப்பிப் பிழைத்தல் என்பது சுவாரஷ்யம் இல்லாதிருக்கும் என்பதால், அந்த நிகழ்ச்சி விளையாட்டு ஆடுகின்ற கதை வடிவத்தில் தான் இருந்தது. அதில் பங்குபற்றுவோர் வாக்களித்து ஒவ்வொருவராக வெளியேற்றுவதும் கடைசியில் ஒருவர் மிஞ்சுவதாகவும் அவருக்கே பரிசு கிடைப்பதாகவும் கதை இலாகா கதை பண்ணியது.

இது ஒளிபரப்பான தினங்களில் பெரும் பரபரப்புத் தான். இயற்கையோடு போராடி தப்பிப் பிழைத்த ஆதிமனிதர்கள் போல, இவர்களும் போராடுவதைப் பார்க்க மகாஜனங்கள் அவதிப்பட்டனர்.

அதிலும் கதாநாயகர்கள், வில்லர்கள், குணசித்திர நடிகர்கள், கவர்ச்சி நாயகிகள் என்று பல்வேறு பாத்திரப் படைப்புகள்.

நல்ல காலம், தமிழில் என்றால் டூயட்டு, குரூப் டான்ஸ் வேறு இருந்திருக்கும்.

ஒரு தடவை பெரும் பரபரப்பு.

இருட்டில் மங்கிய ஒளியில் இருவர் உடலுறவு கொள்வது போன்ற காட்சி. மறுநாள் அவர்கள் உண்மையாகவே உடலுறவு கொண்டார்களா, இல்லையா என்பதே பெரும் பேச்சாக இருந்தது.

Did they? or Didn't they?


***

நான் வெளிநாடு வந்த காலத்தில் ஐரோப்பிய தொலைக்காட்சிகளில் மல்யுத்தம் வெகுபிரபலமானதாக இருந்தது. World Wrestling Federation நடத்திய இந்த மல்யுத்தம் அகதிகளான நம்மவர் மத்தியிலும் பிரபலமானதாக இருந்தது.

எனக்கோ அதைப் பார்க்கச் சிரிப்பாக இருக்கும். கதை வசனம் எழுதித் தயாரித்தது போன்ற அந்த நிகழ்ச்சிக்கும் உண்மையான விளையாட்டுக்கும் திறமைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதால் அதைப் பொழுதுபோக்காகக் கூட நான் பார்க்க விரும்பியதில்லை.

அதில் பிரபலமானவர்களின் பெயர்கள், அவர்களின் பாத்திரங்கள் சம்பந்தப்பட்ட கதைகள் என்பவற்றில் சக அகதிகள் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருந்தார்கள்.

அதில் நேரடி வர்ணனை செய்பவரின் ஒரு பக்கக் காதில் தொங்கிக்




கொண்டிருக்கும், கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு வழங்கும் காது கேட்கும் கருவியை அணிந்திருப்பதால், ஒல்லாந்தில் இருந்த அகதிகளால் அவர் 'செவிடன்' என்று அழைக்கப்படும் அளவுக்கு.

இந்த விசயம் கூட, கனடாவில் தொலைக்காட்சியில் இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போது, எங்கள் அறையில் கூட இருந்தவர், இயல்பாகவே, 'உந்தா, செவிடன் வந்திட்டான்' என்ற போது தான் எனக்குத் தெரிய வந்தது.

இந்த மல்யுத்த நிகழ்ச்சி ரொறன்ரோவில் நான் வசித்த இடத்திற்கு அருகில், நான் தேடிப் பார்க்கும் கலைப்படங்களைத் திரையிடும் கார்ள்ட்டன் சினிமாவுக்கு பக்கத்தில் இருந்த, மிகவும் பிரபலமான விளையாட்டு அரங்கான Maple Leaf Gardens ல் அந்த நேரங்களில் நடைபெறும். நான் படம் பார்க்கப் போகும் நாட்களில் வீதியில் நீளத்திற்கு டிக்கட் எடுக்க பார்வையாளர்கள் வரிசையில் காத்திருப்பார்கள்.

அதை ஒரு உண்மையான றியலிட்டி நிகழ்ச்சியாக, திறமையை நம்பிய விளையாட்டாக நம்பியவர்கள் தான் பெரும்பாலோர்.

'இந்தா அடுத்த முறை Macho Man, Hulk Hogan க்கு சாத்தப் போறான்!'

இந்த றியலிட்டி ஷோக்களை உண்மையாக நம்பிய இந்த பார்வையாளர்களால் உலக மல்யுத்த சம்மேளனம் கோடிக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருந்தது.

எங்கள் பக்கத்திலும் மல்யுத்த வீரர்கள் இருந்தார்கள்.

தாரா சிங், கிங் கொங்!

இந்த கிங் கொங் இறந்த போது, மித்திரனில் 'மனித மலை சரிந்தது' என்ற தலையங்கம் எனக்கு இன்னும் ஞாபகம்.

அவர் தினசரி எத்தனை முட்டை, எத்தனை இறாத்தல் இறைச்சி உண்பார் என்றெல்லாம் இருந்தது.

இவர்களுடைய மல்யுத்தங்கள் பார்த்தது பற்றி என் அண்ணன்மார் சிலாகித்ததை சிறுவயதில் கேட்டிருக்கிறேன்.

நான் வாசிப்போடு மட்டும் தெரிந்து கொண்டது தான்.

இவர்கள் பற்றி வாசித்த சுவாரஷ்யமான விடயம்...

இவர்கள் ஒரு நகரத்துக்கு நிகழ்ச்சிக்கு போவார்கள். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் திட்டப்படி, ஒருவர் கடையில் போய் சாப்பிட்டுக் கொண்டிருப்பார். அப்போது அங்கே மற்றவர் கடைக்கு வருவார்.

இருவருக்கும் வாய்த் தர்க்கம் வரும். கடைக்குள்ளேயே சண்டை நடக்கும். பீங்கான்கள், பாத்திரங்கள், கதிரைகள், மேசைகள் எல்லாம் உடையும்.

மற்றவர்கள் இருவரையும் இழுத்துப் பிரிக்க...

'நாளைக்கு வா, உன் கழுத்தை முறிக்கிறேன்.'

'நீ வா, நான் உன் குடலை உருவுகிறேன்.'

சவால் விட்ட படியே இருவரும் பிரிந்து போவார்கள்.

ஏற்பாட்டாளர்கள் கடைக்காரருக்கு ஏற்பட்ட நட்டத்திற்கான பணத்தைச் செலுத்தி விட்டுப் போய் விடுவார்கள்.

அதற்குள் ஊருக்குள் கதை பரவி விடும்.

பிறகென்ன?

வரிசையில் ஊரே திரண்டு நிற்கும்.

சண்டை முடிய அவர்கள் இருவரும் அதே கடையில் ஒன்றாக வந்து சாப்பிட்டிருக்கக் கூடும்.

இப்படித் தான் இந்த உலக மல்யுத்த சம்மேளனமும்.

பெரும் கதையாடல்கள்.

பக்கக் கதைகள். துணைக்கதைகள். பிளாஷ் பாக்குகள்!







இப்படி தமிழ்ப் படத்து சண்டைகள் போல, Chewing gum போல இழுபடும்.

சவால்கள்.

கவர்ச்சிப் பாத்திரப் பெண்கள்.

இவற்றோடு அந்த விளையாட்டுக்கே சம்பந்தம் இல்லாத நடுவர்கள்.

இரண்டு மனித மலைகளும் மோதிக் கொள்ளும் போது இடையில் அகப்பட்டுக் கொண்டால், மழை காலத்தில் வாகனங்கள் நசித்த தவளை போன்ற வெறும் Road kill ஆகக் கூடிய நெத்தலிப் பயின்வான்கள்.

இந்த றியலிட்டி ஷோ தான் எங்களுக்குப் பூர்வாங்கமானது.

கனடா வந்த பின்னால், வார இறுதியில் அறையில் உள்ளோர் எல்லோருமே ஆர்வத்துடன் பார்க்க மதிய சாப்பாட்டு நேரத்தில் இது ஓடிக் கொண்டிருப்பதால், மத்தியானச் சாப்பாட்டை உட்கார்ந்து சாப்பிட்டபடியே, நானும் வேறு வழியில்லாமல் பார்க்கத் தொடங்கினேன்.

பிறகென்ன?

சிந்துபாத் கதை மாதிரி, வந்த பூதம் என்ன செய்தது என்ற மீதிக் கதையை அடுத்த வாரம் பார்த்தே ஆக வேண்டும் என்று என்னை அறியாமலேயே நானும் ஒன்றித்து விட்டேன்.

மற்றவர்கள் தொலைக்காட்சியில் பார்க்கும் அறிவு என்றால், நான் வாசிக்கும் அறிவு வேறு.

மல்யுத்தக்காரர்கள் பற்றி மற்றவர்களுக்கு தெரியாத சகல பூர்வீகங்களும் தெரிந்த ஒரு expert ஆக, துறைசார் நிபுணர் ஆக நானும் மாறி விட்டேன்.

பிறகென்ன? நிகழ்ச்சி நடக்கும்போது, 'செவிடனோடு' நானும் போட்டி போட்டுக் கொண்டு நேர்முக வர்ணனை தான்.

இப்படியாகத் தான் Survivor ம் ஓடிக் கொண்டிருந்தது.

நான் அதைப் பார்த்ததில்லை. தொலைக்காட்சியில் வேறு தெரிவுகள் வந்து விட்டன. நள்ளிரவுக்குப் பின்னால் கலைப்படங்கள் ஒளிபரப்பாகி என் தூக்கத்தைக் கெடுத்தன.

சக ரசிகர்களான ஒரே அறை வாசிகளாயிருந்த சிங்கிள் சிங்கன்கள் எல்லாம் குடும்ப சமேதராகி விலகிப் போய் விட்டார்கள்.

இருந்தாலும், அதன் இறுதிக் காட்சி பற்றி ஊடகங்களில் பெரும் பரபரப்பாக இருந்ததால், அதை மட்டும் பார்க்க வேண்டும் எனத் தோன்றியிருந்தது.

அந்தக் கடைசிக் காட்சியை 5.17 கோடிப் பேர் பார்த்திருக்கிறார்கள். அந்தக் காட்சியின் சில பகுதிகளையேனும் 12.5 கோடிப் பேர் பார்த்திருப்பதாக தொலைக்காட்சி பார்வையாளர்கள் பற்றி கணக்கு எடுக்கும் நீல்சன் நிறுவனம் தெரிவித்தது.

இந்த எண்ணிக்கை சாதனையை பின்னால் வந்த இந்த நிகழ்ச்சியின் தொடர்கள் எதுவுமே முறியடிக்கவில்லை.

அந்தக் கடைசி நிகழ்ச்சியைப் பார்க்கத் தொடங்கியதுமே எனக்குச் சிரிப்புத் தான்.

எனக்கு மிகவும் பிடிக்காத விடயம், என்னை மடையன் என்ற நினைத்து யாரும் கதை சொல்வது.

> அந்தக் கடைசி நிகழ்ச்சியைப் பார்க்கத் தொடங்கியதுமே எனக்குச் சிரிப்புத் தான்.
> எனக்கு மிகவும் பிடிக்காத விடயம், என்னை மடையன் என்ற நினைத்து யாரும் கதை சொல்வது.
> தமிழ்ப் படங்களை நான் பார்க்காமல் விட்டதற்கான அடிப்படைக் காரணமே அதுதான்.

தமிழ்ப் படங்களை நான் பார்க்காமல் விட்டதற்கான அடிப்படைக் காரணமே அதுதான்.

இங்கே ரொறன்ரோவில் அடிக்கடி திரைப்பட, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தெருக்களில் படமாக்கப்படும். ஒரு சிறிய காட்சி என்றாலும் போக்குவரத்துகள் தடை செய்யப்பட்டு, வீதிகளின் ஓரமாக பல ட்ரெய்லர்கள் நிறுத்தப்பட்டிருக்கும். அதில் நடிக, நடிகர்களுக்கு மட்டுமன்றி, தயாரிப்பில் சம்பந்தப்பட்ட சகலருக்குமாக ட்ரெய்லர்கள் இருக்கும். மின்னுற்பத்தி வினியோகம் முதல் உணவுப் பரிமாற்றம் வரை தனித் தனியாக இருக்கும்.

இது கட்டாயமானது. இந்த தொலைக்காட்சி சம்பந்தப்பட்ட நெறியாளர்கள், தொழில் நுட்பவியலாளர்களின் தொழிற்சங்கங்கள் வரையறுத்த விதிகள் அவை.

ஒரு பெரும் தொலைக்காட்சி நிறுவனத்தின் தொலைக்காட்சித் தயாரிப்பிற்கு அதன் சகல தயாரிப்பு, தொழில் நுட்பத்திற்கும் என, சகல நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் இடங்கள், மின்வசதிகள் எதுவும் இல்லாமல், போட்டியாளர்களுடன் கமரொக்களை மரங்களிலோ, கம்பங்களிலோ நட்டு விட்டு வெளியேற முடியாது.

அவர்கள் சகலரும் அங்கேயே உணவு, குளியல் வசதிகள் உட்பட்ட, ஆடம்பர வசதிகளுடன் இருக்க வேண்டும். அவர்களும் கற்களை உரோஞ்சி நெருப்பு உருவாக்கி, அணிலைக் கல்லால் அடித்து சுட்டு சாப்பிடும் கற்கால மனிதர்களாக முடியாது. அவர்களுக்கு என பிரத்தியேக சமையல்காரர்கள் உட்பட ஒரு ஹோட்டலில் இருக்கக் கூடிய வசதிகள் இருக்கும்.

இதற்குள் போட்டியாளர்கள் ஆதிமனிதர்கள் மாதிரி இயற்கையோடு போட்டி போட்டு வாழ்கிறார்கள் என்ற அப்பட்டமான பொய்யை யதார்த்தம் என்று நம்பி இத்தனை கோடிப் பேர் பார்த்திருக்கிறார்களே என்றதும் எனக்கு சப் என்று போய் விட்டது.

யாழ்ப்பாணி மொழியில் 'ஆரைப் பேய்க் காட்டுறாங்கள்!?'.

மல்யுத்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போலவே, செயற்கையான காட்சியமைப்புகளோடு முன்தயாரிப்புகளுடனான கதை சொல்லல், எந்த சுவாரஷ்யமும் இல்லாத சிறுபிள்ளைத் தனமான போட்டிகளுடன்...

படுமோசமான, செயற்கைத் தனமான நடிப்புடன்!

இதைப் பார்க்காமலே இருந்தது நல்லது என்றே தோன்றியது.

தமிழ்க் கலியாண வீடுகளில் pre-wedding shoot செய்து பிலிம் காட்டும் நம்ம பாலு மகேந்திராக்கள் இதை விட சிறப்பாக செய்திருப்பார்கள்.

கடைசி விளையாட்டு ஒரு கம்பத்தை நீண்ட நேரமாகப் பிடித்து இருப்பது யார் என்ற போட்டி.

அதில் போட்டியாளர்களில் ஒரு தன்னினச் சேர்க்கையாளரான ஒருவர், அமெரிக்க மரைன் படைகளில் இருந்து இளைப்பாறிய ஒருவர், இன்னும் ஒருவர் என கடைசிப் போட்டியாளர்கள் இருந்து, கடைசியில் அந்த தன்னினச் சேர்க்கையாளர் தான் மில்லியன் டொலர் வென்றார்.

பின்னர் நீண்ட காலத்தின் பின்னர் அவர் அந்தப் பணத்திற்கு வரி கட்டவில்லை என்ற குற்றம் சாட்டப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்றார்.

உண்மையில் போர்ணியோவின் மழைக்காடுகளுக்குள் இது படமாக்கப்படவில்லை. போர்ணியோ விலிருந்து சற்று தள்ளியிருந்த தீவு ஒன்றில் தான் நடைபெற்றது.

இவர்களை அந்த தீவில் கொண்டு போய் விட்டாலும், அவர்களுக்கு உயிர் ஆபத்து வந்தால் அதற்கான பொறுப்புகளிலிருந்து தப்பிக்க தொலைக்காட்சி நிறுவனம் பல விடயங்களை செய்தது. படப்பிடிப்பு நடப்பதற்கு முன்பாகவே அந்தப் பகுதியில் ஆபத்தான விடயங்களை அப்புறப்படுத்தி, கொடிய விலங்குகள் இருக்கின்றனவா என்றெல்லாம் செக் பண்ணி, தயாரிப்பு பிரிவினருக்கு சகல வசதிகளும் செய்து, காட்சிக்கான செட் போடப்பட்டுத் தான் படப்பிடிப்பு நடத்தப்பட்டது.

சாதாரணமாக இவர்களை கப்பலில் கொண்டு போய் இறக்கி விட்டு வந்திருந்தால், கர்ண பரம்பரைக் கதைகள் போல யாருமே திரும்பி வந்திருக்க மாட்டார்கள்.

> இந்த ஏமாற்றுவித்தையின் பின்னால் இருப்பது என்ன? வழமை போல, பணம். பொய்யை உண்மை என்று நம்பி, இலகுவாக ஏமாறக் கூடிய ஒரு பெருங் கூட்டம். அதை வைத்துப் பணம் சம்பாதிக்கலாம் என்ற தளராத நம்பிக்கை.

இந்த ஏமாற்றுவித்தையின் பின்னால் இருப்பது என்ன?

வழமை போல, பணம்.

பொய்யை உண்மை என்று நம்பி, இலகுவாக ஏமாறக் கூடிய ஒரு பெருங் கூட்டம்.

அதை வைத்துப் பணம் சம்பாதிக்கலாம் என்ற தளராத நம்பிக்கை.

கேளிக்கை உலகம் விசித்திரமானது. அது பகட்டுகளைக் காட்டி ஏமாற்றுவது. ஒரு புறத்தில் உனக்கும் இப்படி ஒரு வாழ்வு கிடைக்கும் என்று ஏமாற்றும். உனக்கு கிடைக்காது என்று தெரிந்தாலும், அவ்வாறான ஒரு வாழ்வை கனவு கண்டு வாயைப் பிளந்து பிரமித்துக் கொள் என்று ஏமாற்றும்.

எந்த திறமைகளும் இல்லாமல் எத்தனையோ பேர் பில்லியனர்கள் ஆக இந்த கற்பனை உலகம் வழி வகுத்திருக்கிறது. Keeping Up With Kardashians குடும்பத்தினரின் வாழ்க்கையைக் கண்டு பிரமித்துப் போய், தானும் பணம் படைத்தவராகவும் பிரபலமானவராகவும் ஆடம்பர வாழ்க்கை வாழலாம் என்ற நினைப்பில், அதைப் பிரதி செய்யும் கனவோடு ஒரு தலைமுறையை ஊடகங்கள் உருவாக்கியிருக்கின்றன.

Famous for being famous றோல் மொடல்கள் இங்கே எக்கச்சக்கம். அவர்கள் பற்றிய கிசுகிசுக்கள் கூட மாலை நேர முக்கிய செய்திகளாகி விடுகின்றன.

இதற்கெல்லாம் திறமை அவசியம் இல்லை என்றும் அழகாக, கவர்ச்சி காட்டினால் போதும் என்ற நினைப்புள்ள இளம் தலைமுறை ஒன்று இங்குண்டு.

அவர்கள் தாங்கள் ஒரு மொடல் ஆகவோ, அதன் பின்னால் திரையில் தாரகைகளாகவோ மிளிரலாம் என்ற கனவுகளோடு, தற்போதைய தாரகைகள் பயன்படுத்தும் ஆடைகள் முதல் அழகுசாதனப் பொருட்கள் வரை வாங்கி, அவர்களை பில்லியனர்கள் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் போல தாங்களும் வர முடியும் என்ற நம்பிக்கையில் தான் டிக்டொக் போன்ற சிறுவீடியோக்களில் தளுக்கிக் குலுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

Tabloid show எனப்படும் சமூகச் சீரழிவையும் சிதைவுகளையும் பொதுவெளியில் கொண்டு வந்து பரபரப்புக்குள்ளாக்கியது Geraldo Rivera வாகத் தான் இருக்க வேண்டும். உணர்வுபூர்வமாகக் கிளர்ந்தெழச் செய்யும் sensational journalism ன் மோசமான வடிவம் அது.

இந்த Tabloid show என்ற வடிவம் வெற்றி பெற்று பார்வையாளர்களைக் குவிக்கத் தொடங்கியதும் பல்வேறு புதுப்புது ஷோக்கள் உருவாகின. தங்கள் குடும்பங்களில் உள்ள சீரழிவுகளை, சொற்ப பணத்திற்காகவும், இந்த பதினைந்து நிமிடப் புகழை நிரந்தரமாக்கலாம் என்ற கனவோடும், தங்கள் அழுக்குத் துணிகளை பகிரங்கமாக துவைக்க முன்வரும் ஒரு கூட்டத்தை தொலைக்காட்சிகளில் பகல் நேரங்களில் அதிகமாகக் காணலாம். இவர்களுள் வறுமைக் கோட்டுக்கு கீழே இருந்து, தரப்படும் சிறுதொகைக்காக நடிக்க வைக்கப்பட்டு, சுரண்டப்படுவோரும் (sexploitation என்ற சொல் கூட உருவாக்கப்பட்டிருக்கிறது.) உண்டு.

தங்கள் திறமைகளைக் காட்டி பரிசு பெறலாம் என்ற நம்பிக்கையோடு வரும் America Got Talent, American Idol போன்றவற்றை விட, எந்தத் திறமையும் இல்லாமல் இந்தக் காட்சிகளில் தோன்றுவதன் மூலம் Rich and famous ஆகலாம் என்ற கனவோடு, எந்த அளவுக்கும் தங்களை விற்கலாம் என்ற எண்ணத்தோடு வருகிறவர்களுக்கு இந்த றியலிட்டி ஷோக்கள் வழிவகுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அதற்காக மோசமான தங்கள் இயல்புகளையும் நடத்தைகளையும் (outlandish behaviour) பொதுவெளியில் காட்டினால் தங்களுக்கு வெற்றியோ, எதிர்காலமோ இருக்கும் என்று நம்புகிறவர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள். அல்லது கலந்து

கொள்ள தெரிவு செய்யப்படுகிறார்கள்.

இதனால் தான் இவர்கள் வரும் ஷோக்கள் எல்லாம் மோசமான நடிப்போடு வெளிவரும் திரைப்படங்கள் போல செயற்கைத் தனமாக இருக்கின்றன.

இந்த காட்சிகளின் நெறியாளர்கள் எல்லாம் சமூகத்திற்கு இருக்கும் நெறிமுறைகள் எனப்படும் பிற்போக்குச் சிந்தனைகளுக்கு தாங்கள் தான் காவலர்கள் என்பது போல, அதே பிற்போக்குச் சிந்தனை கொண்ட பார்வையாளர்களின் பிரதிநிதியாக இருந்து தீர்ப்பு வழங்கிக் கொண்டிருப்பார்கள்.

இந்த நிகழ்ச்சிகள் தான் தமிழ்நாட்டின் 'என்னம்மா, இப்படிப் பண்ணீட்டீங்களேம்மா!' வின் நதி மூலங்கள்.

முதலாது சேர்வைவரில் கலந்து கொள்ள ஆறாயிரம் பேர் விண்ணப்பித்திருந்தார்கள். அதில் 800 பேருக்கு நேர்முகப்பரீட்சை வைத்து அதில் 48 பேரை தெரிவு செய்து, பின்னர் பதினெட்டுப் பேர் இறுதியில் தெரிவானார்கள்.

இப்படியான ஷோக்களில் கலந்து கொள்வது Rich and famous ஆவதற்கான குறுக்கு வழி என்றும், லொத்தர் சீட்டுகளில் அதிட்டம் போல தங்களுக்கும் பரிசு கிட்டலாம் என்ற நினைப்பிலும் பலர் கலந்து கொள்கிறார்கள். காரணம், இதில் எந்த விதமான திறமைகளும் நிபந்தனைகளாக்கப்படுவதில்லை.

நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் தங்களது கதை இலாகா கதைக்கு தகுந்தவர்களாக வரக் கூடிய பரபரப்பான கதாபாத்திரங்களையே, சமூகத்தில் முரணான கலர்புல்லான வரலாறு கொண்டவர்களையே தெரிவு செய்வார்கள். அவர்களைச் சுற்றித் தான் கதைகளைக் கட்டமைக்க முடியும்.

அவ்வாறானவர்கள் தான் பங்குபற்றுவதற்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

சுவாரஷ்யம் இல்லாத சாதாரண பொதுமக்களையோ, நல்ல பண்புகளை உடையவர்களையோ அங்கே காட்டினால் யாருக்கு ஆர்வம் இருக்கும்?

இவ்வாறான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வோர் இயல்பாகவே நடந்து கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பு பார்வையாளர்கள் மத்தியில் உண்டு.

மனிதர்கள், யாருமே பார்க்காத போது நடந்து கொள்வதற்கும், கமெராக்களின் கண்காணிப்புகளின் போது நடந்து கொள்வதற்கும் எப்போதுமே வித்தியாசம் இருக்கும். கண்காணிப்புக் கமெராக்களுக்கு பயந்து திருடாதவர்கள், யாருமே பார்க்கவில்லை என்றால் திருடக் கூடும்.

ஒரே இடத்தில் வெளியேறும் வாய்ப்புகளின் இன்றி அடைக்கப்பட்டவர்கள், தங்களை 24 மணி நேரமும் கமெராக்களின் பதிவு செய்து கொண்டிருக்கிறது என்று தெரிந்த நிலையில் மற்றவர்களோடு உறவாடும் போது அவர்களின் செயற்பாடுகள் இயற்கையாக இருக்குமா?

தங்களைப் பற்றி மற்றவர்களின் கணிப்பீடுகள் எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்து அதற்குத் தகுந்த மாதிரி செயற்கையாகத் தானே நடந்து கொள்வார்கள்.

இத்தனை போட்டியாளர்கள், எத்தனையோ கமெராக்கள்.

24 மணி நேரக் கண்காணிப்பு.

எத்தனை மணி நேர படப்பிடிப்பு?

அதெல்லாம் வெட்டி ஒட்டப்பட்டு, எவ்வளவு நேரம் ஒளிபரப்பாகிறது?

இந்தப் படப்பிடிப்பில் இருந்து தயாரிப்பாளர்கள் தங்களுக்கு தேவையான கதை ஒன்றை உருவாக்குவதில் என்ன சிக்கல் இருக்கும்?

பார்வையாளர்களை உணர்வு ரீதியாக ஒன்றிக்க வைப்பதற்கான கதை ஒன்றை அவர்கள் இலகுவாக உருவாக்கிக் கொள்ளலாம்.

இந்த நாள் முழுவதுமான ஊடாட்டத்தில் பார்வையாளர்கள் எதைப் பார்க்க வேண்டும் என்பதை தயாரிப்பாளர்கள் தீர்மானிப்பதையே ஒளிபரப்புகிறார்கள்.

கதாநாயகர்கள், வில்லர்கள், வெற்றி பெறச் சந்தர்ப்பம் இல்லாத underdog, அனுதாபம் பெற வைக்கும் குணசித்திர நடிகர்கள் என்று இத்தனை மணி நேர வீடியோவுக்குள் தங்களுக்கு விருப்பமான வகையில் வெட்டிப் பொருத்தலாம்.

அதன் வெற்றி பார்வையாளர்களை உணர்வு பூர்வமாக அதனோடு ஒன்றித்துப் போக வைப்பதில் தான் இருக்கும். பார்வையாளர்களுக்கு தகுந்த மாதிரி, அவர்களுக்குப் பிடித்தமான கதாபாத்திரங்கள் உருவாக்கப்படும். இதுவே பார்வையாளர்களின் வாக்களிப்பு ஆகும் போது, பெரும் பரபரப்பு உண்டாகும்.

பார்வையாளர்களின் எண்ணிக்கைக்கு பாதகம் நிகழுமாயின், தங்களுக்குப் பிடித்த முடிவுக்காக தயாரிப்பாளர்கள் ஆட்களை வெளியேற்றுவர். மீள அழைப்பர். சம்பந்தமில்லாத புதியவர் ஒருவரைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

முடிவைக் கூட மாற்றியமைப்பர்.

இத்தனை புலன்பெயர் யாழ்ப்பாணிகள் கள்ளவோட்டுப் போட்டும், சுப்பர் சிங்கரில் இலங்கைத் தமிழ்ப் பெண் வெற்றி பெறவில்லை. இம்முறை பிக் பொஸ்ஸில் பலரும் எதிர்பார்த்திருந்தவர் வெற்றி பெற விடப்படவில்லை.

இந்த வாக்களிப்புகளின் உண்மைத்தன்மையை உறுதி செய்ய audit முறைகள் இருந்தனவா என்பது பற்றி எனக்குத் தெரியாது.

சேர்வைவரில் இடையில் வெளியேற்றப்பட்ட பெண் ஒருவர் தன்னை திட்டமிட்டு வெளியேற்றியதன் மூலம் முடிவை மாற்றியதாகவும், தன்னோடு போட்டியிட்ட இருவரை



தன்னை வெளியேற்றுவதற்காக வாக்களிக்கும்படி நிர்ப்பந்தித்ததாகவும் தொலைக்காட்சி நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இதெல்லாம் பார்வையாளர் ரேட்டிங்கும், அதனால் வரும் விளம்பரங்களும் லாபங்களும் சம்பந்தமானது.

இதை யதார்த்தமானதாக கட்டமைப்பதில் தான் இந்த நிகழ்ச்சிகளின் வெற்றி தங்கியிருக்கிறது.

யதார்த்தமான நிகழ்வுகள் என்ற மாதிரி கதை கட்டப்பட்டாலும் இப்படியான படத்தொகுப்புகள், பங்குபற்றுவோர் எதைப் பேச வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பயிற்றுவித்தல், முற்கூட்டியே கதை இலாகா கதை ஒன்றை அமைத்துக் கொள்ளல், செயற்கையாகவே காட்சிகளை அமைத்தல் (Staging), சில நேரங்களில் நடந்து முடிந்த விடயங்களையே கமெராவுக்காக திரும்பவும் நடிக்க வைத்தல் என்று பல்வேறு வழிகளால் ஏமாற்றப்படுகிறார்கள்.

போட்டிகளாக நடக்கும் றியலிட்டி ஷோக்களில் பங்குபற்றுவோரை அவமானப்படுத்தி, exploit பண்ணுதல், எந்த திறமையும் இல்லாதவர்களை celebrities ஆக்குதல், மோசமான நடத்தைகளை ஏற்றுக் கொள்ளக்கூடியனவாக்குதல், மோசமான பரபரப்பான நடவடிக்கைகள் செய்வோரை மட்டுமே முதன்மைப்படுத்துவது, கதைக்கு சுவாரஷ்யம் ஊட்டுவதற்காக சண்டைகளை உருவாக்குவது, வெவ்வேறு நேரங்களில் எடுக்கப்பட்ட படங்களோடு வேறு நேரங்களில் எடுக்கப்பட்ட ஒலிகளை இணைப்பது, வெவ்வேறு நேரக் காட்சிகளை தொடர்ச்சியானதாகக் காட்டுவது, பங்காளர்கள் வேறுவேறு இடங்களில் சொன்னதை இணைத்து, அவர்கள் சொல்லாத ஒன்றை உருவாக்குவது என பல்வேறு தில்லுமுல்லுகளால் தான் இந்த நிகழ்ச்சிகள் உருவாக்கப்படுகின்றன.

முதலாவது சேர்வைவர் நிகழ்ச்சி உட்பட்ட பல்வேறு யதார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உருவாக்கிய ~~Mark Burnett~~ சொல்கிறார்..

நான் நல்ல கதைகளைச் சொல்கிறேன். இது உண்மையில் யதார்த்த தொலைக்காட்சி இல்லை. இது உண்மையில் கதை வசனம் எழுதப்படாத நாடகம்.

"I tell good stories. It really is not reality TV. It really is unscripted drama."

எந்த விதமான professionalism ம் இல்லாமல் அமெச்சூர் தனமான படுமோசமாக படம் பிடிக்கப்படும் சீரியல்களில் ஒன்றித்துப் போய், அந்தக் கதாபாத்திரங்களுக்காக அழுது கோபப்பட்டுக் கொள்ளும் இல்லத்தரசிகள் போல, இந்தக் கதைகளும் எத்தனை தடவையும் திரும்பத் திரும்பக் கேட்டாலும் சலிக்காத திருவிழாக்காலப் புராணப் படிப்பு மாதிரி கவர்ந்திழுப்பன.

என்னுடைய மகன் பிறந்த காலத்தில் அவனைப் பார்த்துக் கொள்ளும் நேரங்களில் அவனோடு தொலைக்காட்சி பார்த்ததில் நானும் பல்வேறு சிறுவர் நிகழ்ச்சிகளின் ஆர்வமுள்ள பார்வையாளனாக இருந்திருக்கிறேன். வேறு தெரிவுகள் எதுவும் எனக்கும் இருக்கவில்லை. என்னையறியாமலேயே அதற்குள் ஒன்றித்தாக வேண்டிய கட்டாயம்.

மகன் தமிழ் கற்றுக் கொள்ள வேண்டும் என்று, அந்த நேர உபகோள் தொலைக்காட்சியை பெரும் சிரமப்பட்டுப் பூட்டி, பார்த்து ரசித்த மை டியர் பூதம் என்ற சிறுவர் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு, என் மகனை விட நானே பெரும் ரசிகனாக ஆக்கப்பட்டேன்.

Captive audience ஆன எனக்கே இந்தக் கதி என்றால், இதை உண்மை என்று நம்புகின்றவர்கள் நிலை என்னவாக இருக்கும்?

**இந்த நவீன சிந்துபாத் சித்து விளையாட்டுகளும் ஒரு தடவை பார்வையாளனாக நுழைந்தால் வோட்டுப் போட்டுக் கூட வெளியேற்ற முடியாதபடிக்கு உள்ளே இழுத்து வைத்திருக்கக் கூடியன.**

இப்படி, இந்த நவீன சிந்துபாத் சித்து விளையாட்டுகளும் ஒரு தடவை பார்வையாளனாக நுழைந்தால் வோட்டுப் போட்டுக் கூட வெளியேற்ற முடியாதபடிக்கு உள்ளே இழுத்து வைத்திருக்கக் கூடியன.

Apprentice என்ற யதார்த்த நிகழ்ச்சியை நடத்திய டொனால்ட் ட்ரம்ப் ஒரு வில்லனாக சித்தரிக்கப்பட்டிருப்பார். அதில் அவர் சொல்லும் You are fired என்று சொல்லும் பஞ்ச் டயலாக் மிகவும் பிரபலம். அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதற்கு, அவரது அந்த நிகழ்ச்சி மூலம் அவருக்கு கிடைத்த கவனிப்பு பெரும் பங்கு வகித்திருந்தது. .

யதார்த்தத்துக்கு ஒவ்வாத புராண காலத்து கற்பனைக் கதைகள் கொலை செய்யும் வெறி ஏற்படுத்தக் கூடிய மதங்களாகும் அளவுக்கு உண்மையாக நம்பப்படுவதும், பிரபலங்கள் பற்றிய கிசுகிசுக்கள் பொதுவெளியில் ஏற்படுத்தும் ஆர்வம் போலவே, பக்கத்து வீட்டு அந்தரங்கங்களுக்குள் மூக்கை நுழைப்பதுமாகவும் சமூக இயல்பு இருக்கிறது.

பக்கத்து வீட்டில் நடப்பதை வேலிப் பொட்டுக்கு உள்ளால் எட்டிப் பார்ப்பதில் கிடைக்கும் சுய இன்பம் போன்றது தான் இன்றைய பிக் பொஸ் போட்டியாளர்கள் பற்றி தினசரி அறிந்து கொள்ள ஏற்படும் துடிப்பு.

இதற்கு தீனி போட, இருபது வருடங்களுக்கு முன்னான றியலிட்டி ஷோக்கள் போலன்றி, தற்போதைய நிகழ்ச்சிகளுக்குப் போட்டியாக வலைத்தளங்களில் றியலிட்டி நட்சத்திரங்கள் உருவாகி விட்டார்கள். டிக்டொக் நட்சத்திரங்களின் றியலிட்டி ஷோக்கள் என்பது கூட பெரும் வணிகம் ஆகி விட்டது. அத்தோடு நின்று விடாமல், பெரும் பணம் சம்பாதிப்பதற்காக தங்கள் படுக்கை அறைக்குள்ளும் கமெராக்களை பொருத்த தயாராக பலர் இருக்கிறார்கள். நேரடி உடலுறவு வரைக்கும் பெரும் பணம் செலுத்தி, திரையில் பார்த்து சுய இன்பம் பெறும் Peeping Tom கள் நிறையவே இருக்கிறார்கள்.

இவ்வாறான நிகழ்ச்சிகளை உண்மை என்று நம்பி, றியலிட்டி தொலைக்காட்சி தந்த புகழ் காரணமாக டொனால்ட் ட்ரம்பை ஜனாதிபதியாக தெரிவு செய்யும் அளவுக்கு அமெரிக்காவே இருக்கும் போது, தங்கள் வங்கிக் கணக்கில் 15 லட்சம் ரூபா போடப்படும் என்பதை நம்பி வாக்குப் போட்டு பிரதமரை தெரிவு செய்யும் நாட்டில் பிக் பொஸ்கள் இந்த Peeping Tom களையும் Tammy களையும் மூளைச் சலவை செய்வதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?




# புரிந்தவன் பிக் பொஸ்... ஓ! பிஸ்தா!

நான் இந்த இலுமினாட்டி கதை சொல்லல்கள், conspiracy theory களில் நம்பிக்கை இல்லாதவன். ஆதாரங்கள், தர்க்கரீதியான நியாயங்கள் இல்லாமல் அடிச்சுவிடும் கதை சொல்லியும் இல்லை. இருந்தாலும், இந்த பிக் பொஸ் வெற்றி குறித்த களேபரங்கள் பற்றி சில கருத்துக்களைச் சொல்லியாக வேண்டும் போலிருக்கிறது.

அதிகாரத்தைக் கைக்குள் வைத்திருக்க, ஊடகங்கள், மற்றும் Think tanks மூலமாக பழமைவாதிகள் பொதுப்புத்தியில் எப்படிச் சிந்தனைகளைத் திணிக்கிறார்கள் என்பது பற்றி நிறைய எழுத முடியும்.

பிக் பொஸ் வெற்றி முடிவின் பின்னால் சில நேரங்களில் பெரும் கைகளின் கைங்கர்யம் இருக்கக் கூடும். நான் நம்புவதற்கான காரணங்களைச் சொல்லுகிறேன். நம்புவதும் நம்பாததும் உங்கள் புத்திக்கு எட்டியது.

சுப்பர் சிங்கர் போட்டியில் இலங்கைத் தமிழ்ப் பாரம்பரிய புலன் பெயர் பெண் கலந்து கொண்டார். கள்ள வோட்டுப் போடுவதிலும், (நானே எழுபத்தைஞ்சு வோட் போட்டனான் என்று பிக் பொஸ்ஸைச் சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனே சொன்னார்!), இவ்வாறான போட்டிகளில் வாக்களிக்கும்படி இணையத்தளங்களும், (விகடன் புலிகளுக்கான ஆதரவு பற்றி நடத்திய கருத்துக்கணிப்பு உருட்டு பற்றி விலாவாரியாக எழுதியிருக்கிறேன்!) புலன் பெயர் வானொலிகளும் கேட்டுக் கொள்வதற்கு இணங்க, ஒரே ஆளே பல வோட்டுகளையும் போட்டு, (தாங்கள் பல வோட்டுக்கள் போட்ட பெருமையை வானலையிலேயே வந்து சொல்லி) வெல்ல வைப்பதற்கு யாழ்ப்பாணிக்கு இணை யாரும் கிடையாது.

மோசடி மூலமாகப் பெற்ற அவ்வாறான வெற்றியை, போராடி ஈழம் கிடைத்த கணக்கில் கொண்டாடுவது யாழ்ப்பாணியின் மனநோயின் குணங்குறிகளில் ஒன்று.

இப்படியாக இவர்கள் வோட்டுப் போட்டும், சுப்பர் சிங்கரில் வெல்ல முடியவில்லை. கொதித்த யாழ்ப்பாணிகள் விஜய் டிவியைப் பகிஷ்கரிப்போம் என்று பொங்கி வழிந்தார்கள். மாத்திரைகள் எடுக்காமலேயே அந்த குணம்குறி கொஞ்ச நாளில் போய் விட்டது. ஆனாலும், அட்டமி, நவமி போன்ற 'கனத்த நாட்களில்' திரும்பவும் கொண்டெழும்பும்.

இவ்வாறான போட்டிகளில்

> “இஸ்லாமிய வெறுப்பை உமிழும் இந்துத்வ சங்கிகள் கூட, ஒரு இஸ்லாமியர் வென்றிருக்கிறார் என்று கொதிப்படையவில்லை. இதற்கான காரணம் என்ன?
>
> மோதிக் கொள்வது, சூத்திரர்களும் தலித்துக்களும்!
>
> தமிழர்களைப் பிரிப்பதற்கான தந்திரமாகத் தான் இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது.”

**ஜோர்ஜ் இ.**




வாக்களிப்பு நேர்மையாக நடப்பதற்கான பொறிமுறைகள் இங்கே இருக்கும். அதிஷ்டலாப லொத்தர் முறையிலும் அதைக் கண்காணிக்க பிரபல auditing firms ஐ அமர்த்துவார்கள். காரணம், அதில் மோசடி செய்தால், நட்ட ஈடு கோரலாம் (Class action lawsuit) என்று பணம் வாங்காமலே ஆஜராக பாய்ந்தடித்து வர இங்கே சட்டத்தரணிகள் நிறைய உண்டு.

விஜய் டிவியின் போட்டிகளின் போதான வாக்களிப்புக்கு இவ்வாறான auditing இருந்ததா என்பது எனக்குத் தெரியாது. அவ்வாறு இருந்திருந்தால், கள்ள வாக்குகளாக இருந்தாலும், இலங்கைப் பெண் வென்றிருக்கக் கூடும்.

தற்போது பிக் பொஸ்ஸில், பரவலாக எதிர்பார்த்தவருக்கு கிடைக்காமல், மற்றவருக்கு கிடைத்திருக்கிறது. இவர்கள் யார் என்பதும் இவர்களின் முகங்கள் எனக்குத் தெரியாது என்பதும் சம்பந்தமில்லாதவை.

இந்தியாவில் மாநில தேர்தல்களில் மண் கவ்வுகின்ற பாஜக எப்படி தேசிய தேர்தலில் மண்சரிவு வெற்றிகளைச் சந்திக்கிறது?

தேர்தலுக்கு முன்பாக சகல ஊடகங்களும் கருத்துக்கணிப்பு என்ற பெயரில் பொதுப்புத்தியில் பாஜக வெல்லும் என்ற கருத்தைத் திணிக்கின்றன.

இந்த கருத்துக் கணிப்புகளுக்கான auditing இருக்கிறதா? பெரும்பாலும் இருக்காது.

PM Cares நிதி வாங்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படவில்லை. இந்தப் பணம் ஊடகங்களை வாங்கப் பயன்படுத்தப்படலாம். அவை பாஜக வெல்லும் என்று உருட்டத் தொடங்கும்.

பின்னர், வாக்களிப்பு இயந்திரங்களில் உள்ள வாக்குகளின் எண்ணிக்கையைக் கூட்டி முடிவை அறிவிக்க ஒரு மாதம் எடுக்கிறது. வெறும் கடதாசி வாக்குகளை எண்ணுவதற்கு கூட இவ்வளவு நாள் எடுக்காது. இந்த மர்மத்தை யாரும் துப்புத் துலக்குவதில்லை.

இப்போது ஒரு மொக்கைப் பாடலுக்கு கோல்டன் குளோப் விருது கிடைத்திருக்கிறது. ஒஸ்கார் விருதுகளை எப்படிப் பணம் செலவிட்டு பெறலாம் என்பதற்கு மீ ரூ ஹார்வி வைன்ஸ்டைன் பெரும் உதாரணம். வழமையாக கோல்டன் குளோப் விருது பெற்றவையே ஒஸ்காரிலும் வெற்றி பெறுவதால், இந்தப் பாடலுக்கு பெரும்பாலும் ஒஸ்கார் விருது கிடைக்கும்.

இந்த வெற்றி, படத் தயாரிப்பாளரை விட யாருக்கு லாபம்?

மோடிக்கு!

இந்தியர்கள் எல்லாம் தாங்கள் பெருமைப்படக் கூடிய வெற்றி என்ற கொண்டாடுகின்ற அந்த வெற்றியை ஒரு இந்திய வெற்றியாக காட்டுவதன் மூலம் அந்த வெற்றியில் மோடி நன்றாகவே குளிர் காயலாம். அதற்காக பணத்தை விட்டெறிந்து இருக்கலாம்.

தேர்தலுக்கு அண்மித்து இலங்கை இந்திய கிரிக்கட் போட்டியில் இலங்கை வெற்றி பெறும் தறுவாயில் தோல்வியை விரும்பித் தழுவிய கதை நினைவிருக்கலாம்.

காரணம், இந்தியத் தோல்வி மோடிக்கு அவமானகரமானதாக இருந்திருக்கும். போட்டியில் தோற்கும்படி இடைவேளையில் மகிந்த இலங்கைக் குழுவிடம் கூறியதாக கதைகள் வந்திருந்தன. அதற்கு பணம் கை மாறியும் இருக்கலாம்.

சரி, பிக் பொஸ்ஸிற்கு வருவோம்.

அறம் வெல்லும் என்றவர் வென்றிருந்தால் என்ன நடந்திருக்கும்?

தமிழ்நாடே பெருமையில் துள்ளிக் குதித்திருக்கும். அதற்கு தாங்களே காரணம் என்று தி.மு.க உட்பட சகலரும் உரிமை கோரியிருப்பார்கள்.

அறம் வெல்லும் என்பதே தமிழ்நாட்டில் தேர்தல் கோஷமாக இருந்திருக்கும்.

இன்றைக்கு நடப்பது என்ன?

திமுக, விசிக ஆளையாள் திட்டிக் கொண்டிருக்கிறார்கள். மோதிக் கொள்கிறார்கள்.

“
அறம் வெல்லும் என்றவர் வென்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? தமிழ்நாடே பெருமையில் துள்ளிக் குதித்திருக்கும். அதற்கு தாங்களே காரணம் என்று தி.மு.க உட்பட சகலரும் உரிமை கோரியிருப்பார்கள்.

அறம் வெல்லும் என்பதே தமிழ்நாட்டில் தேர்தல் கோஷமாக இருந்திருக்கும்.

இன்றைக்கு நடப்பது என்ன? திமுக, விசிக ஆளையாள் திட்டிக் கொண்டிருக்கிறார்கள். மோதிக் கொள்கிறார்கள்.
”

தேர்தல் நேரத்தில் கூட்டணி அமைக்க முடியாதபடிக்கு இரு தரப்பினரும் வெறுப்பை உமிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் நிரந்தர பிரிவுக்காக வைக்கப்படும் ஆப்புகளில் ஒன்று தான் இது.

சங்கிகளுக்கு வேண்டியது அது தான்.

இவர்கள் பிளவுபட வேண்டும்!

இஸ்லாமிய வெறுப்பை உமிழும் இந்துத்வ சங்கிகள் கூட, ஒரு இஸ்லாமியர் வென்றிருக்கிறார் என்று கொதிப்படையவில்லை.

இதற்கான காரணம் என்ன?

மோதிக் கொள்வது, சூத்திரர்களும் தலித்துக்களும்!

தமிழர்களைப் பிரிப்பதற்கான தந்திரமாகத் தான் இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இதற்காகவே, உண்மையான வாக்களிப்பை மறைத்து வெற்றி மாற்றியமைக்கப்பட்டிருக்கலாம். அதற்கு விஜய் டிவிக்கும் கமலுக்கும் அள்ளிக் கொடுக்கப்பட்டிருக்கலாம். அல்லது பணம் செலவில்லாமல், வருமான வரி ரெய்ட் மிரட்டல் விடப்பட்டிருக்கலாம்.

இதனால் யாருக்கு லாபம் என்பதை தேடினால், உண்மைகள் புலப்படலாம்.

Follow the money!

எளிய தமிழில் சொன்னால்... புரிந்தவன் பிஸ்தா!

வ.ந.கிரிதரன்
Facebook: VN Giritharan



# கலை,இலக்கியத் திறனாய்வாளர் வெங்கட் சாமிநாதனும் இருப்பு பற்றிய அவரது பார்வையும்!

"நா.வானமாமலையின் ஆராய்ச்சி விநோதங்கள்" என்றொரு கட்டுரையினைப் பேராசிரியர் நா.வானமாமலை தனது "ஆராய்ச்சி" என்னும் காலாண்டுப் பத்திரிகையில் பழந்தமிழ் இலக்கியத்தில் பொருள்முதல்வாதக் கருத்துகள் பற்றியதாக எழுதியதற்குப் பதிலடியாக வெங்கட் சாமிநாதன் எழுதியிருந்தார். பேராசிரியர் கைலாசபதியின் "தமிழ் நாவல் இலக்கியம்" என்னும் நூலிற்குப் பதில் விமர்சனமாக வெ.சா. "மார்க்ஸின் கல்லறையிலிருந்து ஒரு குரல்" என்றொரு நீண்ட கட்டுரையினை, "நடை" சஞ்சிகையில் தொடராக எழுதியிருந்தார். வெ.சா.வின் நீண்ட அக்கட்டுரைக்கு எதிரொலியாக நீண்டதொரு கட்டுரையொன்றினைப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் எழுதியிருந்தார். அது பின்னர் அவரது "மார்க்சியத் திறனாய்வும், இலக்கியமும்" என்னும் நூலிலும் சேர்க்கப்பட்டிருந்தது. அதிலவர் வெ.சா. தனது "நா.வானமாமலையின் ஆராய்ச்சி விநோதங்கள்" என்றொரு கட்டுரையில் "நான் கருத்து முதல்வாதியா? பொருள் முதல்வாதியா? இரண்டும்தான். இரண்டும் இல்லைதான்" என்று குறிப்பிட்டிருப்பார். அதனைத் தனது கட்டுரையில் நுஃமான் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பார்:

"நான் கருத்துமுதல்வாதியா? பொருள் முதல்வாதியா? இரண்டும்தான். இரண்டும் இல்லைதான்" என்று சாமிநாதன் கூறுவது எவ்வளவு பேதமை, தத்துவ சித்தாந்தங்கள் எல்லாம் சாராம்சத்தில் கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் என்ற இரண்டு பிரிவுக்குள் ஏதோ ஒன்றுள் அடங்கும் என்பதும், சாமிநாதன் திட்டவட்டமாகக் கருத்துமுதல்வாதச் சிந்தனையாளன் என்பதும் தத்துவ விசாரத்தைப் பொறுத்தவரை இதுவும் அல்லாத அதுவும் இல்லாத "அலி" பிறவிகள் இல்லை என்பதும் வெளிப்படையான உண்மைகள்" ("மார்க்சியமும், இலக்கியத்

திறனாய்வும்” பக்கம் 126)

வெ.சா. தனது கட்டுரையில் மேற்படி முடிவுக்கு வரமுன்னர் விளக்கமாகக் குறிப்பிடும் விபரங்களை மறைத்துவிட்டு அல்லது தவறுதலாகத் தவறவிட்டு நுஃமான் மேற்படி கருத்தினைக் கூறியிருக்கிறாரென்று தெரிகின்றது. இப்பொழுது வெ.சா. கூறியுள்ள முழு விபரத்தையும் பார்ப்போம்:

“நான் நாஸ்திகன். கடவுளை நம்புகிறவனில்லை. (உண்மையான தெய்வ பக்தி உள்ளவர்களை மதிப்பவன். நாம் காணும் பொருட்களெல்லாம் மாயை என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அவை நமக்கு அளிக்கும் தோற்றம், அப்பொருட்களின் உண்மை அல்ல. இத் தோற்றம் நம்மைச் சார்ந்த, நம்புலன்களைச் சார்ந்த கருத்து. அந்த உண்மையை அதன் முழுமையில் நாம் அறிய முடியுமா என்பது சந்தேகமே. உண்மையை அறிவது அறிவினால் மட்டும் சாத்தியமில்லை. புலன்களை, தர்க்க அறிவை மீறிய உள்ளொளி மூல உண்மையைக் காண்பதும் சாத்தியமே. விஞ்ஞானமும், சுற்றமும் அவற்றின் சாத்தியங்களில் எல்லை வரம்புகள் கொண்டவை. இப்போதைய அதன் எல்லைகள் நாளை அகன்று செல்லலாம். ஆனால் அதற்கும் அப்பால், அப்பால் என்று உண்மை எட்டாதே அகன்று சென்று கொண்டிருக்கிறது. உள்ளொளி மூலம் பெற்றது உண்மைதானா என்பதை அறிய, பின்னர் தர்க்க அறிவும், விஞ்ஞானமும்தான் துணைபுரிய வேண்டும்... புலன்கள் சிந்தனைக்கு வழி வகுக்கின்றன. புலன்கள் மூலம்தான் சிந்தனை சாத்தியமாகிறது முதலில். சிந்தனை மட்டுமல்ல. பல்வேறு மனநிலைகளும் கூடத்தான். ஆனால் ஒரு கட்டத்தில் அவை புலன்களை மீறி ஜீவிக்க ஆரம்பிக்கின்றன. அதே போல் இதற்கு எதிராக மாற்றுப் பிரவாகம் உண்டு. சிந்தனையும் மனநிலைகளும் புலன்களின் இயக்கத்திற்கும் காரணமாகின்றன.” (விவாதங்கள், சர்ச்சைகள் பக்கம் 40)

இவ்விதமாகக் குறிப்பிட்டு விட்டுத்தான் வெ.சா. “நான் கருத்து முதல்வாதியா? பொருள் முதல்வாதியா? இரண்டும்தான். இரண்டும் இல்லைதான்” என்று குறிப்பிடுகின்றார். நுஃமான் இவற்றையும் ஆழ்ந்து கவனித்திருந்தால் “நான் கருத்துமுதல்வாதியா? பொருள் முதல்வாதியா? இரண்டும்தான். இரண்டும் இல்லைதான்” என்று சாமிநாதன் கூறுவது எவ்வளவு பேதமை” என்று கூறியிருந்திருக்க மாட்டார்.

இப்பொழுது மீண்டுமொருமுறை வெ.சா.வின் கூற்றினை கூர்ந்து புரிந்து கொள்ள முயல்வோம். “நான் நாஸ்திகன். கடவுளை நம்புகிறவனில்லை. (உண்மையான தெய்வ பக்தி உள்ளவர்களை மதிப்பவன. நாம் காணும் பொருட்களெல்லாம் மாயை என்று நான் நினைக்கவில்லை” என்று கூறும்பொழுது வெ.சா. ஒரு பொருள்முதல்வாதியாகத் தென்படுகின்றார். இப்பிரபஞ்சத்தை ஆக்கியவர் அதனிலும் வேறான இன்னொருவரான கடவுள் என்பதை அவர் ஏற்கவில்லை. அவ்விதம் அவர் ஏற்றிருந்தால், காணும் பொருளெல்லாம் மாயை என்பதை அவர் ஏற்றிருந்தால் நிச்சயம் அவர் ஒரு கருத்துமுதல்வாதியாகத்தான் தென்பட்டிருப்பார். ஆனால் அதே சமயம் காண்பவற்றையெல்லாம் மாயையென்றும் நான் கருதவில்லையென்கின்றார். அவ்விதமாயின் அவர் காண்பவற்றை உண்மையென நம்பும் பொருள்முதல் வாதியா என்று நினைக்கத் தோன்றும். ஆனால் அவர் “ஆனால் அவை நமக்கு அளிக்கும் தோற்றம், அப்பொருட்களின் உண்மை அல்ல. இத் தோற்றம் நம்மைச் சார்ந்த, நம்புலன்களைச் சார்ந்த கருத்து. அந்த உண்மையை அதன் முழுமையில் நாம் அறிய முடியுமா என்பது சந்தேகமே.” என்றும் கூறுகின்றார்.

ஆழ்ந்து நோக்கினால் இதுவும் சரிதான். நாம் காண்பது , உணர்வது, கேட்பது, மணப்பது, சுவைப்பது எல்லாமே புலன்களின் மூலம் ஒருவரது மூளைக்குள் சென்று அங்கு அதன் செயற்பாடுகள் மூலம் விளங்கிக்கொள்ளுமொரு செயற்பாடுதான். அப்படியென்றால் நாம் காணும் எல்லாமே, அனைத்துமே நம் மூளையின்னுள்ளிருந்து உருவாகுமொன்றா? அப்படியாயின் அதற்கும் வெளியில் உண்மையொன்றென்று ஒன்று உண்டா? அதனால்தான் “நாம் காணும் பொருட்களெல்லாம் மாயை என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அவை நமக்கு அளிக்கும் தோற்றம், அப்பொருட்களின் உண்மை அல்ல. இத் தோற்றம் நம்மைச் சார்ந்த, நம்புலன்களைச் சார்ந்த கருத்து. அந்த உண்மையை அதன் முழுமையில் நாம் அறிய முடியுமா என்பது சந்தேகமே” என்று வெ.சா. சந்தேகத்தைக் கிளப்பும்போது அது நியாயமாகவே படுகிறது. ஏனெனில் புலன்களின் செயற்பாடுகளின் மூலம் மூளையில் உருவாகும் இப்பிரபஞ்சம் பற்றிய விம்பமானது தர்க்கரீதியாகப் பார்ப்போமானால் உண்மையா என்று கூட எமக்குத் தெரியாது. ஏனெனில் எல்லாமே புலன்களைச் சார்ந்திருப்பதால் அவற்றை மீறியோர் உண்மையிருக்க முடியுமென்பதை நிரூபிக்கவே முடியாது. வெ.சா.வும் இவ்விதம் சிந்தித்திருக்கின்றார். அதனால்தான் “நம்புலன்களைச் சார்ந்த கருத்து. அந்த உண்மையை அதன் முழுமையில் நாம் அறிய முடியுமா என்பது சந்தேகமே. உண்மையை அறிவது அறிவினால் மட்டும் சாத்தியமில்லை” என்று அவரால் கூறிட முடிகிறது. இதனால்தான் கடவுளென்றொரு மேலானதொரு சக்தி இல்லையென்று நம்பும் விடயத்திலும், எல்லாமே மாயை அல்ல என்பதை நம்பும் விடயத்திலும் பொருள்முதல்வாதியாகத் தென்படும் அவர் “ஆனால் அவை நமக்கு அளிக்கும் தோற்றம், அப்பொருட்களின் உண்மை அல்ல. இத் தோற்றம் நம்மைச் சார்ந்த , நம்புலன்களைச் சார்ந்த கருத்து. அந்த உண்மையை அதன் முழுமையில் நாம் அறிய முடியுமா என்பது சந்தேகமே.” என்று கூறும்பொழுது காண்பதையே உண்மையென்று அடித்துக் கூறுமொரு பொருள்முதல்வாதியாக அவரைக் காண முடியவில்லை.

பொருள் முதல் வாதியாக மட்டுமவர் இருந்திருந்தால் புலன்களுக்கு அப்பாலும் பொருள்மயப்பட்டதொரு உலகம் இருக்கிறதென்பதில் அவருக்குச் சந்தேகம் வந்திருக்கக் கூடாது. ஆக அவர் ஒரு சமயம் பொருள்முதல்வாதியாகத் தென்படுகின்றார். அடுத்த கணமே “ஆனால் அவை நமக்கு அளிக்கும் தோற்றம், அப்பொருட்களின் உண்மை அல்ல.” என்று கூறும்பொழுது அவ்விதம் இல்லாமலும் இருக்கின்றார். ஆயினும் அடுத்துவரும் அவரது கூற்றுகளான “புலன்களை, தர்க்க அறிவை மீறிய உள்ளொளி மூல உண்மையைக் காண்பதும் சாத்தியமே.” என்பதும், “புலன்கள் சிந்தனைக்கு வழி வகுக்கின்றன. புலன்கள் மூலம்தான் சிந்தனை சாத்தியமாகிறது முதலில். சிந்தனை மட்டுமல்ல. பல்வேறு மனநிலைகளும் கூடத்தான். ஆனால் ஒரு கட்டத்தில் அவை புலன்களை மீறி ஜீவிக்க ஆரம்பிக்கின்றன. அதே போல் இதற்கு எதிராக மாற்றுப் பிரவாகம் உண்டு. சிந்தனையும் மனநிலைகளும் புலன்களின்

இயக்கத்திற்கும் காரணமாகின்றன" அவரை ஒருவிதத்தில் கருத்துமுதல்வாதியாகக் காட்டுகின்றன.

ஏனெனில் உள்ளொளியென்று அவர் கூறுவது புலன்களை மீறியது. அதே போல் "சிந்தனை மட்டுமல்ல. பல்வேறு மனநிலைகளும் கூடத்தான். ஆனால் ஒரு கட்டத்தில் அவை புலன்களை மீறி ஜீவிக்க ஆரம்பிக்கின்றன" என்று கூறும்பொழுது அக்கூற்றும் அவரையொரு கருத்துமுதல்வாதியாக்கக் காட்டுகின்றன. புலன்களை மீறுமொரு சக்தியாக இங்கு சிந்தனை அதாவது கருத்து குறிப்பிடப்படுகின்றது. இது, அதாவது பொருளை மீறியதொரு சக்தி என்னும் நிலைப்பாடு, கருத்து முதல்வாதிகளினுடையது. இங்கு கருத்துமுதல்வாதியாகக் காணப்படும் வெ.சா. "நான் நாஸ்திகன். கடவுளை நம்புகிறவனில்லை" என்னும் போதும், "நாம் காணும் பொருட்களெல்லாம் மாயை என்று நான் நினைக்கவில்லை" என்று குறிப்பிடும்போதும் கருத்துமுதல் வாதியாகத் தென்படவில்லை. ஆக அவர் தன்னைப்பற்றிக் குறிப்பிட்ட "நான் கருத்து முதல்வாதியா? பொருள் முதல்வாதியா? இரண்டும்தான். இரண்டும் இல்லைதான்" என்னும் கூற்றுச் சரியானதுதான்.

இப்பொழுது இன்னுமொரு கேள்வி எழுகின்றது. அப்படியாயின் வெ.சா. வின் அவ்விதமான கூற்றுக்கள் நுஃமான் கூறுவது போல் "பேதமை"யானதுதானா? "தத்துவ விசாரத்தைப் பொறுத்தவரை இதுவும் அல்லாத அதுவும் இல்லாத "அலி" பிறவிகள் இல்லை என்பதும் வெளிப்படையான உண்மை: என்பதும் சரியான நிலைப்பாடுதானா?" ஏதாவதொரு நிலைப்பாடொன்றினை எடுக்க வேண்டுமென்பது கட்டாயம்தானா? இச்சமயத்தில் மகாகவி பாரதியையும் சிறிது நினைவு கூர்தல் பொருத்தமானதே. பாரதியின் மிகவும் புகழ்பெற்ற கவிதையொன்றுண்டு.

அது "நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே நீங்களெல்லாம் சொற்பனந்தானா? பல தோற்ற மயக்கங்களோ? என்று தொடங்கும் கவிதை. அதன் முழு வடிவம் கீழே:

நிற்பது வே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ? பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே, நீங்க ளெல்லாம்
அற்பமாயைகளோ?-உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
கானலின் நீரோ?-வெறுங் காட்சிப் பிழைதானோ?
போன தெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ?-இந்த ஞாலமும் பொய்தானோ?

கால மென்றே ஒரு நினைவும் காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ? அங்குக் குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்க ளெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால்,
சோலை பொய்யாமோ?-இதைச் சொல்லொடு சேர்ப்பாரோ?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம் காண்ப மன்றோ?
வீண்படு பொய்யிலே- நித்தம் விதி தொடர்ந்திடுமோ?
காண்பதுவே உறுதி கண்டோம் காண்பதல்லால் உறுதில்லை
காண்பது சக்தியாம்- இந்தக் காட்சி நித்தியமாம்.

> "நான் கருத்து முதல்வாதியா? பொருள் முதல்வாதியா? இரண்டும்தான். இரண்டும் இல்லைதான்"

மேற்படி கவிதையில் ஆரம்பத்தில் பாரதி "நிற்பது, நடப்பது, பறப்பது ஆகிய உயிரினங்களெல்லாம் வெறும் சொற்பனந்தானா? வெறும் பல்தோற்ற மயக்கங்கள் மட்டும்தானா?" என்று வினா எழுப்புவான். அவ்விதம் எழுப்பியவன் தொடர்ந்தும் "வானகம், இளவெயில், மரங்களெல்லாம் வெறும் கானல்தானா? காட்சிப் பிழைதானா? சென்றவையெல்லாம் கனவு போல் சென்று மறைந்ததனால் தான் வாழும் இந்த உலகும், ஏன் தானுமே கனவுதானோ?" என்றும் சிந்தனையைத் தட்டிவிடுவான். இறுதியில் "சோலையிலுள்ள மரங்களெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால், அதனைப் பொய்யென்று சொல்லலாமோ?" என்றெதிர்க் கேள்வியெழுப்பி இறுதியில் "வீண்படு பொய்யிலே நித்தம் விதி தொடர்ந்திடுமா? ஆகக் காண்பதுவே உறுதி கண்டோம். காண்பதைத்தவிர எதுவும் உண்மையில்லை" என்று கூறுவான். இந்த விடயத்தில் பாரதி ஒரு பொருள்முதல்வாதியாகத் தெரிவான். இந்த விடயத்தில் அவன் கருத்துமுதல்வாதியல்லன். ஆனால் அடுத்தவரியிலே "காண்பது சக்தியாம். இந்தக் காட்சி நித்தியமாம்" என்னும்போது அவன் குறிப்பிடும் சக்தி என்பது என்ன என்றொரு கேள்வி எழுகிறது. அவன் கண் முன்னால் காணப்படும் பொருளுலகைத் தவிர வேறொரு சக்தியுள்ளதா? அவ்விதமான சக்தியும் பொருளும் ஒன்றென்று கூறுகின்றானா? அதாவது அந்தச் சக்தியானது தனித்தும், பொருளாகவும் ஒரே சமயத்தில் சமயங்கள் கூறுவதுபோல் உருவமாகவும், அருவமாகவும், அரு-உருவமாகவும் உள்ளதொன்றா என்றொரு கேள்வியும் எழுகிறது. அவ்விதம் அவன் கூறுவானாயின் பொருள் தவிர்ந்த இன்னொரு சக்தியும் உண்டென்ற அர்த்தத்தில் அவன் கருத்துமுதல்வாதியாகவும் கருதப்படவேண்டும். அந்த அர்த்ததில் அவன் பொருள்முதல்வாதியல்லனென்றும் கருதலாம்.

தொடர்ந்து அவனது இன்னொரு கவிதையான "அல்லா" என்றொரு கவிதையில் "பல்லாயிரம் பல்லாயிரம் கோடியண்டங்கள் எல்லாத் திசையிலுமோ ரெல்லையில்லா வெளிவானிலே நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்" என்று கூறுவதைக் கவனிக்கும்போது அவன் நம் முன்னால் விரிந்திருக்கும் பொருள் உலகைப் படைத்தது அதனினும் வேறானதொரு சக்தியென்பதை நம்புமொருவனாகத் தென்படுவான். இவ்விதமே "அறிவே தெய்வம்" என்றொரு கவிதையில் "உள்ளத னைத்திலு முள்ளொளி யாகிஃ யொளிர்ந்திடு மான்மாவே - இங்குக் கொள்ளற்கரிய பிரமமென் றேமறை கூவுதல் கேளீரோ?" என்றும் "ஒன்றுபிரம முள்ளதுண்மை யதுன் உணஎவெனக் கொள்வாயே" என்றும் கூறுகையில் கருத்துமுதல்வாதியாகவும் தென்படுவான். ஆக மகாகவி பாரதியையும்

ஒருவிதத்தில் கருத்துமுதல்வாதியாகவும், பொருள்முதல்வாதியாகவும், மறுபுறத்தில் கருத்து முதல்வாதியல்லாதவனாகவும், பொருள்முதல்வாதி அல்லாதவனாகவும் வெ.சா. தன்னைப் பற்றிக் குறிப்பிடுவதைப் போல குறிப்பிடலாம்.

இந்த விடயத்தில் பாரதியை நோக்கியும் அவனது மேற்படி கவிதையின் பொருளையிட்டு நுஃமான் கூறுவது போல் அது "பேதமை"யானதுதானா? தத்துவ விசாரத்தைப் பொறுத்தவரை இதுவும் அல்லாத அதுவும் இல்லாத அலி பிறவிகள் இல்லை என்பதும் வெளிப்படையான உண்மை:" என்பதும் சரியான நிலைப்பாடுதானா என்ற தர்க்கச்சிறப்பு மிக்க கேள்வியொன்றினை எழுப்பலாம். உண்மையில் பாரதியின் மேற்படி நிலைக்குக் காரணம் அவனது பேதமையல்ல. அறிவுத் தாகமெடுத்து அலையும் அவனது உள்ளத்தில் அதன் விளைவாக எழுந்த கேள்விகளின் விளைவேயெனபது வெள்ளிடைமலை. மேற்படி முரண்பட்ட நிலை போன்ற பலவற்றை அவனது படைப்புகளில் ஒருவரால் கண்டு பிடிக்க முடியும். அவையெல்லாம் அவனது மேதமையின் வளர்ச்சிப் படிக்கட்டுகள்தான். பாரதியின் மேற்படி கவிதையைப் போன்றதுதான் வெ.சா.வின் மேற்படி கட்டுரையும் அதிலவர் வந்தடையும் "நான் கருத்து முதல்வாதியா? பொருள் முதல்வாதியா? இரண்டும்தான். இரண்டும் இல்லைதான்" என்னும் முடிவும். உண்மையில் மேற்படி அவரது நிலையும் பாரதியைப் போல் அறிவுத்தாகமெடுத்து அலையும் அவரது நிலையினைத்தான் குறிக்கிறதென்று கொள்வதுதான் சரியான நிலைப்பாடாகவிருக்க முடியும்.

வெ.சா இருப்பைப்பற்றி பாரதியைப் போன்று தத்துவத் தேடல் மிக்கவர். பேராசிரியர் நா.வானமாலையின் கட்டுரைக்கு எதிர்ப்பாக அவர் எழுதிய கட்டுரைகள் அதனைத்தான் எடுத்தியம்புகின்றன. கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் பற்றிய அவரது எண்ணங்கள் அதற்கு நல்ல உதாரணங்களாகவுள்ளன.

ஈழத்து முற்போக்கிலக்கியத்தின் முன்னோடியான அறிஞர் அ.ந.கந்தசாமி இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் கால் பதித்தவர். அவர் "ஈழத்து சிருஷ்டி இலக்கியத்துக்கு குழி தோன்றும் முயற்சி" என்னும் கட்டுரையில் ("தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும்"- தொகுப்பு: சுபைர் இளங்கீரன் சவுத் ஏசியன் புக்ஸ் பதிப்பகம் மே 1993) ஈழத்திலும் தென்னகத்திலும் சிருஷ்டி இலக்கியத்துறையில் ஈடுபட்டுத் தமிழுக்குப் பயனுள்ள சேவை செய்து வருபவர்களாக கலை கலைக்காகவே என்று கலைப் பிரக்ஞையுடன் இலக்கிய சிருஷ்டியில் ஈடுபட்டுள்ளவர்கள் (க.நா.சு தொடக்கம் கனக செந்திநாதன் வரையிலானவர்கள்), கலை ஒரு பொழுது போக்குச் சாதனம் என்ற கருத்துடையவர்கள் (கல்கி, நாடோடி தொடக்கம் யாழ்ப்பாணத்துத் தேவன் வரையிலானவர்கள்), மற்றும் கலையை ஒரு சமுதாய சக்தியாக, கலையை ஓர் ஆயுதமாகக் கருதுபவர்கள் (சிதமபர ரகுநாதன் தொடக்கம் டானியல் வரையிலானவர்கள்) ஆகிய மூன்று பிரிவினர்களைக் குறிப்பிடுவார். பின்னர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் அவர் "இந்த மூன்று பிரிவினருக்குள்ளேயும் பலவிதமான கருத்து வேறுபாடுகள் உண்டு. அவற்றுள் சில ஆழமான தத்துவப் பிரச்சினைகள் என்பதையும் நாம் பூசி மெழுக விரும்பவில்லை. இருந்தபோதிலும் இந்த மூன்று சாராருக்கும் இடையில் ஒரு முக்கியமான பொதுத்தன்மையும் இழையோடிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கு வற்புறுத்த விரும்புகிறேன். அந்தப் பொதுத்தன்மை என்னவென்றால் தமிழ் வளர்கிறது, தமிழை எம்மால் வளர்க்க முடியும், தமிழ் காலத்துக்கேற்ப மாறுதல் அடைந்து செல்லவல்லது என்பது போன்ற எண்ணங்களில் இவர்களுக்குள்ள அசையாத ஈடுபாடாகும். இந்த நம்பிக்கைகளை தரும் மனோ ஆரோக்கியம்தான் இவர்களை சிருஷ்டி இலக்கியத்துறையில் உற்சாகத்தோடு இறங்கச் செய்கிறது." (தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும், பக்கம் 36)

அ.ந.க.வின் இத்தகைய மனநிலை ஆரோக்கியமானது. அவரொரு மார்க்சிய வாதியாகவிருந்தபோதிலும் அவரால் இவ்விதமாக ஏனைய இலக்கியப் போக்குள்ளவர்களின் பங்களிப்புகளையும் அங்கீகரிக்க முடிகிறது. இத்தகையதொரு மனோபாவம் தமிழ் இலக்கிய மற்றும் கலைத்துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு அவசியம். இவர்களுக்கிடையில் பல்வேறு முரண்பாடுகள் மற்றும் தத்துவச் சிக்கல்களிருந்த போதிலும் இவர்கள் அனைவருமே ஆரோக்கியமான பங்களிப்பினைத் தமிழ் கலை, இலக்கியத் துறைக்கு வழங்கியவர்கள். வழங்குபவர்கள். இந்த நிலையில் வெங்கட் சாமிநாதன், கலாநிதி கைலாசபதி, பேராசிரியர் நா.வானமாமலை போன்றோரின் வாதங்களெல்லாம், முரண்பாடுகளெல்லாம் தமிழ்க் கலை, இலக்கியத் துறைகளை வளம்படுத்தின் வாசகர்களின் சிந்தனைக் குதிரைகளைத் தட்டி விட்டன.

இதே சமயம் வெங்கட் சாமிநாதனின் பங்களிப்பானது இன்னுமொரு வகையிலும் மிகவும் முக்கியமானது. கடந்த ஐம்பது வருடங்களாகத் தாங்கிப் பிடிக்க எந்தவிதமான கட்சியோ, ஸ்தாபனமோ (முற்போக்கிலக்கியக்காரர்களுக்குள்ளது போன்று) இல்லாததொரு நிலையில், தன்னந்தனியாகத் தன் பரந்த வாசிப்பு, கலைகள் பற்றிய விரிவான புரிந்துணர்வு, இரசனை மற்றும், தேடல் மிக்க சிந்தனையின் விளைவாகத் தன் கருத்துகளைத் துணிச்சலுடன் எடுத்தியம்பி வந்தவர். யாருக்குமே அடிபணிந்தவரல்லர். சரியென்று பட்டதை நேருக்கு நேராகவே அடித்துக் கூறும் ஆற்றல் மிக்கவர். ஆளுக்காள் துதிபாடி வட்டங்களை உருவாக்கி, ஒருவரையொருவர் துதிபாடித் தம்மிருப்பை நிலைநாட்டிட முனையுமொரு சூழலில், தன் அறிவை மட்டுமே மூலதனமாக்கி, எந்தவித விளைவுகளையும், பயன்களையும் எதிர்பார்க்காமல் , தனக்குச் சரியென்று பட்டதை வெளிப்படுத்தி வந்தவர். திரு வெ.சா.வின் பங்களிப்பு தமிழ்க் கலை இலக்கியத்துறையில் என்றென்றும் நன்றியுடன் நினைவுக்கூரப்படுமொரு பங்களிப்பென்று துணிந்து கூறலாம்...

உசாத்துணை நூல்கள்:

1. கலை உலகில் ஒரு சஞ்சாரம் - வெ.சாமிநாதன் (சந்தியா பதிப்பகம் 2004)

2. விவாதங்கள் சர்ச்சைகள்- வெ.சாமிநாதன் (அமுதசுரபி பதிப்பகம் டிசம்பர் 2003)

3. மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்- எம்.ஏ.நுஃமான்( அன்னம் பதிப்பகம் டிசம்பர் 1987)

4 . பாரதியார் கவிதைகள் (மணிவாசகர் பதிப்பகம் பெப்ருவரி 2000)

5. தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும்- தொகுப்பு- சுபர் இளங்கீரன் (சவுத் ஏசியன் புக்ஸ் மே 1993)

6. தமிழ் நாவல் இலக்கியம்- பேராசிரியர் கைலாசபதி (குமரன் பப்ளிஷர்ஸ் ஏப்ரல் 1999)

# மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:



எல்லாளன் படை

## வரலாற்று தேடல்கள்

கெமுனு படை



**எம்.ஆர்.ஸ்டாலின்**

Facebook: M R Stalin Gnanam

"மட்டக்களப்புத் தமிழகம்" என்னும் நாமத்தை முன்வைத்து எழுதப்படுகின்ற இந்த வரலாற்றுத் தேடல் தொடரில் இம்முறை "மட்டக்களப்புத் தமிழகம்" எனும் பெயரிலேயே எழுதப்பட்ட நூலானது முன்வைக்கும் சில வரலாறுகளை அறிய முயல்வோம்.

வி.சி.கந்தையா என்னும் பண்டிதரால் "மட்டக்களப்புத் தமிழகம்" என்னும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. வி.சி.கந்தையா அவர்கள் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர், மற்றும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்றோரின் மாணவராவார். யாழ்.குரும்பசிட்டி ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றத்தினர் 1964ஆம் ஆண்டு இதனை நூலுருவாக்கம் செய்துள்ளனர்.

பெரும்பாலும் வரலாற்று நூல்களென்பன மன்னர்களின் ஆட்சிக்காலங்களை வரிசைப்படி தொகுக்கின்ற பரம்பரியங்களைக் கடந்து வித்தியாசமான ஒரு கோணத்தில் மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாற்றை அவர் தொகுத்தளித்துள்ளார். அதாவது வரலாறென்பது மன்னர்களின் வரலாறு மட்டுமல்ல அல்ல, அது அந்த நிலத்தே வாழுகின்ற மக்களின் சமூக வரலாறுமாகும் என்பதை அழுத்தம் திருத்தமாக இத்தொகுப்பானது நமக்கு உணர்த்துகின்றது.

அந்தவகையிலே இந்நிலத்தே வாழ்ந்த மக்களின் கலைகள், கலாசாரங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வாழ்வியல் அம்சங்கள்,மருத்துவ பாரம்பரியங்கள், பொழுதுபோக்குகள், உற்பத்தி உறவு முறைகள், நாட்டுப்புற வழக்காறுகள், சாதி முறைமைகள், குடி வழக்குகள் என்று அனைத்தையும் பற்றிய சேகரங்கள் அடங்கிய ஒரு கூட்டுத் தொகுப்பாகவே இவ்வரலாற்று நூல் திகளுகின்றது.

இந்நிலப்பரப்பிலே நீண்டும் பரந்தும் கிடக்கின்ற "களப்பு" என்னும் நீர்நிலையின் பெயரை அடியொற்றியே மட்டக்களப்பு என்னும் இந்நாமம் இப்பிரதேசத்துக்கு உருவாகியுள்ளது. விஜயனின் தொடர்ச்சியாக ஆட்சி செய்த ஸ்ரீகுலசேனனின் புத்திரன் கூத்திகன் என்பான் "களப்பு" மேட்டிலே காடுத்திருத்தி அதை நாடாக்கி அதற்கு "மட்டக்களப்பு" என்னும் பெயரிட்டான் என அறிஞர் எப்.எக்ஸ்.சி நடராஜா சொல்வார். அவ்வாறு நோக்கில் சுமார் 2200 ஆண்டுகள் பழமைவாய்ந்ததாக "மட்டக்களப்பு" என்னும் பெயர் அமைகின்றது.

அந்த வகையிலே களப்பு, ஆறு, குளம், ஓடை, ஊரணி, கேணி, முனை, குடா, தீவு என்று நீர்நிலைகளின் அடியொற்றி முடிகின்ற கிராமங்களின் பெயர்கள் பழந்தமிழர்களின் மாறாத பண்பாடு இம்மண்ணில் வாழுவதை எடுத்தியம்புகின்றது. அதேபோல காடு, மலை, சோலை, சேனை, தோட்டம், வெளி என்று விளைநிலங்களை இட்டு முடிகின்ற ஊர்கள் இம்மண்ணிலே நிறைந்து கிடக்கின்றன.

அத்தகைய ஒவ்வொரு ஊர்களினதும் பூர்வீகங்களும் காரணப்பெயர்களும் இந்நூலில் விபரிக்கப்படுகின்றன.

பத்து இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலில் எடுத்த எடுப்பிலேயே "உணர்ச்சிக்கவிநலம்" என்னும் தலைப்பிலானதொரு இயல் தொடக்கமாக இருப்பது ஆச்சரியத்துக்குரியது. ஆம். கவிதையிலே வளர்ந்து,கவிதையிலே பேசி, கவிதையிலே வாழ்தல் என்பது எத்துணை அனுபம்? அத்துணை வாழ்வாக மட்டக்களப்பு மக்களின் வாழ்வு இருந்திருக்கின்றது என்பதும், அவ்வாறாக வயலுழுவோரும், வண்டில் ஓட்டுவோரும், மீன்பிடிப்போரும், உடற்களைப்புத் தீரப் பாடிமகிழும் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றியும் விதந்தோதுகிறது இந்த உணர்ச்சிக்கவி நலம் எனும் பகுதி. இயல்பான மனவெழிச்சியின் வெளிப்பாடாக பாட்டுக்கட்டி மெட்டமைத்து பாடுகின்ற வரகவிகள் பற்றி அறிகின்றபோது இந்த பொக்கிஷங்களையெல்லாம் எங்கே தொலைத்தோம் என்று பெருமூச்செறிகின்றது.

அதேபோல நாட்டுக்கூத்துக்கள் என்பன மட்டக்களப்பின் பரம்பரைச் சொத்தாகும்.வடமோடி தென்மோடி கூத்துக்கள்,விலாசங்கள், கண்ணகி வழக்குரை, வசந்தன் கூத்து, குளுத்தி, கும்மி, குரவை, மகுடி என்று எத்தனை எத்தனை ஆடல் வடிவங்கள் இந்த மண்ணை வளப்படுத்தியிருக்கின்றன! போரும் மரணமும் துன்பமுமாகக் கழிகின்ற நாட்டுக் கூத்துக்கள் வடமோடியாகவும் காதலும் இன்பமும் மகிழ்வுமாகக் ஆடுகின்ற கூத்துக்கள் தென்மோடியாகவும் பண்பட்டு பிரிந்து

நிற்கும் நுட்பத்தை சேக்ஸ்பியரின் இன்பியல் துன்பியல் என்கின்ற நாடக பாணிகளோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது என்கின்றார் இந்நூலாசிரியர்.

இத்தகைய கூத்துப் பாரம்பரியம் இன்றும் தொடர்கின்றதா என சிலர் சிந்திக்கத் தலைப்படலாம். ஆம். கிராமத்துக் கோவில்களின் முன்றல்களிலே, திறந்தவெளி கூத்துக் களரியிலே, மருதநிலத்திலே, பாய்விரித்து விடிய விடிய பார்த்திருந்து பரவசம்பெறக்கூடிய கூத்து அரங்கேற்றங்கள் படுவான்கரை மண்ணிலே இன்றுவரை தொடர்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரியச்செய்தி.

மறுகா

இங்கே வழங்குகின்ற செந்தமிழ்ச் சொல்வளம் எப்படியெல்லாம் பேணப்படுகின்றது? இன்றும் மக்களின் பாவனையில் உள்ள பழந்தமிழ் சொல்லாடல்கள் எவையெவை? என்பன பற்றி சுமார் எழுபது பக்கங்களுக்கு மேல் சிலாகித்திருக்கும் ஒவ்வொரு வரிகளும் மிகப்பெரிய மொழியாராச்சி மாநாட்டுக் கட்டுரைத்தொகுப்புகளில் கூட காணமுடியாத ஆசிரியரின் உழைப்பினைப் பறைசாற்றுகின்றது.

ஆடவர் தோளிலும் "கா", அரிவையர் நாவிலும் "கா" என்னும் வழக்கு இங்கே பிரசித்தமானது. அதாவது காவுகின்ற தடிகொண்டு அதனிருபுறமும் பொருளடங்கிய கூடைகளைக் கொழுவி அதனைத் தோளிலே சுமக்கின்ற செயலினை "கா" சுமப்பது என்றும், என்ன-கா? வா-கா! இரு-கா. என்று வரவேற்கின்ற பாணியில்தான் எத்தனை "கா"? இப்படி ஒவ்வொரு சொல்லும் "கா" என்று முடிகின்ற சொல்லாடல்கள் இந்த மண்ணின் அரிவையர்களின் "நா"விலே குடிகொண்டிருக்கும் பேச்சுவழக்குகளின் சிறப்பம்சமாகும். இவையெல்லாம் கொச்சையான பாஷையென்றும் பண்டிதர்களும் படித்தவர்களும் கேலிசெய்த காலத்தே "இல்லையில்லை" இவையனைத்தும் பழந்தமிழ் செல்வங்கள் என்று எடுத்துரைத்திருக்கின்றார் இந்நூலாசிரியர்.

ஆடவர் தோள்களில் இப்போது இந்தக் "கா" வெல்லாம் கிடையாதெனினும் எங்கள் தேவியரின் வாய்ப் பேச்சிலே அந்த "அசைநிலைக்கிழவி"யான "கா" என்றும் நிலைத்தே நிற்குதுகா.

"இலக்கா ஆராய்ச்சி" என்று வருகின்ற மிகக் காத்திரமான கட்டுரையில்

> "வழுதுணங்காய் (கத்தரிக்காய்) மறுகா,கிறுகி,செப்பம் என்கின்ற பழந்தமிழ் இலக்கண வகைப்பாடு சொல்லாடல்களை பிறர் கேலி செய்வது என்பது அவர்களின் அறியாமையேயாகும் என்பதை ஆதாரங்களுடன் புரியவைக்கின்றது "செந்தமிழ்ச் சொல்வளம்" எனும் தலைப்பிலான கட்டுரை."

"யா, கா, பிற, பிறர்க்கு, அரோ, போ, மாது, எனவரூஉம்
ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி"-(சொல்-297) என்னும் தொல்காப்பிய சூத்திரத்தில் காட்டப்பட்ட ஏழுவகை அசைச்சொற்களிலும் குறிக்கின்ற இந்த "கா" என்னும் சொல் வழக்கு பழந்தமிழ் இலக்கணத்தின் பாற்பட்டதே என்று நிறுவுகின்றார்.

அதே போன்று வழுதுணங்காய் (கத்தரிக்காய்) மறுகா,கிறுகி,செப்பம்......... என்கின்ற பழந்தமிழ் இலக்கண வகைப்பாடு சொல்லாடல்களை பிறர் கேலி செய்வது என்பது அவர்களின் அறியாமையேயாகும் என்பதை ஆதாரங்களுடன் புரியவைக்கின்றது "செந்தமிழ்ச் சொல்வளம்" எனும் தலைப்பிலான கட்டுரை.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று பாரதிதாசன் சொல்வதுபோல வரலாறு என்பதில் "மட்டக்களப்புத் தமிழக"த்தின் பண்பாடு என்பது வந்தாரை வாழவைப்பது மட்டுமல்ல எதிரியை "வை"யும் போதுகூட "நாசமற்றுப்போ" என்று மங்கல வார்த்தைகளில் திட்டுகின்ற பண்பட்ட மக்கள் வாழுவது இந்த மண்ணில் என்பதை எடுத்தியம்புகின்றார்.

"மட்டக்களப்புத் தமிழக"த்தின் மாந்தர்கள் கைக்கொள்ளும் பண்பட்ட வாழ்வையும் பழந்தமிழ் பாரம்பரியங்களையும் பற்றிய கட்டுரைகளுக்குப் பின்னரே மன்னர்களின் வரலாற்றுக்குள் நுழைகின்றார் நூலாசிரியர்.

புராணங்கள் இதிகாசங்கள் ஒருபுறமிருக்க இலங்கை வரலாறானது விஜயன் குவேனியிலிருந்தே ஆரம்பிக்கின்றது. குவேனிக்கு அடுத்ததாக தனது இரண்டாவது மனைவியை பாண்டி நாட்டிலிருந்து அழைத்து கொண்ட விஜயன் தனது 700 தோழர்களுக்குமான மணப்பெண்களையும் அங்கிருந்தே தருவித்திருக்கின்றான். இந்த பாண்டியர் குல பெண்களையெல்லாம் இந்த மட்டக்களப்பு பகுதியிலேயே குடியேற்றியதாக மகாவம்சம் கூறுகிறது. அதாவது பாண்டிநாட்டிலிருந்து விஜயன் தனது குடிகளை இலங்கையிலுள்ள "கதிரகல" மலைச்சரிவில் குடியேற்றினான் என மகாவம்சம் குறிப்பிடுகிறது.

இக்குடியேற்றம் கிறிஸ்துவுக்கு முன் 483ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கிறது.

"இந்த மலைச்சாரல் கதிரகல எனும் பெயருடன் இன்றுவரை மட்டக்களப்பிலிருந்து தென்மேற்கே சுமார் 27 கி.மீ தொலைவில் காணப்படுகின்றமை முக்கிய அம்சமாகும்" என்கின்றார் கந்தையா பண்டிதர் அவர்கள். அப்படியாக நோக்குகின்ற பொழுது இந்த விஜயனின் வாரிசுகள் ஊடாக தொடர்ந்த மட்டக்களப்பை அடிப்படையாகக் கொண்ட அரசோற்றும் மையங்கள் சுமார் 2550 ஆண்டுகால பாரம்பரியம் கொண்டவையாகின்றன.

துட்டகைமுனு

இலங்கையின் மிக பழமையான வரலாற்றுத் தடயங்களை கொண்ட இராசதானி "தீகவாவி" ஆகும். இதுவும் "மட்டக்களப்புத் தமிழக"த்தில் அமைந்துள்ள தென்பது முக்கியமானது. இந்த தீகவாவியானது கிழக்கினது பழம் பெரும் வரலாற்றிலிருந்து பிரிக்கப்பட முடியாதது ஆகும். தமிழர்கள் இதனை மகாகந்த குளம் என்கின்றனர். அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றுக்கு மேற்கே 22 கி.மீ தூரத்தில் உள்ள கல்லோயா பள்ளதாக்கில் காணப்படுகிறது இந்த மாகாகந்தகுளம். கிழக்கிலங்கையின் ஆட்சியதிகாரம் முன்னெடுங்காலத்தில் இந்த தீகவாவியினையே மையமாகக் கொண்டு செயற்பட்டு வந்திருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்பே மாணிக்க கங்கையின் கரையோர நகரான "மாகம" எனுமிடத்திலிருந்து மட்டக்களப்பையும் உள்ளடக்கிய இராச்சியத்தை காவந்ததீசன் (துட்ட கைமுனுவின் தந்தை) என்பவன் ஆண்டிருக்கிறான்.

அதுவே உருகுணை இராச்சியமாக காலப்போக்கில் விரிவடைந்தது. இந்த காவந்ததீசனின் வாரிசான சதாதீசன் தனது தலைநகராக தீகவாவியை

கொண்டிருந்திருக்கின்றான். இவனது சகோதரனே இலங்கை வரலாறுகளில் அதிகம் உச்சரிக்கப்படும் துட்டகைமுணு ஆகும். கௌதம புத்தரும் தனது இலங்கை தரிசனங்களின் போது இந்த தீகவாவிக்கு வருகை தந்துள்ளதாக கூறுகின்றது மகாவம்சம்.

கி.மு.145 ல் இலங்கைமீது படையெடுத்து இந்தியாவிலிருந்து வந்த எல்லாளன் என்பவன் பெரும் சேனையோடு இலங்கையின் பல பகுதிகளை கைப்பற்றினான். தனது தலைநகராக அனுராதபுரத்தை ஆக்கிக் கொண்ட இவன் சுமார் 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவ்வேளை உருகுணுரட்டையின் பல பகுதிகளும் இவனது ஆளுகைக்குட்பட்டிருந்தன. அவன் இலங்கையின் முக்கியமான விடங்களிலெல்லாம் 32 கோட்டைகளை கட்டினான். இந்த எல்லாளனது ஆக்கிரமிப்புக்கு முடிவுகட்டியவன்தான் துட்டகைமுணு. கி.மு.101ல் அவன் எல்லாளனை கொன்று இலங்கையை மீட்டான். அனுராதபுரத்தில் இருந்து அரசோற்றிய எல்லாளனுடன் பொருதுவதற்காக மாகமயிலிருந்து துட்டகைமுணு திட்டம் தீட்டினான். அப்போது அம்பாறையின் (தீகவாவி) உறுகுணை ராச்சியத்தின் மன்னராக விளங்கிய சதாதீசனது தம்பியாகவும் படைத்தளபதியாகவும் செயற்பட்டவனே இந்த துட்டகைமுணு. பெரும்பாலும் இவனது படைகளில் மட்டக்களப்பு தமிழர்களே நிரம்பி காணப்பட்டிருக்கின்றனர்.

இவன் தமிழனாய் இருந்த போதும் அன்னியனாகவும் ஒரு ஆக்கிரமிப்பாளனாகவுமே சுதேச மக்களால் எல்லாளன் உணரப்பட்டான். எனவேதான் தமிழ் சிங்கள வேறுபாடுகளின்றி துட்டகைமுணு படைநகர்த்த மாகம தொடங்கி மையங்களை ஊடாக மட்டக்களப்பு வரை வாழ்ந்த சிங்கள-தமிழ் மக்கள் ஒன்று திரண்டு எதிரியை துரத்தியடித்தனர்.

இதனை வீ.சி.கந்தையா "எல்லாளன் ஒரு தமிழனாகவே இருந்தபோதிலும் ஈழநாட்டை கைப்பற்ற வந்த ஒரு அன்னியனேன்றே கொண்டு அவனை எதிர்த்து துரத்துவதே முறையானது என்ற தாய்நாட்டு பற்றோடு சதாதீசனது ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களும் கைமுணுவின் படையில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை

"இலங்கையின் வரலாற்றின் துட்டகைமுணு, எல்லாள யுத்தம் என்பது ஒரு பெரிய இனமுரண்பாட்டு யுத்தமாகவே நமக்கு கற்றுத்தரப்பட்டிருந்தது. சிறிலங்கா இராணுவத் தரப்பில் கெமுணு படைப்பிரிவு ஒன்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் எல்லாளன்படை என்கின்ற ஒரு பிரிவுமாக பெயரிடப்பட்டிருந்தமையும் இதனடிப்படையில்தான்."

கைமுணுவின் படைவீரரில் தமிழரும் பலர் இருந்தார்கள் என்ற வரலாற்று குறிப்பு உறுதிப்படுத்துகிறது." எனக் குறிப்பிடுகின்றார்.

"மாகமம் எனுமிடத்திலிருந்து எல்லாளனுக்கெதிராக கைமுணுவின் தலைமையில் புறப்பட்ட பெரும்படை வடக்கு நோக்கி மகாவலி கங்கையின் கிழக்குக் கரை வழியே சென்றது" என்கிறார் இந்த வரலாற்றாய்வாளர்.

அதாவது இன்று நாம் வெருகல் ஆறு என்றழைக்கும் மகாவலி கங்கையின் கிளைக்குரிய உண்மைப் பெயர் பேரிகையாறு ஆகும். காரணம் மாகமையிலிருந்து மட்டக்களப்பு ஊடாக சென்ற படைகள் அன்னியனுக்கு எதிராக பாசறை கொண்டு போர் பேரிகை முழங்கிய இடம் என்பதனால் அன்றிலிருந்து வெருகலாறு பேரிகையாறு




எனும் காரணப்பெயர் பெற்றது.

2004ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்கு என்று பிரிந்து நின்ற போது இந்த வெருகலாற்றின் கரையிலேதான் பிரபாகரன் தலைமையிலான வன்னிப் புலிகள் கிழக்கு புலிகள் மீது கட்டவிழ்த்துவிட்ட வெருகல் படுகொலையும் நடந்தேறியது.

இந்த பேரிகையாற்றையும் தாண்டி படையிறக்கி பொலன்னறுவை ஊடாக அனுராதபுரம் சென்றடைந்த கைமுணுவின் படையுடன் பொருதியே தனிசமரில் கைமுணுவிடம் எல்லாளன் வீழ்ந்தான். வடக்கே இந்தியாவில் இருந்து வந்த அன்னியனாகிய எல்லாளன் படை இலங்கையை விட்டு ஓடிவிட மட்டக்களப்பு தமிழகம் அடங்கிய உருகுணு இராச்சியம் விடுதலை பெற்றது. அது மட்டுமல்ல முழு இலங்கையும் விடுதலையானது.

அந்தக் காலத்தில் மட்டக்களப்பில் நிலவிய சாதாரணமான சுதேச மக்களின் இயல்பான உணர்வுகள் மறைக்கப்பட்டு சிங்கள வரலாற்றாளர்கள் துட்டகைமுணுவின் படைகளிலிருந்து அவனை மட்டுமே தனித்தெடுத்து தேசிய வீரனாக்கி இறுதியில் சிங்களக் குறியீடாகவும் ஆக்கிக் கொண்டனர்.

அதேபோல தமிழ் இன வரலாற்றாளர்களும் துட்டகைமுணுவிற்கு எதிராக எங்கிருந்தோ வந்த ஆக்கிரமிப்பாளனான எல்லாளன் என்னும் அன்னியனை தமிழ் மன்னனாகவும் தமிழ் அடையாளமாகவும் உருவகித்தனர். இப்படி சிங்கள வரலாற்றாளர்களுடன் தமிழ் வரலாற்றாளர்களும் சேர்ந்து தத்தமது பங்கிற்கு சிங்கள வரலாறு என்றும் தமிழ் வரலாறு என்றும் எழுதினர்.

இலங்கையின் வரலாற்றின் துட்டகைமுணு, எல்லாள யுத்தம் என்பது ஒரு பெரிய இனமுரண்பாட்டு யுத்தமாகவே நமக்கு கற்றுத்தரப்பட்டிருந்தது. சிறிலங்கா இராணுவத் தரப்பில் கெமுணு படைப்பிரிவு ஒன்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் எல்லாளன்படை என்கின்ற ஒரு பிரிவுமாக பெயரிடப்பட்டிருந்தமையும் இதனடிப்படையில்தான்.

எனவே இலங்கை மக்களின் வரலாற்றை இனங்களின் வரலாறாகவும், இனப்பெருமைகளின் வரலாறாகவும், இன இழிவுபடுத்தல்களின் வரலாறாகவும் எழுதிவிட்டமையே ஈழத்தில் இரத்த ஆறு ஓடியமைக்கான ஆதார ஊற்றாகும்.

தொடரும்

# கார் வலர்கள்


PRINCESS AUTO




51 EVAN


41 Milner Ave.
43 Milner Ave.
ANY CONDITION
OLD VOLKSWAGENS
WANTED
VW BEETLES AIR COOLED
ANDY 905-433-0385


INDEPENDENT ELEC

WANTED



NERS



APACHEEE

AZVK 284






AZVK 284




1936 FORD SLANT BACK
JULY 199




CHEVROLET
CEZP 039


CKJF 172


MN-55













Antique/Vintage cars எனப்படும் பழைய கார்களை, கவனிப்பாரற்று உக்கிப் போயிருக்கும் நிலையில் வாங்கித் திருத்தி, பொழுதுபோக்காக ஓடித் திரியும் ஆர்வலர்கள் இங்கே நிறைய. இவர்கள் அவ்வாறான ஆர்வலர்களுக்கு எல்லாம் சங்கங்கள் அமைத்து, கோடை காலத்தில் ஊர்கோலம் போவார்கள்.

இங்கே கார் திருத்தல் போன்ற சுயதொழிற் கருவிகள் விற்கும் பெருங்கடை ஒன்றுளது. அங்கே மலிவுவிற்பனை நடக்கும் போதெல்லாம், அவர்கள் வீட்டுக்கு அனுப்பும் துண்டுபிரசுரத்தோடு முதல்நாளே ஆஜராவதுண்டு. இல்லையேல் விற்றுத் தீர்ந்து விடக் கூடும். உடனடியாகத் தேவைப்படாவிட்டாலும், இந்த விலையில் வாங்கி வைத்தால் எப்போதாவது உதவும் என்ற நல்லெண்ணம் தான்.

இந்த மலிவு விற்பனை மாதத்திற்கு இரு தடவைகள் செவ்வாய்க்கிழமைகளில் ஆரம்பமாகும். அந்த நாட்களில், கோடை கால முடிவில், இந்த ஆர்வலர்கள் அந்தக் கடையின் கார் தரிப்பு நிலையத்தில் கூடி, காட்சி நடத்தி, சிறந்த கார்களுக்கான பரிசில்கள் வழங்குவார்கள்.

பூர்வமான பழைய கார்கள் எல்லாம் புதிதாக பூசி மினுக்கி, கண்ணைக் கவரும் வண்ணங்களில் பளிச் சென்று இருக்கும்.

குளிர் காலங்களில் வீட்டுக் கராஜ்களில் மூடியே பாதுகாப்பாக இருக்கும் இவை எல்லாம் கோடை காலம் மட்டும் உபயோகமாகும். பெரும்பாலும் பண்ணைத் தோட்டங்களில் வளர்ந்தவர்கள் அந்தக் காலத்தில் தங்கள் பரம்பரை ஓடித் திரிந்த கார்களில் ஆர்வமாக இருப்பார்கள்.

அவர்கள் கார் வலர்கள் என்றால், நான் படப்பிடிப்பார்வலன். கமெராவோடு ஆஜராகி சுட்டவை இவை.

இதில் Back To The Future படத்தில் வரும் DeLorean உட்பட, மீளப் புனரமைத்த பின்னர், வாங்கிய போதிருந்த நிலையிலிருந்த படம் வரை உள்ள பல வாகனங்கள் காட்சிக்கு இருந்தன.

ஆர்வலர்கள் தங்கள் கார்களுக்கு அருகில் பெருமையோடு கதிரைகள் போட்டு உட்கார்ந்திருப்பார்கள். பார்க்க வந்த ஆர்வலர்கள் உற்சாகமாக உரையாடிக் கொண்டிருப்பார்கள். படம் எடுக்கலாமா என்று கேட்டால் பெரும் மகிழ்ச்சி.

ஆர்வங்கள் எல்லாம் அவரவர்க்கானவை. சில நேரங்களில் மற்றவர்களால் இலகுவில் புரிந்து கொள்ளப்பட முடியாதன.

ஜோர்ஜ் இ.

அபத்தம் 2.0

# Read the fine print!

எழுதுங்கள்!
அபத்தத்திற்கு எழுதுங்கள்!
அபத்தங்களை எழுதுங்கள்!

எழுதுவதற்கு முன்னால், நிறைய வாசியுங்கள்.

கீழே உள்ளது உட்பட!

எழுதுங்கள்.

தயக்கம் இல்லாமல், பயம் இல்லாமல்.

மற்ற இடங்களுக்கு அனுப்பினால் போட மாட்டினம் என்று நினைப்பவற்றை எழுதுங்கள்.

தரமாக இருக்குமோ என்ற கவலை வேண்டாம்.

அது அளவுகோல்களுடன் அலைகிற ஆசான்களுக்கானது.

இலக்கிய பீடங்களுக்கானது.

தரம் எது என்று கேட்டால், ஒரே பதில் வராமல் இருக்கும் அளவுக்கு இங்கே எக்கச்சக்கமான முகாம்கள்.

கோஷ்டி மோதல்கள் நமக்கு ஆகாது.

தனியே 'நிண்டு அடிபடுவது தான்' நம்ம வேலை!

உள்ளத்தில் இருந்து வரும் உண்மையை விட, உண்மையை அறிய வேண்டும் என்ற தேடலை விட, உண்மையை மறைத்து, ஏமாற்றுகிறார்களே என்ற கோபத்தை விட... தரம் என்பது ஒன்றும் முக்கியமானதில்லை.

இன்னொருவர் சலிப்படையாமல் கேட்கக் கூடியதாக கதை சொல்லக் கூடியவர் என்றால், நீங்கள் எழுதக் கூடியவர் தான்.

ஆனால், சஞ்சிகைக்கான எழுத்தும், பேஸ்புக்குக்கான எழுத்தும் வேறானவை.

விருப்புக்குறிகள், இதயக்குறிகள், 'செம!' பின்னூட்டங்கள் எல்லாம் அடுத்த நாளே மறந்து போகின்றவை.

சஞ்சிகைக்கான எழுத்துக்கு ஆயுள் கொஞ்சம் அதிகம்.

எனவே, அதற்கான உழைப்பும் அதிகம். அவசியம்.

மனதில் தோன்றுவதை, எழுத்துப்பிழை பாராமல் எழுதி, உடனே பதிவு ஏற்றுவது போலில்லாமல், வாசிப்பவரை இறுதிவரை இன்பம் காண வைப்பது தான் உண்மையான எழுத்தின் சூட்சுமம்.

தர்க்கரீதியான கருத்தோட்டம், சுவாரஷ்யமான நடை இரண்டுமே இதற்கு முக்கியமானது.

எழுத்து என்பது எங்கள் மேதாவித்தனத்தைக் காட்டுவதற்கானதோ, அல்லது எங்களை மேதாவிகள் என்று நினைக்க வைப்பதற்கானதோ அல்ல.

நீங்கள் மேதாவியா இல்லையா என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய அளவுக்கு உங்களை நீங்களே முதலில் அறிந்திருக்க வேண்டும்.

அட, நான் இப்படி யோசிக்கவில்லையே என்று எண்ண வைக்க வேண்டியது எழுத்து.

நான் சொல்ல நினைத்ததைச் சொல்லியிருக்கிறார்களே என்று நினைக்க வைக்க வேண்டியது எழுத்து.

நான் சொல்லப் பயப்பட்டதைச் சொல்கிறார்களே என்று என்று பெருமைப்பட வைக்க வேண்டியது எழுத்து.

எதைப் பற்றியும் எழுதுங்கள். சமையல் குறிப்புகளை விட, சமையல் செய்வதைக் கதையாகச் சொல்லத் தெரிவது தான் எழுத்து.

எனவே, எல்லைகள் இல்லாமல் கதை சொல்லுங்கள்.

அதற்கு உங்களைச் சூழ உள்ள உலகத்தை அவதானியுங்கள். அதன் குதர்க்கங்களை, அபத்தங்களை, சுவாரஷ்யங்களை உற்றுநோக்குங்கள்.

எழுதுவதற்கு விடயங்கள் எப்போதும் கைக்கெட்டிய தூரத்தில் இருக்கும்.

அங்கீகாரம் பெறுவது தான் உங்கள் எழுத்தின் நோக்கம் என்றால், அதற்கு உரியவர்கள் நாங்கள் இல்லை.

ஊருக்குள் அதற்கு நிறைய ஏஜன்சிக்காரர்கள் இருக்கிறார்கள்.

டாக்டர் பட்டம் வழங்கும் இணையத்தின் லெட்டர்ஹெட் பல்கலைக்கழகங்கள் மாதிரி!

சமூகத்தின் அபத்தங்களைக் கண்டு வாய் மூடி மௌனமாக இருக்கக் கூடாது என்பதற்காகத்தானே நாங்கள் எழுதிக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் எழுதுவதால் உலகம் திருந்தி விடப் போவதில்லைத் தான். அதற்காக நாங்கள் ஊரை 'சுத்தி' வாழ முடியுமா?

ஓடுகின்ற ஊரோடு ஒத்தோடுவது எந்த முட்டாளும் செய்வது தான்.

அதற்கு நாங்கள் எதற்கு?

இந்தச் சமூகம் யார் பின்னால் ஓடுகிறது?
எதைக் கண்டு பயந்து ஓடுகிறது?
எதைக் கண்டு பேராசையில் ஓடுகிறது?

இதையெல்லாம் கேள்விக் குள்ளாக்காமல், நாங்களும் ஓடினால்...

அது மலைநுனி எல்லையாகவும் இருக்கக் கூடும் அல்லவா?

stampede மந்தைக் கூட்டம் மாதிரி ஓடுகின்ற சமூகம் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதில்லை. மலையிலிருந்த விழுந்தாலும், அது தன் முட்டாள்தனத்தை ஒரு போதும் கேள்விக்குள்ளாக்குவதில்லை.

தனது பிழையைத் தலையில் போட அதற்கு எப்போதும் எதுவோ இருக்கும்.

தனது தவறை உணர்ந்து கொள்ள முடியாதளவுக்கு அறியாமையோடு இருப்பது ஒன்றும் பாவமில்லை. அது தெளிவடைவதற்காக எழுதுங்கள். சிந்திக்கத் தெரிந்தவர்கள் ஏற்றுக் கொண்டே ஆவார்கள்.

தனது தவறை தெரிந்து கொண்ட பின்னாலும், ஏற்றுக் கொள்ளாமல், வால் பிடித்த புலிக்கு மூன்று கால் என்ற நியாயப்படுத்தல்களை கேள்விக்குள்ளாக்குங்கள்.

அதிகாரங்கள், அதன் சுவையை எப்போதும் சுவைக்கப்படுவதற்காகக் கதை சொல்லும் கதை சொல்லிகள் பற்றி எழுதுங்கள்.

அந்த அதிகாரத்தைக் கண் மூடித் தனமாக நம்பும் கூட்டத்தைக் கேள்வி கேளுங்கள்.

மனிதர்கள் என்ற வகையில் எங்களுக்கான பொறுப்பு அது.

தடவிக் கொடுத்து குஷிப்படுத்தி, இன்பத்தின் உச்சத்தை அடைய வைக்கும் எழுத்துக்களுக்கு ஆள் நிறைய உண்டு. ஆயுள் இல்லை.

விரும்பினால் நீங்களும் 'கல் தோன்றி மண் தோன்றா...' என்று தொடங்கலாம்.

அதற்கு நாங்கள் எதற்கு?

சஞ்சலத்தை ஏற்படுத்தாத, கடுப்பு ஏற்றாத, கிளர்ந்தெழச் செய்யாத எழுத்துக்கள் எதற்கு?

எதை எழுதினாலும், எந்த முட்டாளும் வந்து தனக்கு எல்லாம் தெரிந்த மாதிரி பிதற்ற முடியாமல், வாய் திறக்க முடியாதபடிக்கு, தர்க்கரீதியான நியாயங்களோடு எழுதுங்கள்.

முட்டாள்கள் தங்களை முட்டாள்கள் என்று ஏற்றுக் கொள்வதுமில்லை. தங்களை யாரும் முட்டாள்கள் என்று சொல்வதை விரும்புவதுமில்லை.

தங்களைப் புத்திசாலிகளாக நினைப்பதில் எந்தத் தப்புமில்லை. ஆனால் தங்களை மட்டும் புத்திசாலிகளாகவும், மற்றவர்களை முட்டாள்கள் என்றும் நினைப்பவர்களே இங்கு அதிகம்.

எனவே, முட்டாள்களை முட்டாள்கள் என்று சொல்வதில் எந்தத் தப்புமில்லை.

ஆனால், அதற்கான தர்க்க ரீதியான நியாயங்கள் இருக்க வேண்டும்.

முட்டாள்கள் சும்மா 'துரோகி' என்று சொல்வது போல, நாங்களும் சொல்லி விட்டுக் கடந்து போக முடியாது.

யாரை ஆதரித்தாலும், எந்த தத்துவத்தைப் பேசினாலும் அதை தர்க்கரீதியாக நியாயப்படுத்தவும், கேள்விகளுக்கு பதில் அளிக்கும் பொறுமையும் துணிச்சலும் இருந்தால் போதும். எழுத்துக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் துணிச்சல் இல்லாவிட்டால், அதையெல்லாம் பேஸ்புக்கிலேயே ஃபேக் ஐடியில் வைத்துக் கொள்ளலாம்.

மாற்றுத் தரப்பினர் மீதோ, தனிநபர் மீதோ வன்மமும் அவதூறும் இல்லாமல், தர்க்கரீதியாக கருத்துக்களைச் சொல்லத் தெரிய வேண்டும்.

'எண்டாலும், அவங்கள் சொல்றது சரி தான்!' என்று தங்களை அறியாமல் சொல்ல வைக்க வேண்டும். (பகிரங்கமாகச் சொல்ல மாட்டார்கள். அங்கால இங்கால பாத்திட்டுத் தான்!)

எனவே, முட்டாள்கள் வந்து எதையாவது சொல்லி விட்டு, 'உந்தா குடுத்திருக்கிறன் பார்' என்று பீற்றிக் கொள்வதற்குப் பதிலாக, 'ஆரும் உதைப் பாத்திருப்பாங்களோ?' என்ற கூச்சத்தோடும் வெட்கத்தோடும் தலைக்கு துண்டு போட்டு அலையும் அளவுக்கு எழுதவும், கிண்டலோடு பதில் சொல்லவும் தெரிந்திருக்க வேண்டும்.

நியாயமான கருத்தைச் சொல்வதற்குரிய துணிச்சலை விட மேலானது, தவறு என்று கருதும் போது அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய 'தில்!'.

எங்களுக்கு எல்லாம் தெரியாது. தெரியவும் முடியாது.

சில நேரங்களில் நாங்கள் சொல்வதற்கு பயன்படுத்திய மொழி மயக்கங்களைத் தரலாம். சொல்வதன் தாற்பரியம் தவறாகப் புரிந்து கொள்ளப்படலாம்.

சில நேரம் எங்கள் முன்கருத்துக்களும், நியாயங்களும், தரவுகளும் தவறானவையாகக் கூட இருக்கலாம்.

தவறை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தோடு எழுதுங்கள்.

கற்றுக் கொள்வதற்கான திறந்த மனது இல்லாதவன் கற்பிக்க முடியாது.

நீங்கள் எழுதியவற்றை முதலில் நீங்களே வாசிக்க வேண்டும். அப்போது தான் இந்த தவறுகள் தெரிய வரும். (பேஸ்புக் பதிவுகளுக்கு அது ஓகே.)

நீங்கள் எழுதியதை நீங்களே வாசிக்காமல், மற்றவர்கள் வாசிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மகா அபத்தம்!

அடுத்த இதழிற்கான ஆக்கங்கள் அனுப்புவதற்கான இறுதித் தேதி 15ம் திகதி.

**மின்னோலையை இங்கே குறிப்பிட்டிருக்கும் விலாசத்திற்கு அனுப்பலாம்!**

apaththam@gmail.com




# இந்த அநியாயத்தைக் கேட்பார் யாருமே இல்லையா?

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

நாங்கள் கொஞ்சம் கவனக் குறைவாக இருந்தாலே உலகத்தில் பல அநியாயங்கள் நடந்தேறி விடுகின்றன.

இதனால் 'இந்த அநியாயத்தைக் கேட்பார் யாருமே இல்லையா' என்ற குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிக்க முடியாமல் போய் விடுகிறது.

எங்கள் கண்ணில் மட்டும் பட்டிருந்தால், உடனடியாகவே பொங்கி எழுந்து பேஸ்புக்கில் எங்கள் கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்து, எங்களுடைய நித்திய கோட்டா 24 லைக்குகளையும் பெற்று வெற்றிவாகை சூடியிருக்க மாட்டோமா?

பகைவரைப் பந்தாடுவது எல்லாம் நமது வேலை இல்லையே!?

நாங்கள் என்ன, உலகை மாற்றுவது எங்கள் வேலை இல்லை என்று ஊரைச் சுத்திக் கொண்டா இருக்கிறோம்?

அதெல்லாம் புரபைல் படம் மாற்றி 3497 இதயக் குறிகள் பெறும் பேஸ்புக் பிரபலங்கள் செய்ய வேண்டிய வேலை!

இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல், எங்களை ஏதோ இலக்கிய சூப்பர் ஸ்டார்... ஓ... சுப்பர் ஹீரோ ரேஞ்சில், 'கள்ள மௌனம் சாதிப்பதாக' இலக்கிய நக்கீரர்கள் குற்றம் சாட்டத் தொடங்கி விடுவார்கள்.

நமக்குத் தெரியாமல் கூட இந்த அநியாயங்கள் நடந்திருக்கலாம் என்பதை விட்டு, நாமும் இதற்கு உடந்தை என்பது போல, கூட்டுக்களவாணி முத்திரையும் குத்தி விடுவார்கள்.

சரி, தாங்கள் என்னத்தைப் பிடுங்கினார்களாம் என்று தேடிப் போய்ப் பார்த்தால், அவர்களின் எரிமலைக் குமுறலுக்கு ஒரு ஏழு பேர் லைக் போட்டிருப்பார்கள்!

அடேய், நாங்கள் எழுதியதை வாசித்தோம் என்பதைக் காட்ட ஒரு லைக் போடுவதே உங்களுக்கு கௌரவக் குறைச்சல்.

நாங்கள் எழுதிய எல்லாவற்றையுமே அசுமாத்தம் இல்லாமல் மற்றவர்கள் பார்க்காமல் தலைக்கு துண்டு போட்டு பேக் ஐடியில் வாசித்து விட்டு, நேரடியாகப் பெயர் குறிப்பிட்டால் வாங்கிக் கட்ட நேரிடலாம் என்று, எங்காவது ஒரு இடத்தில் 'இங்கே சிலர்' என்று பற்றைக்குள் மறைந்து நின்று கல் எறிந்து தங்கள் அல்லக்கைகளைக் குஷிப்படுத்துகிற வித்தகர்கள் பேஸ்புக்கில் நிறைய!

அத்தோடு, இப்படிக் கொத்த அநியாயங்கள் பற்றி எல்லாம் நாமும் வாயைத் திறக்காமல் இருந்தால் இதெல்லாம் வரலாறாகி விடும் அபாயம் வேறு!

நல்லவர்களின் மௌனம் தான் அயோக்கியர்களின் அலப்பறைகள் வரலாறு ஆகக் காரணமாகி விட்டிருக்கிறது என்பதை இங்கேயும் ஒரு தடவை தன்னடக்கத்தோடு பதிவு செய்ய வேண்டி ஆகிறது.

வேறு ஒன்றுமில்லை.

நான் கவிஞன் ஆக்கப்பட்ட விடயம் தான்.

கசாப்புக்கடை இறைச்சியை பாவனைக்கு உகந்தது என்று தரக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் குத்தும் முத்திரை போல, நானும் ஒரு பட்ட(ய)ம் பெற்ற கவிஞன் ஆகிய அநியாயம், எனக்குத் தெரியாமல் போயிருந்திருக்கிறது.

அதுவும் ஒன்பது வருடங்களாக!

கண்ணிலும் காதிலும் படாமல் இருந்தால், எப்படித் தட்டிக் கேட்க முடியும்?

நாளிது வரையில் நான் என்னை ஒரு போதும் கவிஞன் என்று சொன்னதில்லை.

தமிழில் அது ஒரு வசதி. வேறெங்கும் கிடையாத அற்புதம் அது. நீங்களே உங்களை கவிஞர் என்று அழைத்துக் கொள்ளலாம். யாரும் எதுவும் கேட்க முடியாது.

பேஸ்புக்கில் உங்கள் பெயரை கவிஞர் கள்ளியங்காட்டான் என்று பதிவு செய்தால், யாரும் உங்களின் தந்தையின் பெயர் கவிஞர் என்று நினைக்க மாட்டார்கள். ஏன், ஃபேக் ஐடி என்று கூட நினைக்க மாட்டார்கள்.

அதன் பின்னால், எந்த கூட்டத்திற்கு போனாலும்...

மேடையில் அமர்ந்திருக்க வேண்டிய அவசியம் கூட இல்லை, பின்னால் இருக்கும் வடை, டீக்கு அருகில் இருந்தாலும்... அசுமாத்தம் இல்லாமல் வெளியேறக் கூடிய வசதிக்காகத் தான்... 'இங்கே வந்திருக்கக் கூடிய கவிஞர்...' என்று உங்கள் பெயரைச் சொல்லி, மொய் வைத்த பின்னால் தான் பேசவே ஆரம்பிப்பார்கள்.

இதற்கு நீங்கள் கவிதைத் தொகுப்பு எல்லாம் வெளியிட்டு, நாறிப் போய் விடும் என்று மீனை விற்பது போல,

'போனால் வராது, பொழுது பட்டால் கிட்டாது!' என்றெல்லாம் கூவி விற்கவோ, ஊரில் உள்ள பிரபலங்களை 'விசுக்கிப் பிராண்டி' வரவழைத்து உங்களை உலகத்தின் மகாகவிஞர் என்றெல்லாம் பேச வைக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

விசுக்கிப் பிராண்டினால், போதை தெளிவதற்குள் பேச வைக்க வேண்டிய அபாயம் வேறு இருக்கிறது. இல்லாவிட்டால், 'இதெல்லாம் ஒரு கவிதையா?' என்று உங்கள் வெளியீட்டு விழாவிலேயே பேச ஆரம்பித்து விடுவார்கள்.

நன்றி கெட்ட போக்கிலிகள்!

அவர்கள் கூட உங்களை அங்கீகரிக்க மறுத்தோ, உங்கள் உலகப்புகழ் பெருமையை பொறாமை காரணமாக இருட்டடிப்பு செய்தாலோ... (இருட்டடியை விட இருட்டடிப்பு மேல்!) பொல்லாப்பு ஏதுமில்லை.

உங்களுக்கு நீங்களே மகுடம் சூட்டி, கவிப்பேரரசு என்று கூட அழைத்துக் கொள்ளலாம்.

பிறகென்ன, உங்களை கோபியர் நடுவில் கோபாலன் நித்தியானந்தாவாகக் கூட கற்பனை செய்து கொள்ளலாம்.

அப்புறம் மீ ரூ, மீ ரூ தான்.

கவிதை ரசிகைகள் இல்லை,

அறிமுகக் கவிஞர்கள்...

உங்களை தங்கள் வெளியீட்டு விழாக்களுக்கு விருந்தினராக வருந்தி அழைத்து விடுவார்கள்.

தங்கள் கவிதைத் தொகுப்புகளுக்கு முன்னுரை தந்து இறைச்சி சீல் குத்தும்படி இரந்து கொள்வார்கள்.

என்ன செய்கிறீர்களோ, ஏது செய்கிறீர்களோ, உங்கள் கவிதைத் தொகுப்பை வெளியிட்டு, உற்றார், உறவினரைக் குடும்ப சமேதராய் வருகை வந்து ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைத்து பணச்சடங்கு நடத்தித் தலையில் கட்டாவிட்டால்...

தாலிக்கொடியை அடகு வைத்து வெளியிட்ட கவிதைத் தொகுதியின் மீதிப் பிரதிகளை உங்கள் மனைவி கழுத்தில் கட்டிக் கொண்டு வெளியில் தலை காட்ட முடியாது.

ஆனாலும் ஒரு வசதி...

எனது கவிதைத் தொகுப்பின் முதல் பதிப்பு ஐயாயிரம் பிரதி போட்டிருக்கிறேன் ஆக்கும் என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்லலாம்.

சந்தேக தோமாஸ்களுக்கு இருபது வருடம் கழித்தும் ஆதாரம் காட்டலாம்!

வீட்டுக்காரி பத்திரமாகவே வைத்திருப்பாள், பரணில்!

உங்கள் சிதையில் போட்டு எரிக்க...!

உடன் கட்டு ஏற்றம்!

இத்தனை வருடங்களாக எழுதிக் கொண்டிருக்கிறேன்.

விளையாட்டுத் துறை தவிர, நான் எழுதாத விடயங்கள் இல்லை என்ற அளவுக்கு.

கவிதைகள் கூட எழுதியிருக்கிறேன்.

ஆமா, அந்தப் பாவத்தைக் கூடச் செய்திருக்கிறேன்.

எழுதிய கவிதைகளை தொகுப்பாக விடக் கூடிய அளவுக்கு.

அப்படி ஒன்றும் நான் மோசமான கவிஞனும் இல்லை.

கனடிய வானொலிகளில் தங்கள் இதயம் கவர்ந்த அறிவிப்பாளர்களுக்கு...

பனி பொழிந்திடும்
கனடா நாட்டினிலே
பகல் இரவு பாராமல்
படுக்கை அறை வரைக்கும்
வானலையில் வந்து என்னை
வாட்டி எடுத்தீரே ஐயா... என்று

வானலையில் கவிதை தூது விட்டு, தம் விரகதாபத்தினை எடுத்தியம்பும் desperate single grandmother களை விட...

கவிதைப் புத்தகம் வெளியிடலாம் என்ற கவிஞர்களின் வாக்குறுதியை நம்பி கவிதை எழுதி வெளியீட்டு விழா நடத்தி, அதன் பின்னால் காணாமல் போன கவிஞைகள் ஆக்கப்பட்டவர்களை விட...

ஓரளவுக்கு நான் எழுதக் கூடியவன் தான்.

அதில் பெரும்பாலானவை, தாயகம் வெளிவந்த காலங்களில் இடம் நிரப்புவதற்காக கடைசி நேர அவசரத்தில் எழுதப்பட்டவை. சஞ்சிகை விடும் சில இலக்கிய நண்பர்களின் நச்சரிப்பு காரணமாக எழுதப்பட்டவை.

ஆக, காலத்தின் கட்டாயத்தின் பேரில் எழுதப்பட்டவை.

புனைபெயரில் தாயகத்தில் எழுதியதை 'இந்த முறை நல்ல ஒரு கவிதை வந்திருக்கு!' என்று எனக்கே சொன்ன கவிஞர்கள் உண்டு.

நம்புகிறீர்களோ இல்லையோ, என்னுடைய கவிதைகளை, எழுதியது நான் என்று தெரியாமலேயே மேடையில் புகழ்ந்ததை என் காதால் கேட்கும் பாக்கியம் பெறும் அளவுக்கு, கவிதை எழுதியிருக்கிறேன்.

நான் எழுதினேன் என்று தெரிந்திருந்தால் அப்படிப் புகழ்ந்திருக்க மாட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

ஆனாலும், என்னை யாரும் ஒரு ஒபீசியல் கவிஞனாக அங்கீகரித்ததில்லை.

ஆயிரம் கவிஞர்களை எழுத வைத்த தொகுப்பில் கூட, சேர்த்துக் கொள்ளாத ஆயிரத்தில் ஓராமவன் நான்.

முதல் பிரதி வாங்க காகித உறை மொய்யோடு என் குடும்பத்தினரே வர மாட்டார்கள் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

என்னவோ, புலன் பெயர்ந்த தொகுப்புகள் என்றாலேயே சேர்த்துக் கொள்ளாத அளவுக்கு நான் தீண்டத்தகாதவன்.

பிணியைச் சேர்த்தால் துன்பம், புலிக் கூட்டத்தில் மான்கள் போல அல்லல் பட வேண்டியிருக்கும், இருட்டடி வாங்க நேரிடும் என்ற பயமாக இருக்கலாம்.

சில நேரங்களில் என்னைப் பற்றி நானே தன்னடக்கத்துடன் சொல்லிக் கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது.

தன்னைப் புகழாத ஏஜன்சிக்காரன், இலக்கியகாரன் இல்லை என்ற மாதிரி இல்லாமல்!

நான் சொல்லாவிட்டால் அதை வேறு யாரும் சொல்லப் போவதில்லை என்பதால் மட்டும்!

சுகன் வெளியிட்ட இருள்வெளி, புஷ்பராஜா வெளியிட்ட சபாலிங்கம் நினைவிதழ், தமயந்தி பானு வெளியிட்ட உயிர்மெய், எஸ்பொவும் இந்திரா பார்த்தசாரதியும் தொகுத்த பனியும் பனையும், எஸ்பொ முன்னின்று வெளியிட்ட கணையாழி கனடா சிறப்பிதழ் என என்னைத் துரத்திப் பிடித்து எழுத வைத்து பிரசுரித்திருக்கிறார்கள்.

மற்றும்படி எனது பிரசன்னம் தங்களது இருப்புக்குப் பங்கமாகும் (இருட்டடி மட்டுமான பயம் இல்லை!) என்று நினைத்த பிரகிருதிகள் தொகுத்த எந்தத் தொகுப்பிலும் என்னைச் சேர்த்துக் கொள்வதில்லை.

அதைப் பற்றி நான் அலட்டிக் கொள்வதுமில்லை.

ஆக, சமபந்தி போசனத்தில் கூட நான் ஒரு தீண்டத்தகாதவன்.

விலக்கப்பட்ட கனி!

உண்டால், தங்கள் நிர்வாணம் தெரிந்து விடும் என்ற பயமாக இருக்கலாம்.

நான் அறியப்பட்ட எழுத்துக்கள் வேறு. தாயகத்தின் ஏடு இட்டோர் இயல், கியூறியஸ் ஜி, சிறுகதை, குறுநாவல், அரசியல் கட்டுரைகள், சினிமா விமர்சனங்கள், விஞ்ஞானக் கட்டுரைகள் மூலமாகத்தான் அறியப்பட்டிருக்கிறேன்.

புனைபெயரில் எழுதினாலும், மாறுவேசம் போட்டாலும் தெரிந்து விடுகிற எம்.ஜி.ஆர் மாதிரி அடையாளம் தெரிந்து விடுகிற எழுத்து.

கவிதைக்காக நான் அறியப்பட்டதுமில்லை. நான் கவிஞனாக என்னை அடையாளப்படுத்தியதும் இல்லை.

அதற்கு என்னை கவிஞராக ஒப்பேற்றக் கூடியவர்கள் அகப்படும் அதிஷ்டம் எனக்கு இல்லாதிருந்ததும் காரணமாக இருக்கக் கூடும். எப்போ வெளியிட்டதொரு கவிதைத் தொகுப்பை வைத்தே மீதி வாழ்க்கையை ஓட்டிக் கொள்பவர்கள் போல, நானும் ஓட்டியிருக்கக் கூடும்.

இந்த லட்சணத்தில் நான் கவிஞனாக்கப்பட்ட விடயம் எனக்கு சுமார் பத்து வருடங்களுக்குப் பின் தான் தெரிய வந்தது என்பது தான் என் இதயத்தை சுக்குநூறாக்கிய விடயம்.

நண்பர் கலாமோகன் தான் தொகுப்பு ஒன்றில் என்னுடைய கவிதை ஒன்று வெளியான விடயத்தை எனக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

எனக்கே ஆச்சரியம் தாளவில்லை.

ஒகோ! அப்படியா!?

கேள்விப்பட்டதேயில்லை!

எல்லா இலக்கிய ஆர்வலர்களும் போலவே, நானும்!

புதிதாகச் சொல்ல எதுவும் இல்லை.

உடனே, 'pdf கிடைக்குமா?' தான்.

உடனடியாகவே கலாமோகன் உட்பெட்டிக்குள் அனுப்பி வைத்தார்.

புலம் பெயர் இலக்கியவாதிகளின் படைப்புகள் தொகுக்கப்பட்ட தொகுப்பு ஒன்றில்,

சூப்பர் ஸ்டார்கள், பவர் ஸ்டார்கள், புலிதேசிகள் போன்ற உலக நாயகர்களோடு, எக்கச்சக்கமான குணசித்திர நடிகர்கள், துணைநடிகர்களோடும்...

அந்த 'மற்றும் பலரில்' ஒருவனாக நானும் also-ran.

நான் எழுதிய எத்தனையோ விடயங்கள் இருக்க, புதிதாக எதையாவது எழுதும்படியும் கேட்காமல், எங்கோ எப்போதோ எதற்காகவோ எழுதிய கவிதை ஒன்றை, எனக்கே சொல்லாமல் பிரசுரித்திருந்தார்கள்.

அரசியல் கட்டுரையாக இருந்திருந்தால், யாழ்ப்பாணியையும் புலியையும் கடித்து, 'எந்தக் காலத்திலும் தமிழ் மக்கள் நலன் சார்ந்து நீங்கள் எந்த ஒரு சிகையையும் பிடுங்கப் போவதில்லை' என்று தீர்க்கதரிசனம் சொல்லியிருப்பேன்.

சிறுகதையாக இருந்திருந்தால், ஏற்கனவே எழுதி, 'இந்தப் பரதேசிகளுக்கு எழுதித் தான் என்ன?' என்று மூடி வைத்திருக்கும் சிறுகதைகளில் ஒன்றை முடித்துக் கொடுத்திருப்பேன்.

கியூறியஸ் ஜியின் அறு(சு)வை என்றால், இந்த புலன் பெயர் தொகுப்புகள் பற்றியே முழி பெயர்த்திருப்பேன்.

ஆக, ஊரிலுள்ள இலக்கிய மேதகுக்கள் எல்லாரையும் 'உங்கட சிறந்த படைப்பு ஒண்டைத் தாங்கோ!' என்று கேட்டு வாங்கிக் கொண்டு, 'உவர் நீங்கள் நினைக்கிற மாதிரி அப்பிடி ஒண்டும் பெரிய ஆளில்லை, உவற்ரை கவிதையைப் பாத்தனியளே?' என்று காட்டும் பெருநோக்கம் கொண்ட யாரோ ஒரு நந்தியின் கைங்கர்யமாகத் தான் இருக்கும்.

அந்த நந்திமர்மங்கள் இனி காதில் வந்து விழாமலா போகும்?

தங்களுக்கு வேண்டப்படாத கவிஞர்களை தனித்துவமாக அடையாளம் காட்டி பெயர் சொல்லும் கவிதைகளைத் தவிர்த்து, அவர்களுக்குப் பெயர் கிடைத்து விடக் கூடாது என்ற நன்நோக்கில், அவர்களின் சாதாரண கவிதைகளை தொகுப்புகளிலும் மொழிபெயர்ப்புகளிலும் போடுகின்ற விண்ணர்கள் பற்றி கற்சுறா இந்த இதழில் இன்னொரு இடத்தில் எழுதியிருக்கிறார்.

இப்படி, இந்த தொகுப்பைத் தொகுத்தவர்களுக்கு புலன் பெயர் இலக்கியத்தின் அடிநுனி தெரியாது. யாராவது புலன் பெயர் முகவர்களைப் பிடித்திருப்பார்கள்.

ஏஜன்சிக்காரர் என்றால் தலை மாற்றியாவது கொண்டு போய் சேர்ப்பது தானே தொழில்!

அதற்கான கையூட்டு பரஸ்பர முதுகு சொறிதலாகவோ, படுக்கையாகவோ இருந்திருக்கும். யாருக்குத் தெரியும்?

புலன் பெயர் இலக்கியங்களின் தொகுப்பு என்றாலும், அதில் பெரும் பங்களிப்புச் செய்த தாயகம் பற்றி எதுவுமே குறிப்பிடாமல், அறைக்குள் இருக்கும் யானையைப் பேசாமல் வரலாற்றை மறைக்கும் வித்தக விற்பன்னர்கள் உண்டு. அதைப் போல இந்தத் தொகுப்பிலும் தாயகம் பற்றிக் குறிப்பிட்டதாகக் காணவில்லை.

வழமையாக பதினைந்து நிமிடத்திற்கு ஒரு தடவை குட்டி போடும் பன்றிக் குட்டிக் கவிதைஞர்கள் போல, எனக்கும் என்னுடைய குட்டியை அடையாளம் காண்பது சிரமமானதாகத் தான் இருந்தது.

தாங்கள் எழுதிய கவிதைகளையே அடையாளம் காண முடியாத கவிஞர் பெருமக்கள் பலர் உளர். ஆங்காங்கே விதை விதைத்து, தங்கள் பிள்ளைகளைக் கூட அடையாளம் தெரியாத எத்தனை இலக்கியவாதிகள் இருப்பார்கள்? இப்படிப் பிறந்த தங்கள் பிள்ளைகளை வெளியே தெரிந்து விடக் கூடாது என்று மறைத்து வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்?

குறைபாட்டுடன் பிறந்த தன்னுடைய மகளையே கைகழுவி விட்ட பாப்லோ நெருடா மாதிரி!

ஆனாலும், அரிதாக எழுதிய எனக்கு அந்தக் கவிதையை அடையாளம் காண முடியவில்லை.

எனக்கே அது புரியாமல் இருப்பது கூட ஒன்றும் தலை போகிற பிரச்சனை இல்லையே?

கவிதை புரிந்து விடக் கூடாது என்பதற்காகத் தானே எழுதப்படுகிறது.

என்னை அங்கீகரித்து விட்டார்களே என்று பெருமைப்பட்டு, அவ்வப்போது மேடைகளிலும் பார்ட்டிகளிலும் எனது கவிதை வரிகளைப் பெருமையோடு நினைவூட்டுகின்ற ரகம் இல்லை நான்.

யாருடனும் அறிமுகமாகும் போது, என்னை ஒரு poet என்று சொல்லும் அளவிலும் இல்லை. அதை வைத்து மானியம் பெறலாம் என்ற எண்ணம் இல்லாத, உடலுழைப்புக்கு அஞ்சாத உழைப்பாளி நான்.

ஆனாலும், இந்த விடயம் இத்தனை ஆண்டுகளின் பின்னால் தெரிய வந்தது என்ற விடயம் தான் எனக்கு மிகவும் கவலை தருகின்ற விடயம்.

பத்து வருடங்களுக்கு முன்னால், கவிஞனாக அங்கீகரிக்கப்பட்ட இந்த விடயம் தெரிந்திருந்தால் கதையே வேறு.

சே...! சே...!

நான் முழு நேரக் கவிக் குமாஸ்தா ஆகி ஆயிரத்தொரு கவிதைத் தொகுப்புகளை எழுதிக் குவித்து, உங்களுக்கு எல்லாம் துன்பம் தந்திருக்க மாட்டேன்.

இல்லாத காதலிகளை இருப்பதாகப் பாவனை பண்ணி, ஆளுக்கொரு கவிதை எழுதி குழப்பியிருக்க மாட்டேன்.

இது தெரியாமல் போனதால் எவ்வளவை இழந்திருக்கிறேன் என்பது தான் எனக்கு மிகுந்த துயரம் தருகின்ற ஒன்றாக இருக்கிறது.

ஒரு card carrying கவிஞராக இருந்திருந்தால், நான் எவ்வளவு சாதித்திருக்க முடியும்?

குட்டித் தோழிகளை உட்பெட்டிக் காலை வணக்கக் கவிதைகளால் தூக்கம் கலைத்திருக்கலாம். இரவு வணக்கக் கவிதைகளால் மயங்க வைத்திருக்கலாம்.

அவர்களின் பதிவுகளுக்கு, கற்றுக்குட்டிகள் மாதிரி, செம, அசத்திட்டீங்க, வாழ்த்துக்கள் என்று எல்லாம் பின்னூட்டம் விடாமல், 'நீங்கள் அடுத்த தளத்திற்கு செல்ல வேண்டும்! அதற்கு உதவக் காத்திருக்கிறேன்' என்று உள்பெட்டிக்குள் அம்பு விடலாம்.

சாப்பிட்டியா செல்லம்? தூங்கிட்டியா செல்லம்? எல்லாம் கற்றுக்குட்டிகளின் கைங்கர்யம். பெருங் கவிஞர்கள் அப்படி எல்லாம் எழுத முடியாது.

கொஞ்சம் எழுதத் தெரிந்த பேஸ்புக் தோழிகளுக்கு என் கவிதைத் தொகுப்பை அனுப்பி, அவர்களை விமர்சனம் எழுதும்படி கேட்டிருக்கலாம்.

அவர்களைக் கவிதை எழுத வைத்து கவிதைத் தொகுப்பு வெளியிட வைத்து முன்னுரை எழுதி, விமர்சனக் கூட்டம் நடத்தி அவர்களைக் கவிஞர்களாக்கி, மலர் மஞ்சத்தில் கனியிதழ் ரசங்களை பருகிச் சுவைத்து இருக்கலாம்.

செ...! சே...!

கவிஞர்கள் போல...

கவிஞைகளை படுக்கைக்கு அழைக்கும் அளவுக்கு...

நான் கெட்டவன் தான், கேவலமானவன் இல்லை!

சும்மா திராட்சைப் பழரசம் தான்!

நானே அழகாக வடிவமைப்புச் செய்த பெருமையை ரசித்தவாறே...

என் வீட்டுப் படுக்கையில் தனியாக!

தங்களுடைய கவிதை ஒன்று அச்சில் வந்தாலேயே தங்களுக்கான உலக அங்கீகாரம் கிடைத்து விட்டதாக கனவு காணும் இலக்கிய உலகில், தன்னுடைய கவிதை வெளியாகி தானும் கவிஞர் ஆக்கப்பட்ட அநியாயத்தைக் கண்டு கள்ள மௌனம் சாதிக்காமல் கொதித்தெழுந்து தட்டிக் கேட்கின்ற ஒரே பேர்வழி நானாகத் தான் இருக்க வேண்டும்.

ஏற்கனவே பின்நவீனத்துவம், தோஸ்தோயேவ்ஸ்கி, வெண்முரசு என எத்தனையோவற்றை தெரிந்திருக்காததால், என் வாழ்க்கையில் எக்கச்சக்கமான பல பாதிகளை இழந்திருக்கிறேன்.

அதைப் பற்றி எல்லாம் நான் அலட்டிக் கொண்டதில்லை.

பூனைக்கு ஒன்பது வாழ்க்கைகள் என்றால்...

புலிக்குத் தண்ணி காட்டிய எனக்கு?

ஆனாலும் நான் கவிஞனாக வந்த விடயம் எனக்கே தெரியாமல், இன்றைக்குத் தெரிய வந்திருப்பதால், உண்மையிலேயே என் வாழ்க்கையின் பெரும் பகுதியை இழந்திருக்கிறேன் என்ற துயரம் தான் என்னை தற்போது உறங்கவிடாமல் வாட்டிக் கொண்டிருக்கிறது.

இப்படி கல்லறைக்குப் போகும் வரைக்கும் நிம்மதியில்லாமல், என் வாழ்நாள் பூராவும் ஒரு தீராக் கவலையோடு வாழ வைத்ததற்கு, இந்தப் பேருண்மை எனக்குத் தெரியாமலேயே இருந்திருக்கலாம்.

Ignorance is always bliss!

## தனிமை

ஜோர்ஜ் இ. குருசேவ்
(கனடா)

நிழல் மட்டும்
துணையான தனிமை
சுற்றிவரக்
காடுகள் மனிதர்களாக
முட்களாய் குத்தும் உறவுகள்...
நான் தனிமையில்...
வெறுமையாக...
என்றோ தொலைந்து போன
என்னைத்தேட
விரும்பாத உறவுகள்...
அன்புக்காக
ஏங்கி நின்ற தேடலில்...
தாய்
காதலி...
நட்பு...
மண்...
நேசித்த எல்லாமே
பொய்மையின் நிஜங்கள்...
உயிர்கள் கைகளிலே!
உறவுகள் எப்படித் தொடரும்?
சிரிப்பதற்கு சேரும்
சொந்தங்கள்...
அழும்போது மட்டும்
மறக்கப்படும்...

எது நிஜம் ?
நான் நானாக
எது உறவு
எனக்கு நான்...
எதைத் தேடி?
எனக்குள்ளே என்னை
வெறும் சடங்குகளில்
சமுத்திரத்தில்
நான்
தனிமையில் வெறுமையாக...


எப்போது
என்னை அன்பு
துளிர்க்க வைக்கும்?

(தேடல் 4 – மாசி – 1990)











# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**
**என்ற வார்த்தையைத்**
**தேடுங்கள்...**
**கண்டடைவீர்கள்!**